# தி ஜானகிராமன்

# சிறுகதைகள்



# தி ஜானகிராமன்

## சுளிப்பு

அந்தப் பையனை ஒரு நிமிஷம் வெறித்துப் பார்த்தார் திருமலை. சர்க்கரைக் குட்டி, பட்டுக் குஞ்சு என்றெல்லாம் கொஞ்ச வேண்டும் போலிருக்கும். அத்தனை லட்சணம். அப்படி முகக் களை. புருபுருவென்று கண். சுருள் சுருளாகத் தலையில் மயிர். ஏழு வயதுக்கான வளர்த்தி இல்லை. உடம்பு மெல்லிசுவாகு. அதனாலேயே ஒரு கவர்ச்சி.. ஐயோ! இவ்வளவு பூஞ்சையாக இருக்கிறதே என்று ஒரு பரிவுக் கவர்ச்சி.

ஆனால் மண்டையில் இத்தனை களிமண்ணா! திருமலைக்கு அதுதான் ஆச்சரியம். அரை மணி நேரமாக அந்த மண்டையில் ஒரு கணக்கை ஏற்ற, சாகசம் பண்ணிக் கொண்டிருக்கிறார். ஒரு சாகசமும் பலிக்கவில்லை. அந்தச் சின்ன மண்டை ஒரு அறை போலவும், அதற்குப் பல கதவுகள் இருப்பது போலவும், ஆனால், உள் முழுவதும் ஒரே ஈரக் களிமண்ணாக இருந்ததால் கதவுக் கீலில் அந்த மண்ணெல்லாம் சிக்கித் திறக்க முடியாமல் அடைத்துக் கொண்டிருப்பது போலவும் உவமானப் படம் தோன்றிற்று. இன்னொரு தடவை அந்த மண்டையை வெண்ணெய் என்று நினைத்து அவர் ஊசி முனையால் குத்தப் போனது போலவும், ஆனால் ஊசி முனை உடைந்ததும், அது வெண்ணெய் இல்லை, வெள்ளைக் கருங்கல் என்றும் அவருக்குப் புரிந்ததாக ஒரு தோற்றம். இப்படி ஒவ்வொரு தோல்விக்கும் ஓர் உவமானப் படம் தோன்றிக் கொண்டிருந்தது.

அவர் கையில் ஒரு கட்டு மரக் குச்சி. சுளுந்துக் குச்சி. உள்ளங்கை வேர்த்து சுளுந்து கட்டும் கசகசவென்று நனைந்திருக்கிறது.

“இத பாரு மூணும் மூணும் என்ன?”

விரல் விட்டு எண்ணி “ஆறு” என்றான் பையன்.

“உங்கிட்ட மூணு குச்சி இருக்கு. உங்க அண்ணா கிட்ட மூணு குச்சி இருக்கு–”

“எனக்கு அண்ணா இல்லியே.”

“சரி, உங்க அக்கா கிட்ட இருக்கு.”

“அக்காவும் இல்லே.”

“நீ ஒரே குழந்தையா?”

“ஆமாம்.”

“சரி. உங்கிட்ட மூணு குச்சி இருக்கு. எங்கிட்ட மூணு குச்சி இருக்கு. மொத்தம் எத்தனை? இரண்டு கையையும் சேர்த்து?”

“இரண்டு கையும் சேரவில்லையே என்று விழித்தான் பையன். கடைசியில் அவனுடைய இடது கையில் மூன்றும், வலது கையில் மூன்று குச்சியுமாக வைத்து, சேர்த்து எண்ணி ஆறு என்று ஏற்றிவிட்டார்.

அடுத்த கணக்குதான் அவருடைய மூளையின் பலங்களைத் தகர்த்துக் கொண்டிருந்தது.

“என் கிட்ட மூணு குச்சி இருக்கு. உங்கிட்ட எங்கிட்ட இருக்கிறதைவிட மூணு குச்சி அதிகமா இருக்கு. இப்ப ரெண்டு பேர் கிட்டவும் சேர்ந்து எத்தனை குச்சி இருக்கு?”

“ஆறு.”

“இல்லெ, என்கிட்ட மூணு குச்சி ஈ ஈ ஈ ஈ, உங்கிட்ட அதைவிட மூணு குச்சி அதிகமா இருக்கு ஊ ஊ ஊ. புரியறதோ. நான் சொன்னதைச் சொல்லு பார்ப்பம்.”

“என்கிட்ட மூணு குச்சி ஈ ஈ, உங்கிட்ட அதைவிட மூணு குச்சி அதிகமா இருக்கூ ஊ ஊ ஊ...”

“அவ்வளவுதான் இப்ப மொத்தம் எத்தனை?”

“ஆறு.”

அவருடைய மேஜை மேல் சுளுந்துக் குச்சிகள் இறைந்து கிடந்தன.

கால் மணி போராடிவிட்டு, குச்சி வாண்டாம்; மூணு மாம்பழம்னு வச்சுக்கோயேன். எங்கிட்ட மூணு மாம்பழம் இருக்கு. உங்கிட்ட அதைவிட மூணு மாம்பழம் அதிகமா இருக்கு.”

பையன் தன் கையைப் பார்த்துக் கொண்டான்.

“அப்ப மொத்தம் எத்தனை மாம்பழம் இருக்கும்?”

அவன் இப்போது ஆறு கூடச் சொல்லவில்லை. நேராக இருக்கிற சுளுந்துக் குச்சியே பலிக்கவில்லை. இல்லாத மாம்பழமா பலிக்கப் போகிறது?

“உனக்கு மாம்பழம் பிடிக்குமா?”

“பிடிக்காது?”

“ஓகே. அப்படியா? ஏன் பிடிக்காது?”

“சிரங்கு வரும்.”

“உனக்கு எந்தப் பழம் ரொம்பப் பிடிக்கும்?”

“நாகப்பழம்.”

“நாகப்பழம்.”

“சரி. நாகப்பழம். உன் இந்தக் கையிலே மூணு நாகப்பழம் இருக்கு – அந்தக் கையிலே அதைவிட மூணு நாகப்பழம் அதிகமா இருக்கு.... கேட்டியா, இந்தக் கையிலே மூணு – அந்தக் கையிலே? அதைவிட மூணு நாகப்பழம் அதிகமா இருக்கு. இப்ப ரண்டு கையையும் சேர்த்து எத்தனை பழம் இருக்கும்?”

“ஆறு.”

“ராமா.”

அரை மணி ஆகிவிட்டது.

மற்ற குழந்தைகள் பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தன. ஓரிண்டு குழந்தைகள்தான் அலுத்துப்போய் ஒன்றை ஒன்று கிள்ளத் தொடங்கின.

இந்தப் பையனை அரை மணியாக நிறுத்தி வைத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறார் திருமலை. பையன் இரண்டு கையையும் தொங்கவிட்டவாறே பிசையத் தொடங்கினான். கால் நொந்ததோ என்னவோ நகர்ந்து நின்றான். கொஞ்சம் அசைந்து அசைந்து சிரமம் தீர்த்துக் கொள்வது போலிருந்தது. கால் மாற்றிக் கொண்டான்.

திருமலை நன்றாகப் பார்த்தார். வரவர பையனின் கண்கள் புருபுருவென இருந்தவை, மந்தமாகத் தூங்குவது போல வெளிச்சம் மங்கிவிட்டிருந்தது. அவரும் விடவில்லை. எப்படியாவது இந்த "அதிகத்தை" மண்டையில் ஏற்றாமல் விடுவதில்லை என்று வீம்பு பிடித்துக் கொண்டது.

"நன்னா கவனிச்சுக் கேக்கணும்... என் கையிலே... இல்லெ. உன்னோட இடது கையிலே — மூணு நாகப்பழம்..."

பையனின் முகம் இடுங்கிற்று. புருவம் சுருங்கிற்று. திருமலைக்குச் சட்டென்று வாய் மூடிக் கொண்டது. இந்த புருவச் சுருக்கம்.... பத்மாவின் முகம் மாதிரி. இந்தப் புருவச் சிணுக்கம் இப்போது அவர் கண்ணை வந்து குத்திற்று.

கல்யாணப் பந்தல். திருமலை மாப்பிள்ளை. சம்பந்திகளை இறக்கியிருக்கிற வீட்டிலிருந்து மேளதாளத்துடன் அவர் பரதேசக் கோலம் கிளம்புகிறார். இடுப்பில் முடமுட வென்று பஞ்சக் கச்சம். மயில்கண். மேலுக்கு ஒரு மயில் கண் ஐந்து முழம். கையில் விசிறி. காலில் செருப்பு. அவர் தம்பியோ யாரோ குடையைப் பிரித்து திருமலையின் மீது வெயில் படுவதும் படாததுமாகப் பிடித்துக் கொண்டு வந்தான். இடையில் பஞ்சக் கச்சம் அவிழாமல் பெல்ட்டு.

காலையில் அந்த கிராமத்துப் பரியாரி வந்து அவனுக்குச் சர்வாங்க க்ஷவரம் செய்து வைத்திருந்தான். திருமலைக்கு ஒரே கூச்சம். தலைமயிரை மட்டும் விட்டுவிட்டு மார்பு கை கால் என்று ஒரு இடம் விடாமல் மழித்து விட்டான். திருமலைக்குக் கொஞ்சம் சிரமம். மயிரெல்லாம் போனதும் கறுப்புத் தோலில் கொஞ்சம் கறுப்பு உதிர்ந்தாற் போல ஒரு திருப்தி. ஆனால் உடம்பு முகமெல்லாம்,நெற்றி முதல் பாதம் வரையில் அம்மி – கல்லுரலைப் புளிந்தாற் போல அம்மை வடு. சிறுசிறு குழிகளாக பெரிய அம்மை வடு. அதனால் பரியாரியின் கத்தியும் வழவழவென்று மழித்து விடவில்லை. கர் கர் என்ற ஓசையுடன் அம்மைத் தழும்புகளையும், பள்ளங்களையும், வரம்புகளையும் நரநரத்துக் கொண்டிருந்தது. மலர் எல்லாம் போனதும் ஒரு அரிப்பு வேறு.

கல்யாணப் பந்தலில் புகுந்ததும் கிழக்கே பார்த்து நிற்க வைத்தார்கள் திருமலையை. கலியாணப் பெண் உள்ளேயிருந்து வந்து அவனுக்கு மாலையிட்டு ஊஞ்சலில் ஆட்டிய பிறகு, உள்ளே அழைத்துப் போக வேண்டும். தாயாரும் தங்கைகளும் கிழவிகளும் நடு

வயதுகளும் புடைசூழ மொட மொடவென்று பட்டு மடிசாரும் தலையில் சூரியப் பிரபை, சந்திர பிரபையும் பூப்பின்னலுமக மெதுவாக வந்தாள்.

“பார்றீ பத்மா, பாரு. நன்னாப் பார்த்துக்கோ ஆம்படையானை” என்று மேளச் சத்தத்துக்கு நடுவில் ஒரு பெண் குறும்பாகக் கத்திற்று.

பதமா நிமிர்ந்து பார்த்தாள் ஒரு புன்னகையுடன். அதே கணம் முகத்தில் ஒரு சுளிப்பு. என்னமோ குத்தினது போல ஒரு வலி, ஒரு பயம்... சிறிது நேரம் அவள் மார்பு, கை, பாதம் எல்லாம் சிலுசிலுப்பது போல ஒரு சிறு அதிர்வு. அதே சுளிப்போடு ஒரு பார்வை. மீண்டும் தலை குனிந்தது.

புன்னகையைக் காணவில்லை. அப்போது, தாலிகட்டும் போது, நலங்கின்போது–ம், ஹூம், அந்தப் புன்னகை மறைந்தது மறைந்ததுதான்.

கலியாணப் பந்தலில் கண்ட அந்த முதல் சுளிப்பு! திருமலைக்குப் புரிந்துவிட்டது. அவன் நல்ல அட்டைக் கறுப்பு. அம்மை வடு. அகல மூக்கு. பல் சோழிப் பல். அவனுக்கே கண்ணாடியில் பார்த்துக்கொள்ள பல சமயம் வேதனையாயிருக்கும்.

முன்னால், பெண் பாக்கவில்லை. அம்மாக்களும் அப்பாக்களும் பார்த்து நிச்சயம் பண்ணிவிட்ட கலியாணம். கண்ணாடியைப் பார்க்கத் தயங்குகிற திருமலைக்கு எந்தப் பெண்ணையும் போய்ப் பார்த்து வேணும் வேண்டாம் என்று சொல்லத் தயக்கம்.

பத்மாவைப் பார்த்ததும் அவனுக்குக் கொஞ்சம் அதிர்ச்சி, கொஞ்சம் என்மாதிரி இருக்கக் கூடாதோ? கொஞ்சம் பங்கரையாக, கட்டை குட்டையாக – இல்லை, ஒரு கால் விந்தலாக, இல்லை, ஒரு கண் பூ விழுந்து... இப்படி ஏன் மூக்கும் முழியுமா, மாநிறமா பளிச்சென்று ஒல்லியாக, பச்சை நரம்பு ஓட...

இந்தப் பையனுக்கும் அப்படி பச்சை நரம்பு-ஒல்லி. முகத்தை ஏன் இப்படி சுளுக்கினாள்? என் முகத்தைப் பார்த்தா? பத்மா முகத்தைச் சுளுக்கினது போலவே இருந்தது. திருமலைக்கு மனசு மறுபடியும் பத்மாவுடன் ஓடிற்று. பத்மா நாளைந்து நாள் அப்படியிருந்தாள், இப்படி வந்து சேர்ந்து விட்டதே என்கிறது போல.

பிறகு படுக்கை அறையில்..........!

“அப்பா! உடம்பைப் பாரு, சமையக்காரன் மாதிரி கண்டு கண்டா, ம்க்கும்” என்று அவனுடைய இரண்டு கன்னங்களையும் ஒவ்வொரு கையின் ஐந்து விரலாலும் உள்ளங்களை அழுத்திக் கவ்வி மயக்கமும் சிரிப்பும் – அவள் கை வேர்வையும் அவன் முதுகின் வேர்வையும் சேர்ந்து கசங்கி நசுங்கி......

சுளிப்பு மறைந்து விட்டது.

இந்தப் பையன் அப்படித்தான் முகம் சுளுக்கினான் இப்போது. பத்மாவை ஜெயித்தாற்போல் இவனை எப்படி ஜெயிக்க முடியும்?

படிக்கிற குழந்தை – ஏழு வயது....

திருமலை வெறித்துப் பார்த்தார் அவனை.

“உங்கப்பா என்ன பண்றார்?”

“செத்துப் போய்ட்டார்” என்றான் பையன். கண்ணில் அழுகை இல்லை.

“அம்மா?”

“அம்மாவும் செத்துப் போயிட்டா!”

“ஆ! எப்ப?”

“போன வருஷம்!”

“அண்ணா, தம்பியாவது இருக்காளா?”

“ஒருத்தருமில்லை.”

“நீ யார் கிட்ட இருக்கே?”

“மாமா கிட்ட.”

“மாமா என்ன பண்றார்?”

“பக்கோடா, காராபூந்தி எல்லாம் பண்ணி தெருவோட வித்துண்டு போவார்! தலையிலே ஒரு பெரிய தட்டுலெ வச்சுண்டு.”

“அப்படின்னா உனக்குக் கணக்கு நன்றாத் தெரிய வேண்டாமா?”

“ஆமா.”

“ஆமா?”

பையனின் முகம் மறுபடியும் சுளித்தது. வயிற்றைப் பிடித்துக் கொண்டான்.

“என்ன பண்றது?”

“வயத்தை வலிக்கிறது. போகணும், போகணும், போகணும்” என்று வலது கையின் ஆள் காட்டி – பாம்பு விரல்களை நீட்டினான் பையன்.

“சரி, சரி போ... ஓடு” என்றார் திருமலை.

பையன் ஓடினான். கால் சட்டையிலேயே போய்விடப் போகிறானே என்று கவலை. நல்ல வேளையா ஓடிவிட்டான்.

மற்ற பையன்கள் சிரித்தார்கள்.

“பொய் சார்” என்றான் ஒரு பையன் எழுந்து.

“என்னடா பொய்!”

“அவனுக்கு அப்பா அம்மா எல்லாம் இருக்கா சார்.”

“ரண்டு அண்ணா இருக்கான் சார்.”

“ஒரு தங்கச்சி கூட இருக்கா சார்.”

“அவன் – அப்பா ,பக்கோடா விக்கலெ சார். பாட்டு வாத்தியார் சார். எங்க அக்காவுக்குக் கூடச் சொல்லிக் கொடுத்தார் சார்.”

“அட!”

“அவனும் நல்லாப் பாடுவான் சார்.”

“அட.”

“அப்பா அம்மா, யாருமே இல்லென்னானே?”

“சும்மனாச்சிம் சார்.”

“ஏன் சொன்னான்?”

குழந்தைகள் பதில் சொல்லவில்லை.

“வரட்டும்” என்றார்.

திருமலைக்கு குழப்பம். முதலில் கோபம். பிறகு தன் முகம் தெரிந்தது.

குழப்பம்.

“வரட்டும்.”

எல்லோரும் காத்துக் கொண்டிருந்தார்கள். பையன் வரவில்லை. கால்மணி, அரைமணி, பகல் இடை வேளை ஆயிற்று. வரவில்லை. பிற்பகல் ஆயிற்று. வரவில்லை. மாலையில் கடைசி மணியும் அடித்தது. பையன் வரவில்லை. திருமலைக்கு வயிற்றில் புளி.

“புஸ்தக மூட்டையை வச்சுட்டுப் போயிட்டானே. அவன் வீடு தெரியுமா உங்களுக்கு?”

“நான் கொடுக்கிறேன் சார். எங்க தெருதான் சார்.” என்று ஒரு பையன் அந்தப் பையை எடுத்துக் கொண்டான். திருமலை சிறிது நின்றார்.

“நானும் வரேன். வீட்டைக் காமிக்கிறீயா?” என்றார்.

“வாங்க சார், காமிக்கிறேன்” என்று பெருமையாக அவருக்கு முன் நடந்தான்.

இரண்டு மூன்று தெரு கடந்ததும், “அதோ அந்த சந்துதான் சார்” என்றான்.

“அடி வாங்கி வைப்பீங்களா சார் அவனுக்கு?” என்றான் மறுபடியும். எத்தனை ஆசை அவனுக்கு!

திருமலை பேசவில்லை.

“இவங்கத்தான் சார் அவன் அம்மா” என்று எதிரே வந்த ஒரு அம்மாவைக் காட்டினான்.

“ஏண்டா குழந்தே! பள்ளிக்கூடம் விட்டாச்சா?”

“விட்டாச்சே, இதோ நட்டுவோட பையி புஸ்தகமெல்லாம்” என்று அவளிடம் கொடுத்தான்.

“இவங்கத்தான் எங்க சார். மூணாவது சார்” என்று அறிமுகப்படுத்தினான்.

திருமலை கும்பிட்டார்.

“வயித்து வலின்னு ஓடி வந்தான் குழந்தை, புஸ்தகப் பையைக் கூட வச்சுட்டு வந்துட்டேன்னு அழுதான். அதான் எடுத்துண்டு வரலாம்னு கிளம்பினேன்” என்றாள் அம்மா.

“இப்ப தேவலையா?”

“தேவலை. தூங்கறான்.”

திருமலை திரும்பி விட்டார்.

வழி காட்டின பையன், “ஏன் சார், நீங்க ஒண்ணும் சொல்லலே நட்டு அம்மா கிட்டே” என்று நமுட்டுச் சிரிப்பு சிரித்தான். அவனுக்கு ரொம்ப ஏமாற்றம்.

“சொன்னா அடிக்க மாட்டாங்களா”

“அடிச்சாத்தான், நாளைக்கு பொய் சொல்லாமல் இருப்பான்.”

“நாளைக்கு அடிச்சுக்கலாம் போ. நீ போ வீட்டுக்கு” என்று அனுப்பி விட்டு விடு விடு என்று நடந்தார்.

பையன் முகம் இன்னும் அவர் கண்களில் சுளித்தது. பத்மாவின் பத்து விரல்களும் அழுத்திப் பிழிந்து நசுக்க வேண்டும் என்று அவர் கன்னங்கள் புருபுருவென்று பரந்தன. பயமும் தினவுமாக வேகமாக நடந்தார்.

## இசைப் பயிற்சி

மல்லிகையை எல்லோரும் பரிகாசம் செய்தார்கள். எல்லோரும் செய்தார்களோ என்னமோ, அவருக்கு அப்படித் தோன்றிற்று. முதன் முதலாக விசாரித்தவரே பரிகாசம் செய்து, சிரித்துவிட்டுப் போனார். அதனால், பிறகு கேட்ட யாருமே கேலி செய்வதுபோல மல்லிக்குப் பட்டது.

காலையில் அவர் வழக்கம்போல ஆற்றில் குளித்துவிட்டு வந்து ஜபம், பூஜைகளை முடித்து, தோசையும், காப்பியும் சாப்பிட்டுவிட்டுத் திண்ணையில் வந்து உட்கார்ந்தார். எட்டரை மணியிருக்கும், ஊர்க்கோடி திரும்பியதும் கூட்டுறவு மளிகைக்கடை மீது வைத்திருக்கும் ‘ரேடியோ’ப் ‘பொனல்’ ஓய்ந்துவிட்டது. வெயில், தெரு முழுவதும் விழுந்து வெள்ளையாகவும், சற்று சூடாகவும் மாறிக்கொண்டிருந்தது. தெருக்குழந்தைகள் அடுத்த ஊர்ப் பள்ளிக்கூடத்திற்குப் போய்விட்டன. நடமாட்டம் இல்லை. திடுதிடுவென்று சுப்புக்குட்டி வீட்டு ஆள், ஒரு வண்டி நிறைய நாற்றுக் கட்டுகளை ஏற்றிக்கொண்டு போனான். அதோடு சந்தடி தீர்ந்துவிட்டது. ஏழெட்டு வீடு தள்ளி ராசு, வாசலில் ஒரு பெரிய கோரைப்பாயைப் பிரித்துச் சுருளாமல் ஓரங்களில் கல்வைத்து, உள்ளேயிருந்து காணத்திற்காகத் தேங்காய்ப் பருப்புகளை கூடை கூடையாகக் கொண்டு கொட்டித் திலாவிக் கொண்டிருந்தான்.

அப்பொழுதுதான் பாலன், தெருவோடு போகிறவர், திண்ணையில் உட்கார்ந்திருந்த மல்லியைப் பார்த்துவிட்டு, “என்ன மல்லி?” என்றார்.

“என்ன மாமா?”

“என்னமோ கேள்விப்பட்டேனே!”

“என்ன?”

“குப்பாண்டிக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுக்கிறேன்னீராமே,” என்று கொளகொளவென்று சிரித்தார் பாலன்.

“ஆமாம்.”

“ஆமாமா!” என்று ஒரு கிண்டல் – வியப்போடு மேலும் சிரித்தார் பாலன்.

இதற்கு என்ன சிரிப்பு?

“எதுக்காக?” என்று அடுத்தபடியாக ஒரு கேள்வி.

“அவனுக்குச் சாரீரம் நன்னாருக்கு. ஞானம் இருக்கு. நன்னா வரும் போலிருக்கு” என்றார் மல்லி.

“அதுக்காக!... அவனுக்குப் போய்ச் சொல்லிக் கொடுக்கவாவது?”

“ஏன், சொல்லிக்கொடுத்தா என்ன மாமா?”

பாலன் அதைக் கேட்டுத் திகைத்துப் போனாற்போல மல்லியைப் பார்த்தார். “என்னன்னு கேட்டப்பறம் நான் என்ன சொல்றதுக்கு இருக்கு?” என்று தெருவை, மேற்கையும் கிழக்கையும் பார்த்தார். பார்த்துக்கொண்டே சிரித்தார்.

“சரி, எங்கே வச்சுச் சொல்லிக் கொடுப்பீர்?”

மல்லி இந்தக் கேள்வியை எதிர்பார்க்கவில்லை. குப்பாண்டியை எங்கே வைத்துச் சொல்லிக் கொடுப்பது? இதைப்பற்றி நாம் ஏன் யோசிக்கவே இல்லை என்று அவருக்குத் திடுக்கிட்டுவிட்டது..

“ஏன்யா?” என்று பதிலுக்கு அவசரப்படுத்தினார் பாலன்.

“அதைப்பத்தி இன்னும் யோசிக்கலே மாமா” என்றார் மல்லி.

“யோசிக்கலையா?” என்று மீண்டும் சிரிப்பு.

நாம் ஏன் இவ்வளவு அசடாகி விட்டோம் என்று மல்லி ஒரு நிமிஷம் குன்றிப்போய்விட்டார். இப்படிச் சிரிக்கும்படியாக எதையோ செய்து, கடைசியில் நியாயமான ஒரு கேள்விக்குப் பதிலும் சொல்லமுடியாமல்!

“உள்ள கூடத்திலே வச்சிண்டு சொல்லிக் கொடுக்கறதாக உத்தேசமில்லையே” என்றார் பாலன்.

“என்ன மாமா இது!” மல்லி அதிர்ந்துவிட்டார்.

“இல்லே. லோகம் போற போக்கைப் பார்த்தா, நான் கேக்கறது ஒண்ணும் தப்பில்லையேன்னு கேக்கறேன்!”

“உள்ள அழைச்சு வச்சா, சொல்லிக் கொடுப்பேன்? என்ன இப்படி கேட்டுவிட்டீர்கள்?” என்று மனத்தாங்கலோடு மல்லி சொன்னதை முழுவதும் கேட்காமல் மீண்டும் சிரித்துக்கொண்டே எழுந்தார் பாலன், “ஆலயப்பிரவேசம் ஆயிடுத்து. தெருப்பிரவேசம் ஆயிடுத்து. கிருகப்பிரவேசமும் நீர் மனசு வச்சா காந்தி மாதிரி அதுவும் நடக்க வேண்டியதுதானே. என்னமோ! யார் எதைத் தடுக்க முடியப் போறது இந்த நாளிலே! ஜமாயும்” என்று சொல்லி எழுந்து கச்சத்தை உதறிக்கொண்டே தெருவில் இறங்கி, தனக்கு இதைவிட முக்கியமான ஏதோ வேலையிருப்பதுபோல், யாரோ எதிர்பார்த்த ஆசாமி வருகிறானா என்று பார்ப்பதுபோல், வாயிலுக்கு நேராகக் கண்ணுக்கு மேல் கையைக் கவிழ்த்துத் தெருக்கோடியைப் பார்த்துக் கொண்டே நடந்தார் பாலன். ஊரிலேயே வயதில் மூத்த மூன்று பேர்களில் பாலன் முக்கியமானவர். சொத்து சுதந்திரம் என்று அதிகமில்லாவிட்டாலும் வயதாலும் வாயாலும் ஊரில் ஒரு அந்தஸ்து வந்துவிட்டது. அவர் சொல்லி நாலுபேர் கேட்பார்கள்.

அவர் கேட்ட கேள்விகளை நினைத்துத்தான் அசட்டுத்தனம் செய்துவிட்ட திகைப்பிலிருந்து மீளாமல், நெளிந்துகொண்டேயிருந்தார் மல்லி.

ஒரு அரை நாழிகைக்கெல்லாம் கடுக்கனும் பெரிய உடம்புமாக பண்ணை சீதாராமன் வாசலோடு போகிறவன், “என்ன மாமா, குப்பாண்டிக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுக்கப்போறேளாமே!” என்று கேட்டு, தெருவிலேயே நின்றான். சீக்கிரம் பதில் சொல், நான் போகவேண்டும் என்பது போலிருந்தது, அவன் நிற்பது.

“ஆமாம். ஏதோ சாரீரம் நன்னாருக்கு. ஞானமும் இருக்கு போலிருக்கு” என்றார் மல்லி.

“பேஷா இப்பத்தான் யாருக்கு எது இருக்கு இல்லைன்னு சொல்ல முடியலியே? யாராயிருந்தா என்ன, வித்யாதானம் பெரிய விஷயம் இல்லையோ!” என்று சொல்லிக்கொண்டே நடந்துவிட்டான் சீதாராமன் – வெறுமே சொல்லவில்லை, ஒரு சிரிப்போடுதான் சொன்னான்.

அப்புறம் அதே கேள்வியை, சொல்லி வைத்தாற்போல் எத்தனை எத்தனைபேர் கேட்டார்கள்? வெங்கடராமன், ராமையா, ஆனைக்கால் தண்டபாணி, சாமி சாஸ்திரி, கணக்குப் பிள்ளை இவர்களெல்லாம் நாற்பது ஐம்பது வயசு வர்க்கம். இருபது இருபத்தைந்து வயதைச் சேர்ந்த வாலி, கோபாலி, மாஞ்சன் இவர்களும் விட்டு வைக்கவில்லை. வாலிக்குக் கபடு தெரியாது. ஆனால், அவன் கேட்பதிலே ஒரு ஆவல் இருந்தது. “இந்த மாதிரி தவறான காரியம் செய்யலாமோ?” என்பது போலும் இருந்தது கோபாலி பெரிய சிரிப்பாகச் சிரித்துக்கொண்டு கேட்டது. அதற்கு வெகு காலமாக வலிப்பு. உடம்பு துரும்பு. சாப்பிடுவதையும் அடிக்கடி ஜுரம் ஜுரம் என்று படுத்துக்கொள்வதையும் தவிர வேறு ஒரு வேலையும் செய்யமுடியாது. அது என்ன பரிகாசச் சிரிப்புச் சிரித்துவிட்டுப் போயிற்று!

பட்டா மணியும் கேட்கவில்லை. பேசாமல் நடந்து போனார். அவருக்கு மட்டும் சேதி தெரியாமல் இராது. ஆனால், இந்த அசட்டுத்தனத்தைப் பற்றிப் பேசலாமோ என்று போவது போலிருந்தது.

ஆண்கள் போதாதென்று மூன்று பாட்டிகள் வேறு கேட்டுவிட்டுப் போனார்கள். அந்த வேம்புப் பாட்டிக்கு அரைச் சித்தம். சர்வ அனாதை. சோற்றுக்கு வழி இல்லை. அதுகூட சிரித்துக்கொண்டு கேட்டுவிட்டுப் போயிற்று.

இனிமேல் பொறுக்க முடியாதென்று நினைத்து எழுந்து உள்ளே வந்து ஊஞ்சலில் உட்கார்ந்து கொண்டார் மல்லி. அவர் மனைவி ஆற்றங்கரைக்குக் குளிக்கப் போயிருந்தாள். ஊஞ்சல் “கீசுகீசு' என்று கத்திற்று.

இப்பொழுது என்ன செய்கிறது?

ஊர் முழுவதும் இந்தச் செய்தி எப்படிப் பரவிற்று. பரவினாலும், வந்து ஒவ்வொருவராக விசாரிக்கும்படியாகவோ, கேலி செய்யும்படியாகவோ இதில் என்னதான் இருக்கிறது?

காரணம் தெரியாமல் ஓர் இரக்கமும் அச்சமும் நமக்கு வருவானேன்?

முந்தாநாள் காலை, பிள்ளையார் கோவிலை ஒட்டின சத்திரத்துக் கொல்லையில் பூப்பறித்துக் கொண்டிருந்தார் மல்லி. பவழமல்லி மரத்தை உலுக்கிவிட்டு, கீழே விழுந்த பூக்களைப் பொறுக்கிக் குடலையில் போடும்போது ஒரு ராகத்தை– தன்யாசிதானே – தன்யாசிதான் – முணுமுணுத்துக்கொண்டேயிருந்தது தொண்டை. என்னமோ பவழ மல்லியின் செங்காம்பைப் பார்க்கும்போது அந்த ராகம் பாடவேண்டும் போலிருக்கும். என்ன சம்பந்தமோ!

அப்பொழுது அவர் இழுப்பதையெல்லாம் வாங்கி வேறு ஒரு குரல் எங்கோ பாடுவது கேட்டது. அவர் ஒரு பிடி பிடித்தால், அதையே இன்னும் கொஞ்சம் கூட்டிச் சேர்த்து அழகாகப் பிடித்தது அது. சற்று நிறுத்திக் கவனித்தார் அவர். என்ன குரல்! என்ன குரல்! இந்த மாதிரி ஒரே ஒரு குரலைத்தான் கேட்டிருக்கிறார் அவர்.

சென்னையில் ஜார்ஜ் டவுனில் பன்னிரண்டு குடிகளுக்கு நடுவில் ஒரு குடியாக, கீழே சமையலறையும் மாடியில் படுக்கையறையுமாகக் குடித்தனம் செய்த காலத்தில் இரவு ஒரு மணி இரண்டு மணிக்கு ஒரு பயல் பாடிக்கொண்டு போவான். அவன் ஒரு மோட்டார் கார் க்ளீனர். கிட்டப்பா, ராஜரத்னம், பாகவதர் என்று நாடக, சினிமாப்பாட்டுக்கள், ராகங்களையெல்லாம் அச்செடுத்துப் பாடுவான். குரலில் ஒரு கம்மல் – அவர் பொறாமைப் படுகிற தெளிவு, புரளல், ரவைகள், அன்றுதான் ஒன்று புலப்பட்டது. பிறவி வேறு, பயிற்சி வேறு என்று. சபைகளிலும் சங்கீத உலகிலும் முதல் பீடங்களில் உட்கார்ந்திருப்பவர்கள் எல்லாம் முக்காலே மூன்றுவீசம் பயிற்சி பயின்றவர்கள், பாடப்பிறந்தவர்கள் இல்லை என்று அப்பொழுது என்னமோ தோன்றிற்று. அப்புறம் எத்தனை சர்ச்சைகளைக் கேட்டும், கச்சேரிகள் கேட்டும், அதிர்ச்சி மாதிரி தாக்கிய அந்த எண்ணம் போகவில்லை. பிடிவாதம் ஆகிவிட்டது. அதே லாகிரி சாரீரமாக, பிறவியாக இருக்கிறது இந்தக் குரல்.

நாலைந்து வருடமாயிற்று, ஊருக்கு வந்து குடியேறி நமக்குத் தெரியாமல் இது யார் என்று குடலையை எடுத்துக்கொண்டே குரல் வந்த திசையில் நடந்தார். சத்திரத்திலிருந்து வெளியேறி வாய்க்கால் மதகைக் கடந்து, சாலையை அடைந்ததும், குரல் நெருங்கிற்று.

மூங்கில் கொல்லையிலிருந்து கேட்டது. அருகே போனதும் வேலி முள்ளிடுக்கில் கேட்டது. அங்கு ஒரு முகம் முண்டாசு,

"யார்றாது பாடறது?" என்றார்.

சட்டென்று ஓர் உருவம் நின்றது. குப்பாண்டி!

"மைக்கேலு மகனாடா?"

"ஆமாங்க!"

"நீயா பாடிண்டிருக்கே!"

"சும்மாதான் சாமி" என்று முகத்தை நாணத்தில் அப்பால் திருப்பிக்கொண்டு நின்றான் அவன்.

"ஆமாங்க, சும்மாத்தாங்க, ஒண்ணும் நினைச்சிக்காதீங்க, இனிமே இல்லீங்க" என்று அந்த முட்களுக்கிடையே முள்ளில் மேல் நிற்பதுபோலவே நின்றான் அவன் இனிமேல்பாடமாட்டேன். பெரிய மனது பண்ணி இங்கிருந்து போய்விடுங்கள் என்று கெஞ்சுவது போல்.

"யார்ட்டடா கத்துக்கிண்டே இதெல்லாம்?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லீங்க."

"டேய், திவ்யமாய்ருக்குடா! நீயாவா பாடறே இப்படி? ஒருத்தருமா சொல்லிக் கொடுக்கலே!"

"அட போங்க, கெடக்கு" என்று மறுபடியும் நாணி வளைந்தான் அவன்.

"எங்கடா கேட்டே இதெல்லாம்?"

"நாயனங்க..."

"அப்புறம்?"

"அடபோங்க, எனக்கு வேலையிருக்கு. அந்திக்குள்ளாற தலைமட்டுக்கும் கட்டியாகணும் வேலியை."

"எலெ, சும்மா சொல்றா கோவில் உற்வசத்திலெ கேட்டியா நாயனம்?"

"ஆமாங்க" பதில் சொல்ல ஒரு அலுப்பு.

"அப்புறம் எங்கெல்லாம் கேப்பே?"

"அட, நீங்க போங்க, கிடக்கு."

"ஏலெ, இப்ப சொல்றியா இல்லியா?"

"சினிமா, கூத்து – போதுங்களா நீங்க போங்க."

"யாருட்டவும் சொல்லிக்கலெ?"

"இல்லீங்கறேன்."

“வகையா சொல்லிக்கிட்டா எப்படியிருக்கும் தெரியுமா? எலெ, நீ எப்படிப் பாடறே தெரியுமா? சொல்லிக்க வேண்டாம்?”

“ஐயய்யோ!”

“நான் சொல்லித் தரப்போறேண்டா உனக்கு.”

“எனக்கு வேலை கெடக்குங்க.”

“நான் வேலை மெனக்கட்டுத்தாண்டா இந்த மண்டுப்பய ஊர்லெ உட்கார்ந்திருக்கேன். உனக்குச் சொல்லித்தான் கொடுக்கப்போறேன். பாட்டு, தாளம் எல்லாம் சொல்லிக்கொடுக்கறேன். அப்புறம் உங்க சாமியார்ட்ட போய்ப் பாடிக் காமி. ஞாயித்துக்கிழமை கோவில்லே உள்ளெ கூப்பிட்டு உன்னைப் பாடச் சொல்றாரா இல்லியா பாரு! அடுத்த வருஷம்…”

“என்ன சாமி இது?”

“அப்பேர்ப்பட்ட ஞானம் இருக்குடா உனக்கு! நல்லாத் தெரிஞ்சுகிட்டு பாடினா கர்த்தருக்கு எத்தனை சந்தோஷமாயிருக்கும்? மரவேலிக்கு இந்தண்டை நிக்க வாண்டாம். கோவிலுக்கு உள்ள சாமியார் கிட்டவே போயி பாடலாம். அவரே கூப்பிட்டு கிட்ட நிக்கவச்சு, பாடச் சொல்லுவார். இதபாரு, இன்னிக்கி செவ்வாக்கிழமையா? வெள்ளிக்கிழமை காலமெ வீட்டுக்கு வந்து என்னைப் பாரு. நீ காசு கீசு தரவேண்டாம். ஒரு தேங்கா பழம் மாத்திரம் கொண்டுவா. சாமியை வேண்டிக்கிட்டு வாத்தியாருக்கு ஒரு கும்பிடு போட்டு ஆரம்பிக்கணும். அதுக்குத்தான். நீ எங்க பசு மாட்டுக்குகூட புல்லறுத்துப் போடவேண்டாம். வெறுமே சொல்லித்தரேண்டா! என்ன? வரேன்னு சொல்றா. சாமி ஞானம் கொடுத்திருக்கில்ல? அதைச் சரியா ஒரு ஒழுங்கு பண்ணி உபயோகப்படுத்தலே, ரொம்பக் கெடுதல், சாமி என்னாத்துக்குக் கொடுத்திருக்கு. இப்படி வேலி முள்ளிலே உக்காந்து வகை தெரியாமே இழுக்கறதுக்கா?”

நாலு பக்கத்திலிருந்தும் அவனைத் தாக்கினார் மல்லி. குழையடித்தார், மிரட்டினார், கெஞ்சினார்.

“நீங்க என்னதான் செய்யணுங்கிறீங்களாம்?” என்றான் கடைசியில்.

“வெள்ளிக்கிழமை எங்க வீட்டுக்கு வரவேண்டியது, அப்புறம் தினமும் காலையிலே வந்து கத்துக்க வேண்டியது. ரண்டு வருஷத்திலே பாரு.”

“சரிங்க.”

“அப்புறம் இந்த முள்ளு குத்திண்டே நிக்கவாண்டாம். பெரிய வித்வானா, கடுக்கன் சட்டையெல்லாம் போட்டுக்கிட்டு பாகவதர் மாதிரி, அம்மாபேட்டையார் மாதிரி கச்சேரி பண்ணப் போறடா, சத்தியமாச் சொல்றேன்…”

“சரிங்க சாமி.”

விழுந்தாண்டா பயல்!

“வெள்ளிக்கிழமை விடிய காலமே காத்திண்டிருப்பேன் – நீ வரலே”

“அப்புறம் பாரேன். வாரேங்கறேன்.”

அந்த நிமிஷம் அந்தக் கிராமத்தையே கொளுத்திவிட வேண்டும் போலிருந்தது மல்லிக்கு. அத்தனை ஞான சூன்யங்கள்! அத்தனையும் ஞானசூன்யங்கள்! மாடு, சாணி, விரை, நெல்லு, எருவடி, யுரியா, சல்பேட்டு, கவணை, மடை, வேறு ஒன்றமே கிடையாதா?

மல்லிக்குப் பொங்கிக் கொண்டு வந்தது. எப்படிப்பட்ட சாரீரம்! எப்படிப்பட்ட ஞானம்! ஏய், நான் சொல்லிக்கொடுத்து, அத்தனையும் உன் மண்டையிலே எழுதி, நீ அதை அப்படியே ஜிலுஜிலுன்னு ஜிலுஜிலுண்ணு

தொண்டையைக் கூட அடைத்தது அவருக்கு.

நாலைந்து வருடங்களாக, ஊருக்கு வந்து குடியேறிய நாள் முதலா இறக்கம், ஒரு சோர்வு! பாடச் சொல்லி எவன் கேட்கிறான் இங்கே? அதற்கு முன்னால் மட்டும் என்ன வாழ்ந்தது? சென்னைக்குப் போனபோது, பெரிய வித்வானாய் கொடி கட்டிப் பறக்கவேண்டும் என்றுதான் போனது. போன வேளையோ என்னவோ, கையைக் காலைப் பிடித்து முழுசாகப் பத்து கச்சேரி தேறவில்லை. டியூஷன் வாத்தியாராகவே காலம் தள்ளும்படியாகிவிட்டது.

பெரிய மனிதர்கள் காலைப் பிடிப்பதற்குப் பதிலாக, சின்ன மனிதர்கள் காலைப்பிடிப்பது பலித்தது. அவர்களுக்கு நம் கஷ்டங்கள் புரியும். கடைசியில் அதுவும் அவ்வளவாகப் பயனில்லை. புருஷன் பெண்டாட்டிக்குக்கூடக் காணாமல்தான் சென்னையில் சம்பாதிக்க முடிந்தது என்றால் ஒரு மனிதனுடைய அதிர்ஷ்டம் எவ்வளவு பெரியது? வாடகை தராமல், காசு கொடுத்து அரிசி, பால், மோர், கறிகாய் வாங்காமல் காலந்தள்ள கிராமம் இருக்கும்போது, பட்டணம் என்ன, பம்பாய் என்ன? சோற்றுக்குத்தானே பாடினோம் என்று ஆகிவிட்டபோது, பாடாமலேயே சோறு கொடுக்கிற பட்டிக்காட்டை விடவா சொர்க்கம்?

மல்லி ஒருநாள் நாலு சாக்கில் பாத்திரங்களையும், பழைய மெத்தைகளையும், சென்னையில் சம்பாதித்து வாங்கின ஒரு மர பீரோவையும், இரண்டு நாற்காலிகளையும், கடிகாரத்தையும், சுருதிப் பெட்டியையும், சங்கீத சன்மார்க்க புத்தகங்களையும் கட்டிக்கொண்டு வாழாவெட்டி மாதிரி பிறந்த ஊருக்கு வந்து சேர்ந்தார். இரண்டு மூன்று வருடம் தினமும் தனியாக உட்கார்ந்து பாடினார். வர வர அதுவும் தேய்ந்துவிட்டது. ராதா கல்யாணம், ஏகாதசி பஜனையென்று பக்கத்து ஊர்களுக்குப் போய்ப் பாடுவதே போதும் என்றாகிவிட்டது. மூடமூட ரோகமாகி அந்த இடங்களில் கூட தொண்டையைப் புரட்டித் தள்ளுகிற கதி வந்துவிட்டது. இருபது லட்சம் ஜனங்கள் வாழ்கின்ற சென்னையில் ஸுஸ்வரம், சுத்தம் என்று அவரை சொன்னவர்கள் மூன்றே நண்பர்கள். கணக்குப்படி பார்த்தால் இருநூறு பேர் முழுசாகத் தேறாத கிராமத்தில் எத்தனைபேர் அப்படிக் கிடைப்பார்கள்? சைபர், சைபர், சைபர்...

ஒரே ஒரு ஆள் சிஷ்யனாக வந்தான் மூன்றாம் வருஷம், ஸம்ஸ்கிருதம் படித்த பையன். நல்ல குரல். ஆனால் ஆறு மாசம் சொல்லிக்கொள்ள அவனுக்குப் பொறுமையில்லை.

சம்பாதிக்க சென்னை போய்விட்டான். சென்னையில் அவர் ஆதியில் செய்ததையே அவனும் செய்து கொண்டிருக்கிறானாம். பேட்டை பேட்டையாக சபைகளின் காரியதரிசிகளிடம் பல்லை இளித்துப் புராணம், உபநியாசம் ஏற்பாடு செய்யச் சொல்லி, கதை சொல்லி, நடுநடுவே வருகிறவர்களுக்குப் புகழ் சொல்லி, தட்டெடுத்து...

குப்பாண்டி இருக்கிறான் என்று இத்தனை நாளாகத் தெரியாமல் போய்விட்டதே!

ஆனால் பாலன் சிரிக்கிறதும், மற்றவர்கள் சிரிக்கிறதும்... பாட்டிகள் "நாப்பு' காட்டுகிறதும்... என்ன இது?

கீசுகீசென்று ஊஞ்சல் கத்துகிறது. அதையே கேட்டுக்கொண்டிருக்க வேண்டும் போலிருக்கிறது. மனைவி வந்தாள். சமைத்துச் சாதம் போட்டாள். சாதம் போடும்போது, "குப்பாண்டிக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுக்கப்போறதாமே?" என்றாள்.

"ஆமா."

"படித்துறையில் வாலாம்பா பாட்டி கேட்டா."

"எப்படிக் கேட்டா?"

"என்னடீம்மா, ஒரே பட்டணக் கோலமாயிருக்கே. உள்ளியே வச்சிண்டு சொல்லிக் கொடுக்கப் போறாராமே உங்க ஆத்துக்காரர்ன்னு கேட்டா. எனக்கு ஒண்ணும் தெரியாது பாட்டி, அவாளைத்தான் கேக்கணும்னேன்."

"யார் அப்படிச் சொன்னான்னு கேக்கப்படாதோ?"

"சொல்லிக் கொடுக்கப்போற சமாசாரமே அங்கேதானே தெரியும் எனக்கு" என்று தங்களுக்கிடையே இருந்த உறவின் நெருக்கத்தை லேசாகக் குத்திக்காட்டினாள் மனைவி.

இரண்டுபேருக்கும் அவ்வளவுதான் சல்லாபம். அதுவும் அவருடைய இறக்கங்களில் ஒன்று. ஒரு பிள்ளை பெற முடியவில்லையே என்று இவர் மேல் அவளுக்கு கோபம். அவள் மீது இவருக்குக் குறை,

சாப்பிட்டுக் கையலம்பியதும் திண்ணைக்கும் போகவில்லை. உள்ளுக்குள்ளேயே அடைந்துகிடந்தார். பிள்ளையார் கோவிலுக்குப் போகிற வழக்கம். அதற்கும் பயமாக இருந்தது. ஊஞ்சலோடு கிடந்தார். இருட்டிய பிறகுதான் பிள்ளையார் கோவிலுக்கு நடந்தார். அதுவும் கொல்லை வழியாக. பிள்ளையாரின் முன்பு குட்டிக்கொண்டே பிறகு, சேரிக்குப் போய் குப்பாண்டியைக் கூப்பிட்டு நாளைக்கு வரவேண்டாம் என்று சொல்லிவிட்டால் என்ன? வயல் வரப்புகளைக் கடந்து போகவேண்டும். களத்தின் வழியாகப் போனார். பாதி தூரம் நல்ல பாதை. போனால், களத்திலே யாராவது நிற்பார்களே... மறுபடியும் அதே கேள்வி. வரப்புப் பாதையிலேயே முழுவதும் போனால்...? சீ... என்ன இது? நம்மை யார் தடுக்க? நானா கோழை?

திரும்பிவிட்டார் மல்லி.

சாப்பிட்டுவிட்டுப்படுத்தார். சற்று இறுக்கமாயிருந்தது. ஆனால், வழக்கம்போல் வெளியே போகவில்லை. பயம் வயிற்றில் நெளிகிறது. கீசுசீசென்று ஊஞ்சலிலேயே படுத்தார். காற்று வருகிறது,

ஆனால், பயம்? பயம் தீரவில்லை. மனச்சாட்சி என்கிறார்களே – இதுதானோ? மனச்சாட்சி என்ன என்று ஆராய்ந்து பார்த்தார். அந்தக் கவலை மனச்சாட்சி இல்லை என்று புரிந்துவிட்டது. ஆனால், பயம்?... ஏன் இன்னும் குடைந்துகொண்டேயிருக்கிறது? பஞ்சாயத்துக்கூடி அவர் மீது கட்டுப்பாடு செய்கிறார்கள். பாலன், சுப்புக்குட்டி, சீதாராமன், கர்ணம், பட்டாமணியம் எல்லோரும் ஊரைக் கட்டுப்படுத்தினார்கள். "கோடாலி!" என்று பாலன் மாமா, கையை வீசிக்கொண்டு விழியை உருட்டிக்கொண்டு அடிக்க வருகிறார்.

"என்னது!... என்னது!... என்னன்னேன்!"

தள்ளுகிறாற் போலிருந்தது. யாரும் தள்ளவில்லை. மனைவி அவரை உலுக்கினாள்.

"என்ன, இரைஞ்சு பேத்தித்தே! ஊளையிடறாப்பல... சொப்பனம் கண்டுதா என்ன?"

அந்த ஒரு கனவோடு போயிற்று. ஒரு மணிக்குப் பிறகு தூக்கம் வந்தது,

"எழுந்துக்கலாமா?" என்று மனைவி எழுப்பினாள். "குப்பாண்டி கூப்பிடறான் கொல்லையிலே" என்றாள்.

மல்லி எழுந்தார். கொல்லைப்பக்கம் வேகமாக நடந்தார். குப்பாண்டி தேங்காய் பழத்துடன் வந்து மாட்டுக் கொட்டகைக்குப் பக்கத்தில் நின்றான்.

"கும்பிடறேன், சாமி."

"வந்துட்டியா இரு வந்துடறேன்" என்று பல் தேய்த்துவிட்டு, சுருதிப்பெட்டியை எடுத்துக்கொண்டு வந்தார்.

"தேங்காய் பழத்தை வச்சுட்டு சுவாமியை வேண்டிக்கோ."

அவனே விழுந்து கும்பிட்டான். அவர் கிணற்றங்கரையில் தளம் போட்டிருக்கிற ஈரமில்லாத இடமாக உட்கார்ந்திருந்து சுருதிப் பெட்டியை அவிழ்த்துவிட்டார்.

"அதோ அப்படி உட்காரு... அங்கேதான். கறிவேப்பிலை கன்னுகிட்ட உட்காரேன்" என்றார்.

குப்பாண்டி சப்பணம் கொட்டி உட்கார்ந்து கொண்டான். இவருக்கம் அவனுக்கும் நாற்பதடி தூரம் இருக்கும். நடுவில் ஏழெட்டு துளசிச் செடி. ஒரு அந்தி மந்தாரைச் செடி.

"சொல்லு... நான் முன்னாலே ஸா பா ஸா சொல்றேன். முன்னாடி ஒரு தடவை கேட்டுக்கோ. அப்புறம் ஒண்ணொண்ணாச் சொல்லுவேன். நீ பாடணும்... ஸா பா ஸா... இப்ப சொல்லு, சொல்லு. ஸா"

"ஸா"

அப்பா! என்ன குரல்! என்ன குரல்!

ஸரிகம பதநிஸா, ஸநிதப மகரிஸா

ஸரிகம ஸரிகம ஸரிகம பதநிஸா

ஸநிதப ஸநிதப ஸநிதப மகரிஸா.

முதல் காலம், இரண்டாவது காலம், மூன்றாவது காலம்... என்ன புத்தி இந்தப் பயலுக்கு! என்ன வேகம்? என்ன இனிமை! அட, கந்தர்வப் பிசாசு!

கொல்லைப் படலைச் சாத்தாமல் வந்துவிட்டான் குப்பாண்டி. குடியானத் தெரு, சேரி ஜனங்கள் ஒரு இருபது பேர். பக்கத்து வீடுகளின் வேலிகளின் ஓரமாக அக்ரகாரத்துப் பிரமுகர்கள். நடு வயதுகள், சில்லுண்டிகள்! பாலன், சப்புக்குட்டி, கர்ணம், சீதாராமன்!

பாலன் சிரிக்கிறார். கர்ணம் சிரிக்கிறார் அதைப் பார்த்துக் குழந்தைகள் பாதி, ஏன் என்று தெரியாமல் விழிக்கின்றன. பாதி தெரியாமலேயே சிரிக்கிறதுகள்.

நாற்பதடி தூரத்தைப் பார்த்துக் குடியானத்தெரு ஆட்கள் சிரித்தார்கள்.

மல்லியின் வயிற்றுக்குள் ஒரு பெரிய வைக்கோல் போரே எரிந்தது. சரளி வரிசை முடிந்தது.

“ஸா பா ஸா”

“ஸா பா ஸா”

“இன்னிக்கி போரும். நாளைக்கிக் காலமே வந்துடு இதே மாதிரி.”

குப்பாண்டி எழுந்து நடந்தான். அவனோடு குடியானத்தெரு, சேரி ஆட்களின் கூட்டம் கலைந்தது.

பாலன் வேலிக்கப்பாலிருந்து சொன்னார் “மல்லி! ரொம்ப அழகாகப் பண்ணிப்பிட்டீர்” என்றார்.

“மீசையிலெ படாம கூழும் குடிச்சாச்சு” என்றார் கர்ணம்.

அதைக் கேட்டு சீதாராமன் கொளகொளவென்று மார்ச்சதையும் வயிறும் குலுங்கச் சிரித்தான். அவன் பெரிய மனிதன். எனவே மற்றவர்களும் அதை வாங்கிச் சிரித்தார்கள். உடனே இந்தப் பக்கத்து வீட்டுக் கொல்லையிலிருந்த குஞ்சு, குதிர்களும் நகைத்தன.

அவர் சற்று நின்று பார்த்தார்.

“என்னடா, சிரிக்கிறேள்?’”

“என்னடா சிரிக்கிறேள்?” என்று அதையே திருப்பிச் சொன்னான் சீதாராமன். மறுபடியும் பெரிய சிரிப்பு.

“ஒங்க” என்று, மீதி வெசவை வெய்யாமல் “நாளைக்கு உள்ள வச்சிண்டு பாடம் சொல்றேனா இல்லியா பாருங்கடா, ஒழிச மக்காள!” என சுருதிப்பெட்டியை வீசி கூட்டத்தின் பக்கம் எறிந்தார் மல்லி, அது வேலியில் விழுந்து துருத்தியில் முள் தைத்துக்கொண்டு கீழே விழுந்தது. அசடு மாதிரி நடந்தார் மல்லி. சட்டென்று அதை

எடுத்து கதவைத் தடார் என்று சாத்தித் தாழிட்டுக் கொண்டு உள்ளே வந்து முள்ளை எடுத்தார்.

“நீங்கள்ளாம் நன்னாருப்பேளா?” என்று தாழிட்டுக் கொல்லை கதவுக்கு இப்பால் நின்று, வானைப் பார்த்து அவர் மனைவி சபித்துக் கொண்டிருந்தாள்.

“கெடக்கான், நீ வா… நாய்தான் குலைக்கிறது, நீ வேற ஏன் குலைக்கணும்? கொஞ்சம் கோந்து வேணும் உள்ள வா” என்று மல்லி கத்தினார்.

இப்பொழுது பயத்தோடு ஒரு தனிமையும், அலட்சியமும் சேர்ந்து கொண்டன. காய்ச்சல் வந்தமாதிரி கை நடுங்கிற்று. ஊஞ்சல்மீது படுத்துச் சங்கிலியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்.

## சிறுகதை எழுதுவது எப்படி?

எல்லோரும் நாட்டியம் ஆடுவதில்லை. எல்லோரும் சங்கீதம் பாடுவதில்லை. எல்லோரும் வயலினோ, மிருதங்கமோ வாசிப்பதில்லை. சிலருக்குத்தான் இந்தக் காரியங்களைச் செய்ய முடிகிறது. அந்தச் சிலரிலேயே ஓரிரண்டுபேர் செய்யும் பொழுது நமக்கு மெய் மறந்துவிடுகிறது. தெய்வத்தையே கண்டு விட்டாற்போல புல்லரித்துப் போகிறோம். வேறு பலர் செய்யும் பொழுது, நமக்கு இந்த அனுபவம் ஏற்படுவதில்லை. ஒரு சமயம் நாம் பிரமிக்கலாம். மலைக்கலாம். வியக்கலாம். நுட்பமான ரசானுபவம், தன்மறதி போன்ற உணர்வு நிலைகள் வருவதில்லை. கலைஞர் உணர்வு மயமாகி ஆகி ஆடும்போதோ, வாசிக்கும் போதோ, தானாக ஒரு முழுமையும் ஓர் ஒருமையும் அந்தக் கலைப்படைப்பில் நிறைந்து, நம்முள்ளேயும் பரவி நிரம்பும். உணர்வு இல்லாமல் இயந்திர ரீதியில் படைக்கிறவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் தங்கள் சாமர்த்தியத்தையும் அசகாய சூரத்தனத்தையும் காட்டி நம்மைப் பிரமிக்க வைக்க முடியும், ஆனால் மெய்மறக்கச் செய்ய இயலாது.

நான் இந்த நோக்கில்தான் எந்தக் கலைப் படைப்பையும் பார்க்கிற வழக்கம். சிறுகதையையும் அப்படித்தான் பார்க்கிறேன்.எந்தக் கலைப்படைப்புக்கும் முழுமையும் ஒருமையும் அவசியம். அவை பிரிக்க முடியாத அம்சங்கள். சிறுகதையில் அவை உயிர்நாடி. ஓர் அனுபவத்தைக் கலைவடிவில் வெளிப்படுத்த சிறுகதையில் இடமும் காலமும் குறுகியவை. எனவே எடுத்துக்கொண்ட விஷயம் உணர்வோ, சிரிப்போ, புன்சிரிப்போ, நகையாடலோ முறுக்கேறிய, துடிப்பான ஒரு கட்டத்தில்தான் இருக்கமுடியும். சிறிது நேரத்தில் வெடித்துவிடப் போகிற ஒரு தெறிப்பும், ஓர் அவசரத் தன்மையும் நம்மை ஆட்கொள்ள வேண்டும். தெறிக்கப் போகிறது பட்டுக் கயிறாக இருக்கலாம். எஃகு வடமாக இருக்கலாம். ஆனால் அந்தத் தெறிப்பும் நிரம்பி வழிகிற துடிப்பும் இருக்கத்தான் வேண்டும். இந்தத் தெறிப்பு விஷயத்திறகுத் தகுந்தாற்போல் வேறுபடுவது சகஜம். கதையின் பொருள் சோம்பல், காதல், வீரம், தியாகம், நிராசை, ஏமாற்றம், நம்பிக்கை, பக்தி, உல்லாசம், புதிர் அவிழல் அல்லது இவற்றில் சிலவற்றின் கலவைகளாக இருக்கலாம். அதற்குத் தகுந்தபடி அந்தத் தெறிப்பு பஞ்சின் தெறிப்பாகவோ,

பட்டின் தெறிப்பாகவோ, எஃகின் தெறிப்பாகவோ, குண்டு மருந்தின் வெடிப்பாகவோ சத்தம் அதிகமாகவோ குறைந்தோ மௌனமாகவோ மாறுபடும். எனக்கு வேறு மாதிரியாக இந்த அனுபவத்தை விளக்கத் தெரியவில்லை.

பல சமயங்களில் சிறுகதையைப் பற்றி நினைக்கும் போது, நூறு அல்லது ஐம்பது கஜ ஓட்டப்பந்தயத்திற்கு ஆயத்தம் செய்து கொள்ளுகிற பரபரப்பும், நிலைகொள்ளாமையும் என்னைக் கவ்விக் கொள்கிறதுண்டு. இது ஒரு மைல் ஓட்டப்பந்தயமல்ல. சைக்கிளில் பல ஊர்கள், வெளிகள், பாலங்கள், சோலைகள், சாலைகள் என்று வெகுதூரம் போகிற பந்தயம் இல்லை. நூறு கஜ ஓட்டத்தில் ஒவ்வோர் அடியும் ஒவ்வோர் அசைவும் முடிவை நோக்கித் துள்ளி ஓடுகிற அடி அசைவு. ஆர அமர,வேடிக்கை பார்த்துக் கொண்டு செல்லவோ வேகத்தை மாற்றிக் கொள்ளவோ இடமில்லை. சிறுகதையில் சிக்கனம் மிக மிக அவசியம். வளவளப்புக்கு இடமே கிடையாது. வளவளப்பு என்றால் அதிகச்சுமை. ஓடுவது கஷ்டம்.இத்தனை தெறிப்பும் துடிப்பும் வேகமும் தேவையான சிறுகதை எழுத எத்தனையோ பேர் வழிகள் சொல்லியிருக்கிறார்கள். வகுப்புக்கூட நடத்துகிறார்கள். தபால் ட்யூஷன்கூட நடத்துவதாகக் கேள்வி. என்ன நடத்தினாலும் உத்திகளைத்தான் சொல்லிக்கொடுக்கலாம். உணர்வில் தோய்வதைச் சொல்லிக் கொடுக்க முடியாது. உணர்வில் லயிப்பதையும் முறுக்கேறுவதையும் சொல்லிக் கொடுக்க முடியாது. ஆனால் உத்திகளைச் சரியாகக் கையாண்டு, இலக்கண ரீதியாகப் பழுதில்லாத ஆயிரம் சிறுகதைகள் இப்பொழுது நம் நாட்டிலும் அயல்நாடுகளிலும் பல பத்திரிகைகளில் வருகின்றன. ஆனால் நாவலோ, நாடகமோ எழுதும் ஆசிரியர்களின் எண்ணிக்கையில் நூற்றில் ஒரு பங்குகூட அசல் சிறுகதை ஆசிரியர்கள் இந்த உலகத்தில் இல்லை. இதுதான் வேடிகக்கை. உத்திகளைத் தெரிந்து கொண்டு மட்டும் சிறுகதைகள் எழுதி, பத்திரிகைகளை நிரப்பலாம்.

அது ஒன்றும் பெரிய காரியமில்லை. செக்காவின் உத்திக்கு ஓர் அச்சு தயார் செய்துகொண்டு அதில் நம் சரக்கைப் போட்டு வார்த்துவிடலாம். ஆனால் அது செக்காவ் அச்சின் வார்ப்பாகத்தான் இருக்கும். புதிதாக ஒன்றும் வந்துவிடாது. உணர்வும் நம் பார்வையின் தனித்தன்மையும்தான் முக்கியம். அவை கண்யமாகவும் தீவிரமாகவும் இருந்தால் நமக்கு என்று ஓர் உருவம் கிடைக்கும். இதை எப்படிச் சொல்லிக் கொடுக்கப் போகிறார்கள்?தனித்தன்மையும், உணர்ச்சி நிறைவும், தெறிப்பும் எல்லாம் இல்லாவிட்டால் சிறுகதையின் பிரசித்திபெற்ற இலக்கணமான ஒருமைப்பாடு உயிரில்லாத ஜடமாகத்தான் இருக்கும். இன்று உலகப் பத்திரிகைகளில் வரும் பெரும்பாலான கதைகள் தனித்தன்மை இல்லாத, அல்லது போலி உணர்ச்சிகள் நிறைந்த ஜடங்கள்தான். ஆனால் பொதுவாகப் பத்திரிகைகள்தான் சிறுகதைக் கலையை வளர்ப்பதில் பெரும் பங்குகொண்ட கருவியாக இருந்திருக்கின்றன. செக்காவ், மாப்பஸான், ஹென்ரி ஜேம்ஸ், மாம், மெல்வில், ஸ்டீபன், க்ரேன், ப்ரெட் ஹார்ட்டி முதல் ஜெர்மனி, ஜப்பான், இந்தியா ஆகிய நாடுகளில் எழுதிய எழுதுகிற சிறுகதை எழுத்தாளர்கள் வரை முக்காலே மூனறு வீசம்பேர் பத்திரிகைகளில்தான் எழுதியிருக்கிறார்கள்எழுதுகிறார்கள். எனவே, பொறுப்புள்ள பத்திரிகைகள் நல்ல சிறுகதைகளையும், பொறுப்பில்லாதவை ஜடங்களையும்

வளர்க்கின்றன என்று சொல்லிவிட்டு மேலே போவோம்,சிறுகதையில் வரும் கதையோ நிகழ்ச்சியோ ஒரு க்ஷணத்திலோ,நிமிஷத்திலோ, ஒரு நாளிலோ, பல வருடங்களிலோ நடக்கக்கூடியதாக இருக்கலாம். காலையில் தொடங்கி இரவிலோ, மறுநாள் காலையிலோ அல்லது அந்த மாதிரி ஒரு குறுகிய காலத்திலோ முடிந்துவிட வேண்டும் என்று அவசியமில்லை. சொல்லப்படவேண்டிய பொருளின் ஒருமைதான் முக்கியமானது.

எட்டு நாளில் நடந்த சங்கதியை முதல் நாளிலிருந்து வரிசையாகச் சொல்லிக்கொண்டு போகலாம். இரண்டாவது, மூன்றாவது, நாலாவது நாளிலிருந்தோ அல்லது கடைசிக் கணத்திலிருந்தோ ஆரம்பித்து, பின் பார்வையாகப் பார்த்துச் சொல்லிக் கொண்டு போகலாம். நடந்தது, நடக்கப் போவது இரண்டுக்கும் இடையே ஒரு வசதியான காலகட்டத்தில் நின்றுகொண்டு நிகழ்ச்சியைச் சித்திரித்துக்கொண்டு போகலாம். எப்படிச் சொன்னாலும் ஒரு பிரச்னை, ஒரு பொருள், ஓர் உணர்வு, ஒரு கருத்துதான் "ஓங்கியிருக்கிறது' என்ற நிலைதான் சிறுகதைக்கு உயிர்.சிறுகதையில் சொல்லக்கூடாத விஷயங்களே இல்லை. கடந்த 100 ஆண்டுகளில் சிறுகதை வளர்ந்துள்ள போக்கைப் பார்த்தாலே இது தெரியும். வெறும் புற நிகழ்ச்சிகளில் தொடங்கி நுட்பமான மனத்தத்துவ ஆராய்ச்சி வரையில் அதன் பொருள் இப்பொழுது விரிந்திருக்கிறது. மேலெழுந்த வாரியான கவனத்திற்குப் புலப்படாத அக உணர்வுகள், நினைவோட்டங்கள், அடிமன நிலைகள் வெறும் கண்பார்வைக்குப் பின்னால் ஒளிந்து கிடக்கும் மன உந்தல் இவை எல்லாம் இன்று சிறுகதைப் பொருளாக வந்துள்ளன. ஆனால் எதைச் சொன்னாலும் ஓங்கி நிற்கும் ஒருமை அவசியம். ஒருமையுள்ள சிறுகதை முடிய வேண்டிய இடத்தில் தானாக முடிந்துவிடும். முடிகிற எல்லையைக் கடந்தால் ஒருமைக்கோப்புக்கும் ஊறுவிளையத்தான் செய்யும்.

பந்து எல்லையைக் கடந்து ஓடினால் கிரிக்கெட்டில் ஒன்றுக்கு நாலாக ரன் கிடைக்கும். சிறுகதையில் கிடைப்பது பூஜ்யம்தான்.என்னை ஒரு நண்பர் கேட்டார். சிறுகதை, நாவல் எழுதுகிறவன் பெரிய இலக்கிய கர்த்தர்களின் நூல்களைப் படிக்க வேண்டுமா என்று. அவசியமில்லை என்று நான் சொன்னேன். அது எனக்கும் என்னைப் போன்றவர்களுக்கும் சொல்லவில்லை. இயற்கையாகவே அபாரமாக எழுதும் மேதை படைத்தவர்களை, புது வழிவகுக்கும் ஆற்றல் படைத்தவர்களை மனதில் வைத்துக்கொண்டு சொன்னது. என்னைப் போன்றவர் நிறைய படித்தால்தான் நல்லது. செக்காவ், மாப்பஸான், போ, மாம், தாகூர், கு.ப.ரா. புதுமைப்பித்தன், லா.ச.ரா, ஸீன் ஓகாஸி, ஜாய்ஸ், ஸ்டீ·பன் க்ரேன், ஹென்றி ஜேம்ஸ், போவன், காவபாட்டா போன்ற வெவ்வேறு சிறுகதை ஆசிரியர்களைப் படித்தால், சிறுகதைக்கான பொருள்களை நாடுவதில் எத்தனை சாத்தியக் கூறுகள் உண்டு என்பதும், சிறுகதை உருவத்தில் எத்தனை நூறு வகைகள் சாத்தியம் என்பதும் தெரியும். உருவம் என்று சொல்லும் போது ஆரம்பம், இடை, முடிவு மூன்றும் தெள்ளத் தெளிவாகத்தான் இருக்கவேண்டிய அவசியம் இல்லை என்பதும் இந்தக் கதைகளைப் படித்தால் தெரியும். இந்த மூன்றும் தெளிவாகத்தெரிவதும், தெளிவில்லாமல் பூசினாற் போல் இருப்பதும் சொல்லுகிற விஷயத்தைப் பொறுத்தவை.

ஒரு மரத்தின் நிழல் கருக்காகக் கத்தரித்தாற் போலும் விழலாம். பூசினாற் போலும் விழலாம். அது விளக்கின் தூரம், ஒளி முதலியவற்றைப் பொறுத்தது. உருவம் சரியாக அமைவது நம்முடைய உணர்வின் தீவிரத் தன்மையைப் பொறுத்தது. என்னுடைய அனுபவத்தில், உணர்ச்சியோ, சிந்தனையோ போதிய தீவிரத்தன்மை பெறும்போது, உருவமும் தானாக ஒருமைப்பாட்டுடன் அமைந்துவிடுகிறது. உணர்ச்சியின் தீராத தன்மை எப்போது, எந்தக் கால அளவில் போதிய அளவுக்குக் கைகூடும் என்று சட்டம் போடுவதில்லை. அது ஒவ்வொர் ஆசிரியரின் திறமையைப் பொறுத்தது. ஒருவருக்கு ஒரு மணியிலோ, ஒரு நிமிஷத்திலோ கைகூடுகிற தீவிரத்தன்மை, ஊறும்தன்மை, எனக்குக் கிட்ட ஒரு வாரமோ, ஒரு வருஷமோ பிடிக்கலாம். எனக்கு ஒரு கதையைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கையில், திடீரென்று வேறு ஒரு கதை தோன்றிச் சில நிமிஷங்களில் அதை எழுதி முடித்ததுண்டு. யோசித்துப் பார்த்தால், அந்தக் கதைக்கான வித்து மனத்தில் விழுந்து எத்தனையோ வருஷங்கள் ஆகியிருக்கும்.

தோட்டத்து மண்ணில் எப்பொழுதோ உதிர்ந்த விதையொன்று, மண்ணுள் பல காலம் உறங்கி, திடீரென்று ஒரு மழை அல்லது நைப்பிற்குப் பிறகு முளைப்பது மாதிரிதான் அது. உணர்ச்சியைக் குறுகிய காலத்தில் தீவிரமாக அனுபவிக்கப் பழக்கியும் கொள்ளலாம் என்று சொல்கிறார்கள். எழுத்து தொழிலாகி, பத்திரிகைகள் பெருகிவிட்ட இந்த நாளில் இப்படிப் பழக்கிக் கொள்வது அவசியம் என்பதில் தவறில்லை.எப்படி எழுதுவது என்பதை எனக்குச் சரியாக விவரிக்கத் தெரியவில்லை. மாபஸான் “நெக்லேஸை”யோ, “இரு நண்பர்களை”யோ, செக்காவ் “டார்லிங்”கையோ, “கோரஸ் பாடகி”யையோ, கு.ப.ரா. “நூருன்னிஸா”வையோ, பிச்சமூர்த்தி “பதினெட்டாம் பெருக்கை”யோ, டாகூர் “ஊர் திரும்புதலை”யோ எப்படி எழுதினார்கள் என்று அவர்களைக் கேட்டால்தான் தெரியும். என் சொந்த அநுபவத்தில் தெரிந்ததைத்தான் நான் சொல்லுவேன். ஒரு நாள் நான் ரயிலில் போய்க்கொண்டிருந்தபோது கச்சலும், கறுப்புமாக நாய் பிடுங்கினாற் போன்ற ஒரு பத்து வயதுப் பெண்குழந்தையுடன் யாரோ பணக்கார அம்மாள் எதிர் இருக்கையில் அமர்ந்திருந்தாள். பள்ளிக்கூட விடுமுறைக்கு மூத்த அக்காளின் ஊரில் தங்கிவிட்டு ஊர் திரும்புகிறது அந்தப் பெண். நல்ல துணை ஒன்று இந்தப் பணக்கார அம்மாளின் உருவில் கிடைக்கவே, அக்காள் அந்த அம்மாளோடு குழந்தையை அனுப்பியிருக்கிறாள். ஏதோ பேசிக் கொண்டிருக்கும்போது அந்த அம்மாள் “இது படித்து என்ன பண்ணப் போகிறது? நான் கூட, கூடமாட ஒத்தாசையாயிருக்க இதையே சாப்பாடு போட்டு வீட்டில் வைத்துக்கொண்டு விடலாம் என்று பார்க்கிறேன்” என்றாள்.

என்னமோ, அந்த யோசனையும் அந்த அம்மாள் அதைச்சொன்ன தோரணையும் உள் மனத்தில் பாய்ந்து குத்திக்கொண்டுவிட்டன. அந்தப் பெண்ணையே பார்த்துக் கொண்டு வந்தேன். அந்த ஆறு மணி நேரப்பயணத்தில் ஒன்றும் வேண்டும் என்றுகேட்காமல், ஆசைப்படாமல், கேட்ட கேள்விகளுக்கு மட்டும் பதில் சொல்லிக்கொண்டு வந்தது அது. எனக்கு உணர்ச்சி வசப்படுகிற இயல்பு அதிகம். அந்தப் பெண் தன் பொறுமையினாலும், பொறுப்பினாலும் எதையும் சமாளிக்கும். எதையும் ஆளும் என்று தோன்றிற்று. ஓடி ஆடி, கத்திக் கூச்சலிட்டு, விளையாடிப் பிதற்ற வேண்டிய வயதில் அது உலகத்தின்

சுமைகளையும், கவலைகளையும் தாங்கிக் கொண்டிருப்பது போல் எனக்குத் தோன்றிற்று. எனக்குப் பயமாக இருந்தது. வயிற்றைக் கலக்கிற்று. அது ஒரு படம்.இன்னொரு படம். என் மகன் ஆறு வயதில் ஒரு விடுமுறைக்கு அவன் தாத்தா வீட்டுக்குப் போயிருந்தான். நான் போய்த் திரும்பி அழைத்து வந்தேன். குணத்தில் எனக்குநேர் விரோதம் அவன். கூப்பிடாததற்கு முன் போய் யாரோடும் பேசிச் சிரித்து, நெடுநாள் சிநேகம் போல ஐக்கியமாகிவிடுகிற சுபாவம். பார்ப்பதற்கும் அப்போது கஷ்கு முஷ்கென்று உருட்டி விட்டாற்போல் இருப்பான். கூடப் பிரயாணம் செய்தவர்களோடு பேசிச் சிரித்துக் களைத்துப்போய் அவன் தூங்கத் தொடங்கினான். ஆரஞ்சுப் பழத்திற்காகக் கத்திவிட்டு, வாங்கிக் கொடுத்ததும் சாப்பிடாமல் தூங்கிவிட்டான். அது கையிலிருந்து உருண்டு ஒரு ஓரமாகக் கிடந்தது. அவ்வளவு கத்தினவன் ஏன் உடனே அதைத் தின்னவில்லை? எனக்கு அப்போது முன்பொருதடவை ரயில் பயணம் செய்தபோது பார்த்த அந்தப் பெண்ணின் ஞாபகம் வந்தது. இந்த இரண்டு படங்களும் எனக்கு அடிக்கடி ஞாபகம் வருவதுண்டு. ஆனால் எழுத வேண்டும் என்று தோன்றவில்லை.

சுமார் ஒரு வருடம் கழித்து கலைமகள் தீபாவளி மலருக்காக அழைப்பு வந்தபோது,இந்த இரண்டு படங்களும் இணைந்து கலந்து “சிலிர்ப்பு” என்ற கதையாக உருவாயின. அதை வேகமாக எழுதின ஞாபகம் எனக்கு. கம்ப்யூட்டரில் கொடுத்தது போல இந்த இரு நிகழ்ச்சிகளும் அந்த ஒரு வருஷ காலத்திற்குள் ஒரு கதையை உருவாக்கிவிட்டனவோ என்னவோ! உட்கார்ந்து கதையை எழுதி முடிக்கிற வரையில் என்னால் துயரம் தாங்கமுடியவில்லை. ஒரு அபூர்வமான உணர்ச்சிலயம் அது. உடல், உள்ளமெல்லாம் நிரம்பி அன்று நான் கரைந்து கொண்டிருந்த ஞாபகம். 13 வருஷம் கழிந்தும் இன்னும் தெளிவாக நினைவிருக்கிறது. கடைசி வரிகளை எழுதும்போது ஒரு குழந்தையின் நிர்மலமான அன்பில் திளைக்கும் சிலிர்ப்பும் கசிவும் என்னைக் கரைத்துக் கொண்டிருந்தன. எழுதி முடித்ததும் ஒரு அதிசயமான சுமையிறக்கமும் விடுதலையும் நெஞ்சு கொள்ளாத நிறைவும் என்னை வந்து அணைத்துக்கொண்ட நினைவு இன்னும் எனக்கு இருக்கிறது. “சிலிர்ப்பு’ என்றே பெயர்வைத்துக் கதையை அனுப்பினேன். (எழுதி முடித்த பிறகுதான் தலைப்புக் கொடுக்கிற பழக்கம் எனக்கு.)நான் ஒரு சின்ன ஹோட்டலில் சாப்பிடப் போனபோது ஒரு புதுக் கண்டாமணி கல்லாவிற்கருகில் வைத்திருந்தது. ஹோட்டல் முதலாளி அதைக் கோவிலுக்கு விடப்போவதாகச் சொன்னார். ஏதோ செல்லக் குழந்தையைப் பார்ப்பது போல அதை அவர் பார்த்துக் கொண்டு நின்றார். எதற்காக மணி வாங்கிவிடுகிறார் என்று எனக்குள் கேட்டுக் கொள்ளத் தொடங்கினேன்.

இன்னொரு நாள் லஸ் மூலை ஹோட்டல் ஒன்றில் சாப்பிடுகையில் ரவாதோசையின் மடிப்பைத் திறந்தபோது பாதி குடித்த பீடி ஒன்று கிடந்தது. ஹோட்டல் முதலாளியிடம் காண்பித்தேன். அவருக்கு வருத்தம், பத்துப் பேருக்கு நடுவில் சொன்னார். அதே லஸ் மூலையில் இன்னொரு ஹோட்டலில் சாம்பாரில் ஒரு சின்ன கருவண்டு கிடைத்தது. நல்ல வேளையாகச் சுண்டை வற்றல் குழம்பு இல்லை. வண்டு அடையாளம் தெரிந்தது. (ஒரு தடவை ரசத்தில் பல்லிகூடக் கிடைத்திருக்கிறது. சாப்பாடு விஷயத்தில் எனக்குத்

தனி அதிர்ஷ்டம் உண்டு.) சர்வரிடம் சொன்னதும், பீடி தோசை முதலாளி போலல்லாமல், அவர் பயந்து பரபரவென்று காதோடு காதாக மன்னிப்புக் கேட்டுக்கொண்டு ராஜோபசாரம் செய்து என்னை வழியனுப்பி வைத்தார். பல ஆண்டுகள் கழித்து இவையெல்லாம் சேர்ந்து "கண்டாமணி' என்ற கதையாக உருவாயின. இந்தக் கதைக்கு மையக்கரு, சந்தேகம் அல்லது பயம். ஒரு உணவு விடுதிக்காரர் சாதம் குழம்புகள் பரிமாறிவிட்டு உள்ளே வந்தபோது, குழம்பிற்குள் கரண்டியை விட்டுக் கிளறித் தூக்கிய போது நீளமாகப் பாம்பு குட்டி போன்ற ஒரு ஜந்து கிடப்பதைப் பார்த்தார். கணவனும் மனைவியும் பதறிப்போய் தெய்வத்திடன் அபவாதம் ஆபத்து ஏதும் வராமல் காப்பாற்றும்படி வேண்டிக்கொள்கிறார்கள்.

செய்தி பரவாமலிருக்க வேண்டும் என்று அவர்களுக்குக்கவலை. கண்டாமணி வார்த்துக் கட்டுவதாக நேர்ந்து கொள்கிறார்கள். மறுநாள் காலை அநத் ஆள் செத்துப் போய்விட்டதாகத் தெரிகிறது. அது இங்கே சாப்பிட்டதனால்தானா என்று நிச்சயமாகச் சொல்வதற்கில்லை. ஆனால் விடுதிக்காரருக்குத்தன் குழம்புதான் யமன் என்று பயம். சந்தேகமும் பயமும் அவரை ஆட்டுகின்றன. சொன்னபடி கண்டாமணி வார்த்துக் கோயிலில் கட்டிவிடுகிறார். ஆனால் அந்த மணியோசையைக் கேட்கும்போதெல்லாம், தான் செய்து விட்டதாக நினைத்த குற்றம் அவரை அலைக்கழிக்கிறது. கடைசியில் தாங்க முடியாமல் கோயில் நிர்வாகியிடம் சென்று வேறு என்னவோ சாக்குகள் சொல்லி மணியைத் திருப்பிப் பெறப்பார்க்கிறார். சின்னச் சின்னதாக வெள்ளிமணிகள் செய்து வைக்கிறேன் என்று வேண்டுகிறார். கண்டாமணியோ நன்றாக அமைந்துவிட்டது. அதிகாரி அதை எண்ணி, "போய்யா பைத்தியம்" என்கிற மாதிரி சிரித்துவிட்டு மறுத்துவிடுகிறார். விடுதிக்காரருக்கு அழுத்தி வற்புறத்தவும் பயம். பேசாமல் திரும்பிவிடுகிறார். இந்தக் கதையைச் "சிலிர்ப்பு" மாதிரி பரபரவென்று நான் எழுதவில்லை. அந்தச் சந்தேகமும் பயமும் கதாநாயகர்களாக இருப்பதாலோ என்னவோ மெள்ள மெள்ளத்தான் எழுத முடிந்தது.

வேறு தொல்லைகள் குறுக்கிட்டதனாலும் மூன்று நான்கு தடவை உட்கார்ந்து எழுதி முடித்ததாக ஞாபகம்.இந்த மாதிரி பல கதைகளுக்குச் சொல்லிக்கொண்டு போகலாம். அதனால் உங்களுக்கு எந்தப் பிரயோசனமும் இராது. அவரவர்கள் அனுபவிப்பதும் எழுத்தாக வடிப்பதும் அவரவர் முறை.என் அனுபவத்தை மீண்டும் ஒருமுறை சொல்ல ஆசைப்படுகிறேன். எந்த அனுபவத்தையும் மனசில் நன்றாக ஊறப்போடுவதுதான் நல்லது. பார்த்த அல்லது கேட்ட ஓர் அனுபவம் அல்லது நிகழ்ச்சியைப் பற்றி உணர்ந்து சிந்தித்துச் சிந்தித்து ஆறப்போடத்தான் வேண்டும். இந்த மன நிலையை ஜே. கிருஷ்ணமூர்த்தி அடிக்கடி சொல்லும் " Choice-less Awareness" என்ற நிலைக்கு ஒப்பிடத் தோன்றுகிறது. ஒரு நிகழ்ச்சியைச் சுற்றி சித்தம் வட்டமிட, வட்டமிட, அதன் உண்மை நம் அகத்தின் முன்னே மலரும். கதை உருவு முழுமையுடன் வடிவதற்கு என் அனுபவத்தில் இதுதான் வழி. அனுபவம் நம்முள்ளில் தோய்ந்து ஒன்றி பக்குவநிலைக்கு வருமுன் அவசரப்பட்டு எழுதினால் உருவம் மூளிப்பட்டு விடுகிறது. பழக்கத்தில் இது தெரியும்.நான் சிறுகதை ஆசிரியனும் இல்லை. சிறுகதை வாத்தியாரும் இல்லை. (சிறுகதை எழுது என்று

யாராவது என்னைக் கேட்டால் எனக்கு வயிற்றில் புளியைக் கரைக்கத் தொடங்கிவிடும்.!) நான் எழுதிய நூற்றுக்கு மேற்பட்ட கதைகளில் ஒன்றோ இரண்டோதான் சிறுகதை என்ற சொல்லுக்குச் சற்று அருகில் நிற்கின்றன. மற்றவைகளைச் சிறுகதை என்றால் சிறுகதை என்ற சொல்லுக்கே இழிவு செய்கிற மாதிரி. இப்படியானல் ஏன் இத்தனை நாழி கதைத்தாய் என்று கேட்காதீர்கள். தோல்வி பெற்றவர்கள்தான் உங்களுக்கு வழி சொல்லமுடியும்.

## மக்களை ஈர்த்த மகராசர்

விமானம் தரை தட்டிற்று. ஓடி நின்றது. 'இங்கு ஐம்பது நிமிஷம் நிற்கும். தொடர்ந்து பிரயாணம் செய்பவர்கள் இறங்கி, ட்ரான்ஸிட் கூடத்தில் இளைப்பாறி திரும்பி வரலாம். ' என்று பெண் குரல் அறிவித்தது. அவர் வெள்ளைகாரர் படிக்கட்டில் இறங்கினார். நடந்து 'ட்ரான்ஸிட் ' கூடத்திற்குப் போனார்.இன்று என்ன விசேஷம் இந்த ஊரில் ? ஏன் இவ்வளவு இரைச்சல். ' ஏன் இத்தனை கூட்டம் ?கண்ணாடிச் சுவர் வழியாகப் பார்த்தார் வெள்ளைக்காரர். தலை, தலை, எங்கும் தலைகள் 'பத்தாயிரம் தலைகள். ஆமாம் பத்தாயிரம் பேருக்குக் குறையாது. மேலும் மேலும் கார்கள் வந்து கொண்டிருந்தன. சின்னக்கார்கள், பெரிய கார்கள், உள்நாட்டு கார்கள். வெளிநாட்டு கார்கள் கதவுகள் திறந்தன. மனிதர்களைக் கொட்டிவிட்டு அப்பால் கார் கூட்டத்தோடு சேர்ந்து நின்றன. பத்தாயிரம் பேர் கூட்டத்தின் முன் வரிசையில் ஒரு முந்நூறு பேர் ரோஜா மாலைகளும் கைகளுமாக நிற்கிறார்கள். ஒரு மொத்தமான மனிதரின் கழுத்தில் மாலையைப் போட்டு கும்பிடுகிறார்கள். பின்னே போகிறார்கள்.

மாலைகளுக்குள் உடல் மறைந்தது, முகம் மறைந்தது, சுமை தாங்காமல் போனதும், மொத்தமான மனிதர் மாலைகளை ஒவ்வொன்றாக கழற்றுகிறார். பக்கத்திலிருப்பவர்களிடம் பார்க்காமலேயே கொடுக்கிறார். பக்கத்திலிருப்பவர் இன்னொருவர். மாலைகளை மூன்று அல்லது நான்காகச் சேர்த்துக் கழற்றிக் கழற்றி உதவுகிறார். இன்னொரு குழு முன்னால் வருகிறது. மாலைகளைப் போடுகிறது. மீண்டும் மாலைகளுக்குள் உடல் மறைகிறது. தோள் தாங்க முடியவில்லை. மொத்தமான மனிதர் தானாகவும், பக்கத்திலிருப்பவர்கள் உதவியுடனும் மாலைகளை எடுத்து கொடுக்கிறார். அவர் முகத்தில் மாறாத புன்னகை, கை குலுக்கல், கும்பிடுகள். சிலர் குழந்தைகளிடம் மாலையைக் கொடுத்து, குழந்தைகளையே உயரத் தூக்கி மாலைகளை அணி விக்கச் செய்கிறார்கள். போலீஸ்காரர்கள் தடியும் கையுமாகக் கூட்டத்தை ஒழுங்குபடுத்துகிறார்கள். எம்பிஎம்பியும் குதித்துக் குதித்தும் கூட்டத்தின் நடுவில் உள்ளவர்கள் மொத்தமான மனிதரைப் பார்க்க முயலுகிறார்கள்.

மாலைகள் வந்து கொண்டேயிருக்கின்றன. போட்ட வண்ணமும் கழன்ற வண்ணமும் இத்தனை மாலைகளையும் போட இன்னும் இரண்டு மணி நேரமாவது ஆகுமே என்று கணக்குப் போடுகிறார் வெள்ளைக்காரர். அரைமணி ஆகிவிட்டது. அவர் கைக் கடிகாரத்தைப் பார்க்கிறார். படபட வென்றும் சடசட வென்றும் விறுவிறு வென்றும் கூட்டம் நகர்ந்து நகர்ந்து வேகமாக, விரைவாக, நொடிக்கொன்றாக மாலைகளைப்

போட்டுவிட்டது.'உலகம் காணும் உத்தமனே சென்று வா. "திருமகனே வெற்றி கொண்டு திரும்பி வா "அயல் நாடு காணும் ஆண்டகையேபுயல் பிரயாணம் கண்டு வா 'நாடு போற்றும் நாயகாநீடு புகழ் பரப்பி வா. 'இப்படி நூற்றுக் கணக்கான வெவ்வேறு வகை கோஷங்கள் விமான நிலைய வெளியை நிரப்ப, போலீஸ்காரர்கள் பாதை விலக்க மக்கள் கூட்டம் முண்டி முண்டிப் பின் தொடர, மொத்தமான மனிதர், காக்கி உடை பாதுகாப்பாளர் உச்சி முதல் உள்ளங்கால் வரை தடவிவிடும் பரிசோதனையினின்றும் விலக்குப் பெற்று விமானத்தை நோக்கி நடந்தார். அவர் பின்னால் போக ஐந்தாறு பேர்தான் அனுமதிக்கப்பட்டார்கள்.வெள்ளைக்காரரும் மற்றவர்களும் உடலைத் தடவும் பாதுகாப்பாளரிடம் உடலைக் காட்டி அனுமதி பெற்று விமானத்திற்குத் திரும்பினார்கள். அதே கோஷங்கள் விமானம் வரையில் வானைப் பிளந்தன.

மொத்தமான மனிதர் உடல் முழுதும் ரோஜா இதழ்கள். கோட்டு கால் சட்டை தலை–முகம்–காது மேல் இமை தோள்–எங்கும் ரோஜா இதழ்கள். இரண்டு மாலைகளை மட்டும் கழற்ற விடாமல் அணிந்து கொண்டே இருக்குமாறு கூட்டம் வற்புறுத்திற்று.'யார் இந்த ஜென்டில்மேன் ?' என்று பக்கத்தில் நடந்து வருபவரிடம் கேட்டார் வெள்ளைக்காரர்.'தெரியவில்லை யாராவது மந்திரியாக இருக்கலாம். "என்ன தெரியவில்லை ? இவர் ரொம்ப பெரிய வி.ஐ.பி. போலிருக்கிறதே ?' என்று கேட்டார் வெள்ளையர்.'அதான் சொன்னேனே. மந்திரியாக இருக்கலாம் ' என்று.'மந்திரி என்றால் நிச்சயமாகத் தெரிந்திருக்க வேண்டுமே "இந்த் நாட்டில் பல ராஜ்யங்கள் உள்ளன. சில ராஜ்யங்களில் முப்பது நாற்பது மந்திரிகள் உண்டு. மொத்தம் கணக்குப் பார்த்தால் ஐந்நூறு மந்திரிகளுக்கு மேல் இருக்கலாம். நான் எண்ணியதில்லை. அந்தக் காலத்தில் படிப்பு முடிந்ததும் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் பரீட்சைகள் எழுதுவதற்காக காபினெட் மந்திரிகள், ராஜ்ய மந்திரிகள், உதவி மந்திரிகள், ஏழு உலக அதிசயங்கள் –என்றெல்லாம் பெயர்களை மனப்பாடம் பண்ணியதுண்டு. இப்போது யார் எதற்கு மந்திரி என்றெல்லாம் தெரிந்து கொள்ள நேரம் இல்லை. "வாஸ்தவம், இந்தியா மிகப் பெரிய நாடுதான்.

'இப்படி அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே ஒரு ஐயாயிரம் ஜனங்கள் போலீஸ் பந்தோ பஸ்துகளை மீறி உள்ளே திமுதிமுவென்று ஓடி வந்தார்கள்.'செல்வமே சென்று வா "பாரதத்தின் திருமணீ 'வான் ரதம் ஏறிவா 'என்றெல்லாம் கூட்டம் மீண்டும் கோஷங்கள் எழுப்பிற்று. இளைஞர்கள் குரல் கம்ம, கழுத்து புடைக்க உரக்க உரக்க கோஷமிட்டனர். சில இளைஞர்கள் பூமியிலிருந்து எம்பி எம்பிக் குதித்து கோஷம் எழுப்பினார்கள்.வெள்ளையர் படிக்கட்டில் ஏறி தன் இருக்கையில் அமர்ந்தார். ஜன்னல் வழியாகப் பார்த்தார். விமான நிலைய அதிகாரிகள் கூட்டத்துக்கு நல்ல வார்த்தை சொல்லி விமானம் புறப்பட வசதி செய்து கொடுக்குமாறு வேண்டிக்கொள்வதைப் பார்த்தார். கடைசியில் ஒருவழியாக மொத்தமான மனிதர் மூன்று மாலைக் கழுத்தும் மேனிமுழுதும் பூவிதழ்களுமாக உள்ளே வந்தார். விமான அழகி, வழிகாட்டி இடம் காட்ட இருக்கையில் உட்கார்ந்து கொண்டார்.வெள்ளையருக்கு ஆச்சரியமாகி விட்டது. அவருக்குப் பக்கத்து இருக்கையில் உட்கார்ந்து கொண்டார் மொத்தமான பிரமுகர்.விமானம் புறப்பட்டது. தரையை விட்டு எழும்பிற்று.'ரொம்ப அழகான மணமான

ரோஜாக்கள் ' என்று பூமணத்தை முகர்ந்து பாராட்டினார் வெள்ளையர். இந்தியப் பிரமுகர் சிரித்தார். தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார்.'நான் பசுபதிநாத். பாலிடிக்ஸில் பதிமூன்று வருஷமாக இருக்கிறேன்.

தேசிய உளுந்து வாரியத்தின் தலைவனாக சென்ற வாரம் நியமித்தார்கள் என்னை "உளுந்து ?"உளுந்து என்பது ஒருவகைப் பருப்பு, கறுப்பு நிறம் ' என்று ப்ரீ்ஃப்கேஸைத் திறந்து ஏழெட்டு பொட்டலங்களைக் காண்பித்தார் பசுபதிநாத். ஒரு பொட்டலத்தை கிழித்து ஒரு தேக்கரண்டி யளவு உளுந்தை வெள்ளையர் கையில் போட்டு வாயில் போட்டு மெல்லச் சொன்னார். வெள்ளையர் மென்றார்.'மொட்டுக் மொட்டுக்.... ப்சப் சப்சப்சப் ' என்று ருசி பார்த்தார். 'ம்...குட் ' என்றார்.'இது அப்படியே ப்ரொட்டான். கோழி, முட்டை, மாமிசத்தில் உள்ள புரதம் எல்லாம் இதில் உண்டு. தோசை, இட்லி, வடை, அடை, கொழுக்கட்டை என்ற பெயர்களைக் கேட்டிருக்கிறீர்களா ?"அப்படி என்றால் ? "பரவாயில்லை ' என்று உளுந்து தேன் குழல் ஒன்றை ஒரு பையை கிழித்து எடுத்துக் கொடுத்து சாப்பிடச் சொன்னார் பத்ரிநாத்.'கரக், கரக் கரக் கரக் ப்சப் சப்சப் ?' என்று வெள்ளையர் ருசி பார்த்தார். 'நைஸ், தாங்க்யூ ' என்றார்.'எங்கள் ஊரில் தென்னாட்டு சைவர்கள் வட நாட்டு வைஷ்ணவர்கள் என்ற சாகபட்சிணிகள் இதைத் தான் புரதத்துக்காக உண்பார்கள். இந்த உளுந்தை எந்தெந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம் என்று பார்க்கத்தான் நான் இப்போது பல மேல் நாடுகளுக்குப் பயணம் தொடங்கியிருக்கிறேன். "நல்லது. அதிருக்கட்டும், நீங்கள் மிகமிகப் பெரிய பிரமுகர் என்பதை அறிந்து கொண்டேன் பல்லாயிரக்கணக்கில் வந்து மக்கள் வழி அனுப்புகிறார்களே ' என்ன கூட்டம் என்ன கூட்டம் ' எத்தனை நூறு மாலைகள். "ஹி ஹி ஹி. என்ன பிரயோசனம் ? பதிமூன்று வருஷம் ஆச்சு, அரசாங்கம் இதைப் புரிந்து கொள்ள.

பத்து லட்சம் தேர்தலுக்கு கொடுத்தேன். ஒன் மிலியன் டாலர். இல்லாவிட்டால் இந்த உளுந்து போர்டு தலைமை கூடக் கிடைத்திராது. "ஓ....வாட் எ பிட்டி ' 'எட்டு மணி நேரம் இறங்காமல் பறந்தது விமானம். பிறகு இறங்கிற்று. இறங்குகிற வரையில் ஷாம்பேன் விஸ்கி பீர் எல்லாம் வாங்கிச் சாப்பிட்டார் பசுபதிநாத். வெள்ளையருக்கும் உபசாரம் செய்தார். ஒரு பெக் விஸ்கி சாப்பிட்டு நன்றி கூறி விட்டுத் தூங்கினார்.பசுபதிநாத் இன்னும் தொடர்ந்து பறக்க வேண்டும். வெள்ளைக்காரர் 'நான் இறங்க வேண்டிய இடம் வந்து விட்டது. ' என்று விடை பெற்றுக் கொண்டார்.பசுபதிநாத் 'நானும் ட்ரான்ஸிட் லௌஞ்சிலிருந்தே உங்கள் நாட்டை பார்க்கிறேன் ' என்று இறங்கி கூடவே வந்தார். திடாரென்று 'நீங்கள் என்ன செய்கிறீர்கள் ? பிஸினஸா. சர்க்கார் வேலையா ஒன்றும் கேட்கவில்லை. கேட்கலாம் என்றிருந்தேன். தூங்கிவிட்டார்கள். ஸாரி. நீங்கள்.... ? "நான் இந்நாட்டின் உதவிப் பிரதம மந்திரி "ஆ ' இந்த நாட்டுக்கு உதவிப் பிரதம மந்திரியா ? "ரொம்ப ஆச்சரியப் படாதீர்கள். உங்கள் இந்தியாவில் எட்டில் ஒரு பங்குதான் எங்கள் நாடு. ஜனங்கள் ஆயிரத்தில் ஒரு பங்கு கூட இராது. "அது சரி. நீங்கள் உதவி பிரதமர் என்கிறீர்கள்: உங்களை யாரும் வரவேற்க வரவில்லையா ? "அதோ என் மனைவி — அதோ பாருங்கள் — அப்புறம் என் செக்ரட்டரி. பக்கத்தில் நிற்கிறார் பாருங்கள் "போலீஸ்

கீலீஸ் ஒன்றும் வர வில்லையா ?“போலீஸ் எதற்கு ? – வரவேற்கவா ?“உங்கள் நாடு ஜனநாயகம் இல்லையா ?“ஜனநாயகம் தான் “பின்னே மக்கள் யாரும் வரவேற்க வரவில்லையா ?“ஜனநாயக நாடல்லவா ? அதனால்தான் யாரும் வரவேற்க வரமாட்டார்கள்.... நான் வருகிறேன்.

ஹாப்பி லாண்டிங்க்ஸ்... அப்புறம் மறுமடியும் ஒரு தாங்க்ஸ். உங்களோடு டிரிங்ஸ் சாப்பிடும் வாய்ப்பை அளித்ததற்கு. ஓ ‘ இவர் என்னுடைய பர்சனல் அஸிஸ்டண்ட் – இவர் மிஸ்டர் பசு..... ‘ என்று விமானத்தின் பின்பக்கத்திலிருந்து இறங்கி பின்னால் வந்த ஒரு இளைஞனை அறிமுகப் படுத்தி விட்டு மறுபடியும் ‘ஹாப்பி ‘ லாண்டிங்ஸ் மிஸ்டர் பசு ‘ சொல்லிவிட்டு நடந்தார் வெள்ளையர் “ஜனநாயகமா.... பூ ‘ என்று மனதுள் சிரித்துக் கொண்டு ட்ரான்ஸிட் கூடத்துக்குள் நுழைந்தார் ‘ தேசீய உளுந்து வாரியத்தலைவர்.

## சிலிர்ப்பு

திருச்சிராப்பள்ளியிலிருந்தே புறப்படுகிற வண்டி அது. மாயவரத்தோடு நின்றுவிடும். பத்தரை மணிக்குத் தொடங்கி மூன்று மணியோடு அதன் வாழ்வு முடிந்துவிடும். மதுரை, மானாமதுரை, ஈரோடு என்று எல்லா வண்டிகளையும் அனுப்பிவிட்டு திருச்சிராப்பள்ளி ஜங்ஷன் புயல் புகுந்து விளையாடின தோப்பைப் போல, ஒரே வெளிச்சமாக ஹோவென்று வெறிச்சிட்டுக் கிடந்தது. வாழைத்தொலி, ஆரஞ்சுத்தொலி, எச்சில் பொட்டணம், தூங்குமூஞ்சிகள்– இவற்றைத் தவிர ஒன்றையும்காணவில்லை. வண்டி புறப்பட இன்னும் அரைமணிதான் இருக்கிறது. எஞ்சின், கார்டு, ஒன்றும் வரவில்லை. வண்டிக்கு வண்டி ஒரு பரட்டை, அழுக்கு இப்படி ஏதாவது தூங்கிக் கொண்டிருந்தது. பங்களூர் எக்ஸ்பிரஸில் இறங்கி வந்த குடும்பம் ஒன்று இரண்டாம் வகுப்பில் சாமான்களைப் போட்டுக் காவல் வைத்து எங்கேயோ போய்விட்டது. எக்ஸ்பிரஸ் வண்டி சென்றால் என்ன கூட்டம். வரும்போது என்ன வரவேற்பு, என்ன உபசாரம்! போகும்போது எவ்வளவு கோலாகலம்! இது நாதியில்லாமல் அழுது வழிந்தது. ஷட்டிலும் கேடுகெட்ட ஷட்டில், ரயில் ஜாதியில் கூட ஏழை, பணக்காரன் உண்டு போல் இருக்கிறது.நான் தனியாக கடைசிப் பெட்டிக்கு முன் பெட்டியில் உட்கார்ந்திருந்தேன்.

பக்கத்தில் என் பையன் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். தலைமாட்டில் கையிலிருந்து நழுவிய ஆரஞ்சு உருண்டு கிடந்தது. அதைப் பார்க்கும்போது சிரிப்பு வந்தது எனக்கு. பையனை பங்களூரிலிருந்து அழைத்து வருகிறேன். மாமா சம்சாரம் ஊருக்கு வந்திருந்தபோது அவனை அழைத்துப் போயிருந்தாள். நான் காரியமாக பெங்களூர் போனவன் அவனை அழைத்துக் கொண்டு வந்தேன். பெங்களூர் ஸிட்டி ஸ்டேஷனில் மாமா ரெயிலேற்றி விட வந்திருந்தான். ரெயில் புறப்பட ஐந்து நிமிஷம் இருக்கும்போது ஆரஞ்சுப் பழக்காரனைப் பார்த்து, “”ஆரஞ்சுப்பா, ஆரஞ்சுப்பா” என்று பையன் முனகினான். மாமா காதில் விழாததுபோல அந்தண்டை முகத்தைத் திருப்பிக்கொண்டு விட்டான். பையனைச் சுடுகிறாப்போல ஒரு பார்வை பார்த்தேன். அவன் வாய் மூடிக் கொண்டது. ஆனால், வண்டி புறப்பட்டதுதான் தாமதம்; ஆரம்பித்து விட்டான். ஆறு வயசுக் குழந்தை;

எத்தனை நேரந்தான் அடக்கிக் கொண்டிருப்பான்.“”யப்பா, யப்பா!”“”ஏண்டா கண்ணு!”“”பிச்சி மாமாவுக்கு வந்து, வந்து, தொளாயிர ரூபா சம்பளம்.

பணக்காரர். இவ்வளவு பணக்காரர்ப்பா!” என்று கையை ஒரு கட வாத்திய அளவுக்கு அகற்றி, மோவாயை நீட்டினான் – குறை சொல்லுகிறாற்போல.“”அதுக்கு என்ன இப்ப?”“”வந்து, செத்தே முன்னாடி ஆரஞ்சு கேட்டேனோல்லியோ, வாங்கிக் குடுக்காம எங்கேயோ பாத்துண்டு நின்னார்ப்பா.”“”அவர் காதிலே விழுந்திருக்காது. விழுந்திருந்தா வாங்கியிருப்பார்.”“”நான் இரைஞ்சுதான்பா சொன்னேன்”.“”பின்னே ஏன் வாங்கிக் கொடுக்கலை?” கேள்வியை நானே திருப்பிக் கேட்டுவிட்டேன். பையன் திணறினான்.“”வந்துப்பா, வந்து, பிச்சி மாமாவை வந்து ஒரு மூணு கால் சைக்கிள் வாங்கித் தான்னேன். வந்து, தரேன் தரேன்னு ஏமாத்திப் பிட்டார்ப்பா…”“”அவர் என்னத்துக்குடா வாங்கணும்? நான் வாங்கித் தரேன்.”“”நீ எப்படி வாங்கித் தருவியாம்?”“”ஏன்?”“”உனக்கு நூறு ரூபாதானே சம்பளம்?”“”உனக்கு யார் சொன்னா?”“”வந்து, பிச்சி மாமாதான் சொன்னா.”“”உங்கிட்ட வந்து சொன்னாரா, உங்கப்பாவுக்கு நூறு ரூபாதான் சம்பளம்னு?”“”வந்து எங்கிட்ட இல்லேப்பா. மாமிகிட்டச் சொன்னா. நீ வந்து மெட்ராஸ்லேந்து லெட்டர் எழுதியிருந்தே பாரு, புள்ளையார் பூஜையன்னிக்கி; அப்பச் சொன்னா மாமிகிட்ட. வெறுமெ வெறுமே நீ மெட்ராஸ் போறியாம். உனக்கு அரணாக்கொடி வாங்க முடியாதாம்.”இது ஏதுடா ஆபத்து!“”சரி நாழியாச்சு. நீ படுத்துக்கோ.”“”எனக்கு மோட்டார் வாங்கித் தரயா?”“”தரேன்.”“”நெஜ மோட்டார் இல்லே. கீ கொடுக்கிற மோட்டார், இவ்வுளூண்டு இருக்குமே, அது.”“”அதான் அதான். வாங்கித் தரேன்.”“”யப்பா, ஆரஞ்சுப்பா.”“”நீ தூங்கு. திருச்சினாப்பள்ளி வந்தவுடனே வாங்கித் தந்துடறேன்.”

“”போப்பா!”“”இப்ப எங்கடா வாங்கறது, ரெயில் போயிண்டிருக்கிற போது?”“”அப்பன்னா ஒரு கதை சொல்லு.”“”அப்படிக் கேளு. நல்ல கதையாச் சொல்றேன். ஒரே ஒருஊரிலே…” பாதிக் கதையில் பையன் தூங்கிவிட்டான்.“”குழந்தை நல்ல சமத்து ஸôர். ஷ்ரூடா இருக்கான். ஆளை எப்படி “ஸ்டடி’ பண்றான்!” என்று திடீரென்று எதிரே இருந்தவர் மதிப்புரை வழங்கினார்.“”அதுதான் தலை பெரிசா இருக்கு!” என்று பையனைப் பார்த்தேன். தலை சற்றுப் பெரிதுதான் அவனுக்கு. எடுப்பான முகம். மூக்கும் முழியுமான முகம். மொழு மொழு வென்று சரீரம். தளதளவென்று தளிரைப் போன்ற தோல். கன்னத்தில் தெரிந்தும் தெரியாமலுமிருந்த பூனை மயிர் ரெயில் வெளிச்சத்தில் மின்னிற்று. தலைமயிர் வளையம் வளையமாக மண்டி, அடர்ந்து பாதி நெற்றி வரை விழுந்திருந்தது. அழகில் சேர்க்க வேண்டிய குழந்தைதான். நாளை மத்தியானம் அம்மாவைப் பார்க்கத்தான் போகிறான். அதுவரையில்? யாரோ அநாதையைப் பார்ப்பது போல் இருந்தது எனக்கு. தாய் பக்கத்தில் இல்லாவிட்டால் குழந்தைக்குச் சோபை ஏது? குழந்தையை இரண்டு மூன்று முறை தடவிக் கொடுத்தேன். கபடமில்லாத இந்தக் குழந்தையை எப்படி ஏமாற்றத் துணிந்தது பிச்சி மாமாவுக்கு. கிருபணன், கிருபணன் என்று வேலைக்குப் போன நாள் முதல் வாங்கின பிரக்யாதி போதாதா? குழந்தையிடங் கூடவா வாங்க வேண்டும்? சரிதான்,

போனால் போகிறது என்று விட்டுவிடக்கூடிய வலுவும் எனக்கு இல்லை. குழந்தையின் முகத்தைப் பார்க்கும் போதெல்லாம் துன்பம் கிளர்ந்தது.

சிறிய அற்பமான நிகழ்ச்சி. ஆனால் எனக்குத் தாங்கவில்லை. பிச்சி மாமா எத்தி எத்திப் பிழைக்கிற வித்தைகள், பிறந்தது முதல் உள்ளும் புறமும் ஒன்றாமல் அவன் நடத்தி வருகிற வாழ்க்கை, பெண்டாட்டியிடங்கூட உண்மையில்லாமல் அவன் குடும்பம் நடத்துகிற "வெற்றி'- எல்லாம் நினைவில் வந்து, திரண்டு சுழல் வண்டுகளைப் போலச் சுற்றிச் சுற்றி வந்தன. ராத்திரி முழுவதும் அதே தியானம். தூக்கமே இல்லை.திருச்சி வந்ததும் ஆரஞ்சு வாங்கினேன். ""யப்பா, இதை ஊருக்குப் போய்த் திங்கறேம்ப்பா. அம்மா உரிச்சுக் கொடுப்பா கையிலே, வாங்கித் திங்கறேம்பா" என்று கெஞ்சினான்.""ஆல் ரைட், அப்படியே செய்."வண்டி புறப்பட இன்னும் அரை மணி இருந்தது. தாகம் வறட்டிற்று. இறங்கிப் போய்த் தண்ணீர் குடித்துவிட்டு, வெற்றிலை போட்டுக்கொண்டு வந்தேன்.திரும்பி வரும்போது யாரோ ஓர் அம்மாள் என் பெட்டியில் ஏறிக்கொண்டிருந்தாள். கூட ஒரு பெண். எதிர்த்த பலகையிலேயே உட்கார்ந்து கொண்டார்கள்.""இதுதானே மாயவரம் போகிற வண்டி?"""இதேதான்."""எப்பப் புறப்படும்?"""இன்னும் இருபத்தைந்து நிமிஷம் இருக்கு."""நீங்கள் எதுவரையில் போறேள்."""நான் கும்பகோணம் போறேன்."""உங்க குழந்தையா?"""ஆமாம்"""அசந்து தூங்கறானே."""பங்களூரிலிருந்து வரோம்.

அலுப்பு; தூங்கறான்."""நீயும் படுத்துக்கறயா?"""இல்லே மாமி, தூக்கம் வரலே" என்றது அந்தப் பெண்.""கொஞ்சம் தூங்குடி குழந்தை. ராத்திரி முழுக்கப் போயாகணும். நாளைக்கு வேறே, நாளன்னிக்கி வேறே போகணுமே."""இல்லே மாமி, அப்பறம் தூங்கறேன்."அம்மாளுக்கு நாற்பது வயது இருக்கும். இரட்டை நாடி. ருமானி மாம்பழம் மாதிரி பளபளவென்று இருந்தாள். காதில் பழைய கட்டிங்கில் ஒரு பெரிய ப்ளூ ஜாக்கர் தோடு. மூக்கில் வைர பேஸரி. கழுத்து நிறைய ஏழெட்டு வடம் சங்கிலி. கையிலும் அப்படியே. மாம்பழ நிறப் பட்டுப்புடவை. நெற்றியில் பளீரென்று ஒரு மஞ்சள் குங்கும வட்டம். பார்க்கப் பார்க்கக் கண்ணுக்கு நிறைவான தோற்றம், பக்கத்தில் ஒரு தோல் பெட்டி. ஒரு புதுக் குமுட்டி அடுப்பு.அந்தப் பெண்ணுக்கு எட்டு வயது இருக்கும்; மாநிறம்; ஒட்டி உலர்ந்த தேகம்; குச்சி குச்சியாகக் கையும் காலும்; கண்ணை வெளிச்சம் போட்டுப் பார்க்க வேண்டியிருந்தது; எண்ணெய் வழிகிற முகம்; தூங்குகிறாற்போல ஒரு பார்வை. கையில் ஒரு கறுப்பு ரப்பர் வளை; புதிதாக மொடமொடவென்று ஒரு சீட்டிப் பாவாடை; சிவப்புப் பூப்போட்ட வாயில் சட்டை; அதுவும் புதிதுதான்; கழுத்தில் ஒரு பட்டையடித்த கறுப்புக் கண்ணாடி மணிமாலை. பக்கத்தில் ஒரு சீட்டிப்பாவாடை, கொசுவி முறுக்கிச் சுருட்டிக் கிடந்தது. அதிலேயே ஒரு சட்டையும் திணித்திருந்தது.அந்த அம்மாளுக்கும் பெண்ணுக்கும் என்ன சம்பந்தம்? எப்படிக் கேட்பது?வண்டி புறப்படுகிற சமயத்திற்கு ஒரு மலைப்பழக்காரன் வந்தான்.

ஒரு சீப்பு வாங்கி ஒரு பழத்தை அந்தப் பெண்ணிடம் கொடுத்தேன். பதில் பேசாமல் வாங்கிக் கொண்டது.""சாப்பிடு."""சாப்பிடு" என்று அந்த அம்மாள் சொன்னதும் உரித்து வாயில் போட்டுக் கொண்டது.""இந்தப் பொண்ணு கல்கத்தாவுக்குப் போறது."""கல்கத்தாவுக்கா!"""ஆமாம், நம்ம பக்கத்து மனுஷா ஒத்தர் அங்கே பெரிய

வேலையிலே இருக்காராம். அங்கே போறது. ராத்திரி மாயவரத்திலே இருந்து அவாளுக்குத் தெரிஞ்சவா யாரோ போறா. அவாளோட சேர்த்துவிடணும். நல்ல பொண்ணு, சாதுவா, சமர்த்தாயிருக்கு."பிறகு நானே கேட்க ஆரம்பித்துவிட்டேன்."“உம் பேரு என்னம்மா?"“காமாக்ஷின்னு பேரு. குஞ்சுன்னு கூப்பிடுவா."“பேஷ், பேஷ்!"“என்ன பெரிய பேஷாப் போடறேள்?" என்று அந்த அம்மாள் சிரித்தாள்; “இவ எப்படி இரண்டு பேரைச் சுமக்கிறாள்னா!"எனக்கும் சிரிப்பு வந்தது."“அதுவும் சரிதான். ஆனால் நான் நெனைச்சது வேறே. எனக்குக் காமாக்ஷின்னு ஒரு தங்கை இருக்கா. இந்தச் சாயலாத்தான் இருப்பா. நல்ல தெம்பான இடத்துலேதான் குடுத்துது. ஆனா மாப்பிள்ளை ரொம்ப உபகாரி. யாருக்கோ மேலொப்பம் போட்டார் இருபதினாயிரத்துக்கு. அவன் திடீர்னு வாயைப் பொளந்துட்டான். அவர் குடும்பம் நொடிச்சுப் போயிடுத்து. ரொம்பக் கஷ்டப்பட்டார். இன்னதுதான்னு சொல்லி மாளாத கஷ்டம். இப்பத்தான் நாலஞ்சு வருஷமா அவர் ஒரு வேலைன்னு கிடைச்சுப் பிடுங்கலில்லாமெ இருக்கார். அவ கஷ்டம் விடிஞ்சுடுத்து. அவளுக்கு அடுத்தவ இன்னொரு தங்கை. குஞ்சுன்னு பேரு. அவளுக்குக் கல்யாணம் பண்ண அலையா அலைஞ்சோம். கடைசியிலெ எனக்கு அத்தை பொண் ஒருத்தி; அவளுக்குக் குழந்தை இல்லெ.

சீக்குக்காரி. தன் புருஷனுக்கே அவளைக் கொடுத்துடணும்னு தலைகீழா நின்னா. அப்படியே பண்ணிட்டார், எங்கப்பா. ஆனா, கல்யாணம் ஆன நாளிலிருந்து அவ பட்ட பாடு நாய் படாது. பத்து வருஷம் கழிச்சு ஒரு புள்ளைக் குழந்தை பிறந்திருக்கு. மூணாம் வருஷம். அதுக்குப் பிற்பாடுதான் அந்த வீட்டிலே அவளும் ஒரு மனுஷின்னு தலை தூக்கி நடமாடிண்டிருக்கா."“ஆயிரம் இருக்கட்டும் பெண்ணிருக்கப் பெண் கொடுக்கலாமோ?"“என்ன பண்றது? பிராப்தம். இவ பேரைக் கேட்டவுடனே ஞாபகம் வந்தது. ரெண்டு பேரும் ஒரே இடத்திலே அமைஞ்சிருக்கேன்னுதான் பேஷ் போட்டேன்."அந்தப் பெண் எப்படி இந்தப் பேச்சை வாங்கிக்கொண்டது என்று புரிந்துகொள்ள முடியவில்லை. அதே தூங்கும் பார்வையுடன் முகத்தில் ஓர் அசைவு, மாறுதல் இல்லாமல் எல்லாவற்றையும் கேட்டுப் பார்த்துக்கொண்டிருந்தது."“குழந்தை, உனக்கு அப்பா அம்மா இருக்காளா?"“இருக்கா."“அப்பா என்ன பண்றார்?"“ஒண்ணாவது வாத்தியார்."“அக்கா, தங்கை, அண்ணா, தம்பியெல்லாம் இருக்காளா?"“இருக்கா... நாலு அக்கா... ரெண்டு அண்ணா, ஒரு தம்பி இருக்கான். அதுக்கப்புறம் ஒரு தங்கை."“அக்காவுக்கெல்லாம் கல்யாணம் ஆயிடுத்தா?"“மூணு பேருக்கு ஆயிடுத்து. ரெண்டாவது அக்கா, நாலு வருஷம் முன்னாடி குறைப்பட்டுப் போயிட்டா. எங்களோடே தான் இருக்கா."“அண்ணா என்ன பண்றான்!"“பெரிய அண்ணா கிளப்பிலே வேலை செய்யறான். சின்ன அண்ணா சகிண்ட் பாரம் வாசிக்கிறான்."

“"நீ வாசிக்கிலையா?"“இல்லை, அண்ணா ஒருத்தன்தான் வாசிக்கிறான். எங்களுக்கெல்லாம் சம்பளம் கொடுக்க முடியலை, அப்பாவுக்கு."“அதுக்காக நீ வேலைக்குப் போறயாக்கும்?"“ஆமாம். மத்தியானச் சாப்பாட்டுக்கே எல்லாருக்கும் காணமாட்டேங்கறது."“உனக்கு என்ன வேலை செய்யத் தெரியும்?"“பத்துப் பாத்திரம் தேய்ப்பேன். காபி, டீ போடுவேன். இட்லி தோசைக்கு அரைப்பேன். குழம்பு, ரசம் வைக்கத்

தெரியும். குழந்தைகளைப் பாத்துப்பேன். கோலம் போடுவேன். அடுப்பு மெழுகுவேன். வேஷ்டி புடவை தோய்ப்பேன்.”“புடவை தோப்பியா! உனக்குப் புடவையைத் தூக்க முடியுமோ?”“நன்னாத் தோய்க்கத் தெரியும்.”“இதெல்லாம் எங்கே கத்துண்டே?”“ராமநாதையர்னு ஒரு ஜட்ஜி இருக்கார். அவாத்துலெதான் கத்துண்டேன்.”“ம்ஹ்ம், ஸர்வீஸ் ஆனவளா? அவாத்துலெ எத்தனை வருஷம் இருந்தே?”“மூணு வருஷமா இருக்கேன்.”“மூணு வருஷமா? உனக்கு என்ன வயசாறது?”“இந்த ஆவணிக்கு ஒன்பது முடிஞ்சு பத்தாவது நடக்கிறது.”“ஏழு வயசிலேயே உனக்கு வேலை கிடைச்சுட்டுது; தேவலை. என்ன சம்பளம் கொடுப்பா?”“சம்பளம்னு கிடையாது. ரெண்டு வேளை சாப்பாடு போடுவா. தீபாவளிக்குப் பாவாடை சட்டை ஒரு ஜோடி எடுத்துக் கொடுப்பா.”“இந்தச் சட்டை யார் வாங்கிக் கொடுத்தா?”“அவாதான்.”“கோலம் போட்டு, அடுப்பு மெழுகி, புடவை தோய்ச்சு, குழந்தையைப் பாத்துண்டு, தோசைக்கு அரைச்சு எல்லாம் பண்ணினத்துக்கு இந்த ஆறணாச் சீட்டிதான் கிடைச்சுதா அவாளுக்கு? கிழிசலாப் பார்த்துப் பொறுக்கி எடுத்துக் கொடுத்திருக்காளே.”“.......................”“நீ நல்லதா வாங்கிக் கொடுக்கச் சொல்லிக் கேட்கப் படாதோ?”“.......................”“ஜட்ஜ் வீட்டிலெ சாப்பிட்டிண்டு இருந்தேங்கறே. உன் உடம்பைப் பார்த்தா அப்படித் தெரியலியே! பஞ்சத்திலே அடி பட்டாப்பலே, கண்ணுகிண்ணெல்லாம் உள்ளே போயி, ஒட்டி உலர்ந்து, நாய் பிடுங்கினாப் போல இருக்கியே.”“பெரிய மனுஷாள்ளாம் தனி ரகம்னு உங்களுக்குத் தெரியாது போல் இருக்கு. அவா வத்தல் குழம்பு, சுட்ட அப்பளாம், மிளகு ரசம் இதைத்தான் பாதிநாள் சாப்பிடுவா.

ராத்திரி பருப்புத் துகையலும் ரசமுந்தான் இருக்கும். ஆனா அவா உடம்பு என்னவோ நிகுநிகுன்னுதான் இருக்கும். அது தனி உடம்பு. நம்மைப் போல அன்னாடங் காய்ச்சிகளுக்குத்தான் இதெல்லாம் ஒத்துக்காது. ரெண்டு நாளைக்கு இப்படிச் சாப்பிட்டா, வாய் வெந்து, கண் குழிஞ்சு, சோர்ந்து சோர்ந்து வரும்” என்று அம்மாள் தன்னையும் என்னோடு சேர்த்துப் பேசினாள். மரியாதைக்குத்தான் அப்படிச் சொல்லியிருக்க வேண்டும். உடனே ஏதோ தவறாகப் பேசிவிட்டவன் போல, “”நான் என்னென்னவோ பேசிண்டிருக்கேன்; நீங்க என்ன பண்ணிண்டிருக்கேள்?” என்று கேட்டாள்.“”பயப்படாதீங்கோ. நானும் அன்னாடங் காய்ச்சிதான். தாலுகாவிலே குமாஸ்தா.”தஞ்சாவூர் ஸ்டேஷன் வந்துகொண்டிருந்தது.“”துண்டைப் போட்டுட்டுப் போறேன். கொஞ்சம் இடத்தைப் பார்த்துக்கோங்கோ; சாப்பிட்டு, குழந்தைகளுக்கும் சாப்பாடு பண்ணி அழைச்சிண்டு வந்துடறேன்.”“இன்னும் சாப்பிடலியா நீங்க? ஏம்மா, நீ என்ன சாப்பிட்டே காலமே?”“பழையது.”“எங்கே?”“ஜட்ஜியாத்திலே!”“பார்த்தேளா, பெரிய மனுஷாள்னா இப்படின்னா இருக்கணும்! ஊருக்குப் போற குழந்தைக்கு, மூணு வருஷம் வீட்டோட கிடந்து உழைச்சிண்டிருந்த பொண்ணுக்கு, கொஞ்சம் நல்ல சாப்பாடாப் போட்டு அனுப்பிச்சாதான் என்ன? ஒன்பதே கால் மணிக்கு, நான் புறப்படறபோது கொண்டுவிட்டா. அதுக்குள்ளேசமையல் பண்ண முடியாதா என்ன? நல்ல குளிர்ந்த மனசு! பழையது சாப்பிடற ஆசாரம் அத்துப் போயிடப் போறதேன்னு கவலைப்பட்டுண்டு போட்டா போல் இருக்கு.

ஏன் குழந்தை, அவாத்துலே யாராவது பழையது சாப்பிடுவாளோ?””நான்தான் சாப்பிடுவேன்.””ம்...ஹ்ம்; சரி. இப்பப் பசிக்கிறதோ உனக்கு?””இல்லை.””ஏதாவது சாப்பிடும்மா.””சரி மாமி.””நீங்க ஒரு பொட்டலம் சாம்பார் சாதமும் ஒரு தயிர் சாதமும் வாங்கிண்டு வாங்கோளேன்.””நானே அழைச்சிண்டு போயிட்டு வரேனே.””ரொம்ப நல்லதாப் போச்சு. இந்தாருங்கோ.””என்னத்துக்குக் காசு? நான் கொடுக்கிறேன்.””வாண்டாம்னு நீங்க எப்படிச் சொல்ல முடியும்? நான்னா அவளை அழைச்சிண்டு வரேன்!”தர்மசங்கடமாக இருந்தது. வாங்கிக்கொண்டேன். பையனை எழுப்பினேன். அவசரமாகக் கூட்டத்தில் புகுந்து இரண்டையும் இழுத்துச் சென்றேன்.””இது யாருப்பா?””இந்தப் பொண்ணு மாயவரம் போயிட்டுக் கல்கத்தாவுக்குப் போறா. உன்னோட இவளும் சாப்பிடறதுக்கு வரா.”இரண்டு அநாதைகளும் சாப்பிடும்போது எனக்கு இனம் தெரியாத இரக்கம் பிறந்தது. தாயை விட்டுப் பிரிந்த அநாதைகள்! ஆனால் எவ்வளவு வித்தியாசம்! ஓர் அநாதை இன்னும் இரண்டுமணி நேரத்தில் தாயின் மடியில் துள்ளப் போகிறது. இன்னொன்று தாயிடமிருந்து தூர தூரப் போய்க் கொண்டே இருக்கப் போகிறது.””ஸ்ஸ்.. அப்பா, அப்பா!” என்று பையன் வீரிட்டான். மிளகாய்!””தண்ணியைக் குடி.... ம்... ம்.”அந்தப் பெண் உடனே எழுந்து போய்க் கவுண்டரிலிருந்து கை நிறையச் சர்க்கரையை அள்ளி அவளிடம் கொடுத்தது.

சற்றுக் கழித்து, ””அம்பி, தயிர்சாதம் கட்டி கட்டியாக இருக்கு. இரு பிசைந்து தரேன். அப்புறம் சாப்பிடலாம்” என்று சாப்பிடுவதை விட்டுக் கையை அலம்பிவந்து ரெயில்வே சாதத்தை நசுக்கிப் பிசைந்து பக்குவப்படுத்திக் கொடுத்தது.அவள் பிசைவதைப் பார்த்துப் பையன் என் பக்கம் திரும்பிப் புன்சிரிப்புச் சிரித்தான்.””ஏண்டா சிரிக்கிறே?””அவ பிசைஞ்சு கொடுக்கிறாப்பா!” அதற்கு மேல் அவனுக்குச் சொல்லத் தெரியவில்லை.அவனுக்குக் கையலம்பி, வாய் துடைத்துவிட்டதும் அவள்தான்.””இந்தா, ஜலம் குடி” என்று அவனுக்குத் தண்ணீர் கொடுத்தாள்.””வாண்டாம்.””ஜலம் குடிக்காட்டா ஜீரணமாகாது. இதைக் குடிச்சுடு.”பாடாகப் படுத்துகிறவன், பதில் பேசாமல் வாங்கிக் குடித்துவிட்டான். ஏதோ வருஷக்கணக்கில் பழகிவிட்டதுபோல, அவனைக் கையைப் பிடித்து ஜாக்கிரதையாக அழைத்துக் கொண்டு வந்தது அந்தப் பெண். அவனும் அவள் இழுத்த இழுப்புக்கெல்லாம் வந்து கொண்டிருந்தான்.””கல்கத்தாவுக்குப் போறேங்கிறியே. அவாளைத் தெரியுமோ?””தெரியாது மாமா. பெரிய வேலையிலே இருக்காராம் அவர். மூவாயிர ரூபாய் சம்பளமாம். குழந்தையை வச்சுக்கணுமாம். அதுக்குத்தான் என்னைக் கூப்பிட்டிருக்கா.”எந்தக் குழந்தையையோ பார்த்துக்கொள்ள எங்கிருந்தோ ஒரு குழந்தை போகிறது. கண் காணாத தேசத்திற்கு ஒரு தாய் அந்தக் குழந்தையை அனுப்புகிறாள். அதுவும் ஒரு பாவாடையைச் சுருட்டிக் கொண்டு கிளம்பிவிட்டது.””ரொம்ப சமர்த்தும்மா இந்தக் குழந்தை” என்றேன் அம்மாளிடம்.””நாதனில்லாட்டாச் சமர்த்துத் தானா வந்துடறது. ஒட்டி ஒட்டிண்டு பழகறது அது.

கல்கத்தாவுக்குப் போகாட்டால் நானே இதை வச்சுண்டிருப்பேன். பாருங்களேன் பசிக்கிறது கிசிக்கிறதுன்னு நாமாக் கேட்கிற வரையில் வாயைத் திறந்ததோ? என்னவோ பகவான்தான்காப்பாத்தணும்.”பையன் ஆரஞ்சை மறுபடியும் கையில் எடுத்து வைத்துக்

கொண்டான்.“”ஏண்டா குழந்தை, உரிச்சுத் தரட்டுமாடா?” என்றாள் அம்மாள்.“”வாண்டாம். ஊரிலே போய் அம்மாவை உரிச்சுக் குடுக்கச் சொல்லப் போறேன்.”“”நானும் அம்மாதாண்டா.”பையன் சிரித்து மழுப்பிவிட்டான். ஒரு நிமிஷமாயிற்று. “”உனக்கென்ன வயசு?” என்று திடீரென்று பையன் குஞ்சுவைப் பார்த்து ஒரு கேள்வி போட்டான்.“”பத்து.”“”பத்து வயசா? அப்பன்னா நீ வந்து அஞ்சாவது படிக்கிறியா!” என்று விரலை எண்ணிக்கொண்டே கேட்டான்.“”இல்லை”“”ஏண்டா, பத்து வயசுன்னா அஞ்சாவது படிக்கணுமா?”“”ஆமாம்பா. எனக்கு ஆறு வயசு. ஒண்ணாவது படிக்கிறேன். ஆறு ஏழு எட்டு ஒன்பது பத்து. அவ அஞ்சாவது.”“”அவ படிக்கலைடா.”“”நீ படிக்கலை?”“”வீட்டிலேயே வாசிக்கிறியா?”“”ம்ஹ்ம்”“”அவ கல்கத்தாவுக்குப் போறாடா. அதான் படிக்கலை.”அங்க எதுக்குப் போறாளாம்?”“”வேலை பாக்கப் போறா?”“”போப்பா… ஏண்டி, நீ வேலை பார்க்கப் போறியா?”“”ஆமாம்.”பையன் அவளையே சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்கு நம்பிக்கை வரவில்லை. மீண்டும் கேட்டான்;“”உனக்கு சைக்கிள் விடத் தெரியுமா?”அந்தப் பெண் வாய்விட்டுச் சிரித்தது.

முதல் முதலில் அது சிரித்ததே அப்போதுதான்.“”எனக்கு எப்படி சைக்கிள் விடத் தெரியும்? தெரியாது.”“”அப்படீன்னா எப்படி வேலைக்குப் போவியாம்?”“”நடந்து போவேன்.”மறுபடியும் அவளைப் பார்த்து யோசித்துக் கொண்டிருந்தான் பையன். அவன் அப்பா சைக்கிளில் வேலைக்குப் போகும்போது அவள் மட்டும் எப்படி நடந்து போக முடியும் என்று அவனுக்குப் புரியவில்லை. இரண்டு குழந்தைகளும் வயல்வெளிகளைப் பார்த்துக் கொண்டு வண்டியின் வேகத்தை ரஸித்துக்கொண்டிருந்தன.“”இந்தப் பொண்ணு யாரை நம்பி இப்படிப் போறது?… போகிற இடம் எப்படி இருக்கோ!” என்று கேட்டேன்.“”இந்த ஜட்ஜுக்கு ஒன்றுவிட்ட மச்சினராம் அவர். மூவாயர ரூபாய் சம்பளம் வாங்கறாராம் ஏதோ கம்பெனியிலெ. நம்ம பக்கத்துக் குழந்தைன்னு விசுவாசமாத்தான் இருப்பா. என்னதான் இருக்கட்டுமே, நல்ல சாப்பாடு, துணிமணியெல்லாம் கொடுக்கட்டும்; எத்தனை பண்ணினாலும் அது பிறத்தியார் வீட்டுக் குழந்தை, வேலைக்கு வந்திருக்கிற குழந்தைங்கிற நினைவு போயிடுமா அவாளுக்கு? இதுதான் அவாளைத் தாயார் தோப்பனார்னு நெனச்சுக்கமுடியுமோ? ஆனா இது ஒட்டி ஒட்டிண்டு வித்தியாசமில்லாம பழகுறதைப் பாத்தா எங்கேயும் சமாளிச்சுண்டுடும் போல்தான் இருக்கு. இருந்தாலும் பெத்தவாகிட்ட இருக்கிற மாதிரி இருக்க முடியுமா, ஸ்வாமி? நீங்களே சொல்லுங்கோ.”எனக்கு வயிற்றைக் கலக்கிற்று.

நானே முகம் தெரியாத உற்றார் உறவினர் இல்லாத புது ஊருக்குப் போவதுபோல ஒரு சூன்யமும் பயமும் என்னைப் பற்றிக்கொண்டன.“”கடவுள் இதையுந்தான் காப்பாத்தப் போறான். இல்லாவிட்டால் மனிதர்களை நம்பியா பெத்தவர்கள் இதைவிட்டு விட்டிருக்கிறார்கள்?” என்றேன்.“”கடவுள்தான் காப்பாத்தணும். வேறே என்ன சொல்லத் தெரியறது நமக்கு? சுத்திச் சுத்தி அதுக்குத்தான் வந்துடறோம். ஆனா, இப்படி அனுப்பும்படியான நிலைக்கு ஒரு குடும்பம் வந்துடுத்தே. அது எப்படி ஏற்பட்டதுன்னு யார் யோசிக்கிறா? அதுக்கு என்ன பரிகாரம் தேடறது? அந்த வாத்தியாரோட குழந்தைகளுக்கெல்லாம் தலைக்கு இத்தனைன்னு பள்ளிக்கூடம் வச்சிருக்கிறவன் படி

போட்டிருந்தான்னா இப்படிக் கண்காணாத தேசத்துக்கு இது போகுமா?""அப்புறம் ஜட்ஜு வீட்டுக் குழந்தைகளை யாருபாத்துப்பா?""அதுவும் சரிதான்.""வீட்டுக்கு வீடு வாசல்படி. கொடுக்கிறவனும் வாத்தியார் மாதிரி ஆண்டியோ என்னமோ?" என்றேன்.ஒன்றும் புரியவில்லை.குழந்தையைப் பார்த்து எல்லார் நெஞ்சமும் இளகிற்று. பக்கத்தில் தஞ்சாவூர், ஐயம்பேட்டை என்று நடுவில் ஏறி உட்கார்ந்து கொண்டவர்களுக்கு அரைகுறையாகக் கேட்டாலும் நெஞ்சு இளகிற்று. அம்மாள் உட்கார்ந்திருந்த பலகையின் கோடியில் உட்கார்ந்திருந்தவர்- ராவ்ஜி மாதிரி இருந்தது.

உதட்டைக் கடித்து ஜன்னலுக்கு வெளியே தலையைத் திருப்பிக்கொண்டார். நெஞ்சைக் குமுறி வந்த வேதனையை அடக்கிக்கொண்டு தைரியசாலியாக அவர் பட்ட பாடு நன்றாகத் தெரிந்தது.கும்பகோணம் வந்துவிட்டது.""போயிட்டு வரேம்மா. குழந்தே, போயிட்டு வரட்டுமா?" என்று ஒரு ரூபாயை அதன் கையில் வைத்தேன்.""நீங்க எதுக்காகக் கொடுக்கறேள்?" என்று அம்மாள் தடுத்தாள்.""எனக்கும் பாத்யமுண்டு. நீங்களும் அழச்சிண்டுதானே போறேள்? இது வாத்தியார் குழந்தைதானே? உங்க குழந்தையில்லையே? நீங்க கொண்டாடற பாத்யம் எனக்கும் உண்டும்மா. நான் என்ன செய்யறது. எனக்குக் கொடுக்கணும் போல் இருக்கு. எனக்கும் இதுக்கு மேலே வக்கில்லை.""ஹ்ம்" என்று இரட்டைநாடிச் சரீரத்தில் ஒரு பெருமூச்சு வந்தது. ""வாங்கிக்கோடிம்மா. உங்களுக்கு ஒரு குறைவும் வராது, ஸ்வாமி" என்றாள் அம்மாள்.""யப்பா... இதைக் கொடுத்துட்டு வரேம்பா" என்று என் பையன் ஆரஞ்சைக் காண்பித்தான்.""கொடேன்டா, கேட்பானேன்?""வாண்டாண்டா, கண்ணு.

குழந்தை, பாவம். அம்மா உரிச்சுக் குடுக்கணும்னு சொல்லிண்டிருந்தது.""யப்பா... வாங்கிக்கச் சொல்லுப்பா" என்று பையன் சிணுங்கினான்.""வாங்கிக்கோம்மா."பெண் வாங்கிக்கொண்டது.""ஸ்வாமி! நல்ல உத்தமமான பிள்ளையைப் பெத்திருக்கேள். வாடா கண்ணு. எனக்கு ஒரு முத்தம் கொடுத்துட்டுப் போ" என்று அம்மாள் அழைத்தாள். பையன் கொடுத்துவிட்டு ஓடிவந்தான்.என் மெய் சிலிர்த்தது. முகத்தைக் கூடியவரையில் யாரும் பார்க்காமல் அப்பால் திருப்பிக்கொண்டு கீழே இறங்கி அவனைத் தூக்கிக்கொண்டு நடந்தேன். அவனுக்கு நடக்கவா தெரியாது? எனக்கு என்னவோ வாரியணைத்துக் கொள்ளவேண்டும் என்று உடம்பு பறந்தது. தூக்கி எடுத்துத் தழுவிக்கொண்டே போனேன். உள்ளம் பொங்கி வழிந்தது. அன்பையே, சச்சிதானந்தத்தையே கட்டித் தழுவுகிற ஆனந்தம் அது.

## பாயசம்

சாமநாது அரசமரத்தடி மேடை முன்னால் நின்றார். கல்லுப் பிள்ளையாரைப் பார்த்தார். நெற்றி முகட்டில் குட்டிக் கொண்டார். தோப்புக்கரணம் என்று காதைப் பிடித்துக்கொண்டு லேசாக உடம்பை மேலும் கீழும் இழுத்துக்கொண்டார்."நன்னா முழங்காலை மடக்கி உட்கார்ந்து எழுந்துண்டுதான் போடேன் நாலு தடவை. உனக்கு இருக்கிற பலம் யாருக்கு இருக்கு? நீ என்ன சுப்பராயன் மாதிரி நித்யகண்டம் பூர்ண ஆயுசா? சுப்பராயன் மாதிரி மூட்டு வியாதியா, ப்ளட்ப்ரஷரா, மண்டைக் கிறுகிறுப்பா உனக்கு?" என்று யாரோ

சொல்வது போலிருந்தது. யாரும் சொல்லவில்லை. அவரேதான் சொல்லிக் கொண்டார். அந்த மனதே மேலும் சொல்லிற்று. “எனக்கு எழுபத்தேழு வயசுதான். சுப்பராயனுக்கு அறுபத்தாறு வயசுதான். இருக்கட்டும். ஆனா யாரைப் பார்த்தா எழுவத்தேழுன்னு சொல்லுவா? என்னையா, அவனையா? பதினஞ்சு லக்ஷம் இருபது லக்ஷம்னு சொத்து சம்பாதிச்சா ஆயிடுமா? அடித் தென்னமட்டை மாதிரி பாளம் பாளமா இப்படி மார் கிடைக்குமா? கையிலேயும் ஆடுசதையிலியும் கண்டு கண்டா இப்படிக் கல்லுச் சதை கிடைச்சுடுமா? கலியாணம் பண்றானாம் கலியாணம்! உலகம் முழுக்கக் கூட்டியாச்சு! மோளம் கொட்டி, தாலிகட்டி கடைசிப் பொண்ணையும் ஜோடி சேத்து, கட்டுச் சாதம் கட்டி எல்லாரையும் வண்டி ஏத்திப்ட்டு, நீ, என்ன பண்ணப் போறே? கோதுமைக் கஞ்சியும் மாத்திரையும் சாப்பிட்டுண்டு; பொங்கப் பொங்க வெந்நீர் போட்டு உடம்பைத் துடச்சுக்கப் போறே! கையைக் காலை வீசி இப்படி, ஒரு நாளைக்கு வந்து காவேரியிலே ஒரு முழுக்குப்போட முடியுமான்னேன்!”சாமநாது சுற்றும்முற்றும் பார்த்தார்.

அரசமரத்து இலைகள் சிலுசிலுவென்று என்னமோ சொல்லிக் கொண்டிருந்தன. காவேரிக்குப் போகிற சந்தில் இந்தண்டையும் அந்தண்டையும் குளித்தும் குளிக்கவும் ஆண்கள், பெண்கள், குளுவான்கள் எல்லாம் கடந்துகொண்டிருந்தார்கள். முக்கால்வாசி புது முகங்கள் – போகிற வாக்கில் பட்டுப் புடவைகள், வெறுங் குடங்கள் – வருகிற வாக்கில் சொளப்சொளப்பென்று ஈரப் பட்டுப் புடவைகள், நிறை குடங்கள். ஈரக்காலில் பாதை மண் ஒட்டி மிளகு மிளகாகத் தெறிக்கிறது. கீரைத்தண்டு மாதிரி ஒரு குட்டி – ஐந்தாறு வயசு – குளித்துவிட்டு அம்மணமாக வருகிறது. காவேரியில் குளித்துவிட்டு அங்கேயே உடை மாற்றி, நீல வெளுப்புடன் சேலம் பட்டுக்கரை வேஷ்டிகள் நாலைந்து வருகின்றன. முக்காலும் தெரியாத முகங்கள்.“கலியாணமா?” என்று ஒரு சத்தக் கேள்வி. ஒரு நீல வெளுப்பு வேட்டிதான் கேட்டது.”ஆமாம்.” என்று சாமநாது அந்த முகத்தைப் பார்த்தார் கண்ணில் கேள்வியோடு. மனசிற்குள் ‘ஏன் இப்படிக் கத்தறே? நான் என்ன செவிடுன்னு நெனச்சுண்டியா?” என்று கேட்டார்.“தெரியலியா?” என்றது அந்த சலவை ஜரிகை வேஷ்டி. “நான்தான் சீதாவோட மச்சினன் – மதுரை!”“அப்படியா?... ஆமாமா இப்ப தெரியறது. சட்டுனு அடையாளம் புரியலெ... இன்னும் பலகாரம் பண்ணலியே.

போங்கோ... ராத்திரி முழுக்க ரயில்லெ வந்திருப்பேள்” என்று உபசாரம் பண்ணினார் சாமநாது.“இவா, சுப்பராயரோட சித்தப்பா. குடும்பத்துக்கே பெரியவாளா இருந்துண்டு, எல்லாத்தையும் நடத்தி வைக்கறவா” என்று பக்கத்திலிருந்த இன்னொரு சலவை வேட்டியிடம் அறிமுகப்படுத்திற்று மதுரை வேட்டி. அவர் போனார்.“இவர் வந்து...” என்று என்னமோ யாரோ என்று அறிமுகப்படுத்தவும் செய்தது.“நீங்க போங்கோ – நான் ஸ்நானம் பண்ணிவிட்டு வந்துடறேன்” என்று சாமநாது அவர்களை அனுப்பினார்.மனசு சொல்லிற்று. “சீதாவுக்கு மச்சுனனா? சுப்பராயா, எப்படிடா இப்படி ஏழு பெண்ணைப் பெத்தே! ஒரோரு குட்டிக்குமா கலியாணம்னு ரயில் ரயிலா சம்பந்திகளையும் மாப்பிள்ளைகளையும் மச்சுனன்களையும் கொண்டு இறக்கறே. காவேரியிலே கால் தட்றதுக்குள்ளே இன்னும் எத்தனை மச்சுனன்களைப் பாக்கப் போறேனோ!”அரசமரத்தை விட்டு, பாதை அதிர அதிர, காவேரியை நோக்கி நடந்தார் சாமநாது. நுனியை எடுத்து இடுப்பில் செருகி, முழங்கால்

தெரிகிற மூலக்கச்சம். வலது தோளில் ஒரு ஈரிழைத் துண்டு – திறந்த பாள மார்பு, எக்கின வயிறு, சதை வளராத கண், முழுக்காது – இவ்வளவையும் தானே பார்த்துக்கொண்டார்.காவேரி மணலில் கால் தட்டு முன்பே, தெருவிலிருந்த தவுல் சத்தம் தொடங்குவது கேட்டது.

நாகஸ்வரமும் தொடர்ந்தது. பத்தரை மணிக்குமேல்தான் முகூர்த்தம். மணி எட்டுக்கூட ஆகவில்லை. சும்மா தட்டுகிறான்கள். அவனுக்குப் பொழுது போக வேண்டும். சுப்பராயனும் பொழுது போகாமல்தானே ஏழு பெண்களையும் நாலுபிள்ளைகளையும் பெற்றான்.தண்ணீர் முக்கால் ஆறு ஓடுகிறது. இந்தண்டை கால் பகுதி மணல். ருய்ருய் என்று அடியால் மணல் அரைத்துக் கொண்டு நடந்தார்.மேளம் லேசாகக் கேட்கிறது. கூப்பிடுவார்கள். குடும்பத்திற்குப் பெரியவன். சித்தப்பா சித்தப்பா என்று சுப்பராயன் கூப்பிட்டுக்கொண்டு வருவான் – இல்லாவிட்டால் அவன் தம்பிகள் கூப்பிடுவார்கள் – என்னமோ நான்தான் ஆட்டி வைக்கிறாற் போல... கூப்பிடட்டும்....சாமநாது பார்த்தார் – இடது பக்கம்.ஆற்றின் குறுக்கே புதுமாதிரிப் பாலம் – புதுப்பாலம் – சுப்பராயனா அது நடந்துபோவது?... இல்லை... எத்தனையோ பேர் போகிறார்கள். லாரி போகிறது; சுமை வண்டிகள்; நடை சாரிகள் – எல்லாமே சுப்பராயன் மாதிரி தோன்றுகின்றன – லாரிகூட, மாடுகூட. சுப்பராயன்தான் பாலம் இந்த ஊருக்கு வருவதற்குக் காரணம். அவன் இல்லாவிட்டால் நாற்பது மைல் தள்ளிப்போட்டிருப்பார்கள். சர்க்காரிடம் அவ்வளவு செல்வாக்கு.வலது பக்கம் – பின்னால் – வேளாளத் தெருவில் – புகை – வெல்லம் காய்ச்சுகிற புகை. புகை பூத்தாற்போல, அந்ததண்டை கருப்பங் கொல்லை கருப்பம் பூக்கள் – காலை வெயில் பட்டு பாதிப் பூக்கள் சிப்பிப் பூக்களாகியிருக்கின்றன – கூர்ந்து பார்த்தால் சுப்பராயன் மாதிரி இருக்கிறது... சுப்பராயன் தான் கரும்புப் பயிரைக் கொண்டு வந்தான் ஊருக்கு – எதிரே அக்கரையில் நாலு இடத்தில் புகை, வெல்ல ஆலைப் புகை – எல்லாம் சுப்பராயன்.அதோ பள்ளிக்கூடம் – சுப்பராயன்.

பாலத்துக்கு ஓரமாக கோவாப்பரட்டி – சுப்பராயன்."ஏன் கிடந்து வேகறேள்! உங்க அண்ணா பிள்ளைதானே அவன்! நானும் உங்க கையைப் பிடிச்சுண்டு படியேறி இருபது வருஷம் பாதி நாளைக்குப் பழையது, வத்தக் குழம்பு, இந்தப் பவழமலை – வேற என்னத்தைக் கண்டேன்? சுப்பராயனுக்கு மாசம் நாலு ரூவா சம்பளம் அனுப்பிக்க முடிஞ்சுதா, உங்களாலியும், உங்க அண்ணாவாலேயும்! யாரோ உறவுன்னு ஒருத்தரைப் பிடிச்சு மலைக்கோட்டையிலே கொண்டு படிக்க வச்சேளே – நன்னாப் படிக்கிறான்னு – அதுதான் முழுக்க முடிஞ்சுதா உங்களாலே, உங்க அண்ணாவாலே? முகாலரைக் கால் கிணறு தாண்ட வச்சாப்பல, கடசீ வருஷத்திலே போரும் படிச்சதுனு இழுத்துண்டு வந்தேள். குழந்தை ஆத்திரமா திரும்பி வந்தான். அலையா அலைஞ்சான். ஓடாக் காஞ்சான். லக்ஷ்மி வந்து பளிச் பளிச்சுன்னு ஆடலானா, குடும்பத்துக்குள்ளே..."சாமநாதுவுக்குக் கேட்க இஷ்டமில்லை. அது அவர் மனைவி குரல். இப்போது காற்றில் கேட்கிறது. ஏழெட்டு வருஷம் முன்பு, நேரில் கேட்டது.சுப்பராயனைப் படிக்க வைக்க முடியவில்லைதான். ஊருக்கு வந்தான். ஓடிப்போனான்.

கோட்டையில் கடையில் உட்கார்ந்து கணக்கு எழுதினான். அங்கே சண்டை. கடை வாடிக்கை ஒருவரிடமே கடன் வாங்கி பாதி பங்கு லாபத்திற்கு அதே மாதிரி மளிகைக்கடை வைத்தான். பயலுக்கு என்ன ராசி! முகராசியா! குணராசியா! சின்னக் கடை மொத்தக் கடையாகி, லாரி லாரியாக நெல் பிடித்து, உளுந்து பிடித்து, பயறு பிடித்து இருபது வருஷத்துக்குள் இருபது லட்சம் சொத்து. உள்ளூரிலேயே கால் பங்கு நிலம் வாங்கியாகி விட்டது.அதையே பாகம் பண்ணி சாமநாதுவுக்குப் பாதி கொடுத்தான். சாமநாதுவுக்குக் கோபம். அவர் பங்கு ஊருக்கு சற்று எட்டாக் கையில் விழுந்தது. அது மட்டுமில்லை. ஆற்றுப்படுகைக்கும் எட்டாக்கை. சண்டை. அப்போதுதான் வாலாம்பாள் சொன்னாள்: “என்ன! கொடுத்து வச்சேளா? உங்க பாட்டா சம்பாதிச்ச சொத்தா – இல்லே உங்க அப்பா சம்பாதிச்சதா? ஒண்டியா நின்னு மன்னாடி சம்பாதிச்சதை பாவம் சித்தப்பான்னு கொடுக்கறான். இந்த தான மாட்டுக்கு பல்லு சரியாயில்லெ, வாலு சரியாயில்லியா? பேசாம கொடுத்ததை வாங்கி வச்சுக்கட்டும். ஊரிலே கேட்டா வழிச்சுண்டு சிரிப்பா. நான் ஊர்ப் பெரியவாள்ள ஒருத்தியா இருந்தேனோ....” “நீ இப்பவேதான் வேறயா இருக்கியே! நீ அவனுக்கு பரிஞ்சுண்டு கூத்தாடறதைப் பார்த்தா, நீ என் ஆம்படையாளா.

எங்க அண்ணா ஆம்படையாளான்னே புரியலியே-” “தூ- போறும் – அசடு வழியவாண்டாம்” என்று வாலாம்பாள் நகர்ந்துவிட்டாள். “ம்ஹஹ” என்று அவருடைய அடித்தொண்டை மாட்டுக் குரலில் சிரித்தது – பெருமையோடு. பெருமை அசட்டுத்தனத்தோடு. பிறகு அவராகவே குழைந்து தொடர்ந்தார். “கோச்சுக்காதெ. உன் மனசு எப்படியிருக்குன்னு பார்த்தேன்.” ”போரும். என்னோட பேச வாண்டாம்.” மூன்று நாள் வாலாம்பாள் பேசத்தான் இல்லை – அந்த அசட்டு விஷமத்திற்காக.அவள் கண்ணை மூடுகிற வரையில் சொத்துத் தகராறு இல்லை. பாகம் பிரித்தாகிவிட்டது. ஏற்றுக்கொண்டாகிவிட்டது. இனிமேல் என்ன?ஆனால் முழு பாகமும் கிடைக்கவில்லை. சாமநாதுவின் வாலாம்பாள் இப்போது இந்த உலகத்தில் இல்லை. அவள் பெற்ற முதல் இரண்டு பிள்ளைகள் – இந்த உலகத்தில் இல்லை. மூன்றாவது பெண் – இல்லை. நாலாவது பெண் – கலியாணமாகி மூன்றாவது வருடம் கணவனை இழந்து, பிறந்து வீட்டோடு வந்துவிட்டாள். பழுப்பு நார் மடி கட்டிக்கொண்டு பிறந்த வீட்டோடு வந்துவிட்டாள். குடும்ப வழக்கப்படி தலைமுடியை வாங்கி நார்ப்பட்டுப் புடவை அணிவித்தார்கள்.

சுப்பராயனுடைய மூன்றாவது பெண்ணோடு ஒரே பந்தலில்தான் அந்தக் கலியாணம் நடந்தது.ஐந்தாவது – பையன் – டில்லியில் ஏதோ வேலையாய் – சித்திரம் வரைகிறானாம் – ஆறாவது பையன் – எடுப்பாள் மாதிரி இந்த சுப்பராயனின் இந்த ஏழாவது பெண் கலியாணச் சந்தடியில் அலைந்துகொண்டிருக்கிறான். “போய், குளிச்சுட்டு வாங்களேன். சட்சட்டுனு. பெரியவாளா யாரு இருக்கறது?” என்று அவன்தான் அவரைக் காவேரிக்குக் குளிக்கத் துரை படுத்தி அனுப்பினவன்.ஈரிழையை இடுப்பில் கட்டி முடிச்சிட்டு சாமநாது தண்ணீரில் இறங்கினார். முழுக்குப் போட்டு, உடம்பைத் தேய்த்தார்.பாலத்தின் மீது பஸ் போகிறது. பஸ்ஸின் தலைக்கட்டு மேல் வாழை இலைக்கட்டு – ஒரு சைகிள் – நாலைந்து மூட்டைகள் – கருப்பங்கட்டு – எல்லாம் சுப்பராயன். “அப்படியே அந்தப் பயலைக்

கழுத்தைப் பிடித்து உலுக்கி, கண்ணு பிதுங்க.... அவன் பெண் பிள்ளைகளை எல்லாம் ஒரு சாக்கில் கட்டி...” அவர் பல்லை நெரித்தார்.“காவேரியிலே கொண்டு அமுக்கட்டும். அப்பதானே கரையேறாத நரகத்திலே கிடக்கலாம். இப்பவே போங்கோ.”அவளேதான். வாலாம்பாள்தான். துவைக்கிற கருங்கல்லில் அவள் மாதிரி தெரிகிறது. கறுப்பு நிறம். அலைபாய்கிற மயிர் – பவழமாலை. கெம்புத்தோடு. ரவிக்கையில்லாத உடம்பு. நடுத்தர உடம்பு. அவள் காவேரியில் குளிக்கும்போது எத்தனையோ தடவை அவரும் வந்து சற்றுத் தள்ளி நின்று குளித்திருக்கிறார்.

யாரோ வேற்றுப் பெண் பிள்ளையைப் பார்ப்பதுபோல, ஓரக்கண்ணால் பார்த்திருக்கிறார். அந்த ஆற்று வெளியில், வெட்ட வெளியில் ஈரப்புடவையை இடுப்பு, மேல்கால் தெரிந்து விடாமல் சிரமப்பட்டு அவள் தலைப்பு மாற்றிக்கொள்ளும்போது ஒரு தடவை அவர் பார்த்துக்கொண்டேயிருந்து, அவள் அதைக் கவனித்ததும் – சரேலென்று அவர் ஏதோ தப்புப் பண்ணிவிட்டது போல, அயல் ஆண் போன்று நாணினது...இப்போதும் அது தெரிகிறது! ஏன் அவள் மேலுலகத்துக்கு முந்திக்கொண்டாள்?”சம்பாதிச்சதிலே பாதி நமக்குக் கொடுத்திருக்கான். மீதியை தன் தம்பியோட பாகம் பண்ணிண்டிருக்கான் சுப்பராயன். அவன் பிள்ளைகளுக்கு அதிலியும் கால் கால்னுதான் கிடைக்கும். ஏன் இப்படிக் கரிக்கறேள்...?” என்று இந்தக் காவேரியில் அவரைப் பிடித்து அலசினாள் அவள் ஒருநாள்.ராட்சச முண்டை! கடைசி மூச்சு வரைக்கும் என்ன நியாய புத்தி! என்ன தர்ம புத்தி!“என்னை மனுஷனா வச்சிருந்தியேடி, என் தங்கமே – போயிட்டியேடி” என்று முனகினார். கண்ணில் நீர் வந்தது. திரும்பிப் பார்த்தார். அடுத்த துவைகல் எங்கோ இருந்தது. யாரும் கேட்டிருக்க மாட்டார்கள். கேட்டாலும் சுலோகம் போலிருந்திருக்கும்.(நர்மதே சிந்து காவேரி என்று சுலோகம் சொல்லிக்கொண்டே பிழிந்து) உடம்பைத் துடைத்து (க்கொண்டு) அரை வேட்டியைப் பிழிந்து கொசுவி உதறிக் கட்டி (க்கொண்டு) விபூதி பூசிக்கொண்டு நடந்தார் சாமநாது. (சித்தப்பா சித்தப்பா என்று அரற்றுவான் சுப்பராயன் பாவம்.)

நாயனமும் தவுலும் நெருங்கிக்கொண்டிருந்தன. அரசமரத்து மேடைமுன் நின்று பிள்ளையாரையும் கல் நாகங்களையும் கும்பிட்டுவிட்டு விரைந்தார். தெருவில் நுழைந்தார்.கிராமமே கலியாணப் பெண் போல ஜோடித்துக்கொண்டிருக்கிறது. புதுப் புடவைகளும் நகைகளும் சிவப்புப் பாதங்களும் சிவப்பு ஆடு சதைகளும் முகங்களும் வீடு வீடாக ஏறி இறங்கிக்கொண்டிருக்கின்றன. நாலு திண்ணைகளில் சீட்டாட்டம். தெருவெல்லாம் சலவை வேஷ்டி. நாலு மூலைத் தாச்சி பாய்கிற குளுவான் இரைச்சல்கள்.“மணலூரார் கலியாணம்னா கலியாணம்தான்” – சாமநாதுவே சொல்லிக்கொண்டார். அவர் குடும்பம் ஊரே இல்லை. மூன்று தலைமுறைகளுக்கு முன்னால் (புரோகிதப்) பிழைப்புக்காக மணலூரை விட்டு இங்கு குடியேறி, ஒரு (அக்ரஹாரத்து) ஓரத்தில் ஒரு குச்சில் நுழைந்தது. இப்போது தெரு நடுவில் பக்கம் பக்கமாக இரண்டு மூன்று கட்டு வீடுகளில் சொந்த இடம் பிடித்துவிட்டது. மணலூர்ப் பட்டம் போகவில்லை. உள்ளூரான்களை எகிறி மிஞ்ச வந்த இந்த நிலை சாமநாதுவின் பார்வையிலும் நடையிலும் இந்தக் கணம் எப்படித் தெறிக்காமல் போகும்? உள்ளூர்,

வந்தவர்கள் எல்லாரும் பார்க்கட்டும்.அவர் வீடு, சுப்பராயன் வீடு இரண்டும் அண்ணன் தம்பியாக நிற்கின்றன.

இரண்டு வாசல்களையும் அடைத்து பந்தல், திண்ணையெல்லாம் புது வேட்டிக் கூட்டம். உள்ளே கூடத்தில் பூ, பிச்சாணா, குழந்தைகள் இரைச்சல், ட்ரங்குகள்.தாண்டிக்கொண்டு உள்ளே போனார். வேட்டியைக் கட்டிக்கொண்டார். கொல்லைக்குப் போய் காலை அலம்பி வந்து ஜபத்திற்கு உட்கார்ந்தார். முன்பெல்லாம் அறையின் நான்கு சுவர்களிலும் கிருஷ்ணன், ராமன், பிள்ளையார் என்று வரிசையாகப் படங்கள் மாட்டியிருக்கும். இப்போது ராமனும் கிருஷ்ணனும் பிள்ளையாரும் பூஜை அலமாரிக்குள் மட்டும் இருந்தார்கள். சுவர்களில் மாது எழுதின படங்களாக மாட்டியிருக்கின்றன.மாது – அவருடைய மூன்றாவது பையன். கலியாணத்திற்கு வரவில்லை. சுப்பராயன் பெண்கள் பிள்ளைகள் என்ற எத்தனை கலியாணத்திற்குத்தான் வருவான்?“அப்பா!”கூப்பிட்டது அவர் பெண்தான். நார்மடியும் முக்காடுமாக நின்ற பெண்.“மாப்பிள்ளையை அழைச்சு மாலை மாத்தப் போறா. பரதேசக கோலம் புறப்படப் போறது. போங்களேன். நாளைக்கு ஜபம் பண்ணிக்கலாமே.”“சரி, சரி – வரேன் போ.”அவள் ஏறிட்டுப் பார்த்தாள் அவரை. குழப்பம்.“போயேன். அதான் (நான் இதோ) வரேன்னேனே... இதான் வேலை” கடைசி வார்த்தைகள். அவள் காதில் விழவில்லை.முண்டனம் செய்த தலை.

முப்பத்தோரு வயது. கன்னத்திலும் கண்ணிலும் இருபது வயது பாலாக வடிகிறது.”போன்னா போயேன். வரேன்.”அவள் நகர்ந்தாள் – கதவை லேசாக சாத்திக்கொண்டு. அவர் கழுத்துக்குள் அனலாகச் சுடுகிறது.சுற்றும்முற்றும் பார்த்தார். மாது வரைந்த படங்கள். கூர்ந்து பார்த்தார். சிரிப்பு வருகிறது. ஒரு படம் முழுதும் வெறும் முழங்கால். அதில் ஒரு கண். கண்ணில் ஒரு சீப்பு செருகியிருக்கிறது. இன்னொன்று பெண்பிள்ளை மாதிரி இருக்கிறது. ஒரு கால் பன்றிக்கால். வயிற்றைக் கிழித்துக் காட்டுகிறாள். உள்ளே நாலு கத்தி – ஒரு பால் டப்பா – ஒரு சுருட்டின சிசு. இன்னொன்று – தாமரைப் பூ – அதன்மேல் ஒரு செருப்பு. பாதிச் செருப்பில் ஒரு மீசை...என்ன இதெல்லாம்! திகைப்பூண்டு மிதித்தாற்போல மனம் ஒடுங்கிப் பார்த்துக்கொண்டே நின்றார். கால் வலிக்கிறது. எனக்குக்கூடவா?மேளச்சத்தம்.”அப்பா, கூப்பிடுறாப்பா?” – நார்மடித் தலை எட்டிப் பார்த்தது. சிறிசு முகம்.“இதோ.”சாமநாது வெளியே போனார்.“சித்தப்பா, எங்க போய்ட்டேள்?”சுப்பராயன் குரல். மூச்சு வாங்குகிற குரல், கூனல் முதுகு.மாலை மாற்றுகிறார்கள் – பெண்ணும் பிள்ளையும். அதையும் ஊஞ்சலையும் பார்த்தால், பார்வதி பரமேச்வரனை, லக்ஷ்மி நாராயணனைப் பார்க்கிற புண்யமாம்.

ஊரிலிருக்கிற விதவைகள்கூட மூலை முடுக்கெல்லாம் வந்து நிற்கிறார்கள். எங்கு பார்த்தாலும் பல். ஒடிந்த பல், அழுக்கிடுக்குப் பல், தேய்ந்த பல், விதவைப் பல், பொக்கைப் பல், சமையற்காரன் கூட வந்து நிற்கிறான்.“கண்ணூஞ்சலாடி நின்றார்....”நாயனக்காரன் வாங்கி வாசிக்கிறான் அந்த ‘ஊஞ்சலை’!சாமநாதனுக்கு மூச்சு முட்டிற்று. மெதுவாக நகர்ந்தார். வியர்வை சுடுகிறது. காற்றுக்காகக் கொல்லைப்பக்கம் நடந்தார். கூடத்தில் ஈ, காக்காய் இல்லை. கொல்லைக்கட்டு வாசற்படி தாண்டி கடைசிக்கட்டு. அங்கும் யாருமில்லை. கோட்டையடுப்புகள் மொலாமொலா என்று எரிகின்றன. கூட்டம்

கூட்டமாக நெருப்பு எரிந்தது. தவலை தவலையாகக் கொதிக்கிறது. சாக்கு மறைவில் எண்ணெய்ப் பாடத்தோலும் அழுக்குப் பூணூலுமாக ஒரு பயல் வெள்ளரிப் பிஞ்சு நறுக்குகிறான். வேறு ஒரு பிராணி இல்லை. பார்வதி பரமேச்வராள் மாலை மாற்றுகிற காட்சியில் இருக்கிறான்கள்.கோட்டையடுப்புக்கு இப்பால் மேடைமீது ஒரு பாரி ஜோட்டுத் தவலை. இடுப்பளவு –மேல் வயிறளவு உயரம் பாயசம் மணக்கிறது. திராட்சையும் முந்திரியுமாக மிதக்கிறது. எப்படித்தான் தூக்கி மேடைமீது வைத்தான்களோ? மேல் வளையங்களில் கம்பைக் கொடுத்து பல்லக்கு மாதிரி இரண்டு பேராகத் தூக்கினால்தான் முடியும்.

ஐந்நூறு அறுநூறு பெயர் குடிக்கிற பாயசம்.நான் ஒண்டியாகவே கவிழ்த்து விடுவேன்.சாமநாது இரண்டு கைகளையும் கொடுத்து மூச்சை அடக்கி, மேல்பக்கத்தைச் சாய்த்தார். ப்பூ –இவ்வளவுதானே. அடுத்தநொடி, வயிறளவு ஜோட்டி, மானம் பார்க்கிற வாயை, பக்கவாட்டில் சாய்த்துப் படுத்துவிட்டது. பாயாசம் சாக்கடையில் ஓடிற்று.வெள்ளரிப் பிஞ்சு நறுக்குகிற பயல் ஓடிவந்தான்."தாத்தா தாத்தா!"சாமநாதுவுக்கு முகம், தோலியெல்லாம் மணல் படர்ந்தது.அரிவாள் மணையை எடுத்துண்டுன்னா வரான் பயல்!கை கால் உதறல் –வாய் குழறிற்று."படவாக்களா, எங்கே போயிட்டேள் எல்லாரும் – இத்தனை பெரிய எலியைப் பாயசத்திலே நீஞ்சவிட்டுவிட்டு. இத்தனை பாயாசத்தையும் சாக்கடைக்கா படைச்சேள் –கிராதகன்களா! மூடக்கூடவா தட்டு இல்லே?"ஒரு வேலைக்காரி ஓடிவந்தாள்."என்னா பெரியசாமி!""ஆமாண்டி –பெரியசாமி பார்க்காட்டா, பெருச்சாளி முழுகின பாயசம்தான் கிடைச்சிருக்கும். போங்கோ, எல்லாரும் மாலை போட்டுண்டு ஊஞ்சலாடுங்கோ..?"இன்னும் நாலைந்து பேர் ஓடிவந்தார்கள்.நார்மடியும் முக்காடுமாக அந்தப் பெண்ணும் ஓடி வந்தாள்.வேலைக்காரி அவளிடம் சொன்னாள்."எப்படிப்பா இத்தணாம் பெரிய ஜோட்டியை சாச்சேள்!"அவள் உடல், பால்முகம் –எல்லாம் குரு படர்கிறது."போ அந்தாண்டை" என்று ஒரு கத்தல். "நான் இல்லாட்டா இப்ப எலி பாஷாணம்தான் கிடைச்சிருக்கும். பாயசம் கிடைச்சிருக்காது."பெண் அவரை முள்ளாகப் பார்த்தாள். கண்ணில் முள் மண்டுமோ?சாமநாதுவுக்கு அந்தப் புதரைப் பார்க்க முடியவில்லை. தலையைத் திருப்பிக்கொண்டு, "எங்க அந்த சமையக்கார படவா?" என்று கூடத்தைப் பார்க்கப் பாய்ந்தார்.- பெ பெ பே பேபே பெ பே பே எ –ஆனந்த பைரவியில் ஊஞ்சல் பாட்டை வாங்கி நாயனம் ஊதுகிறது.வாலாம்பாள் பாடுகிற மாதிரியிருந்தது.

## காவலுக்கு

'ஐயா...ஐயா 'பதில் இல்லை உள்ளேயிருந்து'சுவாமி ' சுவாமி 'பதில் இல்லை.'வெற்றிலைக்காரம்மா ' வெத்தலைக்காரன் வந்திருக்கேன்....யாரு உள்ள ' "யாரு ? "நான் தாம்மா வெத்திலெ 'வேதாந்தி இடை வழியைப் பார்க்கிறார். நடை வழியில் சுவரை ஒட்டி ஒரு திண்ணை. அந்த திண்ணையின் மேல் உட்கார்ந்திருந்த கிழமுகம் தெரிகிறது. பொல்லென்று வெளுத்த தலை. நெற்றியில் சந்திர வளையம் போல் திருமண்.'யாரு ' அம்மாவா ' எப்ப வந்தீங்க ? "யாரு ? "என்ன யாருன்னு கேக்குறிய ' தெரியலியா ' வேதாந்திம்மா வேதாந்தி. எப்ப வந்தீங்க ? " –வேதாந்தியா ?யார்றாப்பா இப்படிக்

கத்தறதுன்னு பார்த்தேன் ‘ என்று கிழவி இடைக்கழி திண்ணையிலிருந்து எழுந்து‘யப்பா, யம்மா ‘ என்று தள்ளாடித் தள்ளாடி முந்தானை பின் பக்கம் ஆடுசதைவரை தொங்க நடந்து வந்து வாசல் திண்ணை வரையில் உட்காருகிறாள்.

‘எப்ப வந்தீங்க ?“நான் வந்து பத்து நாளாச்சே “முந்தாநாத்து நான் வந்து வெத்திலை கொடுத்திட்டுப் போனேனே அம்மாளை பாக்கிலியே “ரண்டாங்கட்டுலெ படுத்திருந்தேன். இப்ப மாட்டுப் பொண்ணு குளிக்கப் போனா, கடசிக் கொல்லைக்கு வாசப்பக்கம் பார்த்துக் கோன்னா. ரேழித் திண்ணையிலே வந்து படுத்துண்டேன். நேத்திக்கி கூட நினச்சுண்டேன் உன்னை. தினமும் குரல் கேக்குமே செத்துப் போயிட்டானோ இருக்கானோ தெரியலியேன்னு நினைச்சிண்டிருந்தான் “இப்ப தெரிஞ்சுதா இல்லியா இருக்கேனா செத்திட்டேனான்னு. “எதுக்காக செத்துப் போகணும். மகாராஜனா இன்னும் நூறு வருஷம் இரு. உன் தம்பி சடையன் பட்டச்சேரி அய்யங்கார் நாத்தங்காலெல்லாம் குத்தகைக்கு வச்சிண்டிருந்தானே. அவன் செத்துப் போயிட்டானோ இருக்கானோ ‘ “நீங்க போன தடவை எப்ப வந்தீங்க ?“போன தடவையா அது, அஞ்சு வருஷம் ஆச்சு.

கான்பூர்லே தான் என் கால்லே ஆணி அடிச்சு வச்சுட்டானே பெரிய புள்ளே. உப்பிலி ரங்கராஜன் எல்லாரையும் பாத்து மாமாங்கம் ஆனாப் போல இருக்குடா இப்ப. நான் எப்படியாவது போய்த்தான் தீர்வேன். ஒத்தக்காலாலே நின்னேன். அப்புறம்தான் யாரோ துணை கிடைச்சுதுன்னு ரயில்லே ஏத்திவிட்டான். “நீங்க அப்பவும் என் தம்பி சடையன் செத்துட்டானா இருக்கானான்னு கேட்டாங்க. ஞாபகமிருக்கா ?“அப்படியா கேட்டேன் ? “அப்படித்தான் கேட்டாங்க. அப்ப நான் என்ன சொன்னேன். நெனவு இருக்குங்களா ? “சொல்லேன் “என் தம்பி இப்ப சடையன் இல்லெ. சபாஸ்தியனாப் போய்ட்டான். பட்டாச்சாரி நாத்தாங்கலெ கிரயத்துக்கு வாங்கி சொந்தமாப் பயிர்செலவு பண்றான்னு சொன்னேன். உங்களுக்கு மறந்து போச்சு. இப்பவும் அவன் செத்துப் போகலெ நல்லாத்தான் இருக்கான். என் தம்பின்னா எனக்கு அப்புறம் தானே செத்துப்போகணும் “குசாலா அவாவா அந்தந்தக் காலத்துலெ செத்துப் போறதுதான் நல்லது. அப்படியெங்கே நடக்கிறது ? அவர் செத்துப் போனவுடன் ‘நீ என்னோட வந்து இரும்மா ‘ன்னு பெரிய புள்ளே கான்பூருக்கு அழைச்சிண்டு போனான். கான்பூரு என்ன கிட்டஞ்சியா கொட்டையூரு, இன்னம்பூரு, சருக்க கோபாலசமுத்ரம் மாதிரி அதுகிடக்கு நாலாயிரம் மைலோ ஐயாயிரம் மைலோ எப்பவாவது ரண்டு வருஷம் மூணு வருஷம் நாலு வருஷத்துக்கு ஒரு தடவை வரேன்.

ஒவ்வொரு தடவையும் கேக்கற சேதியெல்லாம் தூக்கி வாரிப்போடறது. என் மச்சினன் புள்ளே ஆராமுது பொண்டாட்டிமேலே கோச்சுண்டு கொளத்திலெ விழுந்து ப்ராணனை விட்டுட்டானாம். போனதரம் வந்து ஒரு நாழிக்கெல்லாம் இந்த சேதியைச் சொன்னா சொரேர்னுது எனக்கு. அத்தோடவா, ராதா பொண்டாட்டி என்னோட பரம சிநேகிதி. அவளைப் பார்த்துட்டு வரணுமேடின்னேன் பெரிய மாட்டுப் பொண்ணுகிட்ட. அவ கான்ஸர் வந்து செத்துப் போய்ட்டாம்மான்னாளே பாரு. நாலு நாளைக்கு சோறு எறங்கலெ. இந்த மாதிரிதான் ஒரோரு தடவையும் சின்னது பெரிசுன்னு இல்லாம யாரைப் பத்திக் கேட்டாலும் டாபி வந்துடுத்து, மோட்டார்லே அடிபட்டுடுத்து, மாடு முட்டிடுத்து. ஆத்தோட

போயிடுத்துன்னு கேட்டா எப்படியிருக்கும் ?நாலஞ்சு வருஷத்துக்கு ஒரு தடவை தானே இந்தப் பக்கம் வரேன்– “அது சரி, அப்படின்னா, செத்துப்போயிட்டாங்களா இருக்காங்களான்னு ஏன் கேக்கறீங்க ?இருக்காங்களா செத்துப் போயிட்டாங்களான்னு கேக்கப்படாதா ?“எப்படிக் கேட்டா என்ன ?மாத்திக் கேட்டுட்டா மாத்திரம் செத்துப்போனவா பொழச்சி வந்துடப் போறாளா ‘இல்லெ இருக்கறவாதான் செத்துப் போகாம இருக்கப்போறாளோ ?“அது இல்லெதான் ‘என்று வேதாந்தி கூர்தாடியும் காவிப் பல்லுமாகச் சிரிக்கிறார்.

‘ராதா செட்டி பொண்டாட்டி தான் செத்துப்போய்ட்டான்னா, இப்ப செட்டியார் செத்துப் போய்ட்டாரோ இருக்காரோ ?“பார்த்தீங்களா ‘மறுபடியும் அப்படியே கேட்டுட்டாங்களே. “ஆமா, நான் கேட்டுத்தான் எசைகேடா ஆயிடுமாக்கும் ?“எசைகேடா ஆகவாணாம். செட்டியாரு நல்லாத்தான் இருக்காரு. ரண்டு சுத்து பெருத்திருக்காரு– கருங்கல்லாட்டம் இருக்காரு. முன்னெல்லாம் பாய்ல படுக்கை. இப்ப பணத்து மேல படுக்கை. கருங்கல்லு உடம்பை கோரைப் பாயா தாங்கும் ?அதான் ஆண்டவன் பணமாவே படுக்கை விரிச்சுட்டான். “ஆமா, கருங்கல்லு. கண்ணை மூடற வேளை வந்துதுன்னா கருங்கல்லாவது பாறாங்கல்லாவது. “அதான் இருக்கவே இருக்கே....அது போவுதுங்க...இப்ப கான்பூர்லெ பெரிய ஐயா, பேரன் பேத்தி இவாள்ளாம் நல்லா இருக்காங்களா ‘“நல்லாவும் இருக்காங்க, பொல்லாத்தனமாவும் இருக்காங்க–ஏதோ நடக்கறது–போயேன் “ஏன் இப்படி சொல்றீங்க ?“பின்னே ?பெரிய பேரன் ஒழுங்கா பெல்லாரி பாஷ்யம் அய்யங்கார் பேத்தியைக் கல்யாணம் பண்ணிண்டான். ரண்டாவது பேரன் குண்டூர்லேர்ந்த ஒரு ரெட்டிப் பொண்ணாம். கூடப் படிச்சாளாம். அவளை ஓசப்படாம ரிஜிஸ்தர் கல்யாணம் பண்ணினுட்டான். ரெட்டா மட்டான்னு எம்புள்ளே பேரன் மேலே பாஞ்சு பாஞ்சு குதிச்சான். இப்ப எல்லாம் சரியாப் போயிடுத்து. இப்ப அந்தப்பொண்ணு சமையல் உள்ளேயே வந்து காபி போட்டுக் குடுக்க ஆரம்பிச்சுடுத்து.

மூணாவது பேரன் எல்லாத்தியும் தாண்டிப் போயிட்டான். ஸ்ரீநகர்லேந்து ஒரு துலுக்கப்பொண்ணாம். அவளைத்தான் கல்யாணம் பண்ணிப்பேன்னு குதிக்கறான். இப்ப அம்மாக்காரி குதிக்கிறா. தினம் போது விடிஞ்சா சண்டை. மூஞ்சியை மூஞ்சியைத் தூக்கிண்டு மூலைக்கொண்ணா நிக்கறது ?‘–‘சாதிப் பிரிவினிலே தீயை மூட்டுவோம்சந்தை வெளியினிலே கோலை நாட்டுவோம்.வீதிப் பிரிவினிலே விளையாடிடுவோம்வேண்டாத மனையினில் உறவு செய்வோம்சோதித் துலாலியே தூங்கி விடுவோம்சுகமான பெண்ணையே சுகித்திருப்போம்ஆதிப் பிரமர்கள் ஐந்து பேரும்அறியார்கள் இதையென்று ஆடுபாம்பெ ‘என்று பாடிக்கொண்டே எழுந்து நின்றார் வேதாந்தி.‘போரும் போரும் ‘ என்றாள் கிழவி–உப்பிலியின் தாயார்.‘மீன் இறைச்சி தின்றதில்லை,அன்றும் இன்றும் வேதியர்மீன் இருக்கும் நீரலோமூழ்வதும் குடிப்பதும்.மான் இறைச்சி தின்றதில்லை,அன்றும் இன்றும் வேதியர்.மான் உரித்த தோலலோமார்பில் நூல் அணிவதும் ‘என்று ஆட ஆரம்பித்தார்.‘போரும் போருமே ‘என்று கிழவி காதைப் பொத்திக் கொண்டாள்.‘என்ன அமர்க்களம் இங்கே ‘என்று குரல்.கஸ்தூரி குளித்து விட்டு, ஈரத்துண்டைக் கூந்தல் முடிச்சில் பந்தாக முடித்துக் கொண்டு, புடவையைச் சீராகக்

கட்டிக் கொள்ளாமல் முக்கால் சுற்றாக சுற்றிக்கொண்டு வாசல் நிலையில் எட்டிப் பார்த்தாள்.

‘என்னய்யா ஆட்டடத்துக்கு இப்ப ?’ எ����ிறாள் வேதாந்தியைப் பார்த்து.‘ஒண்ணுமில்லெ. சந்தோசமா சேதி சொல்றாங்க. சின்னப் பேரன் எங்களவங்க பொண்ணை கலியாணம் சேஞ்சுக்கப் போறாங்களாம் கான்பூர்லெ. யாராயிருந்தா என்ன ?எங்கிருந்தா என்ன ?சீ நகரோ சித்தாம்பூரோமாட்டிறைச்சி தின்றதில்லை. அன்றும் இன்றும் வேதியர்.மாட்டிறைச்சி அல்லவோ மரக்கறிக்கிடுவது ‘ என்று பாடி உட்கார்ந்தார்.‘வேதாந்தி கிட்டவும் சொல்லியாச்சா–பெரிய சமாச்சாரத்தை ?’ என்று மாமியாரைப் பார்த்துப் பல்லைக் கடித்தாள் கஸ்தூரி அம்மாள்.‘வேதாந்தி கிட்டே சொல்லாம தற்குறிக்கிட்டவா சொல்லுவாங்க ?..வெத்துலெ எத்தினி வக்யட்டும் “என்ன கேழ்வி ?ஒரு கவுளி ரண்டு நாவட்டம் தெரியாதா உமக்கு. நீர் வாசல்லே வந்தாலெ ஏதாவது அமர்க்களம். எந்து உள்ள போங்களேன். ‘வெற்றிலையைத் திண்ணையிலிருந்து எடுத்துக் கொண்டு வேதாந்தி வாசலில் இறங்குகிற வரையில் நிலைப் படியில் நின்றாள் கஸ்தூரி அம்மாள்.‘ஏந்துண்டு உள்ளே போங்களேன் ‘ வெத்திலைக் காராட்டல்லாம் போயி ஆத்து சமாச்சாரத்தை யெல்லாம் கொட்டணுமா ஊர் சிரிக்கணுமா ?“இத்தனை நாளா சிரிக்காதது இப்ப என்ன சிரிச்சுப் போச்சாம் ?இப்பதான் தந்தி ரேடியோவெல்லாம் வந்து அலகா பாத்தில்லே மூச்சு விட்டா அம்மா சமுத்திரத்திலே வந்து கேக்கறதே.

ரண்டாவது பேரன் ரெட்டி பொண்ணைக் கலியாணம் பண்ணிண்டு ரண்டரை வருஷமாச்சு. அது தெரிஞ்சுட்டுப் போகட்டும். மூணாவது பேரன் துலுக்கப் பொண்ணைப் பண்ணிக்கப் போறானாமேன்னு இந்தத் தெரு கிருஷ்ணமாச்சாரிக்கு எப்படித் தெரியும். வரதய்யங்காருக்கு எப்படித் தெரியும் ?நான் ஊருக்கு வந்ததும் வராததுமா ரண்டு பேரும் கேட்டாளே ?வந்த அன்னிக்கே கேட்டாளே ?எப்படி ‘ மறுநாளைக்கு ஆமடையா வந்து அப்படியா சமாசாரம்னு குசுகுசுன்னாளே ரண்டாங்கட்டுலே என்னோட பேசறேன்னு ‘“நான் சொன்னேன்னு சொல்றேளா ?“நீ சொன்னேன்னா சொன்னேன். “நீங்க சொல்றதை அப்படித்தானே அர்த்தம் பண்ணிக்க வேண்டிருக்கு ?“ஆமா, பெரிய அர்த்தத்தைக் கண்டுட்டே..போடா போ. “சரி, நீங்க உள்ளே வந்து படுத்துக்குங்கோ. ‘உப்பிலி வயலிலிருந்து வந்ததும் சமாசாரத்தைச் சொல்லி கஸ்தூரி அம்மாள் அவரை உசுப்பி விட்டாள். அவர் தாயாரைப் பார்த்துக் கத்தினார்.‘நீ எதுக்கு ரேழி திண்ணெல படுத்துக்கறே. ரண்டாம் கட்டுலெயே படுத்திண்டிருக்கறதுக்கு என்னவாம் ?“அவதானடா சொன்னா நான் குளிக்கப்போறேன், வாசல் பக்கம் பார்த்துக்கோன்னு.

ரேழியிலெ வந்து படுத்துண்டேன். ‘இனிமே ரண்டாங் கட்டுலெ படுத்துக்கோ.‘நான் மாட்டேன், அங்கே புழுங்கித் தள்ளுது. நான் ஒரு மாசமோ ரண்டுமாசமோ இங்க இருக்கற வரைக்கும் ரேழியிலேதான் படுத்துப்பேன் ‘ என்று அடம் பிடிக்கிறாள் கிழவி.அன்று மாலை உப்பிலியும் கஸ்தூரி அம்மாளும் கடைத்தெருவுக்குக் கிளம்பினார்கள்.‘காம்ரா உள்ளே நன்னாப் பூட்டிண்டுவா ‘ என்று சொல்லிக்கொண்டே வாசலுக்குப் போனர் உப்பிலி.ரேழியைக் கடக்கும்போது, ‘எல்லாம் பூட்டி யாச்சு ரேழியிலெ காவலுக்கு நாய் படுத்துண்டிருக்கே ‘ என்று கிழவி காதில் மட்டும் விழும்படியாகச் சொல்லிக் கொண்டே

வாசல் நிலையைக் கடந்தாளாம் கஸ்தூரி அம்மாள்.'சின்ன நாய் வெளியே போய் பெரிய நாய்தான் காவல் காக்கணும் ' என்று சற்று உரக்கவேகுரல் கொடுத்தாள் கிழவி.பாருங்கோ உங்கம்மா போறதே '"என்ன ?"உங்கம்மாவையே வந்து கேளுங்கோ ?"என்னத்தைக் கேக்கறது ?"உள்ளே வந்து கேளுங்கோ ?'உப்பிலி புருவத்தைச் சுருக்கி ரேழிக்கு வருகிறார்.'என்னம்மா சொன்னே ?"அவளையே கேளேன். அவ முதல்லெ என்ன சொன்னாள்னு. "நீ என்னசொன்னே ?'– மனைவியிடம் உப்பிலி.'அதான் ரேழியிலே காவல் இருக்கே.

எதுக்குப்பயப் படறேள்னு உங்க கிட்டதான் சொல்லிண்டு வந்தேன் "அப்படியா சொன்னே ' நாய் படுத்திண்டிருக்கு காவலுக்குன்னு சொல்லலே ?"ராட்சசிக்குப் ப்ரோக்ஷசின்னு சொல்லனும் போல இருக்கு எனக்கு. நீ எனக்கு அம்மா. அவ எனக்குப் பொண்டாட்டி. சரிசரி போ...பத்து புலி சேர்ந்து விளையாடும் ரண்டு பொம்பனாட்டி.....சரி சரி...போ. மொறைக்க வேண்டாம். 'ஒரு பயந்த அதட்டல். கஸ்தூரி முன் போக உப்பிலி பின் தொடர்கிறார்.'நீங்க சண்டை போடாம சௌஜன்யமா இருங்கோ. ஆண் நாயும் பெண் நாயும் ' என்று முணுமுணுக்கிறாள். ரேழித் திண்ணையில் ஒருக்களிக்கிறாள் கிழவி.

## மிஸ்டர் கோடு கோடு கோடு

நீர் எழுத்தாளர். கதை கிதை எல்லாம் எழுதுகிறீர். எனக்குப் பாடத்தான் தெரியும். எழுதத் தெரியாது. அதனால் நான் சொன்னதை அப்படியே நீர் எழுதும். நீர் தான் கண்டதையும் கேட்டதையும் எழுதுகிறவர் ஆச்சே.முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் நான் இசைக் கல்லூரியில் பயின்று பட்டம் வாங்கினேன். நானும் என்னுடைய சகபாடிகளான இன்னும் பத்தொன்பது பேரும் சேர்ந்து பட்டத் தாளைப் பெற்றுக் கொண்டோம். அதற்காக வழக்கம் போல ஒரு பட்டமளிப்பு விழா நடத்தினார்கள். நாங்கள் இருபது பேரும் மகா பாக்கியசாலிகள், ஏனென்றால் பட்டத்தாள்களை தன் கையாலேயே நேரிடையாக வழங்கினவர் இந்தியாவின் தலையாய அரசியல் பொருளதார –வியாபார–இலக்கிய– தொழில் பேரறிஞர். ஆவர் கையால் பட்டத்தாளைப் பெறக் கொடுத்து வைக்க வேண்டுமே ' அவர் என் பட்டத்தாளை என் கையில் கொடுத்து, என் கையைக் குலுக்கி, கும்பிடவும் கும்பிட்டு ஒரு புன்னகையும் புரிந்தார்.

எத்தனை பெரிய வாய்ப்பு ' இந்த விழாவுக்காகவே பிரத்யேகமாக 1500 மைல் ஏரப்ளேனில் பிரயாணம் செய்து வருகை தந்திருந்தார் அவர்– இந்த விழாவுக்காக–பிரத்யேகமாக – எங்களுக்குப் பட்டத்தாள்களை நேராக, தம் கையால் கொடுக்கவே நாங்கள் எவ்வளவு இறும்பூது எய்திருப்போம் என்பதை நீரே, கற்பனை செய்து கொள்வீர். நீர்தான் எழுத்தாளர் ஆச்சே 'எங்களை அவ்வளவு இறும்பூது கொள்ளச் செய்த பெரும்தகை யார் என்றா கேட்கிறீம் ?ஊரைச் சொன்னாலும் பேரைச் சொல்லக்கூடாது. பேரைச் சொன்னாலும் ஊரைச் சொல்லக்கூடாது. ஊரைப் பேரைச் சொன்னாலும் ஜாதிப் பேரைச் சொல்லக் கூடாது. அதனால் அவரை மிஸ்டர் கோடு கோடு கோடு என்று அழைக்கிறேன். மிஸ்டர்.....திரு கோடு கோடு கோடு என்று திரு போட்டால் அவர் தமிழர் என்று நீர் கண்டு பிடித்து வம்பு பண்ணுவீர். அதனால்தான் அவரை மிஸ்டர் கோடு கோடு கோடு என்று

அழைக்கிறேன். மேலும் இப்போதெல்லாம் சென்னையில் நாயுடு ரோடை, –ரோட் அதாவது கோடுரோடு என்றும் முதலியார் ரோடை – ரோட் அல்லது கோடு ரோடு என்றும், கிருஷ்ணமாச்சாரிரோடை கிருஷ்ணமா தார்பூசு ரோடு என்றும், வெங்கட அய்யர் ரோடை வெங்கட தார்பூசு ரோடு என்றும், சின்னசாமி கவுண்டர் ரோடை சின்னசாமி தார்பூசு ரோடு என்றும் மாற்றியுள்ளதை நீர் அறிந்திருப்பீம். எனவே ராஜத்துரோகமான காரியத்தைச் செய்யக்கூடாது என்றே எங்களுக்குப் பட்டமளித்த பெருந்தகை மிஸ்டர் கோடு கோடுகோடு என்று அழைக்கிறேன்.

முதல்கோடு ஊர் பெயர். இரண்டாவது கோடு இயற்பெயர். மூன்றாம் கோடு சாதிப் பெயர்.பட்டத்தாள்களை அளிப்பதற்கு முன்னால் அவர் இந்தியாவின் தொன்மையான இசைக்கலை பற்றியும், மிக மிதத் தொன்மையான தமிழிசை பற்றியும் ஒரு மணி நேரம் உரையாற்றினார். சிலப்பதிகாரம் என்ன, சர்மவேதம் என்ன, திருக்குறள் என்ன, பரதமுனி என்ன, கூத்த நூல் என்ன – இவைகளிருந்தெல்லாம் மேற்கோள்கள் காட்டி பாரத நாட்டு இசையின் பெருமையையும், முக்கியமாக தமிழகத்து இசையின் பெருமையையும் எடுத்து விளக்கியபோது, ஆகா ஆகா என்று சிலிர்த்துப் போனேன். அதே சமயம் நான் ரொம்ப சின்னவனாகியும் விட்டேன். எங்கள் வாத்தியார்களும் சின்னவர்களாகி விட்டார்கள். இசையை கரைத்துக் குடித்திருக்கிறார் இந்தப் பெரியவர். அஞ்சு வருஷம் எங்களுக்குச் சொல்லிக் கொடுத்த வாத்தியார்கள் இதில் ஆயிரத்தில் ஒன்றைக் கூடச் சொல்லவில்லையே, ஏமாத்தி விட்டான்களே என்று வருந்தினேன். எங்களுக்கு சங்கீதம் கற்பிக்கிறேன் பேர்வழி என்று மடாத்தப்பளை மாதிரி கத்தியே அஞ்சு வருஷம் கத்திக் கத்திப் பொழுதை போக்கி விட்டான்களே, இந்தப் பெரியவர் ஒரு மணி நேரம் சொன்னதில் பத்தாயிரத்தில் ஒன்றுகூடச் சொல்லவில்லையே என்று மனம் கசிந்தேன்.

பட்டமளிப்பு முடி���்ததும். என்னைப் பாடச் சொல்லி ஏற்பாடு செய்திருந்தார்கள். எனக்கு உள்ளூர பயம். முன் வரிசையில் திரு கோடு கோடு கோடு உட்கார்ந்திருக்கிறார். இசைக்கடல். பார்த்தால் ஒன்றும் தெரியாத மாதிரி உட்கார்ந்திருக்கிறார். இசை அறிவோ ஆழங்காணாத அறிவு. கஜமுகனே கணநாயகனே என்று பிரணவ சொரூபியான பிள்ளையார் மீதே பாரத்தைப் போட்டுப் பாடத் தொடங்கினேன். திரு கோடு கோடு கோட்டைக் கூடிய வரை பார்க்காமலே பாடிக்கொண்டிருந்தேன். நடு நடுவே அவரைப் பார்க்காமலும் இருக்க முடியவில்லை. அவர் அசையாமல் முகத்தில் எந்தக் குறியும் இல்லாமல் என்னையே பார்ப்பது தெரிந்தது. சில சமயம் பக்கத்தில் உள்ளவர்களைப் பார்ப்பார். யாராவது பலே என்று பாராட்டினால் அவரைத் திரும்பி பார்ப்பார். இன்னும் யாராவது ஆகா என்றால் அவரைத் திரும்பிப் பார்ப்பார். பிறகு என்னைப் பார்ப்பார். சாதாரண அல்பசந்தோஷி இல்லை என்று தீர்மானித்துக் கொண்டு நன்றாக உழைத்துப் பாடினேன். விரலால் தாளம் போடுவதைக் கூட அவர் யார் கண்ணிலும் படாதது போலவும் என் கண்ணில் கூட படாதது போலவும் பாடுவார். ஒன்றரை மணி நேரம் கழுவில் ஏற்றிவைத்தாற் போலிருந்தது. எப்படியோ தைரியமாகப் பாடி முடித்தேன்.இசை அரங்கு முடிந்ததும் பிரின்சிபால் வந்தார். ‘நல்லாத்தேறிட்டே போ ‘ என்று வாழ்த்தினார். திரு கோடு கோடு கோட்டின் முன்னாலேயே மற்றவர்களும். ‘பிரமாதம் ‘ என்றும், ‘ரொம்ப

சுத்தம், ரொம்ப சுத்தம் ' என்றும், 'ரொம்ப பெரிசா வரப் போற ' என்றும் வாழ்த்தினார்கள். மிஸ்டர் கோடு கோடு கோடு தன் கையை நீட்டி என் கையைக் குலுக்கினார். 'ரொம்ப மகிழ்ச்சி. ரொம்ப ரொம்ப நல்லா பாடிட்டாங்க ' என்றார்.

அப்பாடா ' உயிர் வந்தது. நிஜமாகவே பிழைத்தேன். ஒரு சிங்கத்தின் வாயிலிருந்து புறப்பட்டுவிட்டேன். என்னைக் காப்பாற்றிய கணநாயகனுக்கு முன்னால் மனதுக்குள்ளேயே எண்சாண்கிடையாக விழுந்து விழுந்து கும்பிட்டேன். பத்திரிக்கைகளில் இசையரங்குகளைப் பற்றி விமர்சனம் எழுதிப் பணம் சம்பாதிக்கும் கால் வேக்காடு அரை வேக்காடுகள் பற்றி எல்லாம் எனக்குத் தெரியும். அவங்களெல்லாம் முக்காலே மூணு முக்கால் வீசம் மூங்காட்டுத் தம்பட்டம் என்றும் புலித்தோல் போர்த்தின புனுகு பூனை என்றும் எனகுத் தெரியும். நான் பயப்படுகிறதெல்லாம் இதையெல்லாம் கண்டுக்காமல் மந்திரி, தலைவர் மானேஜிங் டைரக்டர் என்றெல்லாம் பெரிய பெரிய பதவிகளில் இருந்து கொண்டு இரண்டாம் பேர் அறியாமல் சங்கீதத்தைக் கரைத்துக் குடிக்கும் மிஸ்டர் கோடு கோடு கோடு போன்றவர்களிடம் தான். நிஜமான சங்கீதம் அவர்களுக்குத் தான் தெரியும். அவங்களுக்கு இசை தொழில் இல்லையே. யாருக்கு பயப்பட வேண்டும் அவர்கள் ? அதனால் தான் மிஸ்டர் கோடு கோடு கோட்டின் வாயிலிருந்து 'ரொம்ப நல்லா பாடிட்டாங்க ' என்று வந்ததும் எனக்கு உயிரும் தைரியமும் வந்தது. 'வாங்கடா இப்ப அரை வேக்காடு விமர்சனங்களா ' ' என்று துடை தட்ட வேண்டும் போல் கை கூட புருபுருத்தது.அதற்கெல்லாம் வாய்ப்பு இல்லாது போய்விட்டது.

மறுநாள் காலை என்னை பிரின்சிபால் கூப்பிட்டார். 'மிஸ்டர் கோடு கோடு கோடு அவருடைய ஊரில் ஒரு பெரிய பள்ளிக்கூடம் நடத்துகிறார். அதில் இசையை ஒரு பாடமாக நுழைக்கப் போகிறார். உன்னைத் தான் அந்தப் பிரிவுக்கு முக்கிய ஆசிரியராகக் கூப்பிடுகிறார். ரொம்ப அதிர்ஷ்டம். இத்தனை சம்பளம் எடுத்த எடுப்பில் யாரும் குடுக்க மாட்டாங்க ' என்று சம்பளத் தொகையைச் சொன்னதும் உடனே ஒப்புக்கொண்டுவிட்டேன். ட்யூஷனே வைத்துக் கொள்ளவேண்டாம். கலியாணம். கோயில் திருவிழா என்றெல்லாம் நாடறிந்த வித்வான்களைத் தான் பாடக் கூப்பிடுகிறார்கள் என்னைப் போன்ற புதுசுகளுக்கு ஒரு தட்டில் குண்டஞ்சி ஐந்து முழம் அங்க வஸ்திரமும் வண்டி சார்ஜஉம் தான் கொடுப்பார்கள். ரேடியோக்காரன் வருஷத்துக்கு ரண்டுசான்ஸ் கொடுத்தால் பிரளயம். அதுக்கே ஆடிசனுக்கு வா. மனுப் போடு. பணம் கட்டு என்று எழுதுவான். கிடைச்சால் தான் போச்சு. எனவே மிஸ்டர் கோடு கோடு கோட்டின் பள்ளிக் கூடத்திலேயே இசைப் பேராசிரியராக வேலை ஒப்புக் கொண்டேன்.நாலு மாசம் ஆயிற்று.

ஏதோ தகராறில் பதவியை ராஜினாமா செய்து விட்டு மிஸ்டர் கோடு கோடு கோடு ஊரோடு வந்து தம்முடைய தொழிற்சாலைகளையும் வியாபாரங்களையுமே கவனிக்கத் தொடங்கினார். வெளி நாடுகளுக்குப் பெரிய பதவியில் அனுப்புகிறது என்றதையெல்லாம் மறுத்து தம் தொழிற் சாலைகளையும் கல்விச்சாலைகளையும் கவனிக்கத் தொடங்கினார்.எங்கள் கல்லூரித் தலைவர் மிஸ்டர் சுப்ரமண்ய கோடு (ஜாதி பெயரைச் சொல்லாததற்கு மன்னிக்க வேணும்) என்னிடம் அடிக்கடி, 'பெரியவர் உங்களைப் பார்க்கணுமாம். அடிக்கடி சொல்லுகிறார் ' என்று சொல்லிக் கொண்டேயிருந்தார். எனக்குப்

பயமாகத்தானிருந்தது. எதற்காக என்னைப் பார்க்க வேணுமாம் ?அப்படி ஒரு கட்டம் இரண்டு தடவை வந்தது. பயம். நல்ல வேளையாக, குறிப்பிட்ட நாளுக்கு முதல் நாள் என் தகப்பனார் காலமானார். பிழைத்தேன். இரண்டாவது தடவை மிஸ்டர் கோடு கோடு கோடே ஒரு அவசர மீட்டிங் என்று சந்திப்பைக் கான்சல் செய்தார். மூன்றாம் தடவை தப்பித்துக் கொள்ள முடியவில்லை. என் உறவினர் யாரும் பரலோகம் போகவில்லை. மிஸ்டர் கோடு கோடு கோட்டிற்கும் அவசர் மீட்டிங்கும் இல்லை.

அன்று ஞாயிற்றுக் கிழமை. ஒரு மணி நேரம் இரண்டு மணி நேரம் என்று மாட்டிக்கொள்ளலாம். அவருடைய இரண்டு தொழிற்சாலைகளில் லாக்-அவுட்.எதற்காக கூப்பிடுகிறார் ?ஏதாவது 17 அட்சரம், 19 அட்சரம், 37 அட்சரம் என்று தெரியாத தாளத்தில் பல்லவி பாடச் சொல்லப் போகிறாரா ?இல்லை. வடமொழி தெலுங்கு கீர்த்தனத்திற்குப் பொருள் கேட்கப் போகிறாரா ?கணநாயகன் இப்போதும் காப்பாற்றுவான் என்று மீண்டும் அவர் மீது பாரத்தைப் போட்டு நடந்தேன்.மிஸ்டர் கோடு கோடு கோட்டின் வீடு பெரிய அரண்மனைமாதிரி. வாசலில் இரண்டு கூர்க்கா ரயில்வே லெவல் கிராஸிங் பாய்ண்ட்ஸ் மேனின் கூண்டு போன்ற ஒரு கூண்டில் ஒரு காவலாளி காக்கி உடுப்பில் டெலிபோனுடன் உட்கார்ந்திருப்பார். அவர் ஃபோன் பண்ணி, அனுமதி பெற்று என்னை உள்ளே அனுமதித்தார்.மிஸ்டர் கோடு கோடு கோடு தன்னறையில் வேட்டி சட்டை அணிந்து தனியாக உட்கார்ந்திருந்தார். போனவுடனே பிஸ்கட், மைசூர்பாகு, இட்டலி, சாம்பார் வடை, சுத்த நெய் எல்லாம் வந்தன. அவரும் என்னுடனே சாப்பிட்டார்.‘வேலை கடுமை. அதனாலே உங்களைச் சந்திக்க முடியவில்லை ‘ என்று மன்னிப்புக் கேட்பதுபோல் கேட்டுக் கொண்டார்.‘எனக்குத் தெரியாதா ?இப்படி உங்களோடு உட்கார்ந்து பேச முடியுமா ‘ உங்களுக்கு எத்தனை ஜோலி ‘ ‘அறையில் வேறு யாருமில்லை.‘ஒன்றுமில்லை உங்களைக் கூப்பிட்டது ஒரு சின்ன விஷயத்திற்குதான்.

நீங்கள் எனக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும் ‘‘பேஷா ‘‘ரொம்ப நாளாக கத்துக்கணும்னு ஆசை, வேலை பளுக்கள், வெளிநாட்டுக்குப் போறது இந்த மில்லுங்களை கவனிக்கிறது..... ‘‘எனக்குத் தெரியாதா ?நீங்க சொல்லணுமா ?என்னமோ சொல்லிக் கொடுக்கணும்னு சொன்னீங்களே, எதுவானாலும், எனக்குத் தெரிஞ்சவரையில் நான் சொல்லத் தயார். எதிலெ சொல்லணும். எனக்கு இந்த சங்கீதம் ஒன்று தானே தெரியும் ‘ ‘‘அதுலெதான். சங்கீதத்துலெதான். ‘‘என்ன சொல்லணும் ?நான் என்ன சொல்லணும் ‘ நீங்களே சமுத்ரமாச்சே, ‘‘சமுத்ரம்தான் சமுத்திரத்திலே கப்பலோட்டலாம். மீன் பிடிக்கலாம். இன்னும் எவ்வளவோ செய்யலாம். ஆனால் ஒரு அவுன்ஸ் கூட குடிக்க முடியாதே. ‘‘எனக்குப் புரியிலியே நீங்க சொல்றது. ‘‘ஒண்ணுமில்லெ. நீங்க இதைச் சொல்லிக் கொடுத்தாப் போதும். ‘‘எதை ?‘‘இப்ப உங்க மாதிரி ஒரு பெரிய வித்வான் பாடுகிறார்.

கேட்கறவங்க பல பேர் ‘ஆகா ஆகாங்கறாங்க. பலேபலேங்கறாங்க. நல்லதுடாப்பா நல்லதுடாப்பாங்கறாங்க அப்படியே கண்ணை மூடிக்கிறாங்க. இதெல்லாம் எப்படி செய்யறாங்க ?இதெல்லாம் எப்ப எப்ப செய்யணும் ?எப்ப கண்ணை மூடிக்கிறது ?எப்ப ஆகான்னு சொல்லணும் ?சும்மாகேட்டுக் கிட்டே இருக்கறாங்க. திடார்னு ஆகாங்கறாங்க.

ஐயோன்னு கசியறாங்க. நம்ப மானேஜரு கேக்கறதைச் சில கச்சேரிங்கள்ள பார்த்திருக்கேன். திடார்னு ஆகாங்கறார். ஒரே ஒரு சமயம் கண்ணைத் துடைச்சுக்கிறார். இதெல்லாம் எப்படி ?எப்ப செய்யறது ?எதுக்காக இப்படி செய்யத் தோணுகிறது. இது தெரிஞ்சாப் போதும். இதுக்குத்தான் உங்களைக் கூப்பிட்டனுப்பிச்சேன். 'இதுதான் நடந்தது. நான் இப்போது ஒரு நிஜசிங்கத்தின் வாயிலேயே நுழைந்து விட்டதாகத் தோன்றிற்று.மிஸ்டர் கோடு கோடு கோடு இப்போது இல்லை. சிலவருடங்கள் முன்பு காலமாகிவிட்டார். அந்த சந்திப்பை நினைத்தால் இப்போது என் உடல் நடுங்குகிறது. ஏனாம், நீர் எழுத்தாளராச்சே சொல்லும்.

## விஞ்ஞான வெட்டியானும் ஞான வெட்டியானும்

வராந்தாவில் நடக்கும்போதே சீராவன் மைத்துனரை எச்சரித்தான். 'துடை வரைக்கும் எடுத்தாச்சானு அவளுக்குத் தெரியாது முழங்காலுக்குக் கீழே தான் எடுத்திருக்குன்னு இன்னும் நினைச்சிட்டிருக்கா அவ ரண்டாந் தடவை க்ளோரா ஃபாம் கொடுத்தப்ப, வேற எதுக்கோ சின்ன ஆப்ரேஷனுக்காக கொடுக்கறாங்கன்னு சொல்லிருக்கு. முத ஆப்ரேஷனை சரிபண்றதுக்குன்னு சொல்லி வச்சிருக்கு. நீங்களும் துடை வரைக்கும் எடுத்தாச்சாமேன்னு கேட்டுடாதீங்க. தானே கொஞ்சம் கொஞ்சமா தெரிஞ்சுக்கட்டும்னு இருக்கிறோம். 'மைத்துனர் பதில் பேசவில்லை. கோபமும் துயரமுமாக வாய் மூடியாக நடந்தார்.நோயாளியின் அறைக்குள் நுழைந்தார்கள்.'வாங்கண்ணா 'கட்டிலில் மல்லாந்து படுத்திருந்த தங்கை வரவேற்றாள். கழுத்திலிருந்து கால்வரை போர்த்தியிருந்தது.'போட்மெயில்லியா வந்தீங்க ?''ஆமாண்டா கண்ணு ' அண்ணன் கட்டிலின் தலைப்புக்கு அருகில் போய் தங்கையின் நெற்றி முகட்டிலிருந்து தடவிக் கொடுத்தார்.'அண்ணி வரலியா ?''இல்லே.

''நாத்தனார் முடமானதைப் பார்க்க வாண்டாம்னா ' என்று லேசாகச் சிரித்தது அந்தப் பெண்.அந்தச் சிரிப்பு இரண்டு கணம்தான் அடுத்த கணம் சிரிப்பைக் கண்ணத்தின் கீழே தள்ளிவிட்டு கொடகொடவென்று கண்ணீர்.'முழங்காலுக்குக் கீழ எடுத்திட்டாங்களாம் அண்ணா ' என்று உதட்டைப் பிதுக்கிக் குழந்தை போல அழுதது அந்தப் பெண்.அண்ணன் உதட்டை உதட்டால் அழுத்திக் கொண்டார் திரும்பி தங்கையின் கணவனைப் பார்த்தார். அவன் உதடும் கன்னமும் கோணித்துடிக்க விம்மலை அடக்க முயன்று கொண்டிருந்தான்.இதெல்லாம் அடங்க இரண்டு நிமிஷம் ஆயிற்று.'அழாதீங்க அண்ணா. ''நீ எனக்கு தைரியம் சொல்ற. அப்படியே இருக்கட்டும். உசிரையாவது விட்டுவச்சானே ஆண்டவன். முழங்கால் போனாப் போகட்டும் ' என்று மீண்டும் அண்ணன் அவள் நெற்றி உச்சியைத் தடவிக் கொடுத்தார்.'முழங்காலுக்கு கீழே முப்பத்திரண்டு வயசிலேயே எடுத்தாச்சுன்னா. மிச்ச வயசை எப்படி அண்ணா போக்கறதாம் ?இப்ப நான் பொழச்சு யாருக்கு லாபம் ?அவர்களுக்கும் கஷ்டம். நான்கு குழந்தைகளுக்கும் யாரு செஞ்சு போடுவாங்க ?''பேசாம இருடா கண்ணு. நாங்கெல்லாம் எதுக்காக இருக்கோம் ? ''முடத்துக்குச் செஞ்சு போட. ''சும்மா இரேன். ''சும்மா இருன்னு சொல்லாதீங்கண்ணா. பேசிட்டேயிருந்தா, கால் வலி தெரியலே.

யாரும் இங்க இல்லென்னு வச்சுக்குங்க. உடனே காலையே நினைக்கிறேனா வலி விண்விண்ணுன்னு உசிரு போகுது. 'அண்ணன் ஊர்க்கதை, உலகக்கதை, உரவுக்காரங்க கதை எல்லாம் பேசத் தொடங்கினார்.தங்கை ரொம்ப ஆர்வமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள், வலி தெரியாமலிருப்பதற்காக. வலி தெரியவில்லை.திடார் என்று அவர்களுக்கு அப்பால் பார்த்து 'நீ சாப்பிட்டியாம்மா ?' என்றாள்.இருவரும் திரும்பிப் பார்த்தார்கள்.நிலையோரமாக நின்றிருந்த பெண், 'சாப்பிட்டாச்சாம்மா... தூங்கினீங்களா ராத்திரி ?'' ரண்டு தடவை முழுச்சிக்கிட்டேன். வலி கொன்னிடிச்சு, நர்சம்மா ரண்டு தடவ வந்து மாத்திரை கொடுத்தாங்க... தூங்கிட்டேன். நீ என்ன சாப்பிட்டாயாம் ?''அல்லாம் சாப்பிட்டேம்மா. இடியாப்பம். ரண்டு இட்லி, டாத்தண்ணி எல்லாம் ஆயிடிச்சு ''இந்தப் பொண்ணுதாண்ணா இங்க எல்லாம் செஞ்சிட்டிருக்கு எனக்கு. 'நடையில் சரசரப்பு.பெரிய டாக்டர் வராங்க என்று ஏதோ மகாராஜா வருவதைச் சொல்லுவதைப் போல தொண்டை யோடு தொண்டையாகச் சொல்லி விட்டு மறைந்தது தோட்டிப் பெண்.பெரிய டாக்டர் வந்தார். கூட இரண்டு மூன்று டாக்டர்கள். இரண்டு நர்சுகள்.சற்று நின்று நோயாளியைப் பார்த்தார் பெரிய டாக்டர்.

கட்டில் முனையில் தொங்கவிட்டிருந்த கடுதாசியைப் பார்த்தார்.'ஓகே, கன்டின்யூ '– என்று நர்சைப் பார்த்துச் சொன்னார். நோயாளியின் இடது கை நாடியைக் கால் நிமிஷம் பார்த்தார். அபயம் தருவது போல அவள் இடது தோளை மெதுவாகத் தட்டிவிட்டு வெளியே நடந்தார். பரிவாரம் கூடவே அடக்கமாக, மரியாதையாக ஓடிற்று.'போச்சு முப்பத்தஞ்சு ரூபா ' என்று சிரித்தது நோயாளிப் பெண்.அண்ணன் தங்கையை திரும்பிப் பார்த்தான்.'பெரிய டாக்டர் இப்ப வந்திட்டுப் போனார்ல. முக்கா நிமிஷம் அவருக்கு இருபத்தஞ்சு ரூவா, கூட ஒரு நர்சு வந்தாங்கள்ள. அவங்கதான் பெரிய நர்சு. அவரு இப்படி வந்துட்டுப் போனார்னா, பத்து ரூவா, ஆக மொத்தம் முப்பத்தஞ்சு ரூவா. ''என்னது ' புரியாமல் விழித்தார் அண்ணன்.திரும்பி தங்கையின் கணவனைப் பார்த்தார்.'ஆமாம் ' என்றான் சீராளன்.காலமே பெரிய டாக்டரும் பெரிய நர்சும் வருவாங்க. அதுக்கு முப்பத்தஞ்சு ரூவா. சாயங்காலம் ஒரு சின்ன டாக்டரும் சின்ன நர்சும் வருவாங்க. அதுக்குப் பதினைஞ்சு ரூவா.

''தினமுமா ?''பின்னே ?மாசத்துக்குன்னா நெனைச்சீங்க ' எங்க ஊரு மருதமுத்து வைத்தியர்னு நெனச்சீங்களா வருஷத்துக்கு ஆறு கலம் நெல்லு வாங்கிக்கிட்டு கூப்பிட்ட குரலுக்கு ஓடியாந்து மாத்திரை, கசாயம்லாம் கொடுக்கறதுக்கு ?''தினமும் அம்பது ரூபாயா '''ஆமாண்ணா, இன்னியோட நாப்பத்து நாலு நாளாச்சு இவங்க விசிட்டிங் சார்ஜ் மாத்திரம் ரெண்டாயிரத்து சொச்சம் ஆயிடிச்சு. ''இது இவரோட ஆஸ்பத்திரிதானே '''ஐயய்ய இது அசுபத்ரியும் இல்லெ. மருத்துவமனையுமில்லே. அவரோட சொந்த க்ளினிக்கு பாலி க்ளினிக்கு.'பாலி க்ளினிக்கோ, போலி க்ளினிக்கோ ' தன்னோட ஆஸ்பத்திரியிலே படுத்திருக்கிற நோயாளியைப் பார்க்கறதுக்கு இருபத்தஞ்சு ரூபாயா ?அதுவும் இப்படி முக்கா நிமிஷம் எட்டிப் பார்த்துட்டுப் போறதுக்கா இது ராத்திரிக் கொள்ளைகூட இல்லே. பகல் கொள்ளெ ?'அவங்க அமெரிக்கா, லண்டன், ஜெர்மனி யெல்லாம் படிச்சிட்டு வந்தவரு அண்ணா ' அதனாலதான் இவங்க நாலு வருஷமா நெல்லுவித்து சேத்த பணம்

இருபத்திரண்டாயிரத்தையும் போன வாரம் பில்லு அனுப்பிச்சு வாங்கிட்டாரு. 'சீராளன் சொன்னான் 'ஸ்கானிங்கறாங்க. அதுங்கறாங்க இதுங்கறாங்க. அந்த மாதிரி சோதனைங்களுக்கே ஆறாயிரம் ஆயிடிச்சு. அப்பறம் ஆபரேஷனுக்கு பதினைஞ்சாயிரம். ''சரி, நீங்க அந்தப் பொண்ணை வரச் சொல்லிவிட்டு அந்தாண்ட இருங்க ' என்றாள் நோயாளிப் பெண்.

இருவரும் எழுந்தார்கள்.'நீங்க ஏதாவது சாப்பிட்டிங்களாண்ணா ? ''இல்லெ. ''வெளியிலெ போய் காபி க்ளப்பிலெ சாப்பிட்டு வாங்க. ஏங்க. இங்க ஆசுபத்ரி காண்டானிலெ சாப்பிடாதீங்க. இங்க ஒரு இட்டலி ஒரு ரூவா. காபி ரண்டு ரூவா. வெளியிலெ போய் சாப்பிடுங்க.... சட்டுனு வரச் சொல்லுங்க. அந்தப் பொண்ணை. 'இருவரும் அவசரமாக வெளியே வந்து தோட்டிப் பெண்ணை கூப்பிட்டார்கள். அவள் நோயாளியின் அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டாள். அதற்கு முன்பே அவளை நிறுத்தி துடை வரையில் காலை எடுத்திருப்பதை அவளிடம் சொல்லவேண்டாம் என்று எச்சரித்து அனுப்பினான் சீராளன்.வராந்தாவில் நடக்கும் போது சொன்னான் அவன். 'பெரிசு கலியாணத்துக்குன்னு கொஞ்சம் கொஞ்சமா சேர்த்துகிட்டு வந்தேன். அஞ்சு வருஷமா ? அந்த இருபத்தாறாயிரமும் காலியாயிடிச்சு. இவ காலும் போயிடிச்சு. சின்ன டாக்டரைக் கேட்டேன் இன்னும் எத்தனை ஆகும்னு. மிஞ்சி மிஞ்சி இன்னும் பன்னண்டாயிரத்துக்கு மேல போகாதுங்கறாரு அவரு. ''இன்னும் பன்னண்டாயிரமா ? ''இல்லாட்டி வெளியிலெ விட மாட்டாங்க....அடுத்த ரூம்லெ ஒரு மைசூர்க்காரங்க வந்திருக்காங்க. காலு புரையோடி எடுக்கணும்னாரு. பழயபில்லு எல்லாம் இருபதாயிரம் கொடுத்தப்பற���ா தான் காலை எடுப்பேன்னிட்டாங்க. காலை எடுக்காட்டி உசிரு போயிடும். அதுக்காக இந்த பேஷண்ட்டோட தம்பி, அத்தாரிட்டி லெட்டர்லாம் வாங்கிட்டு, ஊருக்குப் போயி நிலத்தையோ, நகைங்களையோ, வீடோ அடமானம் வச்சி இருபதாயிரம் கொண்டாந்தாரு. அப்பறம்தான் காலை யெடுத்தாங்க.

ரண்டு நாளு முன்னாலெ எடுத்திருந்தா பாதத்தோட போயிருக்கும். இந்தப்பில்லு தகராறில் ஊருக்குப் போயிபணம் புரட்டி வரதுக்குள்ளார புரை கணைக்கால் வரை ஏறிடிச்சு, கணைக்காலோட வெட்டிட்டாங்க. 'மைத்துனர் சிறிது மலைத்து நின்றார்.'நீ எப்படி இந்தக் கொள்ளைக்காரங்க கையிலெ மாட்டிகிட்டே ? ஒரு காலை வெட்றதுக்கு நாப்பதாயிரமா ? இவன் என்ன டாக்டரா ? வெட்டியானா ? ''விஞ்ஞான வெட்டியான் ' என்ற ஒரு குரல்.ஒரு நாற்பது வயதுக்காரர் 'என் தங்கை பையன் வயித்து வலின்னு நாலு மாசமாச் சொல்லிக்கிட்டிருந்தான். பெரிய டாக்டராச்சேன்னு கொண்டு சேர்த்தேன். நாலு எக்ஸ்ரே ஆச்சு. ரத்தம், மூத்ரம். எச்சில்ன்னு ஒண்ணு பாக்கியில்ல, ஒரு சோதனை பாக்கியில்லெ. ஆத்மான்னு ஒண்ணு இருக்காமே. அதைத்தான் இன்னும் சோதிக்கலெ. கண்ணுக்குத் தெரிஞ்சு கையிலியும் அகப்பட்டா அதையும் சோதிக்கறேன்னு ஒரு ரண்டாயிரத்தைப் பிடுங்கியிருப்பான்....முப்பது வருஷம் முன்னாலெ நான் மதுரைப்பக்கம் போயி ஒரு மாசம் தங்கியிருந்தேன். கண்ணெல்லாம் எரிஞ்சு தலைவலியா இருந்தது. பக்கத்திலெ யாரோ ஜெர்மனிக்குப் போய்வந்த டாக்டர்னு போர்டு போட்டிருந்தது.

போனேன். அந்த ஆளு ஒரு ரண்டு நிமிஷம் என்னை முறைச்சு, என்னமோ யோசிக்கறாப்பல பார்த்தான்.

பதினைஞ்சு நாளாதலை வலிக்குதுன்னா, மண்டைக்குள்ள ஏதாவது கோளாறு இருக்கலாம். நல்லா டெஸ்ட் பண்ணித்தான் சொல்லணும். இன்பேஷண்ட்டா இருக்கணும்னான். கேட்டுக்கிட்டு வந்து சொல்றேன்னு தங்கியிருந்த உறவுக்காரர்கிட்ட சொன்னேன். ‘அடபாவி ‘ நீ தினமும் ரண்டு காஸாலெட்டு மாம்பழம் தின்னுகிட்டிருக்கே. நீல மாம்பழத்துக்கு மதுரையிலெ காஸலெட்டும்பாங்க. மாம்பழத்தோட பால் சாப்பிடணும். இல்லாட்டி வறட்சி கொடுத்து மண்டைவலிக்கும். இங்க, ஒரு எல்.எம்.பி. இருக்காரு. அவர்கிட்டே போய்ச் சொல்லுங்க ‘ன்னாரு. போனேன். எட்டணாக்கு ஆறுவேளை மிக்சர் கொடுத்தாரு. மூணு வேளையிலேயே சரியாப் போச்சு. அப்பல்லாம் இப்படி ஊருக்கு ஒரே ஒரு டாக்டர்தான் எங்கேயோ படிச்சிட்டு வந்து பயமுறுத்துவான். இப்ப எல்லா டாக்டருமே அப்படி ஆயிட்டான். தலைவலிக்குது, காலைக் கடுக்குதுன்னு சொன்னாப் போதும். ஒரு லிஸ்ட் கொடுக்கறாங்க பாரு – அந்த டெஸ்ட்டு இந்த டெஸ்ட்டுன்னு ....உங்க சம்சாரம் கேஸைப் பாத்துக் கிட்டுத்தான் இருக்கேன், சுருக்க டிஸ்சார்ஜ் வாங்கிட்டுப் போங்க ‘ என்று தர்மாஸ் ப்லாஸ்க்குடன் வராந்தாவில் நடந்தார் நாற்பது வயது.வெளியே போய் காபி க்ளப்பில் பொங்கல் வடை காப்பி சாப்பிட்டுவிட்டு சீராளனும் மைத்துனரும் உள்ளே வந்தார்கள்.

‘இந்த அக்ரமத்தைக் கேக்காம விடப்போறதில்லெ நான் பெரிய டாக்டர்கிட்டே போய் கத்தப்போறேன். உன் சொந்த ஆஸ்பத்திரியிலெ படுத்திருக்கிற நோயாளிகளுக்கு தினம் விசிட்டிங் சார்ஜுன்னு அம்பது ரூவா வாங்கிறேய்யா, இந்தக்காசு ஜரிக்குமான்னு கத்தப்போறேன். இன்னும் என்னல்லாமோ கேக்கப் போறேன். இல்லேன்னா கோர்ட்டு வரைக்கும் போய்ப் பார்த்திடப் போறேன். ‘ என்று முகம் சிவக்க உதடு துடிக்கக் கத்தினார் மைத்துனர்.‘இப்ப ஒண்ணும் பண்ணாதீங்க. இந்த டாக்டர்கிட்டே பெரிய பெரிய தலைவர்ங்க, அதிகாரிங்கல்லாம் கூட உடம்பைப் பார்த்துக்கறாங்க. ஒண்ணும் நடக்காது. தலைக்கு வந்தது துடையோட போச்சுன்னு ஊருக்குப் போய்ச் சேரப் போறேன் உங்க தங்கையை அழைச்சிட்டு. இப்ப ஒண்ணும் கலாட்டா பண்ணவாண்டாம்.....‘நோயாளியின் கதவு இன்னும் திறக்கவில்லை. அதை ஒட்டியிருந்த தங்கும் அறைக்குள் இருவரும் போய் உட்கார்ந்து கொண்டார்கள்.‘வணக்கங்க ‘ என்று சீராளனுக்கு வணக்கம் சொல்லி உள்ளே வந்தான் ராயப்பன். தோட்டிப் பெண்ணின் கணவன் அவன்.‘ரண்டாம் தடவையும் ஆம்புடேசன் செஞ்சிட்டாங்களாமே ‘ ‘ என்று முகம் தொங்கக் கேட்டான்.

‘ஆமாம்பா “போன வாரம் முழங்கால் வரைக்கும் எடுத்தாங்க. அதைக் கொண்டு எரியறதுக்கு பதினைஞ்சு ரூபா கொடுத்தாங்க எனக்கு. நான் நேத்து லீவு. தருமநாதன்கிட்ட கொடுத்தாங்க. அறுத்துப்போட்டதைப் புதைக்கறதுக்கு அவனுக்கு இருபது ரூவா கொடுத்தாங்களாம் ஆபீசுலெ. “லீவிலெ இருந்திட்டது வருத்தமா இருக்காக்கும் உனக்கு ? உனக்கும் ஏதாவது வேணும்கிறியா ? “என்னா சார் அப்படிக் கேக்கறீங்க ? “பின்ன என்ன கேக்கணும் ? “நான் சொல்ல வந்ததுவேற சார். காலோ, கையோ ஆம்புடேசன் பண்ணினா அதைச் சுடுகாட்டிலெ கொண்டு போடுன்னு உங்ககிட்ட

நாப்பது அம்பதுன்னு பில்லு போட்டு வாங்கறாங்க சார். எங்களுக்குக் கொடுக்கறது என்னமோ பதினைஞ்சு ரூவாதான் சார். நீங்கள்ளாம் சேர்ந்து ஆபீசிலெ சொல்லி முப்பது நாப்பதாவது கொடுக்கச் சொல்லக்கூடாதுங்களா சார் ?“ஏண்டா, ஞான வெட்டியான் தோட்டிக்கிட்ட கூடவா இங்க கமிஷன் கேக்கறாங்க ?‘ மைத்துனர் வாயைப் பிளந்து ராயப்பனைப் பார்த்தார்.சீராளன் அடுத்த வருட சாகுபடிக்கு விரை, தச்சுகூலி, எரு– இதற்கெல்லாம் எங்கே கடன் புரட்டலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தான்.‘அம்மா உங்களைக் கூப்பிடறாங்க ‘ என்று நோயாளிக்குக் காலை கடன் உதவிகளைச் செய்துவிட்டு வந்த தோட்டிப்பெண் அழைத்தாள்.‘இவ்வளவு பணத்தைக் கொள்ளையடிச்சு என்ன செய்வான் ஒரு மனுசன் ‘ ‘ என்று குழம்பிக்கொண்டே மைத்துனர் எழுந்து கொண்டார்.

## பூட்டுகள்

ரொம்ப பிஸியா இருக்காப்பிலியோ ?‘புத்தான் துவாரத்தில் நூல் கோத்த ஊசியை நுழைத்துக் கொண்டிருந்தவன் நிமிர்ந்து பார்த்தேன். உப்பிலி இடைக்குழி நிலையின் நாதாங்கியில் ஒரு கையும், எதிர் நிலையில் ஒரு கையுமாக முதுகை முன்னே வளைத்து எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார். பல் எல்லாம் தெரிகிற புன்னகை. கால் நிலைக்கப்பால் இடைக்கழியில்.‘ஒரு பிஸியும் இல்லை. புத்தான் விழுந்துடுத்து. தைச்சிண்டிருக்கேன். வாங்கோ– “பரவால்லே “என்ன பரவால்லெ. படிதாண்டா விரதமா–வாங்கோ. “இல்லெ ஸ்வாமி–அவசரம். ஊருக்குப் புறப்பட்டுண்டிருக்கேன்–“எந்தூருக்கு ?“அம்மா சத்திரத்திலெ ஒரு கல்யாணம். “உள்ள வந்து சொல்லலாமே. ஊருக்குப் புறப்பட்டுண்டிருக்கேன்றேள், சட்டை கூட போட்டுக்கலெ எப்ப போறதாக ?“பதினோரு மணி வண்டிக்குத்தான். “மணி எட்டுக்கூட அடிக்கிலியே. இன்னும் மூணு மணி நேரம் இருக்கே. வாங்களேன். ‘

‘காரியம் இருக்கு ஸ்வாமி சமாசாரத்தைச் சொல்லிட்டுப் போயிடலாம்னு வந்தேன் ‘ என்று நிலையைத் தாண்டி அடி எடுத்து வைத்தார் உப்பிலி. ஸ்டூல் மீது உட்கார்ந்தும் கொண்டார்.‘எப்ப யாருக்குக் கலியாணம் ?எந்த ஊர்ல ?“ஒண்ணுமில்லெய்யா. எங்க அண்ணா மாப்ளெயோட தங்கைக்குக் கலியாணம். கிட்டின உறவும் இல்லே. ஆனா அண்ணா கோச்சுக்குவன் கோச்சுக்கறான். அண்ணா மாப்ளெ கொஞ்சம் வெறப்பு ‘நீயும் வரணும்டா உப்பிலி/ இல்லேன்னா நாக்கிலெ நரம்பில்லாமெ ஏதாவது பேசிடுவா. நீங்கள்ளாம் பெரிய இடம்; பணக்காரா, என் தங்கைக்குக் கலியாணம்னா வருவாளா உங்கள் தம்பி, அவர் குடும்பம் எல்லாம்னு உன்னைத் தாண்டா முதல்லெ இழுப்பன். பேசாம வீட்டைப் பூட்டிண்டு எல்லாரையும் அழைச்சிண்டு வா. தலையைக் காமி. தாலி கட்டற வரைக்கும் இரு. ஒரு வா சாப்பிடு. திரும்பி வந்துடுங்கறான் அண்ணா. தட்ட முடியலெ. நாளை சாயங்காலத்துக்குள்ள வந்துடுவோம்.

நீர் வாசல்லெ வந்து சித்த வீட்டைப் பார்த்துக்கணும். கொல்லைப் பக்கம் மத்யானம் சாயங்காலம், ராத்திரி படுத்துக்கப் போறதுக்கு முன்னாலெ ரண்டு தடவை அப்படிக் கொஞ்சம் போய்ப் பார்த்துண்டா போதும்… “படுத்துக்கப் போறதுக்கு முன்னாலெ என்ன ? ராத்திரியும் ரண்டு தடவை முழிச்சிண்டு போய் கொல்லைப் புறம் போய்ப்

பார்த்துக்கறேன். என்ன ப்ரமாதம்/ “ராத்ரி எப்படி முழிச்சிப்பேள் ரண்டு தடவை ‘ என்று பல் தெரிய சிரித்தார் உப்பிலி.‘அலாரம் வச்சுக்கறேன் நடுநிசிக்கு எழுப்புறதுக்கு ஒரு தடவை பார்த்துட்டு வந்து, அதை விடியகாலம் மூணுமணிக்குத் திருப்பி வச்சுக்கறது. “என்னத்துக்கு அத்தனை சிரமம் ‘.... சரி. ரண்டு தடவை பார்த்துண்டா நல்லது தான் இருந்தாலும்... ‘ ‘பரவால்லெ “என்னோட டார்ச் லைட்டையும் கொடுத்துட்டுப் போறேன். ஒரு சமயம் ராத்ரி கரண்டு ஆ்ஃபாயிடுத்துன்னா ‘மடியை அவிழ்த்து ஒரு, சின்ன டார்ச் விளக்கை எடுத்து மேஜை மீது வைத்தார் உப்பிலி.‘நீங்களும் பார்த்துக்கோங்கோ. ‘ என்று பார்வையைத் திருப்பினார். நானும் திரும்பினேன்.

என் மனைவி அடுக்களை நிலையில் நின்று கொண்டிருந்தாள்.‘நாளை சாயங்காலத்துக்குள்ள வந்துடுவோம், ‘ என்றார் அவளைப் பார்த்து.பிறகு என்னைப் பார்த்தார் ‘யாராவது வந்து கேட்டா, நான் அவ்வளவு தூரம் போயிருக்கேன்னு சொல்ல வாண்டாம். அக்கரைக்கு கல்யாணம் விசாரிக்கப் போயிருக்கா. இன்னிக்கு ராத்ரிலே எட்டு மணிக்கே வந்துடுவான்னு சொல்லி வையுங்கோ, பொன்னுசாமி கிட்டவும் அப்படியே சொல்லுடான்னு சொல்லியிருக்கென், வாசல்லெ திண்ணையிலெயே அவனைப் படுத்துகச் சொல்லியிருக்கேன். ராத்திரி மட்டும் நீங்க படுத்துக்கப் போறதுக்கு முன்னாலெ அவனை உங்க வீட்டுக்குள்ளாகவே கொல்லை வரையில் பார்த்துட்டு வரச் சொல்லியிருக்கேன். உங்களை டிஸ்ரட்ப் பண்ணாம போய்ட்டு வந்துடுவன். நீங்களும் ராத்திரி ஏந்துண்டு ரண்டு தடவை பார்க்கறேன்னேளே அப்ப அவனை எழுப்பிக் கூட அழைச்சிண்டு போகலாம் துணைக்கு அவசியம் இல்லே இருந்தாலும் ஒரு ஹத்து. ஒருத்தர் கூட இருந்தா சித்தை மனசுக்குத் தெம்பு ‘இன்னும் சில பந்தோபஸ்துகளைக் கூறிவிட்டு ‘டார்ச்லைட்டை நாளைக்கு நான் வந்தப்பறம் கொடுத்தாப் போரும். பொன்னுசாமிட்ட கொடுக்கவாணாம் ‘ என்று டார்ச் விளக்கு வீடு எல்லாவற்றையும் காபந்து பண்ணிவிட்டு இடையில் வந்து அவா துடை மீது உரசிக்கொண்டு நின்ற நாலு வயது பையனையும் அழைத்துக் கொண்டு போனார் உப்பிலி.

சற்று கழித்து அவன் மனைவி வந்தாள், என் மனைவியிடம் மாலையில் பசும்பால்காரி வந்ததும் பாலை வாங்கி வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் அவளிடமும் தாங்கள் ஊரில் இல்லாததைச் சொல்ல வேண்டாம் என்றும் பசும்பாலை நாங்கள் உபயோகித்துக் கொள்ளலாம் என்றும் அதற்கான காசைக் கொடுக்க வேண்டியதில்லை என்றும் அதற்கு பதிலாக நாளை மாலை அவர்கள் ஊரிலிருந்து திரும்பி வந்ததும் தனக்கும் கணவனுக்கும் காப்பி மட்டும் போட்டு ஒவ்வொரு டம்ளர் கொடுத்தால் போதும் (பிரயாணக் களைப்புத் தீர) என்றும் சொல்லிவிட்டுப் போனாள்.பத்து மணிக்கு அடுத்த வீட்டிலிருந்து குழந்தைகள் கத்தும் சத்தம். உப்பிலியின் மனைவி குழந்தைகளுக்கு தலை வாரிப் பின்னும்போது சிடுக்குகளைக் கீற உபாதை எழுப்பும் கூச்சல்கள். ரெயிலடி ஒன்றரை மைல் தூரம் பத்தேகாலுக்காவது கிளம்பினால் தான் ரெயிலடிக்குப் போகிற சாலையில் ஆயச்சல் மேடு பள்ளங்களைக் கடந்து உப்பிலியின் மாட்டு வண்டி எலும்புகளை நொறுக்காமல் பெருநடையாகப் போகமுடியும். ஆனால் ஒன்பது மணிக்கே சட்டை முதலியவற்றைப் போட்டு குழந்தைகளைத் தயார் செய்தால் ஊருக்குப் போகிற

செய்தி அண்டை அயலுக்குத் தெரிந்துவிடும் என்று புறப்பட சிறிது நேரத்திற்கு முன்பே இந்த வாத்சல்யப் பணியை மேற்கொண்டிருந்தாள் கஸ்தூரி அம்மாள். இடையிடையே கொல்லைக் கதவு, இரண்டாம் கட்டின் நடைக்கதவு இவற்றின் தாழ்ப்பாள்களின் ஓசையும் அவற்றைப் பூட்டும் ஓசைகளும் கேட்டன.

மீண்டும் அந்தக் கதவுகள் திறக்கப்பட்டு சாத்தப்பட்டு தாழ்–பூட்டுகளின் ஓசைகள்.இந்த மத்தியில் பொன்னுச்சாமி தெருக்கோடியில் உள்ள உப்பிலியின் புளியங் கொல்லைக் கொட்டகையிலிருந்து வண்டியைப் பூட்டி வந்து வாசலில் அவிழ்த்துப் போட்டிருந்தான்.பத்து இருபத்தைந்து அடுக்களைக் கதவு முன் கதவு இடைக்கழிக் கதவுகள் சாத்திப் பூட்டப்பட்டன. குழந்தைகள் வாசலில் வந்து நின்றார்கள், பொன்னுச்சாமி ஒரு பெட்டியையும் இரண்டு பைகளையும் திண்ணையில் கொண்டு வைத்தான். பிறகு ஏழு வயதுப் பெண்ணும் நாலு வயதுப் பையனும் வந்தன. கஸ்தூரி அம்மாள் கையில் ஒரு பையுடன் பட்டுப் புடவையும் வைர அட்டிகையும் கல்லிழைத்த கை வளைகளுமாக வந்தாள். பொன்னுச்சாமி மாடுகளை அதட்டி வண்டியைப் பூட்டினான். குழந்தைகளும் கஸ்தூரியும் வண்டியில் ஏறினார்கள்.உப்பிலியும் வந்தார். ஒல்லி உடம்பும் திருமண்ணும் உயரத்தினால் சற்றே வளைந்த முதுகும் தட்டுச் சுற்றுப் பட்டுக் கரை வேட்டியும் கழுத்து மூடின சட்டையும் செருப்பும் குடையுமாக நின்றார்.

வண்டிக்குள் ஏறுவதற்குள் ஏதோ ஞாபகமாக, மீண்டும் வாசல் பூட்டைத் திறந்து தாழை அகற்றி, இரண்டாம் கட்டின் நடைக்கதவு, இரண்டாம் கட்டுக் கதவு, கிணற்றங்கரைக் கதவு கொல்லைக் கதவு எல்லாவற்றையும் ஒரு முறை எட்டிப் பார்த்து கதவுகளை ஒன்றன் பின் ஒன்றாக சாத்தித் தாழிட்டு பூட்டி வாசல் கதவையும் பூட்டிவிட்டு வாசலில் வந்து பொன்னுச்சாமி நுகத்தடியை அழுத்திக் கொள்ள ஒரு காலை வண்டியின் மிதிபட்டையில் வைத்து என்னைப் பார்த்து 'வரேன் ஞாபகமிருக்கட்டும் நான் சொன்னதெல்லாம் ' என்று பற்கள் தெரிய கன்னம் நிரம்ப, கண்கள் சுருங்கப் புன்னகைத்துவிட்டு வண்டியில் ஏறினார். இனி எந்தத் திருடனும் வரமாட்டான் என்று எனக்கும் என் மனைவிக்கும் நம்பிக்கை திடமாயிற்று. இத்தனை தடவை திறந்து சாத்தித் தாழிட்டுப் பூட்டின இத்தனை கதவுகளை யார் திறக்க முடியும் ? யார் திறக்கத் துணிவான் ? பால்காரிக்கும் தெரியப் போவதில்லை. நான் வேறு இருக்கிறேன். என் மனைவி–பிறகு பொன்னுச்சாமி வேறு. பயமில்லை.பொன்னுச்சாமி தலைப்புக்கயிற்றை லாகவமாக உள்ளங்கையில் உருவி இடது மாட்டின் பின் பக்கத்தைச் சிறிது ஒதுக்கி ஒரு எம்பு எம்பி உட்கார்ந்து 'த ' என்றதும் விறுட்.வண்டி கிளம்பி விட்டது.குழந்தைகள் எங்களுக்கு டாட்டா காட்டின.

உப்பிலியின் மாடுகள் புலிகளாய்ப் பாயும். ஒரு நான்கு கணத்தில் தெருத்திருப்பத்தில் மறைந்து விட்டது.மணி பத்து முப்பத்தைந்து. அதனால் என்ன ? ஆய்ச்சலோ, குண்டோ, குழியோ ஒன்றரை மைல் போக உப்பிலியின் மாடுகளுக்கு பத்தே நிமிஷம். டிக்கட் வாங்கிய பிறகு ஐந்து ஏன், பத்து நிமிஷம் காத்திருக்கலாம். பத்து ஐம்பத்தெட்டுத்தான் ரயில்.'ஐயையோ ' என்று உள்ளேயிருந்து என் மனைவி கத்திக்கொண்டு ஓடி வந்தாள்.'என்ன என்ன ?''குழந்தை கத்தறதே ''குழந்தையா ' ''ஆமான்னா–கஸ்தூரி மாமியோட கைக் குழந்தைதான். தொட்டில்லேர்ந்து கத்தறாப்பல இருக்கு. ''என்ன

பேத்தறே ?“பேத்தறேனா… வந்து கேளுங்களேன் ‘ கையை உதறி உதறி ஏதோ புருஷனை கீழே விட்டு விட்டு ரயில் தன்னை மட்டும் ஏற்றிக் கொண்டு நகர்ந்துவிட்டாற் போல் கத்தினாள் மனைவி.உள்ளே ஓடினேன். ஆமாம். அடுத்த வீட்டிலிருந்து தான் சத்தம். குழந்தை தான்.‘அந்த மாமி குழந்தையை எடுத்துண்டு போனாப்பல இருந்ததே–நான் பார்த்தேனே, “இல்லே நான் பார்க்கலே. கையில் குழந்தை இல்லெ கோதையும் கண்ணனும் தான் ஏறிண்டது. அதுகளை தான் நான் பார்த்தேன்.. ‘வீல் வீல் என்று வ்ராச் வ்ராச் என்று மூச்சு நின்று விடுவது போல ஒரு குழந்தையின் கத்தல். இந்த வீட்டு மனைவியின் கை உதறல், நான் அடுத்த வீட்டு வாசலுக்கு ஓடினேன். திரும்பி வந்தேன்.

சாவிக் கொத்தை எடுத்துக் கொண்டு ஓடினேன்.ஐந்து நிமிஷம் ஆய்விட்டது. குழந்தையின் கத்தல்,உப்பிலியின் வண்டி தெரு திரும்பிற்று. வண்டி வந்து நின்றது. உப்பிலி இறங்கினார். ஓடி வந்தார். வெள்ளி மோதிரம் போட்ட ஆள் காட்டி விரலில் சாவிக்கொத்துடன் ஆளோடியில் ஏறினார். அவர் மனைவி இறங்கினாள்,‘பொகு சமத்து. வழிச்சுண்டு சிரிப்பா. ‘ என்று பல்லைக் கடித்தார்.‘ம்க்கும். கௌம்புன்னு கிட்டிகட்டினேள் என்னமோ தீவட்டிக் கொள்ளக்காரன் வந்துடறாப் போல கொல்லைக்கும் வாசலுக்கும் எத்தனை நடை, எத்தனை தடவை பூட்றது திறக்கறது. அப்பா–அப்பா போறும் ‘ கஸ்தூரி மாமி உருட்டி விழிக்கிறாள்.‘ஏண்டி நானா பத்து மாசம் சுமந்தேன் ?பேசாதே. குழியவேற பறிக்கிறியே “ம்க்கும் பறிக்கிறேன். மெதுவாப் பேசட்டும் ‘கதவு திறந்தது. இடைக்கழிக் கதவு திறந்தது. ஒரு நிமிஷம் கழித்து குழந்தை அழுகை நின்றது.குழந்தைகள் இறங்கி வந்தன.பொன்னுச்சாமி வண்டியை அவிழ்த்து சக்கரத்தில் மாடுகளைக் கட்டினான்.இனி மேல் மாலை மூன்றே முக்காலுக்குத் தான் அடுத்த ரயில்.

‘ஓய் தீட்சிதரே. இப்படியுமா ஒரு தாயாருக்கு மறந்துபோகும் ?“போச்சுய்யா போச்சு. எங்கிட்டதான் சொல்லிண்டார் உப்பிலி. நான் தான் இன்னிக்கு ராத்திரி பசும்பாலை வாங்கிண்டேன். ராத்திரி அலாரம் வச்சு ரண்டு தடவை கொல்லைப்பக்கம் பாட்டரி வெளிச்சத்திலே போனேன். கன்னம் வைக்கிறவன்தீவட்டிக் கொள்ளைக்காரன்லாம் வராம நான் தான் இந்த தண்டு தீட்சிதன் தான் பார்த்துண்டேன் போருமா “நல்ல பொம்மனாட்டி நல்ல தாப்பாள்யா “உங்களுக்கு பணத்தோட சொத்தோட அருமை தெரியுமா பேசாம இரும். ‘ தண்டு தீட்சிதர் என்னை இடித்துக் காட்டினார். தன்னையும் சேர்த்துக் கொண்டார்.

## …ப்பா

நான் தூங்குகிறேனா என்ன ‘ இல்லையே…..நான் விழித்துக்கொண்டிருக்கிறேனே. பின்னே ஏன் இந்தச் சந்தேகம் ?ஒரு நாய் எப்படி இங்கிலீஷில் குரைக்கும் ?நாய்க்கு மொழி ஏது ? இருக்கிறது ஒரு மொழிதானே ?குரைப்பு ஒன்றுதானே மொழி…இல்லாவிட்டால் மீமீ என்று சன்னக் குரலில் குழையும் வாலையும் குழைக்கும். பின்னே ஏன் எனக்கு மட்டும் ஒரு நாய் இங்கிலீஷில் குரைப்பதுபோல் கேட்கிறது ‘ கனவா ‘ இல்லையே. அரைத் தூக்கம் கூட இல்லையே. நல்ல முரட்டு விழிப்பாகத்தானே உட்கார்ந்துகொண்டிருக்கிறேன். இங்கிலீஷில்தான் குரைக்கிறது. என்ன வார்த்தைகள் இவை…கூர்ந்து கேட்கிறார் அவர்.‘வௌவ் வௌவ்…டெர்ரிடோரியல்

இம்ப்பரேட்டிவ்…வௌவ் வௌவ்…டெர்ரிடோரியல் இம்ப்பரேட்டிவ்… வௌவ் வௌவ்…டெர்ரிடோரியல் இம்ப்பரேட்டிவ் ' இப்போது தெளிவாகக் கேட்கிறது…ஆமாம். ஒரு நாய்தான் ….டெர்ரிடோரியல் இம்ப்பரேட்டிவ் என்றுதான் குரைக்கிறது…இது என்ன டெர்ரிடோரியல் இம்ப்பரேட்டிவ்…அப்படி என்றால் ?அவர் வாசல் விளக்கைப் போட்டுக் கதவைத் திறந்து வெளியே பார்த்தார்.குரைக்கின்ற நாய் அவர் பக்கம் திரும்பிற்று.'கூப்பிட்டார்களா ?' என்று கேட்கிறது.'இல்லையே.

''பின் ஏன் விளக்கைப் போட்டுக் கதவைத் திறந்தீர்கள் ?''நீதானே இங்கிலீஷில் குரைத்தாய் ?''இங்கிலீஷிலா குரைத்தேன் ?''பின்னே, டெர்ரிடோரியல் இம்ப்பரேட்டிவ் என்ன தமிழா; இல்லே உருது என்ற எண்ணமோ ?''எனக்கு அதெல்லாம் தெரியாது. அந்த ஜகதுசாரும் உப்பிலியும் பேசிக்கொண்டிருந்தார்கள். கேட்டேன். சரி, நம்ம விஷயமாச்சே என்று அந்த வார்த்தையைப் பிடித்துக் கொண்டேன். அதையே சொல்லிக் குரைக்கிறேன். ''இதுக்கு என்ன அர்த்தம் ?''அதெல்லாம் இங்கே நடுவாசலில் நின்று பேச முடியாது. ''உள்ளே வந்து சொல்லேன். ''நான் உள்ளே வரலாமா ?''ஏன் வரக்கூடாது ?இங்கிலீஷில் குரைக்கிறாய் ?''தெரு நாய் ஆச்சே நான். ''பரவாயில்லே. இங்கிலீஷில் குரைக்கிறபோது, உள்ளே வந்தால் என்ன ?வா. வா…உட்காரு… ''நான் உட்கார வேண்டாம். அதெல்லாம் அதோ சோபாவில் வெல்வெட் குஷனில் சுகமாகத் தூங்கி, என்னைக் கண்டதும் பயந்து, இறங்கிச் சமையல் உள்ளுக்குள் ஓடுகிறதே…அந்த மியாவ் மியாவுக்கே உங்கள் சொகுசு சோபாவெல்லாம் இருக்கட்டும்.

''சரி நீ குரைத்ததற்கு அர்த்தம் சொல்லு. ''சொல்கிறேன். ஆனால், நான் ஒன்று கேட்கிறேன். முன்னால் அதுக்குப் பதில் சொல்லுங்கள். அப்புறம் நான் சொல்லுகிறேன். ''என்ன ?''நாயேன் உன்பாலன்றி எங்கே செல்வேன் ' என்று ஒரு பாட்டில் வருகிறதே, கேட்டிருக்கிறீர்களா ?''கேட்ட ஞாபகம். ''நாயேன் ஏழைபால் தயை செய்வாயே ' என்ற பாட்டில் வருகிறது. ''ஆமாம் ஆமாம்…பாபநாசம் சிவன் பாட்டு என்று நினைக்கிறேன். ''இருக்கலாம். பாடினவர் புத்திசாலிதான். பைரவி ராகத்தில் பாடியிருக்கிறார். பைரவி என்றால் எங்கள் நாய் இனத்தையும் குறிக்கும்.

''பொல்லாத நாயா இருக்கியே '''நல்ல நாய் என்று சொல்லுங்கள். நாயேன் உன் பாலன்றி எங்கே செல்வேன் என்று ஏதோ நாயாரைப் பற்றிக் கேட்கிறான் ஒரு மனுஷன். இதன் அர்த்தம் என்ன ?'அவர் யோசித்துவிட்டு நாய்க்குப் பதில் சொல்கிறார்: 'நாய் நன்றி உள்ள பிராணி. எசமானை விட்டு எங்கும் போகாது. வேறு யாரிடமும் வாலைக் குழைத்துக்கொண்டு பல்லை இளிக்காது. ''கரெட்…எங்கள் எசமானில்லாத ஒருவன் நூறு பிஸ்கட்டைக் காட்டினால்கூடப் பல்லை இளித்துக்கொண்டு ஓடமாட்டோம். கட்சி மாறமாட்டோம். அப்படி இருக்கும் போது நாயும் பிழைக்கும் இந்தப் பிழைப்பு, நாயும் பிழைக்கும் இந்தப் பிழைப்பு என்றெல்லாம் கட்சி மாறும் மனிதர்களை ஏன் திட்டுகிறார்கள் ?எங்களைத் திட்டுகிறார்களா ?அந்த மனுஷங்களைத் திட்டுகிறார்களா ? ''…… ''பதில் சொல்லுங்கள் ''………………… ''என்ன யோசிக்கிறீர்கள் ?''எசமான் இருக்கிற நாய்தானே, இன்னொரு ஆள் நூறு பிஸ்கட்டைக் காட்டினால் கூடப் பல்லை இளித்துக்கொண்டு போகாது என்று சொன்னாய். எ

சமான் இல்லாத நாய்கள் எத்தனை இருக்கு ?‘என்னைப் போல இண்டிபெண்டெண்ட்டா, சுதந்திரமா, எசமானே இல்லாத நாய்களைச் சொல்கிறீர்களா ? “ஆமா. “நீங்கள் இந்தக் கேள்வி கேட்பீர்கள் என்று எதிர்பார்த்தேன். எனக்கு இந்தத் தெரு, எசமான். இந்தத் தெருவில் உள்ள நீங்கள், இன்னும் மற்றவர்கள், அவர்களுடைய குடும்பம், குழந்தைகள் எல்லோரும் சேர்ந்து மொத்தமாக எசமான். அப்படிச் சொல்வதை இந்தத் தெரு என் சொத்து மாதிரி. நான் உங்களுக்குக் காவலாளி ‘ நான் இதை விட்டு வேறு எங்கும் போகமாட்டேன். இந்த ஊரிலேயே வேறு தெருவுக்கு அல்லது வார்டுக்கு தேர்தலுக்கு நிற்க மாட்டேன். நான் அந்த வேறு தெருவைச் சேர்ந்தவன் என்றெல்லாம் ‘டூப் ‘ அடிக்கமாட்டேன். நாய்களும் அதை ஒப்புக்கொள்ளாது. இந்த நாய் இந்தத் தெரு, அந்த நாய் அந்தத் தெரு. அந்தத் தெரு நாய் இங்கே வந்தாலும் குதறித் தீர்த்துவிடுவேன். வேற்று நாய் இங்கே வரவும் துணியாது.

இண்டிபெண்டெண்ட் என்று யாரும் இந்த நாய் வர்க்கத்தில் கிடையாது. ஒரே தெருவுக்குள் ஒரு நல்ல மனிதன் இருந்தால் பிரியமாக இருப்பேன். பொல்லாத மனிதன் இருந்தால் ஒதுங்கி நிற்பேன். இந்த அளவில் இண்டிபெண்டெண்ட் என்று சுமாராகச் சொல்லலாம். நல்ல ஆள்களிடம் பிரியம் காட்டுகிறவர்கள்தான் இண்டிபெண்டெண்ட், அதுதான் நிஜமான சுதந்திரம். “ரைட். ஆனா நீ என் கேள்விக்கு இன்னும் பதில் சொல்லலியே ? “எது ? “டெர்ரிடோரியல் இம்ப்பரேட்டிவ். “நாசமாய்ப் போச்சு. அதைத்தான் இத்தனை நேரமும் சொல்லிக்கொண்டிருந்தேன். ஜகது எதையோ உப்பிலியிடம் சொல்லிக்கொண்டிருந்தார். இந்த உலகத்தில் தான் படைத்த ஜீவஜந்துக்கள் எல்லாவற்றுக்கும் ஆண்டவன் ஒரு நிலம்– ஒருடெரிடெரி கொடுத்திருக்கிறாராம். அந்த நிலத்தில் வேறு யாரும் உரிமை பாராட்டக்கூடாது. அது அதுக்குத் தன் பிராந்தியத்துக்கு மேல் ஒரு ஆட்சி, ஒரு உரிமை உண்டு. அதுதான் டெர்ரிடோரியல் இம்ப்பரேட்டிவ் என்று, ஜகது உப்பிலியிடம் சொல்லிக்கொண்டிருந்தார். கட்சி மாறிகளைப் பார்த்து நாயும் பிழைக்கும் இந்தப் பிழைப்பு என்று கிண்டல் பண்ணுகிறான்களே, நெசம்மா நாய்களுக்கு எது தெரிஞ்சதுன்னா நம்மை எல்லாம் என்ன பண்ணுமோ, என்று ஜகது சொல்லிக்கொண்டிருந்தார்.

‘கரெக்ட் ‘ தெருவுக்கு ஒரு நாய் இருந்தால் போருமே, ஆயிரம் பூட்டுக்குச் சமானம் ‘ என்று உப்பிலி மாமாகூட சொல்லிக் கொண்டிருந்தார். இதையெல்லாம் கேட்டுக்கொண்டு இருந்தேன். இந்த ‘டெர்ரிடோரியல் இம்ப்பரேட்டிவ் ‘ என்கிற வார்த்தை கடகடவென்றும் படபடவென்றும் அதிகாரத்தை வெளிப்படுத்துகிற மிடுக்கு வார்த்தையா இருந்தது. அதைச் சொல்லிக் குரைக்கிறேன். குரைக்கக் குரைக்க எனக்கே ஒரு தன்னம்பிக்கை, மிடுக்கு, பெருமிதம் எல்லாம் உடம்பில் மதமதக்கிறது. இனிமேல் உப்பிலி மாமா மாமாங்கத்துக்கு ஒரு தடவை வீட்டைப் பூட்டிக்கொண்டு போனால்கூட வாசல்பூட்டு, கொல்லைப்பூட்டு மட்டும் போட்டால் போது. நான் இருக்கிறேன். நீங்களும் கவலைப்படவேண்டாம். இந்தத் தெருவுக்கு நான் ராஜா. இது என் டெர்ரிடோரியல் இம்ப்பரேட்டிவ்.

‘நாய் கம்பீரமாகப் பார்த்து.‘நல்ல ஆளப்பா நீ. “ஆளப்பாவா ? நாயப்பா.... ‘ என்று நாய் வெளியே போயிற்று.‘கதவைச் சாத்திக்கொள்ளுங்கள். வௌவ் வௌவ் வௌவ்,

டெர்ரிடோரியல் இம்ப்பரேட்டிவ் டெர்ரிடோரியல் இம்ப்பரேட்டிவ். ‘ஏதோ தெருவுக்கே பட்டா வாங்கிவிட்டது போல், நாய் வீறாப்பாகக் குரைக்கத் தொடங்கிற்று.

## கைகாட்டி

இடம்–வடசென்னை.காலம்–விடியற்காலை.ஒரு மிக நீளத் தெருவின் கோடியில் ஒரு கடை இன்னும் திறக்கவில்லை. திறந்த பிறகு தான் வெற்றிலை, பாக்கு, பீடி, சிகரெட்கடையா, மளிகைக்கடையா, ரிப்பன்–வளையல் குங்குமம்–சவுரி கடையா என்று தெரியும்.கடைக்கதவுகளுக்கு முன்னால் நாலு சவுக்கைக் கழிகள் மேல் போட்டிருக்கிற பலகை. கீழே சாக்கடை. பலகை மேல் ஒரு ஆசாமி படுக்கலாம். படுத்திருக்கிறார். கண்ணைத் திறந்து படுத்திருக்கிறார். கால் மணிக்கு முன்பு ஒரு காக்காய்க் கூட்டம் கத்திக் கத்தி அவர் தூக்கத்தைக் கலைத்து விட்டது. எல்லாம் பறந்து போய் மிச்சம் இரண்டு காக்காய் எதிர் வீட்டு மாடிக்கூரையில் உட்கார்ந்து கரைந்து கொண்டிருக்கிறது.‘காலங்காத்தாலெ கூரை மேலே காக்கா கத்தினா விருந்து வரும். கத்துறதைக் கேட்டவங்களுக்குத் தானே ‘ மாடியிலெ குடக்கூலிக்கு இருக்கிறவங்க தூங்கிக்கினு இருக்காங்க. கீளெ ஊட்டுக்காரங்களுக்கும் தூக்கம். தெரு முளுக்க உறங்குது. சாணச் சத்தம் கூட கேக்கலெ. அப்பன்னா. காக்கா கத்தினதை நான் தானே கேட்டுக்கினே இருக்கேன். அப்ப நம்ம ஊட்டுக்கு விருந்தா ஹ்ஊம் ‘ நல்ல தமாசு ‘ நம்ம ஊடு பேசின்ப்ரிஜ்ஜாண்ட காவா ஓரமா அப்பன்னா எனக்கா விருந்து ‘ நல்ல தமாசுதான் போ. ‘இதையெல்லாம் நினைத்துக் கொண்டே அவர் எழுந்து உட்கார்ந்து சோம்பல் முறித்து வேட்டியைச் சரிப்படுத்திக் கொண்டு கண்ணைக் கசக்கி தெரு நீளம் முழுவதையும் வடக்காலும் தெற்காலும் பார்க்கிறார். நடமாட்டம் இல்லை.

தெற்கே தெரு மத்தியில் யாரோ நடந்து வருவது தெரிகிறது. சுற்றி முற்றி பார்த்துக் கொண்டு வருகிறார். தெருவுக்கு நடுவின் ஒரு சந்தின் முன் நின்று பலகையைப் பார்த்து விட்டு மீண்டும் நடந்து வருகிறார். கடை முன் வந்து விட்டார். பேட்டைக்குப் புது ஆசாமி போல் இருக்கிறது.‘மேஸ்த்ரி சந்துக்கு எப்படிப் போறது ? “மேஸ்த்ரி சந்தா ? “ஆமா, “ரொம்ப தொலைவு வந்திட்டியே. அது இந்தக் கோடிலெல்ல இருக்குது. “இல்லெ இந்தக் கோடிக்கு அப்பாலெ தான் இருக்காம். “இந்தக் கோடிக்கு அப்பாலென்னா–கொஞ்சம் இரு....ஆமா. இங்கியும் இருக்குது, ஆனா மேஸ்திரி சந்து ரண்டு இருக்குதே. அர்ணாஸல மேஸ்திரி சந்துன்னு ஒண்ணு இருக்கு. பெரியண்ண மேஸ்திரி சந்துன்னு ஒண்ணு. அதுவும் ரோடு தாண்டி மூலக் கொத்தலம் போறவளியிலெ போய் அப்பாலெ சின்மா தியேட்டர் தாண்டில்ல போகணும். “டி.ஏ.மேஸ்திரி சந்துன்னு சொன்னாங்க. “டி.ஏ.மேஸ்த்ரி சந்துன்னா இரு இரு தோப்பு அருணால மேஸ்த்ரி சந்தா ? “டி.ஏ.மேஸ்த்ரி சந்து. தோப்பு அர்ணாசல மேஸ்த்திரி சந்து. டி.ஏ. மேஸ்திரின்னா தோப்பு அர்ணாசல மேஸ்த்திரி சந்துன்னுதான் இருக்கணும். “ஆமா. அதேதான். “அதானே பாத்தேன். பெரியண்ண மேஸ்த்திரியில்லேன்னா தோப்பு அர்ணாசல மேஸ்த்ரி சந்தாதான் இருக்கோணும். “கிட்டத்தால் இருக்கா ? “ரொம்ப கிட்டவும் இல்லே. தொலைவும் இல்லே.நீங்க எங்கோ்ந்து வர்றீங்க ? “சைதாப்பேட்டையிலேருந்து. “பஸ்லே வறீங்களா ?

“ட்ரெய்ன்லே வந்தேன். “எலெட்டி ட்ரெய்ன்லே ? “ஆமா ‘ “பீச் டேஸன்லே எறங்கி வறீங்களா ? “ஆமா ‘ “அதான் இமாம் தொலைவு நடந்து வறீங்க. பீச் டேசன் எங்க இருக்கு ? தோப்பு அர்ணாசலமேஸ்த்திரி தெரு எங்க இருக்கு ? அட கடவுளே பஸ்லே வந்திருந்தீங்கன்னா இம்மாந் தொலைவு நடக்க வாணாமே.

சின்மாவைத்தாண்டி, லாண்ட்ரிக்கு முன்னால ஸ்டாப்பு இருக்கு. அங்க எறங்கினீன்னா அங்கோர்ந்து அஞ்சே நிமிசம். போயிருக்கலாமே “சைதாப்பேட்டையிலோர்ந்து நேரா பஸ் இல்லியே. “இல்லாட்டி என்னா ‘பீச் ஸ்டேசன்லே எறங்கினீல்ல. அங்கோர்ந்து ஒரு நிமிசம் நடந்தா கப்பல் ஆபீசு. அங்கோர்ந்து திருவொத்தியூரு, தண்டையார்பேட்டை, ராயபுரம் அல்லாத்துக்கும் பஸ் ஓடுதே. “நான் பீச் டேசன்லே வந்தப்ப ஒரு பஸ்ஸூம் வல்லியே. “இன்னா வல்லே. காலங்காத்தாலே எந்திரிச்சா டஜன் டஜனா பஸ் ஓடுது– “என்னமோ– நான் நடந்து வந்திட்டேன். இப்ப இப்படி நேரபோலாம்ல. “நேரப் போயி பீச்சக்கைப் பக்கம் திரும்பனும், அப்பாலே ஏழு கெணறு வரும். அப்பாலே சோத்துக் கைப்பக்கம் திரும்பனும்....அப்பால குறுக்காலே போனும்னா மாதா கோயில் தெருவிலே திரும்பி–நேர நடந்து அங்க ஒரு சைக்கிள் கடையிருக்கு.– அதுக்கு எதிரா பேரி கிஷ்டய்யா தெருவிலே நடந்துக்கினே போனா, ஒரு ரொட்டி கடை, அதுக்கப்பால் தம்மாத்தூண்டு ஒரு காளியம்மன் கோயிலு இருக்கு. பச்சை பெயிண்ட் அடிச்சிருப்பாங்க அத்தோட கம்பிக் கதவுக்கு. எதுக்கு சொல்றேன்னா அதுக்கு கொஞ்சம் தோலவிலே ஒரு புள்ளையார் கோயில் இருக்கு அதுக்குப் பக்கத்திலேயும் ஒரு சந்து இருக்குது. நீ அந்த சந்திலே பொக கூடாதுன்னு சொல்றேன். காளி கோயிலுக்குப் பக்கத்து சந்திலெதான் போவனும், அதுலே போயி ராயப்பன் சாமியார் தெருவுலெ போனே, நேரா தோப்பு அர்ணாசல மேஸ்த்ரி சந்துக்குள்ளார போயிடலாம்.

சாமியார் தெரு பாதிக்கு மேலே இருக்கறதுதான் தோப்பு அர்ணாசல மேஸ்த்ரி சந்து. அதை சாமியார் தெருவுன்னே சொல்லுவாங்க– “ரொம்பவும் சுத்தலா இருக்கும்போல் இருக்கே. “அதுக்கு என்ன செய்யிறதாம் குறுக்குப் பாதையா ஜல்தி போவோணும்னா இத்தான் –லெப்ட்டு ரைட்டெல்லாம். கவனமா வச்சிகினுபோவோணும். “நேர் ரோட்லே போனா ? “போலாம். இந்த மாதிரி ரண்டு தொலவாகும். இப்படியே ரோடுக்குப் போனா ஏழுகிணறாண்ட சைக்கிள் ரிக்ஷா நிற்கும். மூண் ரூபா கேப்பாங்க. “மூண் ரூபாயா ? “மூண் ரூபா கேப்பாங்க, நீ போய்க்கினே இரு. பின்னாலியே வண்டியைத் தள்ளிகினெ வருவான். ரண்டு ரூவாக்கு மேல தரமுடியாதப்பான்னு சொல்லு–ஏறு சாமிம்பான். “ரண்டு ரூவாயா ? “ரண்டு ரூவா தரக்கூடாதா ? சின்மாக்குப் போறதுக்கு முன்னாலெ ரண்டு ஏத்தம் வருது. மிதிச்சாக்காலுதான் ஒடயும். ரண்டு ஏத்தத்திலேயே அது அல்லாம் வேத்தே போயிரும். குறுக்குப் பாதையிலியும் போவாங்க. அது ரொம்ப பேஜாரு. சந்திலெ எருமை கட்டியிருப்பாங்க. எச்சிக்கலெ போட்டிருப்பாங்க. சாக்கடெ வெட்டி உட்ருப்பாங்க ஒடிச்சு ஒடிச்சு திருப்புவாங்க. லொங்கா லொங்கான்னு சாக்கடையிலே உயுந்து உயுந்து ஏறணும். முதுகு குந்துற பட்டையெல்லாம் இடிச்சு இடிச்சு நோவு கண்டு போகும். “சரி– எப்படியோ பாக்கறேன் வரேன்யா ரொம்ப தாங்க்ஸ். “அவ்ளோ தானா ? “– “சார் ‘ “என்னாய்யா ? “அவ்ளோதானா ? “என்ன ‘ “அவ்ளோதானான்றென். “அப்படான்னா ‘

“சொம்மா பேசாத போறியே ‘ “என்னய்யா சொல்றே நீயி ‘ “என்ன சொல்றேனா ‘ இம்மாந்தூரம் சொல்லியிருக்கேன் அல்லாம் தெரிஞ்சிக்கினு சொம்மா போயிக்கினேக்கிறியே ‘ “சும்மா போறன்னா ? “நான் சொன்னாத்தான் தெரியுமா உனக்கு ‘ காலங்கார்த்தாலெ சொம்மா குந்தியிருந்த ஆளைக் கூப்டு எல்லாம் கேட்டுக்கினே.

நானும் இம்மா நேரம் தொண்டை தண்ணி போகச் சொல்லிகினே இருந்தேன்… “தொண்டைத் தண்ணிபோகவா ‘ “ஆமா, நீ சொம்மா மேஸ்த்ரி சந்துன்னுதான் சொன்னே. தோப்பு அர்ணாசல மேஸ்த்ரி சந்துனு நானா உன்னெக்கேட்டுத் தெரிஞ்சுக்கினேன். வெளக்கமா போற பாதை சொன்னேன். இல்லாட்டி நீ எங்கெல்லாம் போயி கஷ்டப்பட்டிருப்பெ ‘ உன்னெ ரிக்சாக்காரன் இதோ இதோன்னு தண்டையார்பேட்டை ராயபுரம்லாம் சுத்தி இட்டுகினு போயி அஞ்சு ரூவா பறிச்சிருப்பானே. நான் ஒழுங்கா. கரெக்டா சொன்னேன். நீ அல்லாத்தியும் கேட்டுக்கினு பேசாம போறே ‘ எனக்கு நல்லா வேணும் ‘…‘காசு வேணுமா; “என்னா சார் அப்படி கேட்டுட்டே ‘ நான் பிச்சையா கேக்கறேன் ‘ “இது என்னவாம் ?…. “என்னா சார் நாலணா கொடுக்கிறே ‘ ஒரு சிங்கிலே நாப்பது பைசா. இப்பல்லாம். ரண்டு இட்லி அம்பது பைசா சார். டூர்ஷ்ட் பஸ்லெ அதோ பாருங்க இதோ பாருங்கன்னு கைகாட்டி கில்லாடிப் பையனுக்கெல்லாம் எனாமே ஆளுக்கு எட்டணா ஒரு ரூவான்னு கொடுக்கறாங்க–இன்னா சார் ‘ “உன்னோட பேசிக்கிட்டிருக்கிற நேரம் நான் மேஸ்த்ரி தெருக்கே போயிருக்கலாம் போல்ருக்கே. “எந்த மேஸ்த்ரி தெருக்கு சார் போயிருப்பே ? ‘

## பத்து செட்டி

பத்து செட்டி வாசலோடு போகிறார். ரொம்ப கஷ்டம். பழுத்துப் போன வேட்டி. தோளில் அழுக்குத் துண்டு. வெறுங்கால். தலையில் கட்டுக்குடுமி. முன் தலையில் அந்தக் காலத்துச் செட்டியார் மோஸ்தரில் ‘ப ‘ போல சவரம் செய்த தலை. ‘ப ‘வைச் சுற்றி கருகருவென்று கொஞ்சம் அலைபாய்கிற தலைமயிர். இப்போதெல்லாம் நாமம்கூட இல்லை. காலை, பகல், மாலை– எந்த வேளையிலும் நாமம் இல்லை. குளிக்கக்கூட அவருக்கு மனசு வரவில்லை–இல்லை, குளிப்பதையே அடியோடு மறந்துவிட்டாரா ? ஏற்கனவே அவர் மாநிறத்துக்கும் குறைந்த தவிட்டு அல்லது சாலைமண் நிறம். இப்போது குளிக்க மறந்ததாலோ என்னவோ, தோலுக்கு அசல் மண் நிறமே வந்துவிட்டது. வாசலோடு குறுக்கும் நெடுக்குமாக பொழுது விடிந்து சாய்கிற வரையில் நூறுதடவை நடக்கிறார். எதற்கு இப்படி குட்டி போட்ட பூனையாக அலைகிறார்.திண்ணையில் படிக்கிற நான் நிமிர்ந்து பார்ப்பேன். மெதுவாகச்சிரிப்பார்.‘இப்ப எந்த க்ளாசு ? “ஆறாவது. “நல்லாப் படி ‘ என்று உபதேசம் செய்து விட்டு நடப்பார்.அடுத்த வாரமும் அதே கேள்வி.‘இப்ப எந்த க்ளாசு ‘ “ஆறாவது ‘ “நல்லாப் படிக்கணும். ‘வாராவாரம் இதே கேள்வி. இதே பதில். இதே உபதேசம்.‘பாவம் ‘ என் அம்மா நிலைப்படியில் நின்றுகொண்டு.

அம்மாவைத் திரும்பிப் பார்த்தேன்.‘ஏம்மா ? “இப்படியும் வரணுமாடா இவனுக்கு ‘ இவன் அப்பா பாலுசெட்டி எப்படியிருந்தார் ‘ அவர் செத்துப் போனப்பறம் ரொம்ப கடனும் ஒடனுமா வந்து எல்லாம் போயிட்டுதடா. இவனுக்கே மூணு குழந்தை ஆயிடுத்து. இவன்

அக்கா மூணு பேரும் குறைப்பட்டுப் போயட்டாடா. எவ்வளவு ஜெரப்பா கலியாணம் பண்ணினார் தெரியுமோ அவளுக்கு பாலு செட்டியார் ‘ பாண்டு என்ன, கச்சேரி என்ன, நாலு குதிரை சாரட்டிலே ஊருகோலம். என்ன சாபமோ–மூணு மாப்பிள்ளையும் ஒத்தன் பின்னாலே ஒத்தனா எப்படித்தான் செத்துப் போனானோ. ஒத்தனுக்கு அம்மை போட்டித்து. ஒத்தனுக்கு டி.பி. இன்னொருத்தன் குளத்துலெ குளிக்கிறபோது படியிலே பாசி வழுக்கி முழுகிப் போயிட்டுது. இப்ப மூணு பொண்ணும் வீட்டோட இருக்கு. பத்துவுக்குக் கலியாணம் வேறெபண்ணி மூணு குழந்தை. எப்படித்தான் சாப்பிடறாளோ எல்லாரும் ‘ ‘கடை இந்த வருஷம்தான் இல்லை.

மளிகைக்கடை. வீட்டுக்கு வருகிற விருந்தினர்கள் எனக்குக் காலணா அரையணா என்று விடைபெறும்போது கொடுப்பார்கள். அந்தக் காலத்து வழக்கம். உடனே ஒரு ஓட்டம் பத்து செட்டி கடைக்கு.‘வாலைய்யரா– வா.த்ராட்சப் பழமா ‘ ‘கடையாட்களில் ஒருவன் உலர்ந்த த்ராட்சைப் பழத்தை எடுத்து வருவான்.‘ஏமிராதி ‘ முஸலிகொடுகா ‘ ஆ பண்டு இந்துராரா மஞ்கி பண்டுகா ஐவாருக்கு ‘ என்று பத்துசெட்டி ஒரு சத்தம் போடுவார்.அவன் உள்ளே போய் வேறு த்ராட்சைப் பழத்தைச் சின்னப் பொட்டணமாகக் கட்டித் தருவான். வழியில் பிரித்துப் பார்த்தால் கறுப்பாக பிசுக்கும் ஈர்க்குமாக ஒட்டி கட்டி தட்டின பழங்கள். பொல பொலவென்று அம்பர் நிறமாக இருந்த அந்தப் பழத்தை விட இது மஞ்சி பழமா ? ‘மஞ்சி ‘க்கு எனக்கு அர்த்தம் தெரியும். தெருக்குழாயில் அலம்பி எல்லாப் பழங்களையும் தின்றுவிட்டு வீட்டு வாசற்படி ஏறுகிற வழக்கம். பத்து ‘ப ‘ சவரத்துக்குக் கீழ் பளிச்சென்று வெள்ளை நாமமும், திருச்சூர்ணமும், பட்டுச் சட்டையும் சலவை வேட்டியுமாக உத்தரவு போடுவார். என்னை ஏன் ‘வாலய்யர் ‘ என்று அழைக்கிறார் என்று புரியாது. ஒரே ஒரு தடவை பெரிய சாக்கடை ஓரமாக நின்று எட்டிப் பார்த்த போது உள்ளே விழுந்து விட்டேன். அப்போது ஏழு வயது. முழங்கால் மட்டும் சாக்கடை நீர் ஓட்டம்.

பத்து செட்டியார் வீதியோடு போய்க் கொண்டிருந்தவர் நான் விழுவதையும் தலைகூடத் தெரியாத பள்ளத்தில் நின்று கிலி கொண்டு அழுவதையும் பார்த்து, என்னைத் தூக்கி வீட்டுக் கொண்டு விட்டு ‘விஷமக் கொடுக்கு, இனிமெ சாக்கடைப் பக்கம் போனெ ‘ என்று சிரித்து அதட்டி விட்டுப் போனார்.அதிலிருந்து நான் வாலய்யராகி விட்டேன்.இப்போது அந்தக் கடை இல்லை. பத்து போண்டி ஆகி விட்டாராம். அழுக்கு வேட்டி, வெறுங்கால்.நான் பள்ளிக்கூடம் முடிக்கிற வரையில் ‘இப்ப எந்த க்ளாசு ? ‘ என்று மாதத்திற்கு ஒரு தடவை கேட்பார். என்னவோ, மாசத்திற்கு ஒரு வகுப்பாக நம் பள்ளிக் கூடங்கள் மாணவர்களை உயர்த்துவது போல. ஒரே ஒரு வித்தியாசம் வாரத்துக்கு ஒரு தடவை போய் மாசத்துக்கு ஒரு முறை இரண்டு மாசத்துக்கு ஒரு முறையாகத் தேய்ந்து விட்டது. நான் கடைசி வருஷம் படிக்கிற போது, ஆளே வாசலில் தென்படவில்லை. அதே தெரு, ஒரு இருபது வீடு தள்ளி அவர் வீடு. இப்போதெல்லாம் வீட்டு வாசல் திண்ணையில் ஒரு குமாஸ்தா மேஜை முன் அமர்ந்து ஏதோ எழுதிக் கொண்டிருக்கிறார்.இண்டர் மீடியட், பி.ஏ. எல்லாம் படிக்கும் போது ஊருக்கு விடுமுறையில் வரும்போது கூட ஆளை அதிகமாகப் பார்க்க முடிவதில்லை.பி.ஏ. கடைசி

வருஷம் என நினைக்கிறேன். வாசலில் வழக்கம்போல எழுதிக் கொண்டிருக்கிறார் பத்து.அவர் அக்கா ஒரு நாள் வந்தாள். என் அம்மாவிடம் வந்து முறையிட்டாள்.

'ஐகாருகிட்ட சொல்லுங்கம்மா கொஞ்சம் விவூதி மந்திரிச்சுக் கொடுக்கச் சொல்லுங்களேன். ரொம்ப மோசமாய்ப் போச்சு இப்போ. இப்ப சரியா சாப்பிடறது கூட இல்லம்மா. 'என்னவாம் ?ஏழெட்டு வருடங்களாக, பத்து திண்ணையில் உட்கார்ந்து கணக்கெழுதிக் கொண்டிருக்கிறாராம். தினப்படி வரவு செலவு. பயறு கொள்முதல் ஆறாயிரம் ரூபாய் புளி முன்னூறு தூக்கு, எழுநூறு ரூபாய் முப்பது வண்டி அரிசி ஒம்பதாயிரத்து ஐந்நூறு ரூபாய். சூடம் நூறு ரூபாய், மிளகாய் வற்றல் முன்னூற்றைம்பது ரூபாய். ராமன் கோயில் கும்பாபிஷேகத்துக்கு கொடுத்தது. மூவாயிரம் ரூபாய். சோசப் ஹைஸ்கூல் பிள்ளைகளுக்கு உபகாரச் சம்பளம் ஆயிரத்து ஐந்நூறு. கும்பகோணம் தொழுநோய் ஆஸ்பத்திரிக்குக் கொடுத்தது பன்னீராயிரம்....இப்படியாக தினமும் கணக்கு எழுதுகிறாராம்.எல்லாம் ஆயிரக் கணக்கில் தான்.இப்போதெல்லாம் வரவு செலவு லட்சக்கணக்கில் ஏறிவிட்டது. சுதந்திர தின விழாவுக்கு நன்கொடை 2 லட்சம். கிருஷ்ணன் கோயில் பிரகாரம் புதுப்பிக்க மூன்று லட்சம். செலவுகள் இப்படி. வரவுகளோ பத்து லட்சக் கணக்கில் எல்லாம் மொத்த வியாபாரம். மிளகு, மிளகாய், மஞ்சள், நெல், சைக்கிள் பட்டுப்புடவை, பம்ப் செட்டு ரேடியோக்கள் என்று பல ஸ்தாபனங்களுக்கு பத்து செட்டி முதலாளியாம் கணக்குப் புத்தகத்தில்.

'நாள் முச்சூட்டும் இதே வேலைதான். சாப்பிடக் கூப்பிட்டாக்கூட, இருக்கா இன்னும் பதினைஞ்சு நிமிஷம் தான் இதமுடிச்சிட்டு வர்றேன். இதாங்க பதில். ரொம்பக் கலங்கிப் போச்சுங்க. மெட்ராஸ்ல ஆஸ்பத்திரியிலே கொண்டு சேர்க்கலாம்.......மெட்ராஸ் போக பணம் ?' அக்காவின் கண்களில் நீர் முட்டி வருகின்றது. தலைப்பால் துடைத்து, 'வெங்கடேசா–சீனுவாசா ' என்று புலம்புகிறாள். 'குணசீலமாவது கொண்டு போலாங்களா அது திருஷ்னாப்பள்ளிக்கிட்டங்கறாங்க, ரொம்ப தூரமில்லெ ?'அந்த அக்காள் ஒரு நோட்டைக் கூட எடுத்துக் காண்பித்தாள். புரட்டி புரட்டி பார்த்தோம். இருநூறு பக்கம் நோட்டு. அத்தனை பக்கத்திலும் கணக்கு மளிகை மண்டி. சைக்கிள் ஏஜென்சி, சிமெண்ட் ஏஜென்சி இப்படி இரண்டு டஜன் வியாபாரங்கள் ' இப்படியா ஒரு பித்துக்கு ஆசை பொங்கும் ' சிரித்துக் கொண்டே ஒவ்வொரு ஸ்தாபனக் கணக்காக எண்ணிப் பார்த்ததில், இருபத்தைந்து கோடிக்கு மேல் வரவு செலவுகள்.அப்பா சிரித்தார். விபூதி மந்திரித்துக் கொடுத்தார். முடிந்தால் குணசீலம் போகச் சொன்னார். ஐம்பது ரூபாய் கடனும் கொடுத்தார்.இது நடந்து முப்பது வருஷமாகி விட்டது.ஒருநாள் ஐநூறு ரூபாய்க்கு ஒரு செக்கும் கடிதமும்.'பத்து செட்டி என்ற பத்மநாப செட்டியார் ' என்று கையெழுத்திட்ட கடிதம்.பத்மநாப செட்டியார் ஹைஸ் கூலாம். அதில் ஆண்டு விழாவாம். 'நீங்கள் அவசியம் வந்து கலந்து கொள்ள வேண்டும்.

பயணச் செலவுக்கு நீங்கள் தொல்லைபடக் கூடாது என்று ஒரு சிறிய தொகைக்கு செக் இணைக்கப்பட்டிருக்கிறது. உங்களிடம் அவசியம் பேசவேண்டிய சங்கதிகளும் உள்ளன. 'என்ன இது 'அப்பாவும் அம்மாவும் இந்த உலகத்தை விட்டுப்போய் இருபது வருஷங்களாகி விட்டன. ஊரில் யாரும் உறவினர் இல்லை. என் விலாசம் எப்படி

இவருக்குத் தெரிந்ததாம் ?ரயில் ஏறிப்போனேன்.பத்துவின் வீட்டுக்குப் போனேன். அதே வீடு தான். அடையாளம் கண்டுபிடிக்க ஒரு நிமிஷம் ஆயிற்று. பழைய வீடு இல்லை. வலது, இடது வீடுகளையும் வாங்கி, பெரிய இரண்டு மாடி பங்களாவாகக்கட்டி விட்டாராம். பத்துவின் கணக்குப் பிள்ளை, மாடிக்கு அழைத்துப் போனார்.பழைய பத்து தான். அதே 'ப ' சவரம். தலையில் கொஞ்சம் நரை. நாமம். ஸ்ரீசூர்ணம். சில்க் ஜிப்பா, ஒரு 'சேட்டு ' மெத்தையில் இரட்டை நாடியாக உட்கார்ந்திருந்தார் பத்து. வயசு எழுபதுஇருக்கும் மனதுக்குள் கணக்குப் போட்டதில். ஆனால் தோற்றம் ஐம்பது ஐம்பத்தைந்து. என்ன வேடிக்கை "வாங்கோ–வாங்கோ ''என்று பெரிய குரலில் வரவேற்றார். பல் தேய்க்கச் சொன்னார். காப்பி வந்தது. வேலை குடும்பம் பற்றி எல்லாம் விசாரித்தார். முப்பது நிமிஷம் போயிற்று இப்படி. 'நீ போகலாம் 'என்று கணக்குப் பிள்ளைக்கு உத்தரவிட்டார். அவர் படியிறங்கினார்.பேசினார்.'லெட்டரும் செக்கும் பாத்து பைத்யம்னு நெனச்சிருப்பேள் 'என்று சிரித்தார்.என்ன இது ? சந்தேகமாகத்தான் இருந்தது. சில பேர் சில விஷயங்களில் மட்டும் ஒரு தினுசாக இருப்பதுண்டு. எங்கள் உறவினர்களில் ஒருவர் இப்படி இருந்தார்.

பெரிய வைத்தியர் நல்ல பெயர். நல்ல கைராசி–இத்யாதி. ஆனால் திடார் திடார் என்று அவருக்கு மைசூர் மகாராஜா தனக்குப் பெண் கொடுப்பதாக வாக்களித்திருப்பதாய் ஒரு நினைவு வரும். கலியாணம் ஒத்திப் போடப் பட்டிருப்பதாகவும் சில வித்வான்களின் சௌகரியத்தை உத்தேசித்தும், சில பந்தல்காரர்கள் 'ப்ரீ ' இருக்கிற தேதிகளை உத்தேசித்தும், இப்படி பேசிக் கொண்டே போவார். இப்படி அவரிடம் கல்யாணப் பேச்சைக் கிளப்பி ஓசி வைத்தியம் செய்து கொண்டவர்கள் நூற்றுக்கணக்கு.பத்து சொன்னார்.'உங்களை ஏன் குறிப்பா வரச் சொல்லி லெட்டர் போட்டேன் தெரியுமோ ? எனக்குப் பைத்தியப் பட்டம் கட்டி எங்க அக்கா குண சீலத்துக்கு என்னை அழைச்சிட்டுப் போறேன்னு புறப்பட்டா, உங்கப்பா விபூதி மந்திரிச்சு அம்பது ரூபா செலவுக்கும் குடுத்தார். ரயில்லெ திருஷ்னாப் பள்ளிக்குப் போனோம். பஸ் ஸ்டாண்டுலெ ஒரு நோட்டாசு பெரிசா போட்டிருந்தது. 'வாருங்கள் சாம்ராஜ்யத்தை அடையுங்கள். நோயில்லாத சாம்ராஜ்யத்தை அடையுங்கள். வறுமையில்லாத சாம்ராஜ்யத்தை அடையுங்கள். பணம் வீடு வசதிகள் எல்லாம் வற்றாமல் நிரம்பும் சாம்ராஜ்யத்தை அடையுங்கள். பூஜ்ய கில்பர்டு வழி காட்டுவார் 'னு போட்டிருந்தது. அதென்னடா வழின்னு குணசீலத்துக்கு நாளைக்குப் போலாம்னு அக்காட்ட புடிவாதம் புடிச்சு அந்தத் திடலுக்குப் போனேன். ஒரு வெள்ளைக்காரன் இங்கிலீஷ்ல கையை மேலே காமிச்சு, ஏதோ கூட்டத்துக்கு பேசிக் கொண்டிருந்தான். கூட்டம் முடிஞ்சப்புறம் இஷ்டப்பட்டவங்க நேரா வந்து அவரைச் சந்திக்கலாம்னு தர்ஜமா பண்றவன் சொன்னான். கூட்டம் முடிஞ்சப்புறம் அவர்கிட்ட போனோம்.

ஒரு கூடாரம் அடிச்சு தங்கியிருந்தான். அந்த வெள்ளைக்காரன். ஒருத்தர் ஒருத்தரா உள்ளே விட்டுக் கிட்டிருந்தாங்க. எங்க சான்ஸ் வந்தது. போனோம்.'உம் பேரென்ன ?'– கேட்டார் அந்த வெள்ளைக்காரர்.'பத்து செட்டி "அப்படின்னா '"பத்துன்னா டென் 'னுனு தர்ஜமா பன்றவன் இங்கிலீஷ்ல சொன்னான்.'ஓ ''என்று ஆச்சரியமா பார்த்தான். 'பத்து பத்தா. டென்டென் 'உம் பேரிலியே ரகசியம் இருக்கே. அதிலியே கர்த்தா ரகசியம்

வச்சிருக்காரே ‘ன்னு ரொம்ப ஆச்சரியப்பட்டாராம் வெள்ளைக்காரர்.என்னனு முழிச்சேன்.‘உங்கிட்டே பத்து அணா, பத்திலே ஒண்ணு சாமிக்கு அல்லது ஏழை, அல்லது நோயாளிங்களுக்கு கொடுக்கணும். பத்து ரூவான்னா, ஒரு ரூவா, பத்து சட்டைன்னா ஒரு சட்டை. பத்து வீடுன்னா ஒரு வீடு. பத்து மாங்கான்னா ஒரு மாங்கா. பத்து ஆப்பிள்னா ஒரு ஆப்பிள். பத்திலே ஒண்ணு கொடு. ஆயிரம் ஆயிரமாய் திரும்பி வரும். எடு சீக்கிரம். கர்த்தர் கையை ஏந்திக்கிட்டுருக்காரு. சீக்காளிங்களுக்குக் கொடுங்க. எடு சீக்கிரம்னாரு. கையை நீட்டினாரு எடுன்னு அக்காவை நிமிண்டினேன். யோசிச்சிக்கிட்டே நின்னா. நானே அவ தலைப்பு முடிச்சை அவிழ்த்துப் பார்த்தேன். நாப்பத்திரெண்டு ரூவா இருந்திச்சி கணக்குப் போட்டேன். நாலு ரூவாயையும் மூணரையணாவையும் எடுத்துக் கொடுத்தேன். நான் கணக்கா கொடுக்கறதைப் பார்த்து அந்த வெள்ளைக்காரன் சிரிச்சிக்கிட்டான் மெதுவா. வாங்கிக்கிட்டான். ஏந்து நின்னு ஆகாசத்தைப் பார்த்தான். கை ரெண்டையும் உயர்த்திக் கிட்டான். என்னமோ சொன்னான்.

என் தலையிலே கைவச்சுத் தடவினான். போன்னான். உனக்கு நாற்பத்து மூனரை லட்சம் வரும்கிறாரு. போங்கிறான் தர்ஜமா பண்றவன். ‘இன்னமே எது வந்தாலும் பத்துலெ ஒண்ணு ஏழைப்பட்டவங்களுக்கு, இல்லாதவங்களுக்கு கொடுத்திடணும், கொடுக்கறீங்களா ‘ன்னான்.‘ம். ரெடியா ‘ன்னேன்.‘சரி போங்க ‘ன்னான்.குணசீலம் போனோம். சாமி கும்பிட்டோம். திரும்பி வந்தோம். வந்த வழியிலெ திருஷ்ணாப் பள்ளியிலெ மறுபடியும் எறங்கினோம். சித்தரா கோவாலு செட்டின்னு எங்கப்பாருக்கு தூரத்து பந்துவாம். அங்க ஒரு நாள் தங்கி ஊர் சுத்திப் பார்த்துட்டுப் போவலாம்டான்னா, எனக்குத் தெரியும் ரொம்பப் பணக்காரனாச்சே, லட்சியம் பண்ணமாட்டான்னு சொன்னேன். லட்சியம் பண்ணாட்டி இருக்கவே இருக்கு ரயில்வே ஸ்டேஷன்னுசொன்னா அக்கா. போனோம் சாப்பாடு போட்டாங்க ‘ நிலைமையெல்லாம் கேட்டாரு. அவரும் ‘என்னை அவிசக் கோமுட்டின்னு நினைச்சீங்களா ? எங்கிட்ட ஒரு வார்த்தை சொல்லக் கூடாது ‘ன்னு வருத்தப்பட்டாரு. ஒரு ஐயாயிரத்தைக் கொடுத்துக் கூட ஒரு ஆளை அனுப்பிச்சாரு. கடையே மறுபடியும் இன்னொரு இடத்தில வச்சோம். அந்த ஆளு ஊருக்குப் போன உடனே பத்திலெ ஒண்ணு ஞாபகம் வந்தது. ஒரு ஐந்நூறை எடுத்துப் பள்ளிக் கூடத்துக்குக் கொடுத்தேன். அவ்வளவுதான் கடையிலே திமுதிமுன்னு கூட்டம் வாடிக்கையை சமாளிக்க முடியல. அன்னன்னிக்கு வர்றலாபத்துல பத்தில ஒண்ணு.

மறுநாள் காலம்பற எங்கியாவது போயிறும். இப்ப சிமெண்டு, உரம், பாலியஸ்டர் எல்லாத்துக்கும் எஜென்டு. அவன் சொன்னான் பொறு. இன்னயதேதிக்கு சொத்து வியாபார மெல்லாம் அவன் சொன்னாப்பலவே நாப்பத்து மூனரை லட்சம் மதிப்பு. நான் பைத்தியம்மாதிரி கணக்கு எழுதிக் கிட்டு இருந்தேன். தின்னையிலெ உட்கார்ந்துப்பா அக்கா. நான் நெசம்மாவே அப்பல்லாம் பெரிய பணக்காரன் முதலாளின்னு நெனப்போடவே நோட்டு நோட்டா எழுதி ஒரு தடவை பார்த்துட்டு சாமி கும்பிடுவேன். அப்புறம் தான் சாப்பிடுவேன். அதுதான் என்னை அந்த வெள்ளைக்காரன்கிட்ட தள்ளிக்கிட்டுப் போச்சு. நல்லாச் சொன்னான் அவன். பேர்லியே ரகசியம் இருக்குன்னு. அதுலேர்ந்து பத்து செட்டின்னே கையெழுத்துப் போடறது, உனக்கு அடையாளம்

புரியணும்னு தான் பத்துசெட்டிங்கிற பத்மநாப செட்டின்னு கையெழுத்து போட்டேன். உங்கப்பா ஐம்பது ரூவா கொடுத்ததை திருப்பிக் கொடுத்தேன். வேண்டான்னுட்டாரு அதுதான் இப்ப பத்து மடங்கா உனக்கு அனுப்பிச்சேன்.

உங்கப்பா பணம் கொடுக்காட்டி நான் எங்க திருஷ்ணாப்பள்ளிக்குப் போயிருக்கப் போறேன், இப்பவும் நான் நாலு லட்சத்து முப்பத்தைஞ்சாயிரம் இந்த நிமிஷம் தர்மமா தூக்கிக்கொடுக்கிறேன்னு வச்சுக்க நாலு கோடி முப்பத்தைஞ்சு லச்சமாச் சொத்து பெருகும். யார் மானேஜ் பண்றது ‘அதெல்ல கவனிக்கணும் ?“ட்ரீங் ‘மணிப்புத்தான் அமுக்கினார் பத்து.ஆள் வந்தான்.‘ரண்டு காபி “இப்பவும் என்னப் பாத்தா பைத்தியமாத் தோண்றதோ ‘‘பத்து கேட்கிறார்.‘பெரிய பைத்தியம் ‘ என்று சிரித்தேன்.‘நீ சொல்லுவேன்னு தெரியும். இப்ப பசங்கள்ளாம் என்ன கிளாஸ் படிக்கிறா ?‘

## நாதரட்சகர்

உப்பிலி வீட்டு வாசலில் கார் வந்து நிற்கிறது. கதவு திறக்கிறது. தட்டுச் சுற்று வேட்டி. சட்டை போடாத வெற்று உடம்பு. தோளில் சின்னச் சின்னக் கட்டம் போட்ட சிவப்பு காசித் துண்டு. தலையில் குடுமி. முன்பக்கம் சவரம் செய்யாது, பெண்பிள்ளை போல் நெற்றியிலிருந்தே வாரிச் சீவப்பட்ட தலை முடி. அதில் அங்கும் இங்கும் நரை. நெற்றியில் குங்குமம். குங்குமத்துக்குக் கீழ் துளி சந்தனப் பொருக்கு. வேர்வையில் கறுத்த பூணுல்.கையில் ஒரு பையோடு இறங்குகிறார். திண்ணைப் பக்கம் வருகிறார்.‘என்ன புரியலியா ?கோவிந்தன். “கோவிந்தனா ‘வா–வா, வா யாருடாப்பான்னு பார்த்தேன் “கார்ல வந்து இறங்கறானே. யார்றாது–சட்டை கூட இல்லாமன்னு பார்த்திருப்பேள் ‘இது சொந்தக்கார் இல்லே. “வா வா உட்காரு–உனக்கு எதுக்கு சொந்தக்காரு ?ஊர்லெ இருக்கற கார்லாம் உன்னுதுதான் “என்னுதுன்னு சொல்லாதீங்கோ–சங்கீத தேவதை யோடது–நாதப்பிரம்மத் தோடதுன்னு சொல்லுங்கோ “அப்படியே வச்சுக்கோ. நீ இல்லாட்டா கர்நாடக சங்கீதம் யாரு ஓசிலெ கேக்கப்போறா இந்தச் சீமையிலெ. அப்படியெல்லாம் இருக்கச்சே காரா ‘உனக்கு ஏரோப்ளேன், ஹெலிகாப்டர் இதெல்லாமனா குடுக்கணும் ‘கார் கிடக்கு “உப்பிலி அய்யங்கார் ஆயிரம் பரிகாசம் பண்ணட்டும், நான் அதுக்காக கோச்சுனுடப் போறதில்லே.

உங்களுக்கு ஞாபகம் இருக்கோ என்னவோ. இந்த ஊர்லெ தான் என் நாதோபாசனையை ஆரம்பிச்சுது. முதல் கையெழுத்து நீங்கதான் போட்டு பதினோரு ரூபா கொடுத்தேள். இப்ப இதோட முப்பது வருஷமாறது. உங்க கைராசி இப்படி வந்து விச்வரூபம் எடுத்திருக்கு ‘ என்று ஒரு உறையை நீட்டுகிறார் கோவிந்தன்.‘விச்வரூபம் எடுத்திருக்கா என்னது ?‘ என்று உப்பிலி மூக்குக் கண்ணாடியை மாட்டிக் கொண்டு கவரைப் பிரித்து அந்த அச்சடித்த அட்டையை வெளியே உருவிப் படிக்கிறார். பளபளவென்று அச்சடித்த அட்டை தங்க எழுத்தில் அச்சடித்த அட்டை.‘பலே பலே பலே பலே ‘ என்று கோவிந்தனை ஒரு தடவை நிமிர்ந்து பார்த்துவிட்டு மீண்டும் அழைப்பைப் படிக்கிறார் உப்பிலி.‘நாதரட்சகரா... ? பேஷ் பேஷ்... திருச்சியிலா நடக்கறது ?“ஆமாண்ணா ‘உப்பிலி படிக்கிறார் மீண்டும், கோவிந்தனின் சங்கீத சேவையைப் பாராட்டி ‘நாதரட்சகர் ‘ என்று அவருக்குப் பட்டம்

கொடுக்கிறார்களாம்.'யாரு ஏற்பாடு இதெல்லாம் ?' உப்பிலி.'எல்லாரும்தான் ''எல்லாரும்னா ?'நாதரட்சகர்னு, டைட்டில் கொடுக்கறதாப் போட்டிருக்கே. நாதத்தையே ரட்சிக்கிறவர்னா அர்த்தம்.

சங்கீத வித்வான்கள் ஏற்பாடு பண்ணியிருக்காளா ? சங்கீதம் கேக்கறவா ஏற்பாடு பண்ணியிருக்காளா ''ரண்டு பேரும்தான்னு வச்சுக் குங்களேன் ''சங்கீத வித்வான்லாம் ஒத்துண்டானா ?'நாதரட்சகரா பாடறவா நாங்க இருக்கோம்–அப்படி யிருக்கச்சே இவர் எப்படி ஐயா நாதரட்சகரா ஆவான் 'னு கேப்பான்களே ?'உப்பிலி சொன்னதைக் கேட்டு கோவிந்தன் மூக்கின் மேல் விரல் வைக்காத குறை–அப்படி ஆச்சரியப்பட்டான்.'இந்தப் பஞ்சாயத்து டவுன்லெ உட்கார்ந்துண்டு உலகத்தையே ஜயிக்கிறேளே. உங்களுக்கு எப்படி அப்படி சொல்லத் தெரிஞ்சுது ? பாப்பாக்குடி அய்யர்வாள் நீங்க சொல்றாப்பலயே கேட்டாராம். 'ஏய்யா ' ஆறுவயதிலேர்ந்து அசுரசாதகம் பண்ணி, குருகுலவாசம் பண்ணி, பண்ணி, பணிவிடைபண்ணி, வெசுவு கேட்டு, உதைவாங்கி, குட்டுப்பட்டு ஆயிரக்கணக்காக கச்சேரி பண்ணி ஆஸ்தான சமஸ்தான ஜமீன்கள்ளாம் வித்வானா இருக்கற நாங்கள்ளாம் நாதரட்சகாளா, ஆஞ்சனேய உற்சவம் பண்றேன், அருணகிரி உற்சவம் பண்றேன்னு ஊர் ஊரா வசூல் பண்ணி, சங்கீதக் காரனையெல்லாம் வரவழைச்சு பாடச் சொல்லி தேங்கா மூடியும் ஒத்தமாட்டு வண்டியும் ரண்டாம் க்ளாஸ் ரயில் சார்ஜஉம் கொடுக்கறவன் நாதரட்சகனா ? என்னய்யா பெரளியா இருக்கு 'ன்னு ஆரமிச்சாராம். இவரும் சும்மா விடலெ கேட்டுண்டு சும்மா இருக்கல. ''யாரு ?''அதாண்ணா, இந்த விழா ஏற்பாடு பண்ணியிருக்காரே பாலராமு எல்.ஐ.ஸி.லெ டாப் மேன்லெ ஒருத்தர், 'சர்த்தான்யா, பணம் வசூல் பண்ணி டிக்கட் அடிச்சு வித்து ஹால் கட்டி, மண்டபம் வச்சு, கச்சேரி வைக்காட்டா எந்த நாதம்யா தானே ரட்சிச்சுக்கப்போறது ?'ராஜராஜன் பெரிய கோவில் கட்டினான்னா, அவனா உளிவச்சு அடிப்பன் ? உண்டியல்னா வச்சிண்டிருப்பன், உண்டியல் இல்லேன்னா, கோயிலாவது, சில்பமாவது, ஸ்தபதியாவதுன்னு சொல்லி பிடிவாதமாநிக்க ஆரம்பிச்சுட்டார்...அவர் சும்மா போன் பண்ண வேண்டியதுதான், உடனே விளம்பரம் பக்கம் பக்கமா வந்து விழறது ''எதுக்கு ?''சிறப்பு மலருக்கு, ஸ உவனிர் ஒண்ணு போடறார் '.

ஓய் நீர்கொஞ்சமா உழைக்கலெய்யா சங்கீதத்துக்கு, சுவனீர்லெ, இன்னும் வசூல்லெ வர பணம் எல்லாத்தையும் உம்மபேர்லெ பாங்கிலே பிக்சட்டெபாசிட்லெ போட்டுடப்போறேன். நீர் சாப்பாட்டுக்குன்னு யார் கிட்டவும் நிக்காம இருக்கணுமோல்லியோன்னார் பாலராமு.அடாடா அப்படியெல்லாம் என்னை எம்பாரஸ் பண்ணாதிங்கோ. அத்தனை பணத்தையும், ஏழைக் குழந்தைகளுக்கு சங்கீதம் சொல்லிக் கொடுக்கறதுக்குன்னு ஒதுக்கணும்னு சொல்லிட்டேன். ''தர்மம் வீட்லெதான்யா ஆரமிக்கும். அப்படி இங்கிலீஸ்லெ சொல்ற வழக்கம் ' உப்பிலி.'எனக்கு என்ன புள்ளையா குட்டியா ? கல்யாணமா கார்த்தியா ' ஒண்டிக்கட்டை. எங்கம்மாக் காரியைக் கரையேற்றிப்புட்டேன்னா தெருதான் வீடு, ஊரெல்லாம் குடும்பம். ''உனக்கென்னய்யா குறை ? சங்கீதக் காரனல்லாம் உள்ளங்கையிலெ வச்சுண்டு தாங்குவான் போ. ''நான் வரேண்ணா. எனக்கு ஆப்தமா அந்தரங்கமா இருக்கற அஞ்சாறுபேர் உண்டு.

அவாளை நேரப் போய் அழைக்காட்டா நன்னிகெட்ட ஜன்மமாப் போயிடுவேன். ‘நன்னிதாண்டா முக்கியம். அதுதான் சோறு போடும். போய் நேர அழச்சுட்டுவா ‘ன்னு பால ராமு கார் கொடுத்தார். அவர்கார் தான் இது. நான் வரேண்ணா. ‘உப்பிலியின் காபி, வெந்நீர் உபசாரத்தை ஏற்றுக் கொள்ளக்கூட அவனுக்குப் போது இல்லை. கார் கிளம்பி விட்டது.‘பார்த்தீரா உலகம் போற போக்கை ? பாப்பாக்குடி அய்யர் ஏன் சொல்லமாட்டார் ? இவன் நாதத்தை ரட்சிக்கிறானாம். அதுக்கு எல்.ஐ.ஸிக்காரன் ஒருத்தன் பெரிய புள்ளியாம். அவன் பதிலடி கொடுத்தானாம். இந்த கோவிந்தனோட அப்பா பஞ்சாங்கக்காரன். இதுக்குப் படிப்பு வெல்லெ. பஞ்சாங்கம் பண்ணி வைக்க சொல்லிக்கொடுத்தான் தகப்பன். எங்கியோ ஒரு நாளைக்கு இவன் மதுரைப் பக்கம் போயிருந்தானாம் முப்பது வருஷம் முன்னாலெ. அப்ப சின்ன வயசு. பதினெட்டு பத்தொன்பது வயசு இருக்கும். ரயில்லே போறபோது யாரோ ஆபீசர் கூட பிரயாணம் பண்ணிண்டிருந்தானாம். விசாரிச்சதில தூரத்து உறவுன்னு தெரிஞ்சுண்டானாம். பூவாளூர் சந்தையில பொட்டியும் பொட்டியும் இடிச்சுண்டுதாம். அந்த மாதிரி ஏதோ உறவு.

நாமல்லாம் தியாகப்பிரம்மத்தோட சம்சாரம் இருந்தாளே–அந்த வம்சத்தை சேர்ந்தவா. அப்படியிருக்கச்சே கண்டவனுக்கெல்லாம் போய் பஞ்சாங்கம் பண்ணி வச்சு அரிசியும் வாழைக்காயும் வாங்கிண்டு நீசப் பொழுப்பு பொழைக்கலாமான்னு ஆதங்கப்பட்டாராம் அவர். புள்ளையாண்டான் திரும்பி வந்தான். அப்பா எத்தனைசொல்லியும் கேக்கலெ. அனுமார் கோயிலுக்கு உத்ஸவம் பண்றேன்னு ஆரம்பிச்சான். எங்கிட்டதான் வந்தான். முசிரி, செம்மங்குடி, ஜிஎன்பி எல்லாரையும் கொண்டு வரேனா இல்லியா பாருங்கோன்னு. உங்க கையாலெமுதல்லே கொடுங்கோ. சோழகர் நாட்டார் எல்லாரும் உங்க கைராசியைப் பத்தித்தான் சொல்றா சொல்றா அப்படிச் சொல்றான்னான். முசிறி பேரு, சித்தூர் பேரு எல்லாம் சொல்லி என்னை இளக்கிட்டான். சரிடான்னு பதினோரு ரூபா போட்டேன். முதக் கையெழுத்து நம்முது. அதைத்தான் பெரிசாச் சொல்லிக்கிறான். அன்னிக்கி ஆரம்பிச்சவன் ஓயலே. ராதா கல்யாணம்னு வசூல் பண்ணுவன். மூட்டை மூட்டையாய் அரிசி வரும். கச்சேரி, சாப்பாடுன்னு அமர்க்களம் பண்ணுவன். மிச்சம் இருக்கிற தெல்லாம் வீட்டுக்குப் போயிடும். உடனே அருணகிரி உற்சவம்பான். அதுக்குத் தனியா வசூல் பண்ணுவான். இப்படிக் கும்மாணத்திலே ஒரு வீடும், திருச்சிறாப்பள்ளியிலே ஒருவீடும் வாங்கிட்டான்.

முன்னெல்லாம் கோவிந்து கோவிந்துன்னு பெரிய வித்வான்லாம் கூப்பிடுவா. இப்ப என்னமோ குருஜியாம். குருஜீ குருஜீன்னு கூப்பிடறான். பெரிய பெரிய வித்வான்லாம் கூட. என்னன்னே புரியலெ. ஒரு நாளைக்கு ஒரு இடத்திலே இருக்கமாட்டான். எங்கெங்கெல்லாம் திருவிழா உத்சவமோ அதுக்கெல்லாம் அழைப்பும், பங்களூர், மைசூர், திருவனந்தபுரம், விஜயவாடா, ஹைதராபாத்துன்னு கல்கத்தா, பம்பாய் போன்ற இடத்திலெல்லாம் வித்வான்களோட படுக்கை சாப்பாடு. ‘இந்த சமயத்தில் தான் உப்பிலியின் அண்ணன் மகன் சீமாண்டி வந்தான்–வாயில் வெற்றிலை சீவல் அரையல்.‘யாரு சித்தப்பா கோவிந்து மாதிரி இருந்ததே ?கார்லியா வந்திருந்தான் ? ‘‘ஆமாண்டா கோவிந்துதான். அவன் சங்கீத சேவை முப்பது வருஷமாப் பண்றானாம்.

அதுக்காக நாதரட்சகன்னு டைட்டில் கொடுக்கப் போறாளாம் திருச்சியிலெ. "என்னது ? "நாதரட்சகன். "தேவலியே ' "நீங்களும் வரணும்னு என்னைக் கூப்பிட வந்தான். நான் தான் முதமுதல்லெ பதினொரு ரூபா போட்டேனாம் முப்பது வருஷம் முன்னாலெ. அவன் அனுமார் கோயில் உத்சவம் ஆரம்பிச்ச போது..அதை நினைச்சிண்டு காரை எடுத்துண்டு ஓடி வந்திருக்கான். "ச்சு...ச்சு...ச்சு... "என்ன உச்சுக்கொட்றே ? "உன் சிண்டிலயும் பூச்சுத்த வரான் பாரு ஒத்தன்....'என்ன பூ சுத்திட்டான் என் சிண்டுலே "இதே கார்ல தான் நேத்திக்கி கடைத் தெருவிலெ கோபால்சாமி கடைலெ சொல்லிண்டிருந்தான். அவர்தான் முதமுதல்லெ பத்து ரூபா போட்டாராம். போனவாரமும் வந்திருந்தான்.

சாலியத்தெருவுக்கு. சீது செட்டியார்கிட்டதான். நீங்கதான் முதமுதல்லே கையெழுத்துப் போட்டேள்னு நானூறு ரூபா ஒரு பக்கத்துக்குன்னு அட்வர்டைஸ்மெண்ட் வாங்கிண்டு போனான். உங்கிட்ட ஏதாவது வாங்கிண்டு போனானா டொனேஷன்னு ? "எங்கிட்ட ஏண்டா வரான் ? நான் என்ன மொத்த மளிகைக் கடையா வச்சிருக்கேன் ? இல்லெ நூறு தறி வெச்சிருக்கேனா ? நெஜம்மாவே எங்கிட்ட தான் முதமுதல்லெ பதினொரு ரூபா வாங்கிண்டு ஆஞ்சனேய உற்சவம் ஆரம்பிச்சான் அந்தக் காலத்திலெ. "நீ வெறுமனே கேட்டா குடுப்பியா ? நாளைக்கு தாசில்தார் இல்லாட்டா சப் கலெக்டர்டேர்ந்து லெட்டர் வரும்பாரு. ஒருகமிட்டி போட்டிருக்கா இந்த விழாவுக்கு. "சப் கலெக்டர் டேர்ந்து சிபாரிசுக் கடுதாசி வரும். எங்க கிட்ட இரு நூறு முந்நூறுன்னு ரூபா பிடுங்கிண்டு போப்போறா– அவ்வளவுதானே ? உனக்கு சந்தோஷமா இருக்கும். சித்தப்பா கஷ்டப்படணும். நீ சந்தோஷப்படணும் இல்லியா ? எங்கண்ணாவுக்குன்னு வந்து புள்ளையா பொறந்தியேப்பா. 'இப்போது உப்பிலி முகம்சிவக்கவில்லை. தம் தமையனின் புத்ர சம்பத்தை நினைத்து வருந்தி அவர் உடம்பு உள்ளே எழுந்து போயிற்று.

## சாப்பாடு போட்டு நாற்பது ரூபாய்

'மணியார்டரா ' எனக்கா ' "ஆமா ஸ்வாமி ' உங்களுக்கேதான் ' "உத்ராபதி, உனக்கு வயசு நாப்பதாயிருக்கும், சாளேசரம் போட்டுக்கற வயசு ' நல்லா பாத்துச் சொல்லு. நான் வாணா கண்ணாடி தரட்டுமா ? ' என்று துருப்பிடித்த வினோலியா ரோஸ் சோப் பெட்டியைத் திறந்து, வெற்றிலைக்கும் வெட்டுப் பாக்குக்கும் மேல் படுத்துக் கொண்டிருந்த மூக்குக் கண்ணாடியைத் தொட்டார் முத்து.'கண்ணாடியும் வாணாம், சீப்பும் வாணாம். உங்களுக்குத்தான் வந்திருக்கு. நீங்களே அந்தக் கண்ணாடியை மாட்டிக்கிட்டுப் பாருங்க...எம். சாம்பமூர்த்தி யாரு ? "அக்கணாக்குட்டியா ? நம்ம புள்ளையா ? இப்ப மெட்ராஸிலேயா இருக்கு அது ? 'முத்து அவசர அவசரமாக மூக்குக் கண்ணாடியை எடுத்து மாட்டி, இடது காதில் நூலைச் சுற்றிக் கொண்டார்.'ஆமா, வேலைக்குப் போயிட்டானே அக்கணாக்குட்டி ஒரு மாசத்துக்கு முன்னால, உனக்குத் தெரியாது ? "தெரியாதே. எங்க வேலையோ ? ' என்று மணியார்டர் பாரத்தில் இரண்டு இடத்தில் இண்ட்டு போட்டுக் கொடுத்தார் உத்ராபதி. கையெழுத்தானதும் அடிக் கடிதத்தைக் கிழித்து முப்பதொன்பது ரூபாய்க்கு நோட்டும் ஒரு ரூபாய்க்கு சில்லறையுமாகப் பையிலிருந்து எடுத்து நீட்டினார்.'

சில்லறையும் மாத்திப்பட்டு நாற்பது ரூபாயைக் கொடுப்பானேன் ? அரை ருபாயைக் குறைச்சுண்டு கொடுக்கப் படாதோ ? ' என்று அரை ரூபாயை நீட்டினார் முத்து.'நாலணாப் போதும் சாமி. உங்ககிட்ட அதுக்கு மேலே வாங்கறது பாவம் ' என்று பாதியைத் திரும்பிக் கொடுத்து விட்டார் உத்ராபதி.'முதல் சம்பளம் வாங்கி அனுப்பிச்சிருக்கான் அக்கணாக்குட்டி. எட்டணாவாத்தான் இருக்கட்டுமேன்னு நினைச்சேன் ' என்று நாலணாவைத் திரும்பி வாங்கிக் கொண்டார் முத்து.'பிறத்தியார் பணம் அனுப்பிச்சா, ரண்டுகையாலும் வீசி வீசி தருமம் பண்ணுவாங்க சாமி ' என்று சொல்லிக் கொண்டே குறட்டில் இறங்கி வந்தாள் அவர் மனைவி.'ஏழைக்குதாம்மா தெரியும் ஏழை கஷ்டம். நீங்க சொல்றீங்களே, மாசம் நானூறு ரூபா அனுப்பறாரு ரட்டைத் தெரு மகாலிங்கய்யரு மகன், மிலிட்டரியிலே கர்னலா இருக்குறாராமே. மகாலிங்கய்யரு அப்படியே வாங்கிட்டு குந்தினாப்பல உள்ளே போயிடுவாரு. ஒரு பத்துகாசு டாத்தண்ணிக்கு ? மூச்சுப் பிரியப்படாது... முகத்தைப் பார்த்தாத்தானே ?... அக்கணாக்குட்டி என்ன வேலையாயிருக்கு ? ''என்ன வேலையோ ? நம்ம எம். கே. ஆர். கிட்ட போய் புலம்பினேன் ஒரு நாளைக்கு, நம்ம பையனுக்கு ஒரு வழி பண்ணப்படாதா செட்டியார்வாள் ' இப்படி உதவாக்கரையாத் திரியறானேன்னு நின்னேன். ஒரு மாசம் கழிச்சு சொல்லியனுப்பிச்சார். போனேன். உம்ம பையனை அனுப்புரீராய்யா மெட்ராஸஉக்கு ? ஒரு பெரியமனுஷன் வீட்டிலே கூடமாட ஒத்தாசையா இருக்கணுமாம். ஒரு பையன் இருந்தாத் தேவலைன்னு சொல்றாங்க.

பெரிய இடம், புள்ளீங்க பள்ளிக்கூடத்துக்குப் போகும். கொண்டு விடணும், கடை கண்ணிக்குப் போகணும். இப்படி சில்லரை வேலையா இருக்கும் போலிருக்கு. நல்லா கவனிச்சிப்பாங்க. வீட்டோடு சாப்பாடு போட்டு வைச்சிப்பாங்கன்னார் எம். கே. ஆர்.'அனுப்புறீமான்னு கேக்கணுமா ? நான்தான் கஞ்சிவரதப்பான்னு தவிச்சுண்டு கிடக்கேன். இன்னிக்கே அனுப்பிக்கறேன்னேன். நாலு நாக்கழிச்சு அவர் காரியஸ்தர் மெட்ராஸ் போனார். அக்கணாக்குட்டியை அழச்சிண்டு போயிட்டார். சரியா ஒண்ணரை மாசம் ஆச்சு. பணம் வந்திருக்கு. ''என்னமோ சாமி கண்ணைத் திறந்தாரு. நீங்க முன்னாலே, இந்த மூக்கு கண்ணாடிக்கு அந்த நூலை எடுத்திட்டு ஒரு காது வாங்கிப் போடுங்க. அப்புறம் ஒரு உறையிலே போட்டு வச்சுக்குங்க. இப்படியே சீவல் மேலேயும் பாங்கு மேலேயும் வச்சிட்டிருந்தா பழங்கோலி மாதிரி கீறல் விளாம என்ன பண்ணுமாம் ' ' என்று சொல்லிக்கொண்டே உத்திராபதி நகர்ந்தார்.சம்சாரம் முத்துவைப் பார்த்தாள்.'இப்படிக் கொடுத்திட்டு நேரே உள்ள வரட்டும். பற மோளம் மாதிரி ஊரெல்லாம் போய் தம்பட்டம் கொட்டிண்டு நிக்கவேண்டாம் ' என்று பல்லோடு பல்லாகச் சொல்லி வெற்றிலைப் பெட்டி மேலிருந்த நோட்டுகளை பெட்டிக்குள் போட்டு மூடி, பெட்டியையும் எடுத்துக் கொண்டு உள்ளே போனாள்.வெற்றிலைப் பெட்டி கையை விட்டுப் போனதும் கூடவே விரைந்தார் முத்து. அவர் உள்ளே வந்ததும் கதவைத் தாழிட்டாள் சம்சாரம்.முத்து தோளிலிருந்த மூன்று முழம் ஈரிழையை இடுப்பில் கட்டி, அவள் கையிலிருந்த பெட்டியை வாங்கித் திறந்து நோட்டுகளை எடுத்து, பறையிலிருந்த பரமேச்வரனின் படத்தின் அடியில் வைத்து, நெடுங்கிடையாக விழுந்து மூன்று தடவை நமஸ்காரம் செய்தார்.'ஏன் நிக்கறே ' நீயும் பண்ணேன் ' ''எல்லாம் பண்றேன் ' என்றுதான் அவள் வழக்கமாகச் சொல்லிவிட்டு

நின்றிருப்பாள். ஆனால் மனசு பாகாகிக் கிடந்ததால் அவரே சம்பாதித்து விட்டாற்போல, பதில் பேசாமல் கீழே குனிந்து மூன்று முறை வணங்கி எழுந்தாள்.

அவளுக்கு, அந்தக் காலத்து முத்துவின் ஞாபகம் வந்தது. ஏழு வருடங்களுக்கு முன்னால் முத்து இப்படிக் கிழம் சென்று போகவில்லை. மயிர் கருகருவென்றிருக்கும், அள்ளிக்கட்ட வேண்டிய கூந்தலாக இருக்கும். மூக்கிலிருந்து இரண்டு கோடுகள் இந்த மாதிரி விழவில்லை. மார்பும் இரு பிளவாக அடித்தென்னை மட்டை மாதிரி வைரமாக இருக்கும். இப்படிச் சரியவில்லை. தோள்பட்டை இப்படிச் சூம்பவும் இல்லை. ஆடு சதை, துடைச் சதை எல்லாம் இப்படி கழளவுமில்லை. அப்போது வெற்றிலைப் பெட்டி பித்தளைப் பெட்டி. இப்பொழுது குப்பைத் தொட்டிபோல ஒரு வயதானத் தகரப் பெட்டி. அப்பொழுது வெள்ளிச் சுண்ணாம்புக் கரண்டான். இப்பொழுது பிரம்மோத்சவத்தில் தெருவோரக் கடைப்பரப்பில் வாங்கின தகரக் குழாய். அதுவும் துரு. கழுத்துக் குழியை தங்க ருத்ராட்சக் கொட்டை மறைத்ததுபோய், இப்பொழுது குழிதான் தெரிகிறது. மேனிபோய், தெம்பு போய் கங்காளி மாதிரி நிற்கறதைப் பார்த்துதான் 'ரண்டாம் தாரமாம்மா ' ' என்று போன வருஷம் அமர்த்தின புதுத் தயிர்க்காரி கேட்டாள் போலிருக்கிறது. இப்படியா விசுக்கென்று இந்த பிராமணன் கிழண்டு போகும் ' மருந்துக்குக்கூட மயிரில் கறுப்பில்லாமல், கூந்தல் கொட்டைப் பாக்காகி....பல் விழவில்லை, ஆனால் கோணவும் பழுப்பேறவும் ஆரம்பித்து விட்டது.ஆனால் இது ஒன்றும் அவள் கண்ணை இந்தக் கணம் உறுத்தவில்லை.

'என்ன இருந்தாலும் இதுக்கு இருக்கிற சாமர்த்தியம் சாமர்த்தியம்தான் ' என்று உவந்தாள்.அவளுக்குச் சற்று சிரிப்பாகக்கூட இருந்தது. நம் பிள்ளையைப் பார்த்து நாற்பது ரூபாய் சம்பளம் போட்டு சாப்பாடும் போடத் தோன்றிற்றே ஒருவனுக்கு ' இந்த உலகத்தில் எத்தனை அசடுகள் இருக்கமுடியும் 'இல்லை....அண்ணாக்குட்டி நிஜமாகவே சமர்த்துதானோ ' நமக்கு ஒரு பிள்ளை. செல்லப்பிள்ளை. அசட்டுத்தனமேதான் கண்ணில்பட்டது. வெளியே போனதும் மறைந்திருந்த சமர்த்து வெளி வந்துவிட்டதோ என்னவோ.....இல்லை....பணத்தையே தின்று, பணத்தையே உடுத்தி, பணத்திலேயே படுத்துப் புரளுகிற கொழுப்பு ஜன்மங்களால் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் சாப்பாடு போட்டு, துணிமணி வாங்கிக் கொடுத்து நாற்பது ரூபாய் கொடுக்கவாவது '...கொழுப்போ டம்பமோ, மனது நல்ல மனது. இந்தப் பாச்சைக்கு, பேச்சைக்காலும் பேச்சைக்கையும் கொன்னல் பேச்சுமாக இது கிடக்கிற லட்சணத்துக்கு இப்படி ஆதரிக்க வேண்டும் என்று தோன்றிற்றே.'தட்சிணாமூர்த்தே, வைதீச்வரா, லோகமாதா ' நீங்கள்ளாம்தான் காப்பாத்தணும் ' என்று பயந்துபோய் நின்றாள் அவள்.'சரி, காவேரியிலே போய் ஸானம் பண்ணிட்டு வந்துடறேன்...சில்லறை ஏதாவது கொடேன். கீரைத்தண்டு பாற்காய்னு ஏதாவது வாய்ண்டுவரேன் ' என்று முடுக்கினார் முத்து. 'இன்னிக்கு கூடவா வத்தக் குழம்பும் சுட்ட அப்பளமும் ? ', என்று சொல்லாமல் பிணங்குகிற முறுக்கு அது. நாலணாவை எடுத்துக் கொடுத்தாள். கன்னத்தில் அவளை செல்லமாக நிமிண்டிவிட்டு அவர் வெளியே போகிறார்.

பணம் வந்தால் இந்த நிமிண்டல், குழையல் எல்லாம் இரண்டு பேருக்கும் சகஜம்.அவர் குளிக்கப் போனது நடந்து போகிற மாதிரி இல்லை. குதி போடுகிறது போலிருந்தது. அவனை – அதை, ரூபாய் அனுப்பும்படி யாரும் சொல்லவில்லை. அது அது வேலை

என்று போனால் போதும் என்றிருந்தது. அது போய் நாற்பது ரூபாய் அனுப்பவாவது ‘‘நீ உருப்படமாட்டே, நீ உருப்படவே மாட்டே ‘என்று அவனைச் சபித்ததெல்லாம் நினைவுக்கு வந்தது, வயிற்றில் பிறந்த பிள்ளையை இப்படியா சபிப்பார்கள் ‘நம்ம புத்தி இவ்வளவு கட்டையாக ஏன் போயிற்று ? இப்பொழுது பணத்தை அனுப்பி நம்ம புத்தியில் கரியை பூசிவிட்டதே ‘இந்தப் பிள்ளை ‘அக்கணாக்குட்டி, இனி மேல் உன்னை அதட்டக் கூடமாட்டேண்டா என்று தன்னைத் திட்டிக்கொண்டு நடந்தார் முத்து ஒரு பிள்ளை ‘பிள்ளைகளெல்லாம் தாயையும் தகப்பனையும் கொள்ளாமல் பாட்டனையும் பாட்டியையும் கொள்ளுமாமே, –அதுபோல் அக்கணாக்குட்டியைப் பற்றிய வரையில் மெய்தான். அவன் முத்துவின் மாமாவைக் கொண்டு விட்டான். முத்துவைக் கொண்டிருந்தால் அண்டா, தவலைகளை அலட்சியமாக உருட்டுகிற வலுவு வந்திருக்கும். ஆயிரம் பேருக்கானாலும் ஒரு கல் உப்போ, புளியோ ஏறாமல் குறையாமல் சமைத்துப் போடுகிற நளபாகம் கை வந்திருக்கும். முத்துவின் சம்சாரத்தைக் கொண்டிருந்தால் பார்க்கவாவது லட்சணமாக வளர்ந்திருக்கலாம்.

மீனாட்சி லட்சணம் தான். சமையற்கார முத்து பெண்டாட்டி என்று யார் சொல்ல முடியும் ? நூத்தம்பது வேலி பண்ணைவீட்டு எஜமானி எண்ணெய் ஸ்நானத்துக்காக நகைநட்டுகளைக் கழற்றி வைத்தாற் போலிருக்கும் .....ஸ்நானம் செய்துவிட்டுத் திரும்பி உள்ளே நுழைந்த கையோடு ஈர வேட்டியோடேயே அவளை அப்படியே அம்மென்று திணறத் திணறக் கட்டிக் கொள்ள வேண்டும். ம்க்கும்...ம்க்கும் இதுவேறயாக்கும் என்று சொன்னாலும் சொல்லுவாள். கட்டிண்டு தொலை என்று சொல்வது போல மரம் மாதிரி நின்றாலும் நிற்பாள். அவளுக்குப் பிறந்த பிள்ளை அந்த மாதிரி மூக்கும் முழியுமா இருக்கக் கூடாதோ ? மூக்கில் வற்றாத ஜலதோஷம். ஹ் ஹ் என்று நிமிஷத்துக்கு ஒரு உறிஞ்சல். முட்டிக்கால், முட்டிக் கை. குதிகால் கீழே படாமல் இரண்டு குதியிலும் முள்குத்தினாற் போன்ற விந்து நடை, வாயைச் சற்று திறந்தாலே ஓட்டுக் கூரை மாதிரி பல் வரிசை – வரிசை இல்லை கோணல் – ஓடு மாற்றி நாலு வருடமானாற் போல. அந்த பல்லுக்கு ஏற்ற சொல், எச்சிலில் குளித்துக் குளித்து வரும் ஒவ்வொரு பேச்சும். எப்ப வந்தேல் மாமா சேக்யமா ? நாலானன் சேக்யமார்க்கானா, (நாலானன் என்றால் நாராயணன்) செலுப்பு பிஞ்சு போச்சுப்பா இன்னிக்கி காவேரி ரண்டால் ஆலம்.... வயசு பதினைந்து முடிந்தும் இதே பேச்சுதான். படிப்பு வரவில்லை. எலிமெண்டரிக்கு மேல் ஏறவில்லை. ஐந்து வருஷம் வீட்டோடு கிடந்ததும் போன வருஷம் ஒரு மளிகைக் கடையில் இழுத்துவிட்டார். அங்கே ஒரு நாள் எண்ணெயைக் கொட்டி ரகளை. வேலை போய்விட்டது.

சைக்கிள் பழுது பார்க்கிற கடையில் கொண்டுவிட்டார். நாலு நாளைக்குப் போய்விட்டு வந்து ஜஉரமாகப் படுத்துக் கொண்டு விட்டது. நான் மாட்டேன்; சைக்கிலுக்குப் பம்பு அடிக்கச் சொல்றான். கண்டு கண்டா மார் வலிக்குது. நான் மாட்டேன் போ என்று திண்ணையிலேயே உட்கார்ந்து விட்டது. முத்து அலையாத இடமில்லை. பையனை அழைத்துக் கொண்டு வர்ச் சொல்லுவார்கள். போவார், பையனைப் பார்த்ததும் சொல்லியனுப்புகிறேன் என்று அனுப்பி விடுவார்கள். விறகு கடையில்கூட வேலைக்கு

வைத்துப் பார்த்தாயிற்று. ஒரு கட்டையைத் தூக்க நூறு முக்கல். தினமும் நகத்திலும் விரல் இடுக்கிலும் சிலாம்பு. வீட்டுக்கு வந்து போகமாட்டேன் என்று அடம். நீ உருப்படவே மாட்டே என்று அப்பா அம்மா பாட்டு ‘ ஒன்றையும் காதில் போட்டுக் கொள்ளவே மாட்டான் அவன். பேசாமல் போய் திண்ணையில் உட்கார்ந்து வாசலில் போகிற வெள்ளாட்டையும் குட்டியையும் முக்கை உறிஞ்சி உறிஞ்சிப் பார்த்துக் கொண்டிருப்பான். இல்லாவிட்டால் வீட்டுக்கார வாத்தியார் பெண்ணோடு ‘நேத்திக்கி ரிசவாகனம் பாக்கலியே நீ தூங்கிப் போயிட்டியே ‘ என்று திருநாள் சேதிகளைப் பேசிக் கொண்டிருப்பான்.ஸ்வாமி நினைத்தால் என்ன செய்யமாட்டார் ‘ ஊமைக்கும் அசடுகளுக்கும் அவர் தானே கண். என்னப்பா ‘ வைத்தீச்சுவரா ‘ இந்த மட்டுமாவது பாதை காட்டினியே ‘முதல் தடவை பணம் வந்து ஆச்சரியத்தில் கழிந்தது.

இரண்டாம் தடவைகூட அந்த ஆச்சரியம் குறையவில்லை. மூன்றாம் தடவை இரண்டு மூன்று நாள் தாமதமாயிற்று. வேதனையாயிருந்தது. பயமாக இருந்தது. ஐந்தாவது தடவை ஒரு வாரம் தாமதம். கோபம் வந்தது. கோபத்தை சமாளித்துக்கொண்டு என்ன கஷ்டமோ இடைஞ்சலோ என்று சமாதானம் செய்து கொண்டு சாந்தமான சமயத்தில் பணம் வந்து குதித்துவிட்டது. ‘இது சம்பாதிச்சு நான் சாப்பிடணுங்கறது இல்லை ஸ்வாமி. என்னமோ முன்ன மாதிரி கண் சரியாகத் தெரியலை. கை நடுங்கறது. என்னமோ குழப்பம். மொளகாப் புளியெல்லாம் முன்ன மாதிரி திட்டமா விழமாட்டேங்கிறது. இல்லாட்டா என்ன விட்டுட்டு ஆனந்தம் பயலைக் கூப்பிடுவாளோ ஏலாவூர் பண்ணையிலே ‘ எத்தனை கலியாணத்துக்கு அங்கே டின்னரும் டிபனுமா பண்ணிப்போட்டிருக்கேன் ? இந்தப் பய இப்படி பிள்ளையா பிறந்து இப்படி நிக்கறதேங்கிற கவலையிலே எனக்கு கையி, தீர்மானம், தைரியம் எல்லாம் ஆடிப்போச்சு ஸ்வாமி. இப்ப அது நிமிர்ந்துட்டுது. என் குழப்பம் நிமிரலே, என்ன பண்றது ‘ இல்லாட்டா இது சம்பாரிச்சா நான் சாப்பிடணும் தலையெழுத்து ‘ என்று மணியார்டர் வாங்கும்போது வந்து, விசாரிக்கிற பார்வையாகப் பார்த்த வீட்டுக்கார வாத்தியாரிடம் உருகினார் முத்து.அந்தச் சமயத்தில்தான் வண்டிக்காரத் தெருவிலிருந்து வக்கீல் குமாஸ்தாவின் காரியஸ்தன் வைத்தியநாதய்யன் வந்து செய்தி சொல்லிவிட்டுப் போனான். மத்தியானம் முடிந்தால் வீட்டுப்பக்கம் வந்துவிட்டுப் போகச் சொன்னாராம் அண்ணாவையர்.

வக்கீலுக்குக் குமாஸ்தா. அந்த குமாஸ்தாவுக்கு ஒரு காரியஸ்தனா ? இது உலகத்தில் இல்லாத ஆச்சரியம் இல்லையோ ? ஆனால் நடக்கிறதே. அண்ணாவையனுக்கு காரியஸ்தன் ஒருவன் இல்லை, இரண்டு மூன்று பேர் உண்டு. இந்தா என்றால் ஏன் எங்கேயென்று ஓடக் காத்திருக்கிற எடுபிடி ஆட்கள் மூன்று பேர் –அண்ணாவையன் முத்துவுக்குக்கீழ் சமையலாக இருந்தவன்தான். திடாரென்று ஒரு நாளைக்கு வக்கீல் ஜகதுவுக்கு குமாஸ்தாவாக ஆனான். மூன்று வருஷத்தில் ஜகதுவையே உட்கார்த்தி வைத்துவிட்டான். தானே வக்கீல் மாதிரி தொழில் நடத்தத் தொடங்கிவிட்டான். முதலிமார் கேஸ்கள், செட்டி நாட்டுக் கேஸஉகள் –பாகப் பிரிவினைகள் வியாஜ்யங்கள் என்று பிரளயமாடுகிறான். கோர்ட்டு ஏறாமலே எத்தனை மத்தியஸ்தங்கள் ‘ பல மத்தியஸ்தங்கள் வாசல் திண்ணையில் நீட்டின கால்களை முடக்காமலே நடக்கும்.

மலையாளத்து இரட்டைத் தாழம் பாயில் திண்டுமீது சாய்ந்து....ஏ அப்பா ‘ என்ன கார்வார் ‘ என்ன மோக்ளா ‘முத்து கீரைத்தண்டு சாம்பார் சாதத்தைச் சாப்பிட்டு வினோலியா டப்பாவுடன் வண்டிக்காரத் தெருவுக்குப் போனார். போகாமல் எப்படி இருக்க முடியும் ‘ விறகு கடையிலும் சைக்கிள் கடையிலும் அக்கணாக் குட்டியை வேலைக்கு வைத்தது அண்ணாவையன் தானே. இது வேலையை விட்டால் அவன் என்ன செய்வான் ?வழக்கம் போல நீட்டின காலை மடக்காமலே ‘வா முத்து, உட்காரு ‘ என்று அண்ணாவையன் திண்ணையில் தாழம் பாயில் சாய்ந்தவாறே அழைத்தான்.‘வைத்தா வந்து சொன்னான், அய்யர்வாள் கூப்பிட்டார்னு “ஆமா.

முத்து ‘ என்று எழுந்து புகையிலையை உமிழ்ந்துவிட்டு வந்து,‘ராத்திரி மெட்ராஸ் போறேன். இந்த தடவை யாராவது கூட இருந்தா தேவலை போலிருக்கு. ஒரு வாரமா ஜஉரம். முந்தாநாத்தான் ஜலம் விட்டுண்டேன். நாளைக்கு அர்ஜண்டா கேஸஉ ஹைறக்கோர்ட்டிலே. பத்தியச் சாப்பாடு. ஹோட்டல்ல தங்கப்போறதில்லெ. தம்முடு கலியாண மண்டபத்திலே தங்கப் போறேன். நீகூட வந்து ஒரு ரசம் சாதமோ தொகையலோ பண்ணிப் போட்டா தேவலைன்னு தோணறது. அதான் கூப்பிட்டனுப்பிச்சேன் “அதுக்கென்ன செஞ்சுபிடறது. “நீ தீர்க்காயுசா இருக்கணும், நாலாநாள் திரும்பி விடலாம். நீ போறதுக்கு ரெடி பண்ணிக்கோ. நாளை நாளன்னிக்கி ஒண்ணும் அச்சாரம் வாங்கலியே “இப்ப என்ன ஆடி மாசத்திலே அச்சாரம் ? “ரொம்ப நல்லது போ. அப்ப ரண்டு நாள் கூடத் தங்கினாலும் பாதமில்லேன்னு சொல்லு. “ஒரு மாசமாத்தான் இருக்கட்டுமே. நீங்க கூப்பிடறச்சே நான் வெட்டி முறிக்கப் போறேனோன்னேன். என்ன பேச்சு இது ? “சரி, இந்தா–இதோ இருவது ரூவா இருக்கு. மீனாட்சி கிட்ட கொடு. செலவுக்கு வேணுமே அவளுக்கு... ‘ ராத்திரி ஏழு மணிக்கு வந்துடு. இங்கேயே சாப்பிட்டுப் புறப்படலாம்.‘சாப்பிடறேன். இது என்னத்துக்கு ? ‘ என்று உபசாரமாக பணத்தை மறுத்தார் முத்து.‘எது என்னத்துக்கு ?–கொடுத்தா பேசாம வாங்கிவச்சுக்கோயேன். நீதான் மகாப் பிரபுன்னு தெரியுமே எனக்கு.

“சரி ‘ என்று புன்சிரிப்புடன் இரண்டு நோட்டையும் வினோலியாப் பெட்டிக்குள் வைத்து மூடி ‘நானே போகணும் போகணும்னு நெனச்சிண்டிருந்தேன். நீங்க கூப்பிட்டுது பால்லெ பழம் விழுந்தாப்பல ஆயிட்டுது ‘ என்றார் முத்து.‘என்ன ? “நம்ம அண்ணாக்குட்டி அங்கதானே இருக்கான்... போறபோது அவனையும் ஒரு நடை பார்த்துட்டு வந்துடலாமே “ஒஹோஹெோ. ரண்டு மாசம் முன்னாலேயே சொன்னியே– யாராத்திலெயோ இருக்கான்னு. எனக்கு மறந்தே போயிடுத்து பாரேன். பலசரக்குக் கடைக்காரனுக்கு பைத்தியம் புடிச்சாப்பல ஆயிடுத்து என் புத்தி... பேஷ்– ‘பட்டணத்துக்கு வந்த நாலாம் நாள்தான் முத்துவுக்கு ஒழிந்தது. அண்ணாவையருக்கு சமைத்துப்போட்டு விட்டு அவரோடும் சுற்ற வேண்டியிருந்தது. மூன்று நாளுக்குப் பிறகுதான் அண்ணாவையருக்குத் தைரியம் வந்தது. தனியாக நடமாடலாம் என்று. அன்று சனிக்கிழமை. வேங்கடாசலபதி பெயரைச் சொல்லி ஒரு சர்க்கரைப் பொங்கல் பண்ணச் சொன்னார் அண்ணாவையர். அவருக்குச் சாப்பாடு போடுவதற்கு முன்னமே சொல்லி விட்டார் அவர். ‘முத்து, நான் சாப்பிட்டுக் கோர்ட்டுக்குப் போறேன். நீ அக்கணாக் குட்டியைப் பார்த்துட்டு

சாயங்காலத்துக்குள்ள வந்துரு. ராத்திரி வண்டிக்கே கிளம்பும்படியா இருக்கும். முடிஞ்சா அந்தப் பயலையும் அழச்சிண்டு வா. நானும் பார்க்கறேன் ‘ என்ரு அவர் சொன்னதும் அவிழ்த்துவிட்ட கழுதை மாதிரி ஓட வேண்டும் போலிருந்தது முத்துவுக்கு. நெஞ்சுக்குள் குதியாகக் குதித்தது. சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு அவருக்குச் சாதத்தைப் போட்டார். டாக்சி பிடித்துக் கொண்டு அவரை ஏற்றி வழியனுப்பி விட்டு, ஒரு எவர்சில்வர் டப்பாவில் சர்க்கரைப் பொங்கலைப் போட்டுக்கொண்டு மாம்பலம் பஸ்ஸில் ஏறினார்.வீடு கண்டு பிடிப்பது சிரமமாக இல்லை.

வீடா அது பங்களா. பங்களாகூட இல்லை. சின்ன அரண்மனை. ஒரு மாஞ்சோலைக்கு நடுவில் இருந்தது. கேட்டைக் கடந்து நுழைந்ததும் நடுவில் ஒரு நாகலிங்க மரம். இப்பாலும் அப்பாலும் இரண்டிரண்டு மாமரங்கள். ஒரே நிழலாக இருந்தது. தள்ளிப்போனால் கார் நிற்கும் முகப்பு. காரும் இருந்தது. நாகலிங்க மரத்துக்குப் பக்கத்தில் சிமண்டு சோபா இரண்டு திண்ணைபோல கட்டியிருந்தன, அங்கே நான்கு பையன்கள் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.‘அம்பி ‘ ‘ என்று இரண்டு தடவை கூப்பிட்டார் முத்து. அவர்கள் கவனித்ததாகத் தெரியவில்லை. மாமரத்தில் ஒரு குயில் கத்திற்று. கீழே நாகணவாய் இரண்டு மஞ்சள் மூக்கும் குழைந்த கூவலுமாக ஆடி ஆடி நடந்து கொண்டிருந்தன.‘நான் டபிள்ஸ் எத்தனையோ தடவை போயிருக்கேண்டா இதே சைக்கிள்ளே என்ன செஞ்சிடுவாங்க ? எங்க தாத்தா ஹைகோர்ட் ஜட்ஜஉ கான்ஸ்டபிள் என்னைப் பிடிச்சிடுவானா ? ‘‘ம்க்ம்…நீ யார் க்ராண்ட்ஸன்னாயிருந்தா போலீஸ்காரனுக்கு என்னடா ? அவன் டூட்டி செய்யத்தான் செய்வான். ‘‘பெட்டு ? –நான் டபுள்ஸ் போறேன், மணியோட......பிடிக்கிறானா பார்ப்பமா ? அஞ்சு ரூபா பெட்டு ‘ இந்தா ‘ என்று சட்டைப் பையிலிருந்து ஐந்து ரூபாயை எடுத்து வைத்தான் அந்தப் பையன்.பன்னிரண்டு வயதுக் குழந்தையின் பையிலிருந்து ‘பெட்டு ‘க் கட்ட ஐந்து ரூபாய் பணம் வருவதைப் பார்த்து முத்து பயந்து போய்விட்டார். இந்தப் பையன்களைத்தான் அக்கணாக்குட்டி பள்ளிக்கூடத்திற்குக் கொண்டு விடுகிறானா ‘ அவருக்குப் பயமாகவும் இருந்தது. பெருமையாகவும் இருந்தது.

‘அம்பி ‘ ‘ என்று மறுபடியும் கூப்பிட்டார். பதிலில்லை. அன்று சனிக்கிழமை, பள்ளிக்கூடம் இல்லை போலிருக்கிறது.மறுபடியும் கூப்பிட்டார்.‘யாரு ? ‘‘சாம்பமூர்த்தின்னு ஒரு பையன் கும்மாணத்திலிருந்து வந்திருக்கானே அவன் இஞ்சதானே இருக்கான். ‘‘தெரியாது ‘‘இதுதானே குப்புசாமி அய்யர் பங்களா ‘ ‘‘யார்றா குப்புசாமி அய்யர் ? ‘‘போடா ‘ நம்ம மோகன் தாத்தா தாண்டா. அவர் வீடுதான் ‘‘நீங்க இந்த வீடு இல்லையா ? ‘‘இல்லை. நாங்க எங்க ப்ரண்டு மோகனைப் பார்க்க வந்திருக்கோம். மோகன் உள்ளே சாப்பிடப் போயிருக்கான். ‘முத்து மெதுவாக நகர்ந்து வீட்டின் முகப்புக்குப் போனார். அங்கு யாருமில்லை. உள்ளே ஹாலுக்குப் போனார். பாதி இருட்டு. அங்கே பெரிய மைசூர் மகாராஜா ராணியோடு நிற்கிறபடம், கொம்பு, மான்தலைகள், யாரோ தலைப்பாகை நீளக்கோட்டு கால்சட்டை போட்ட மனிதரின் படம் எல்லாம் மாட்டியிருந்தன. அங்கும் யாருமில்லை. அதையும் தாண்டினார். ஒரு கிழவன் அந்தண்டை நடையில் ஒரு ஸ்டூல்மீது உட்கார்ந்திருந்தான்.‘யாரு ? ‘‘ஏம்பா சாம்பமூர்த்தின்னு ஒரு பையன் இங்க

இருக்கானே தெரியுமோ ?‘‘பையன்னா ?எந்தப் பையன் ?‘‘இங்கே வேலைக்கிருக்கான்பா ஒரு பையன் – கும்மாணத்திலிருந்து வந்திருக்கான். ‘‘அப்படிச் சொன்னால் தெரியும் ? சாம்புவைத்தானே கேக்கறீங்க –பெரிய அய்யரோட இருக்கே அந்தப் பையன்தானே ? ‘‘அது என்னமோ, இங்க வேலையா யிருக்கான் அந்தப் பையன் ?‘‘கும்பகோணத்துப் பையன்தானே ?‘‘ஆமாம். ‘‘அப்ப இப்படி இறங்கி அதோ அங்கே போங்க – காட்டேஜஉக்கு, அங்கதான் இருப்பான் பையன், இப்பதான் அய்யரோட வெளியே போய் வந்தான். ‘‘இங்கே ?‘ என்று நடை முடிவில் இருந்த வாசற் படியைக் காட்டினார் முத்து.

‘இங்க சின்ன ஐயா ரண்டுபேரும் இருக்குறாங்க... பெரியய்யா இருக்கிற இடம் அதுதான். அங்கதான் அந்தப் பையன் இருக்கான்... நீங்க யாரு ?‘‘நான் அந்தப் பையனோட தோப்பனார். ‘‘அப்படியா ‘ சரி சரி, போங்க. ‘முத்து நடையிலிருந்து இறங்கி தோட்டத்தோடு போனார். ஏ அப்பா எத்தனை பெரிய வீடு ‘ எத்தனை மரங்கள் ஒரு ஆளைக் காணவில்லை. வாசலை இப்படி ஹோவென்று போட்டுவிட்டு உள்ளே எங்கேயோ இருக்கிறார்களாம். ஒரு ஈ காக்கையைக் காணோம் ‘ முந்நெற்றி மயிரைப் பிடித்தாலும் தெரியாது போலிருக்கிறது.ஒரே நிசப்தமாக இருந்தது. தோட்டப் பாதையில் நடந்து அங்கே காட்டேஜின்படி ஏறினார் முத்து.தாழ்வாரத்தில் வந்து ‘சார் ‘ என்றார்.‘யாரு ?‘‘நான்தான் ‘ என்று சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்தார்.அங்கே ஒரு பெரிய மேஜை, அதன்மேல் தடிதடியாகக் கணக்குப் புத்தகங்கள். அதன் பின்னால் நாற்காலியில் ஒரு பெரியவர் உட்கார்ந்திருந்தார். அவர் முகத்தில் கறுப்பாக மூக்குக் கண்ணாடி, மேஜையில் ஒரு நீலக்கடுதாசி. அதன் மேல் வரைபடம். அதைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒரு பையன் பக்கத்தில் நின்று அவருடைய தலையை, கிராப்புத் தலையை வரக்கு வரக்கு என்று சொரிந்து கொண்டிருக்கிறான்.கறுப்பு கண்ணாடியின் உடலும் லேசாகக் கறுப்புத்தான். முத்து உள்ளே நுழைந்ததும் அவர் கறுப்புக் கண்ணாடியைக் கழற்றாமலே நிமிர்ந்து பார்க்கிறார்.‘யப்பா ‘ என்று ஒரு குரல்.அக்கணாக்குட்டியின் குரல்தான், மேஜை மீதிருந்த மங்கிய விளக்கின் கறுப்பு மறைவுக்குப் பின்னால் அக்கணாக்குட்டியின் முகம் தெரிந்தது.‘எப்பப்பா வந்தே ?‘ என்று ஹ் என்று உறிஞ்சிக் கொண்டே சிரிக்கிறான் அவன்.

‘யார்றா சாம்பு ?‘‘எங்கப்பா மாமா ‘ என்று அவர் தலையைச் சொறிந்து கொண்டே அக்கணாக்குட்டி ‘எப்பப்பா வந்தே ?‘ என்று சிரித்தான்.‘நமஸ்காரம் ‘ என்றார் முத்து.‘நமஸ்காரம். சாம்பு அப்பாவா – வாங்கோ ‘‘‘வந்தேன் ‘‘உட்காருங்கோ ‘ஒரு நாற்காலியில் உட்கார்ந்தார் முத்து. வெய்யிலிருந்து உள்ளே வந்ததும் கண்ணை மறைத்த இருள் மெதுவாக விலகிற்று. கண் நன்றாகத் தெரியத் தொடங்கிற்று.‘சௌக்கியமா ?‘ என்றார் கறுப்புக் கண்ணாடி.‘சௌக்யம் ‘முகத்தை நன்றாகப் பார்த்தார் முத்து. உதடு அறுந்தது மாதிரி அதைத்துத் தொங்கிற்று. கன்ன எலும்பில் இரண்டு அதைப்பு. காது வளையமெல்லாம் அதைப்பு. மேஜை மீது படிந்திருந்த கைகளை பார்த்தார். கைகள் படியவில்லை. கட்டைவிரல் மற்ற விரல்களெல்லாம் மடங்கியிருந்தன. நீட்ட முடியாத விரல்கள் என்று பார்த்தாலே தெரிந்தது.‘எப்பப்பா வந்தே...ஹ் ?‘ என்று பல் வரிசையைக் காட்டிக் கொண்டே கேட்டான். அக்கணாக்குட்டி. அவருடைய தலையைச் சொறிவதை மட்டும் நிறுத்தவில்லை.‘இப்ப தாண்டா வரேன் ‘‘இப்ப ஏதுப்பா வண்டி....ஹ் ?‘‘வண்டி

முன்னூறு நிமிஷம் லேட்டு. தெரிஞ்சவா வீட்டிலே வந்து இறங்கினேன். சாப்பிட்டேன், உடனே புறப்பட்டு வரேன் ' என்று தன்னறியாமல் பொய் சொன்னார் முத்து.அப்பொழுது கறுப்புக் கண்ணாடிப் பெரியவர் கன்னத்தை சொரிந்து கொண்டார். எல்லாரும் விரல் நுனியால் நகத்தால் சொறிந்துகொள்வார்கள். அவர் மடக்கின விரலின் பின்பக்கத்தால் சொறிந்து கொண்டார். முத்துவுக்கு பகீர் என்றது. இரண்டு மூன்று விரலில் நகமே இல்லை.

முத்துவுக்கு உட்கார முடியவில்லை. மேலெல்லாம் அரிப்பது போலிருந்தது. அந்த அறையில் காலைப்பாவவிட்டாலே உள்ளங்கால் அரிக்கும்போலிருந்தது. முள்மேல் உட்கார்வது போல குறுகிக்கொண்டார்.பெரியவர் என்னென்னமோ வெல்லாம் கேட்டார். தப்பும் தவறுமாக பதில் சொல்லிக் கொண்டிருந்தார் முத்து. காதில் ஒன்றையும் சரியாக வாங்கிக் கொள்ளவில்லை. அவருக்கு உள்ளே பூஞ்சதை நரம்பெல்லாம் அழுவதுபோல் ஒரு கசிவு.'போரும்டா சாம்பு ' என்றார் பெரியவர்.அக்கணாக்குட்டி சொறிவதை நிறுத்தினான்.'பையன் ரொம்ப சமர்த்தாயிருக்கான். அவன் இருக்கிறது எனக்கு ஆயிரம் பேர்கூட நிற்கிறாப்போல இருக்கு ' என்றார் பெரியவர். சொல்லிவிட்டு 'சித்தே இருங்கோ, இதோ வந்துடறேன் –சாம்பு இப்படி வாயேன் ' என்றார்.அக்கணாக்குட்டி அருகில் வந்து நின்றான். பெரியவர் எழுந்து அவன் தோளில் கையைப் போட்டுக்கொண்டார். அக்கணா நடந்தான். அவரும் விந்தி விந்தி துணி பூட்ஸ் காலால் நடந்தார். அவரை ஹாலின் ஒரு கோடியில் உள்ள கதவைத் திறந்து உள்ளே விட்டு வெளியே காத்து நின்றான்.'உங்க மாதிரி யார் இருப்பா ? விளக்கேத்தி வச்சேளே என் குடும்பத்துக்கு. நிஜமாகச் சொல்றேன். அக்கணாக்குட்டி அனுப்பிக்கிறானே மாசாமாசம் அதிலே தான் வயிறு ரொம்பறது. யார் செய்வா இந்த மாதிரி இந்தக் காலத்திலே ? அவனையும் ஒரு ஆளாக்கி....அவன் ஒரு கால் காசைக் கண்ணாலே காணப்போறானோன்னு ஒடிஞ்சு போய்விட்டேன். ஸ்வாமிதான் உங்க ரூபத்திலே வந்து அவன் கண்ணைத் திறந்துவிட்டார்.... ' அக்கணாக்குட்டியைப் பார்க்கபோகும் போது அவனுடைய எஜமானரைப் பார்த்தால் இப்படி என்னென்னவெல்லாமோ சொல்ல வேண்டும் என்று நினைத்துக்கொண்டே வந்திருந்தார் முத்து.இப்போது வாயைத் திறக்கவில்லை. முடியவில்லை அந்த நினைவெல்லாம் தோன்றிய சுவடே இல்லை.

மனதில் ஒரு பீதி. ஒரு குமைச்சல். குமட்டல். ஒரு கோபம். 'பாவி ' நீ நன்னாயிருப்பியா ? ' என்று அடிவயிற்றிலிருந்து கதற வேண்டும் போலிருந்தது. அக்கணாக்குட்டி ஹால் ஓரத்தில் பெரியவர் வருவதற்காகக் காத்து நின்றவன் அப்பாவைப் பார்த்துப் புன்சிரிப்பு சிரித்தான். ஹ் என்று உறிஞ்சினான்.முத்துவுக்கு நெஞ்சில் கட்டி புறப்பட்டாற்போல் வலித்தது. இவனையும் தாண்டி கதவைப் பார்த்தது அவர் கண். வெளியே நெளியப் போகும் நல்ல பாம்பைப் பார்ப்பது போல் ஒரு கிலி வேறு சூழ்ந்துகொண்டது.'இந்தண்ட வாடா ' என்று வாயால் தலையை அசைத்தார் – அவசரமாக, சுளிப்பாக.அவன் புரிந்து கொள்ளவில்லை. புன்சிரிப்புடனேயே சாத்தியிருந்த கதவைக் கையால் காண்பித்து சைகை காட்டினான்.பெரியவர் காவி பூட்ஸஉம் காலுமாக வந்தார். சுவரில் பதிந்த ஒரு பளபள கம்பியிலிருந்த ஒரு துண்டை எடுத்து அவரிடம் நீட்டினான் அக்கணா. அவர்

கையைத் துடைத்துக் கொண்டதும், தோளைக் கொடுத்தான். பிடித்துக் கொண்டு வாத்து நடை நடந்து நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார்.முத்து ஆரம்பித்தார். 'சம்சாரத்துக்கு ஊரிலே உடம்பு ரொம்ப மோசமாயிருக்கு. பதினஞ்சு நாளா படுத்த படுக்கையாயிருக்கா. பிள்ளையைப் பார்க்கணும் பார்க்கணும்னு புலம்பறா, ஜஉரம் இறங்கவே இல்லை.... ''அடடா....நீங்க ஒரு வார்த்தை எழுதப்படாதோ ?'என்னமோ சாதாரண ஜஉரம்னு நெனச்சிண்டிருந்தேன். அது என்னடான்னா இறங்கற வழியாயில்லெ. அப்புறம் அவ தங்கைக்கு லெட்டர் போட்டு வரவழச்சேன், கிராமத்திலேர்ந்து. இவளானா புலம்பறா. உங்ககிட்ட விஷயத்தைச் சொல்லி பயலை அழச்சிண்டு போகலாம்னு வந்திருக்கேன் ' என்று அடுக்கிக் கொண்டே போனார் முத்து

பெரியவர் நிமிர்ந்து அவரைப் பார்த்தார். கறுப்புத்தான் கண்ணை மறைத்திருக்கிறதே என்ன தெரியும் ?அந்த முகத்தில்தான் என்ன தெரியும் ?தடிப்புத்தான் தெரிந்தது.முத்துவுக்கு மட்டும் தான் சொன்னதை அவர் நம்பவில்லையோ என்று வயிற்றில் கனத்தது.பெரியவர் அப்படியே பார்த்துக்கொண்டிருந்தார்.'ஊர்லெ சிநேகிதர் ஒருத்தர் காரிலே வந்திருக்கார். சேர்ந்து போயிடுவமேன்னார். ரயில்காரனுக்கு கொடுக்கறதையாவது மிச்சம் பண்ணலாம்னு நினைச்சேன். 'பெரியவர் வாய்தடிப்பு ஒரு புன்னகையாக மலர்ந்தது. சிரித்தால் அழகாகத்தான் இருக்கிறது. யார் சிரித்தால் என்ன என்று தோன்றிற்று முத்துவுக்கு.'பெரிய மனசு பண்ணி மன்னிக்கணும் ' என்றார் முத்து.'பாதகமில்லை ' என்று ஒரு புத்தானை அழுத்தினார் பெரியவர்.'சாம்பு, அப்பா கூப்பிடறாரேடா போறியா ?' என்று கேட்டார்.'அம்மா ரொம்ப ஜஉரமாக கிடக்காடா. உன்னைப் பார்க்கணும்னு பேத்திண்டேயிருக்கா– ராவில்லே பகலில்லே ' என்றார் முத்து.'சரிடா சாம்பு. வேட்டி சட்டையெல்லாம் எடுத்து வச்சுக்கோ ' என்றார் பெரியவர். 'பையன் ரொம்ப ஒத்தாசையாயிருந்தான் ஸ்வாமி. சுருக்கக் கொண்டு விட்டு விடுங்கோ. ''ம் ' உடம்பு சரியாயிருந்தா, அங்கே என்ன வேலை ?' என்றார் முத்து.அக்கணா பின்னாலிருந்த இன்னொரு அறைக்குப் போனான்.வாசலிலிருந்து ஒரு தட்டில் டிபன் காபி எல்லாம் பரிசாகரன் கொண்டு வந்தான். அதற்குத்தான் புத்தானை அழுத்தினார் போலிருக்கிறது பெரியவர்.'சாபிடுங்கோ. ''நான் இப்பத்தானே சாப்பிட்டேன். ''இங்கே வந்து வெறும் வயத்தோட போகலாமா ?'முத்துவுக்குச் சொல்ல மெல்ல முடியவில்லை. 'பாலாம்பிகேச வைத்யேச ' என்று மனத்துக்குள் சுலோகம் சொல்லிக் கொண்டே காபியை மட்டும் எடுத்து கண்ணை மூடி மளமளவென்று விழுங்கினார்.

பரிசாரகன் பாத்திரங்களை எடுத்துப் போனான்.அக்கணாக்குட்டி பையும் கையுமாக வந்தான். வெளிச்சத்தில் நன்றாகப் பார்க்கும்போது அவன் எவ்வளவு மாறிவிட்டிருக்கிறான் என்று தெரிந்தது. தலையை வழவழவென்று சீவி விட்டிருந்தான், வெள்ளை வெளெரென்ற சட்டை, வெள்ளை வேட்டி, முகத்தில் ஊட்டத்தின் பொலிவு, சட்டைக்கு வெளியே தெரிந்த முன்னங்கைகூட பளபளவென்று நிறம் ஏறியிருந்தது.'என்னை ரொம்ப மன்னிச்சிக்கணும் ' என்று எழுந்து கும்பிட்டார் முத்து.'எதுக்காக ?ரொம்ப நன்னாருக்கே. ''நமஸ்காரம் பண்ணிட்டு போய்ட்டு வரேன்னு சொல்லிக்கோடா ' என்றார் முத்து.அக்கணா விழுந்து வணங்கி எழுந்து 'போய்ட்ரேன்

மாமா ' என்றான்.'போய்ட்டுவா. போய் லெட்டர் போடு, அம்மாவுக்கு உடம்பு எப்படியிருக்குன்னு. எப்ப வரேன்னும் எழுதணும். ''சரி மாமா. 'இருவரும் வெளியே நடந்தார்கள்.இவ்வளவு சீக்கிரம் காரியம் நடக்கும் என்று நினைக்கவில்லை, சிங்கத்தின் குகையிலிருந்து வருவது போல, திரும்பிப் பார்க்காமல் வேகமாக வெளியே வந்து தோட்டத்தை தாண்டி தெருவுக்கு வந்து சாலைக்கு வந்தார் முத்து. 'மெதுவாப் போப்பா ' என்று கூடவே விரலால் நடந்து சிறு ஒட்டமாக ஓடிவந்தான்.சாலைக்கு வந்து பஸ் ஏறினதும்தான் வாயைத் திறந்தார் முத்து.

'ஏண்டா மக்கு ' இந்த மாதிரி உடம்பு அந்த மாமாவுக்குன்னு நீ சொல்லவே இல்லியே ' என்றார்.'என்ன உடம்பு ?''உனக்குத் தெரியலியா ?ரொம்ப கரிசனமா தலையைச் சொறிஞ்சு விட்டியே, புத்திதான் இல்லை, கண்ணுகூடவா அவிஞ்சு போச்சு ?''அது ஒட்டிக்காதாம்பா ?''ஒட்டிக்காதா ' யார் சொன்னா ?''அவாத்து மாமி, மாமா, மோகன் எல்லோரும் சொல்வாலே. ''பின்னே அந்த மோகன், மாமி, மாமா எல்லோரும் வந்து அவர் தலையைச் சொறியப்படாதோ ?''அவாலுக்கெல்லாம் வேலையில்லியாக்கும் ?மோகன் பல்லிக்கூடம் போறான். மாமா என்ஜீனியர், மாமி பூ நூல்லே பை பனியன்லாம் போடறா. அவாலுக்கு டயம் ஏது ?அவா சொறியப்படாதோங்கிறீயே. ''உன்னை ஏமாத்தியிருக்காடா எல்லாரும், அசட்டுப் பொணமே ''ஒண்ணும் இல்லே. இத பாரு பேப்பர்லேயே போட்டிருக்கு ' என்று பையின் பிடியை அகட்டி உள்ளேயிருந்து நாலு சினிமாப் பாட்டு புத்தகங்களை எடுத்தான் அக்கணா. ஒரு புத்தகத்தைப் பிரித்து அதிலிருந்துஒரு தினசரிதாள் பக்கம் ஒன்றை எடுத்தான். அதிலெ ஒரு வெள்ளைக்காரப் பெண் யாரோ ஒரு ஆணின் கையைப் பிடித்துத் தடவிக் கொண்டு நிற்கிறாள். கருப்புக் கண்ணாடிகாரருக்கு இருந்த மாதிரியே கை, மூக்கு எல்லாம்....'இது யாரு தெரியுமா ?வெல்லைக்கார தேசத்திலே ரானி. போன மாசம் மெட்ராசுக்கு வந்தா – ராஜாவோட. இந்த ஊருக்கு வந்து சினிமா, டிராமால்லாம் பார்க்கலியாம், காரை எடுத்துண்டு ஒரு கிராமத்துக்குப் போனாலாம்.

மாமா மாதிரி அங்கே முப்பது நாப்பதுபேர் இருக்கலாம். மருந்து சாப்பிடறாலாம். அவால்லாரையும் பார்த்து, கையெல்லாம் தடவிக் கொடுத்தா வெல்லைக்கார ரானி, போட்டோ போட்டிருக்கா பாரு தடவிக் கொடுக்கறாப்பல, ஒட்டிக்கும்னா ரானி தடவிக்கொடுப்பாலா, பேத்தியம் மாதிரி பேசறியே ?''பேத்யம் மாதிரியா ?நானா பைத்தியம் ?' என்று படத்தைப் பார்க்க ஆரம்பித்தார் முத்து.'படத்தை மட்டும் பாக்கறியே. கீலே எலுதியிருக்கு பாரு. ' என்று விரலை அந்த வரிகள் மீது ஒட்டிக் காண்பித்தான் அக்கணா.'பாலாம்பிகேச வைத்யேச ' என்று சுலோகம் சொல்லிக் கொண்டே வினோலியா பெட்டியைத் திறந்து கண்ணாடியை எடுத்து மாட்டிக்கொண்டு படிக்க ஆரம்பித்தார் முத்து.

## செய்தி

என்னடாது?"பிள்ளையின் முகத்தில் அருவருப்பும் கோபமும் முண்டி நின்றன. "நிறுத்து!" என்று கையை உயர்த்தினார்.நாகஸ்வர ஓசை நின்றது."என்னடாது ரோதனை! விசிஞ்சதும் விடியாததுமா! இதையெல்லாம் ராத்திரியிலே வச்சுக்கிட்டிருந்தே ; சரி, தொலையுதுன்னு

நெனச்சா, காலமேயும் ஆரமிச்சிட்டியே. ஏண்டா கோடாலிக்காம்பு, என்னடா இதெல்லாம்? காலமே பிலஹரியும் கேதாரமும் பாடி ஆகாசம் முழுக்கப் பூப்பூவாக உலுக்க வேண்டிய வேளையிலே, இதென்னடா ஒப்பாரி! உனக்கென்ன, பைத்யம் கிய்த்யம் பிடிச்சிருக்கா!"பிள்ளையாண்டன் நாகஸ்வரத்தைத் தடவிக்கொண்டே உட்கார்ந்திருந்தான், பேசவில்லை."கண்ணைப் புட்டிகிறதுக்கு முன்னாடி இந்த ஒப்பாரி வச்சு அழுவவா, உனக்கு வித்தை சொல்லிக் குடுத்தது? இதுக்கு ஆத்தங்கரைத் தெருவிலே ஒரு கசாப்புக் கடை வச்சுக்கிட்டு, கறி கொத்திக்கிட்டு உக்காந்திருக்கலாமே.

நாயனம் எதுக்கு? ஒத்து எதுக்கு? ஏன் மூஞ்சியைச் சிணுக்குறே? நான் சொல்றது கசக்குதா?... சொல்லேண்டா! வாயைத் தொறந்து பதில் சொல்லு!""இன்னிக்குக் கச்சேரின்னீங்களே. அதுக்குத்தான் சாதகம் பண்ணிக்கிட்டிருந்தேன்" என்று வாயைத் திறந்தான் பிள்ளையாண்டன். ரொம்ப சாவதானமாகப் பதில் சொன்னான்."சாதகமா? ... ஹ்ம்!" என்று கிண்டலாக ஒரு ஹூம்காரம். பளார் என்று ஓர் அறைவிட வேண்டும்போல அவருக்குப் பற்றிக்கொண்டு வந்தது. அடுத்த கணம் ஒரு சந்தேகம் வந்தது.புத்தி ஸ்வாதீனம் இல்லையோ இவனுக்கு என்று நினைத்தார்."கச்சேரி பண்ணப்போவது யாரு தெரியுமில்லே?""..."“யாரு தெரியுமான்னேன்?""...""தொறவேண்டா வாயை!""நீங்கதான்.""நான்தானே! அப்ப உன்னைக்கூட உக்காத்தி வச்சுக்கிட்டு இந்த ஒப்பாரி, நவதான்ய கோத்ரம், இந்த சினிமாப் பாட்டு எல்லாத்தையும் வாசிக்க உடுவேன்னு நெனச்சியா? பெருச்சாளி அஞ்சறைப் பெட்டியைக் கவுத்த மாதிரி, இந்தச் சத்தம் எல்லாம் அங்க வந்து ஊதலாம்னு நெனச்சியா?""கச்சேரி கேக்கறவங்க வெள்ளைக்காரங்கப்பா...""ஆமாம், அதுக்காக?""அவங்களுக்குப் புரியும்படியா ஏதாவது வாசிச்சாத்தானே தேவலாம்."

"நீ இப்ப என்ன சொல்றே! நான் வாசிக்கிறது அவங்களுக்குப் புரியப் போவதில்லை. என் பேரைக் காப்பாத்தறதுக்காக நீ புரியும்படியா இந்த மாதிரி ரண்டு வாசிச்சு, நம்ம ஊருக்கு வந்தது வீணாப்போயிடலேன்னு நெனச்சுக்கும்படியா அவங்களையும் செஞ்சுடப்போறேன்னு சொல்லு!"தங்கவேலு மௌனம் சாதித்தான். ஏதோ அவர் சொல்லுவது சரிதான் என்று ஆமோதிப்பதுபோல. தகப்பனார் கிண்டல் சாட்டை சாட்டையாக அவன்மீது விழுந்தாலும், உண்மை என்னவோ தன் பக்கந்தான் என்று தியாகிபோல மௌனம் சாதித்துக்கொண்டிருந்தான் அவன்."ஐயரு என்ன சொன்னாரு தெரியுமில்லே? அப்பட்டமாக நம்ம சங்கீதம்னா வேணும்னு கேட்டாரு. வந்திருக்கிறவங்க அதைத்தான் கேட்டாங்களாம். அவங்களுக்குப் புடிக்குதோ புடிக்கலையோ இப்ப என்னாத்தைத் தெரியும். புடிக்காதுன்னு நீயே இப்பவே சமாதி கட்டிப்பிட்டியா என்ன? புரியக்கூடியதாக் கேக்குணும்னு வரலை அவங்க. நம்ம சங்கீதம் எப்படி இருக்கும்னு தெரிஞ்சுக்கணுமாம். வாசிச்சாத்தானே புரியுதா இல்லையான்னு தெரியும். நீ இந்த 'டபக்குடபா'வை வாசிச்சு, 'இதான் எங்கள் சங்கீதம்னு' கொடி கட்டலாம்னு பாக்கறே...!ஆகாகா! நம்ம சங்கீதத்து மானத்தை காப்பாத்தணும்னு எவ்வளவு அக்கறை! எவ்வளவு கவலை...!"பையன் புன்சிரிப்புச் சிரித்தான்.

பிள்ளைக்கும் சிரிப்பு வந்தது."சிரிடா சிரி... சீச்சீ போ... வாத்தியத்தை எடுத்து அலம்பி வை!"வாத்தியத்தை உறையில் போட்டுக் கட்டி, ஆணியில் மாட்டிவிட்டு அப்பால் போனான் தங்கவேலு. பிள்ளை, அங்கேயே ஜன்னலோரமாக இருந்த பெஞ்சின்மீது உட்கார்ந்து, தாழம் பெட்டியை உருவிக் கொட்டைப் பாக்கைச் சீவ ஆரம்பித்தார்.அந்த இடத்தில்தான் பரம்பரையாக வாத்தியங்கள் தொங்கிக்கொண்டிருக்கின்றன. பிள்ளையாண்டன் இப்போது ஊதுகிற வாத்யம், அவர் தந்தை வாசித்து, அமிருதமாகப் பொழிந்த வாத்யம். திருச்சேறைக் கோயிலில் அவர் வாசித்த உசேனி ராகத்தை நினைத்தால் இப்போதுகூட உடல் சிலிர்க்கிறது. எவ்வளவு உருக்கம்! எவ்வளவு ஜீவன்! எவ்வளவு ஸ்வானுபூதி!நாதத்தின் உயிரைக் கவ்வும் குழைவு! அதே வாத்யத்தில்தான் இப்போது தங்கவேலு கில்லாடி அபஸ்வரங்களை ஊதித் தள்ளிக்கொண்டிருக்கிறான்.ஒரு வருஷமாக அந்தக் கவலைதான் அவருக்கு. கல்யாணங்களில் எட்டுத் திக்குக்கும் ஓலமிடும் சினிமாப் பாட்டுகளை நாகஸ்வரத்தில் சாதகம் செய்துகொண்டு வந்தான் தங்கவேலு.மக்களை ரஞ்ஜகம் செய்யச் சக்தியில்லை என்று அவரை அதிலிருந்தே உலகம் ஒதுக்கிவிட்டது. அதற்காக அவர் கவலைப்படவில்லை. ஆதீனத்துக் கோயில் மான்யம் அளிக்கிறவரையில் சங்கீதம் உயிரிழக்காமல் நடமாடிக் கொண்டிருக்கும் என்று அவருக்குத் தைரியந்தான். வயிற்றுக்கு இருக்கிறது.

சோறு துன்னது போக இரண்டு ஜதை வேஷ்டி, மேலுக்கு இரண்டு துணுக்கு, அவளுக்கு நாலு சேலை, அவனுக்கு நாலு வேஷ்டி – இவ்வளவுக்கும் காணும். மனிதனுக்கு இதைவிட வேறு என்ன தேவை? இதுதான் புரியவில்லை. தோடாவும் பெயரும் பத்திரிகையில் படமும் வேண்டாம். தலையெடுத்து இருபத்தைந்து வருஷமாக இப்படி ஒரு பயலைச் சட்டை செய்யாமல் காலம் ஓடிவிட்டது. இனிமேல். இந்தத் தங்கவேலுக்கும் ஞானத்தில் ஒன்றும் குறைச்சல் இல்லை, அவரும் மனித சரீரம் ஏதோ எப்படியோ என்று, தெரிந்தவற்றையெல்லாம் அவசர அவசரமாக அவனுக்கு உருவேற்றிக்கொண்டுதான் வந்தார். ஆனால் இந்த அசத்து, 'அமமாசிப் பீடை'க்குத் தத்தாரிகளை, ஞான சூன்யங்களைத் திருப்தி செய்ய வேண்டும் என்று எப்படித்தான் தோன்றிற்றோ?சங்கீதத்துக்குத்தான் விநாச காலம் வந்துவிட்டதோ? கடவுளே அழிந்துகொண்டிருக்கும்போது, அவருடைய பெயர் அழிய எத்தனை நாளாகப்போகிறது?நாகஸ்வரம் அதே உறையில்தான் தொங்கிக்கொண்டிருக்கிறது. அவர் தந்தை காலத்திலேயே போட்ட முரட்டுப் பட்டு உறை. ஆனால் நாகஸ்வரம், வேறு எதற்கோ உறையாகி விட்டது!'நாம் செய்வதுதான் தவறா! ஜனங்களுக்குப் புரியாத சங்கீதம் சங்கீதமா? புரியாத ஒரு கலை கலையாக இருக்குமா?"'நம் வாத்தியத்தைக் கேட்டு, நாலு பேர் சந்தோஷப்பட வேண்டுமென்றுதானே கூப்பிடுகிறார்கள்? அவர்களை விட்டு விட்டு நாம்பாட்டுக்கு எங்கோ ஒரு உலகத்தில் திரிந்து கொண்டிருப்பது முறைதானா?'எத்தனையோ வருஷமாகக் கேட்டுக்கொண்டிருக்கிற கேள்விதான்.

ஒரு வருஷமாகத் தினம் தினம் இந்தக் கேள்வி வர ஆரம்பித்துவிட்டது. மலயமாருதத்தை ஒரு சஞ்சாரம் செய்துவிட்டு, திடீரென்று ஒரு கூத்தாடி மெட்டை வாசித்தான் தங்கவேலு. விடியற்காலை... என்ன அபஸ்வரம்! குரங்குக்கு லோலக்கும்

சட்டையும் போட்டு ஆட்டுகிறார் போல ஒரு தோற்றம் அந்தப் பாட்டைக் கேட்கும் போது அவர் முன் எழுந்தது. ஏதோ ஆவல் தூண்ட, பிள்ளை அவசர அவசரமாக உறையை அவிழ்த்து, நாயனத்தை உதட்டில் வைத்தார். அந்த அபஸ்வரம் அவருக்கு வரவில்லை. எந்த ஸ்வரத்திலும் சேராமல், ஒரு பிடி ஒன்று அவரைத் திணற அடித்தது. வாய் நிறையத் தண்ணீரை வைத்துக்கொண்டு மல்லாந்து படுத்தவாறே நீளமாகத் துப்பினால் நுனியில் போய் வளைந்து விழுமே அந்த மாதிரி ஒரு பிடி. 'என்ன ஸ்வரமடா இது?' யோசித்தால் ஆதார சுருதியில்கூட உதைத்துவிட்டுத் துண்டாக நின்றது அது!'அட இப்படி ஒரு சங்கீதமா? சுருதியை விட்டுவிட்டு ஒரு ஸ்வரமா? சீ...'சீ என்று சொன்னாரே ஒழிய அதுவும் ஒரு வித்தைதானே என்று மறுபடியும் அதைப் பிடித்துப் பார்த்தார் அவர். அந்தப் பிடி அவர் பிடியில் அகப்படவில்லை. அவர் பிடிவாதமும் பிடியின் பிடிவாதமும் சேர்ந்து போரைத் தொடங்கின. திணறி ஒரு சிரிப்புச் சிரித்தார் பிள்ளை.

"அப்படியில்லேப்பா... இதைப் பாருங்க" என்று குரல் கேட்டது.பிள்ளையாண்டான் தோப்பன்சாமி மாதிரி நிலையண்டை வந்து பிடியைக் கற்றுக் கொடுப்பதற்காக நின்றான்."பலே!""அது""எங்கே வாசி பார்ப்பம்!"பிள்ளையாண்டான் வாசித்தான்."அந்த அவஸ்வரத்தை – அப்பன் பேர் தெரியாத மாதிரி ஒரு ஸ்வரம் வருதே – அதை எப்படிடாலே பிடிக்கறே? எனக்கு வரமாட்டேங்குதே!"மறுபடியும் முயன்று பார்த்தார். வரவில்லை."இப்படிப் புடிச்சார்?""வேறு ஒரு பிடி.""அது நம்மடவங்க சங்கீதமால்ல போயிடுது?""இது யாருது?""இது வேறே.""எந்தத் தேசம்?""அது என்னமோ!"பிள்ளை இடுப்புல் சோமனைக் கட்டுக்கொண்டு எட்டு அங்கமும் தரையில்பட, ஒரு நமஸ்காரம் செய்து எழுந்தார்."யாருக்குத் தெரியுமுல்ல இது? இந்த அபஸ்வரத்துக்கு. இனிமே அந்தப் பக்கமே நான் பாக்கமாட்டேன்.""என்னாங்க இது?" ஒரு காபியைக் கொண்டு வந்த அவர் சம்சாரம் கண்ணை அகல விழித்தாள்."நம்ஸ்காரம்""யாருக்கு?""நீ பத்து மாசம் சுமந்து பெத்திருக்கயே, அவரு பாடற சங்கீதத்துக்கு""சும்மா ஒரு சினிமாப் பாட்டும்மா" என்றான் தங்கவேலு."ஏன் உங்களுக்கு வரல்லியா?""நூறு ஜன்மம் பாலாபிஷேகம் செய்தாத்தான் வரும் போல் இருக்கு!" என்று பிள்ளை சிரித்தார்.ஓர் ஒப்பந்தம் மாதிரி, சொல்லாமல் செய்துகொண்டார்கள், தந்தையும் பிள்ளையும் கல்யாண ஊர்வலங்கள் முடிகிற தருவாயில் சினிமாப் பாட்டுக்குச் சீட்டோ, உத்தரவோ வந்தால் அதைத் தங்கவேலு நிர்வாகம் செய்யவேண்டியது.

பிள்ளை எங்கேயாவது திண்ணையில் போய்ப் படுத்துக் கொண்டுவிடுவார்–o0Oo-இரவு வேளைகளில் புதிது புதிதாக இந்தப் பாட்டுகளைச் சாதகம் செய்துவந்தார் பிள்ளை. திடீரென்று காலையில் இதைக் கேட்டதுந்தான் அவருக்குத் தூக்கிவாரிப்போட்டது.பிள்ளை நாயனத்தைப் பார்த்தார்.வெள்ளைக்காரர்களாம்! சங்கீத கோஷ்டியாம்! சுத்தமான தெற்கத்திச் சங்கீதம் கேட்க வேண்டும் என்று ஆசையாம்.'எந்தச் சங்கீதம், கேட்டு வெகுகாலத்திற்குப் பிறகும் கூடக் கண்டா நாதத்தின் ஊசலைப் போல, ஹ்ருதயத்தில் ஒலிக்குமோ, மறையாமல் ஒலித்துக்கொண்டிருக்குமோ, அந்த மாதிரி சங்கீதம் கேட்க வேண்டுமாம்' என்று வக்கீல் மணிஐயர் முந்தாநாள் காலையில் வந்து சொன்னார்."எதுக்குய்யா அவங்களுக்கு இந்த வம்பெல்லாம்?" என்று ஆரம்பித்தார் பிள்ளை.

“கருவேப்பிலைக்கு, வெட்டிவேருக்கு, பாலுக்கு எல்லாத்துக்குந்தான் இமிடேசன் வந்திடுச்சு. சுத்தமாவது சங்கீதமாவது? என்னங்க பைத்தியம் இது?”“உலகம் இன்னும் அப்படிச் சீரழிஞ்சு போயிடலை. உங்களுக்கு என்ன அதெல்லாம்? நான் சொல்றேன். நீங்க வாசிக்க வேண்டியதுதானே.”“நாலு கீர்த்தனம் வாசியுங்கோ போதும். தவுல்கூட வாண்டாம். ஆத்மார்த்தமா, எப்படித் தனியா உட்கார்ந்திண்டு வாசிப்பேளோ, அந்த மாதிரி வாசிச்சா போதும், எதிரே இருக்கிறவன் சட்டையையும் நடையையும் உடையையும் பார்க்கக்கூட வாண்டாம்.

நீங்க பாட்டுக்குக் கண்ணை மூடிக்கொண்டு, ரெண்டு கீர்த்தனம் வாசிச்சாப் போதும்.”“ஓய், நீங்க பொல்லாத ஆளுய்யா....!” என்று சிரித்தார் பிள்ளை.“சட்டை கிட்டை போட்டுக்கணுமோ?”“உங்க இஷ்டம். வந்திருக்கிறவன் நிறைகுடமாக இருக்கிறான். பேசிண்டிருந்தேன். அப்படித்தான் தோணித்து. நீங்க சட்டை போட்டுண்டா என்ன? போட்டுக்காட்டா என்ன?”இரவு ஆறு மணிக்குக் கச்சேரி. என்ன வாசிக்கலாம் என்று கண்விழிக்கும்போதே திட்டமிடத் தொடங்கினார் அவர். நாராசம்போல் தங்கவேலுவின் புதுச் சாதகம் நினைவக் கலைத்துவிட்டது.மீண்டும் கசப்பையும் அலுப்பையும் ஒதுக்குவிட்டு அமைதியைத் தேடுவதற்காக ஒரு ராகத்தைப் படித்துக் கொண்டு மனதிற்குள்ளேயே அதன் வடிவைக் கண்டு, திகைத்துப் போய் ஆனந்த வெள்ளத்தில் திளைத்தன, அவருடைய மனம், ஆத்மா எல்லாம். அப்படியே சுவரில் சாய்ந்தபடியே தூங்கிவிட்டார் அவர்.–o0o-ஒற்றை மாட்டு வண்டியிலிருந்து இறங்கி, பிள்ளை வக்கீல் ஐயர் வீட்டில் நுழைந்தார். தங்கவேலுவும், வாத்தியங்களைத் தூக்கிக்கொண்டு ஒத்துக்காரரும் பின்னால் வந்தார்கள்.பெரிய ஹால். வாசலிலிருந்தே அவரைக் கையைப் பிடித்து அழைத்துப்போன வக்கீல் உள்ளே குழுமியிருந்த கோஷ்டியை ஒவ்வொருவராக அறிமுகப்படுத்தி வைத்தார்.“இவர்தான் பிலிப் போல்ஸ்கா, இந்த சங்கீத கோஷ்டியின் தலைவர்.”பிலிப் போல்ஸ்கா மகரிஷி மாதிரி இருந்தான்.

வயது எழுபது இருக்கும்போல் இருந்தது. தலையில் வழுக்கை இல்லை. பொல்லென்று வெளுத்துப்போன மயிர் தலையில் பறந்துகொண்டிருந்தது. சற்று நடுத்தர உடலம். கண் பெரிய கண். மேலும்கீழும் தொட்டும் தொடாததுமாக விழிகள் அமைந்திருந்தன. பார்த்தும் பார்க்காதவை போன்ற விழிகள்; நீலவிழிகள். ஆள் தூங்குகிறானோ, அல்லது வேறு எங்காவது நினைத்துக்கொண்டிருக்கிறானோ என்று சந்தேகம் எழுப்பும் விழிகள். அந்தக் கண்களை ஒரு விநாடி பார்த்தார் பிள்ளை. சுருக்குப் போட்டு இதயத்தை இழுப்பது போன்ற ஓர் உணர்ச்சி. அவர் உள்ளம் போல்ஸ்காவிடம் ஒரு தாவாகத் தாவிற்று.“நிறைகுடம்னு சொன்னீங்கள்ள, ஞாபகமிருக்கா?” என்று வக்கீலைப் பார்த்தார்.“இருக்கு.”“சரியான வார்த்தை! கண்ணைப்பாருங்க. முகம் எவ்வளவு அழகாயிருக்கு, பாத்தீங்களா?”“நானும் அதைத்தான் யோசிச்சிண்டிருக்கேன். நீங்க சொன்னதைச் சொல்லட்டுமா?”“வாண்டாம். முகஸ்துதி எல்லாம் நமக்குள்ளேயே இருக்கட்டும். தேசம் விட்டுத் தேசம் வாணாம். என்ன சொன்னேன்னு கேட்டான்னா, ரொம்பச் சந்தோசம் அவரைப் பார்த்ததிலேன்னு சொன்னான்னு சொல்லுங்க.”போல்ஸ்காவுக்குப் பிறகு கூட வந்திருந்த இருபது இருபத்தைந்து பேருக்கும்

வக்கீல், பிள்ளையை அறிமுகப்படுத்தினார்.மேலே ஏறி உட்கார்ந்து ஒத்துக்காரன் ஆரம்பித்ததும், ஓலையைச் சரிபண்ணிக்கொண்டார் பிள்ளை.

தங்கவேலு மேடைக்குப் பின்னால் உட்கார்ந்துகொண்டான்.நாட்டையைக் கம்பீரமாக ஓர் ஆலாபனம் செய்து கீர்த்தனத்தைத் தொடங்கினார்.போல்ஸ்காவின் முகத்தில் புன்முறுவல் தவழ்ந்தது. விழி மேலே செருகியிருந்தது. அமிருத தாரையாகப் பெருக்கெடுத்த நாதப் பொழிவில் அவன் தன்னை இழந்துவிட்டான் போல் தோன்றிற்று. நாதம் அவனுடைய ஆத்மாவை, காணாத லோகங்களுக்கும் அநுபவங்களுக்கும் இழுத்துச் சென்றது போல் தோன்றிற்று. சளைத்துப்போய் ஆற்றோடு போகிறவனைப் போல், இஷ்டப்படி வெள்ளம் தன்னை அடித்துப்போகும்படி விட்டுவிட்டான் அவன்.சட்டென்று நாதம் நின்றது. போல்ஸ்காவின் கண் இன்னும் அந்த அநுபவத்தில் திளைத்துக்கொண்டிருந்தது. மேலே செருகிய விழிகள் கீழே இறங்கிப் பிள்ளையைப் பார்க்க ஒரு நிமிஷம் ஆயிற்று.டையும் கால் சட்டையுமாகச் சப்பணம் கட்டு அமர்ந்திருந்த அந்தக் கூட்டம் பிள்ளையைப் பார்த்துக் கொண்டிருந்தது."ஐயா, ஒரு சின்னச் சோதனை வைக்கப்போறேன்" என்றார் பிள்ளை, வக்கீலைப் பார்த்து."என்ன?""பாருங்களேன்."வக்கீல் ஒன்றும் புரியாமல் அவரைப் பார்த்தார். பிள்ளையின் முகத்தைப் பார்த்த அவருக்கு ஒன்றும் புரிந்துகொள்ள முடியவில்லை."தஸ்ரிமா...மா" என்று ஆரம்பித்தார் பிள்ளை.சாமா ராகம் என்றூ அடையாளம் கண்ட வக்கீல், பிள்ளையை வைத்த கண் எடுக்காமல் பார்த்தார். ராகம் கொஞ்சம் கொஞ்சமாக மலர்ந்துகொண்டிருந்தது.

நடுநிசியில் தோட்டத்தில் மலர்ந்து மணத்தைப் பெருக்கும் – அமைதியான மணத்தை வீசும் – பவழமல்லியின் நினைவு அவருள்ளத்தில் தோய்ந்தது. அவர் சிரம் அங்கும் இங்கும் விட்டுவிட்டு வரும் அந்த மணத்திற்கு இசைவாக அசைந்துகொண்டிருந்தது. ராகம் வளர்ந்துகொண்டிருந்தது.யாரோ கையாட்டுகிற மாதிரி இருந்தது. திரும்பிப் பார்த்தார் வக்கீல். போல்ஸ்காதான். அவன் உடல் ராகத்தோடு இசைந்து அசைந்துகொண்டிருந்தது. இரண்டு கைகளையும் எதையோ வாங்கிக் கொள்வதுபோல் நீட்டிக் கொண்டிருந்தான். முகத்தில் ஒரு புன்சிரிப்பு. சன்னதம் வந்தவன் மாதிரி அந்த முகம் நினைவிழந்து எங்கேயோ ஆகாசத்தைப் பார்த்துக்கொண்டிருந்தது.திடீரென்று உட்கார்ந்திருந்தவன் எழுந்துவிட்டான். கையை நீட்டியபடியே நின்று கொண்டு, மெல்லிய காற்றில் அடையும் சம்பங்கி மரம் மாதிரி ஆடினான். ராகம் இன்னும் வளர்ந்தது.நின்று கொண்டிருந்தவன் அடியெடுத்து வைத்தான். கைகளை நீட்டி ஏந்திக்கொண்டே அடியெடுத்து வைத்தான். கைகளை நீட்டு ஏந்திக்கொண்டே அடியெடுத்து வைத்தான். நடந்து நடந்து மேடைமுன் வந்ததும், மெதுவாக முழந்தாளிட்டு உட்கார்ந்துகொண்டேன். கையை மேடையோரத்தில்வைத்து முகத்தைப் புதைத்துகொண்டான்.வக்கீலும் போல்ஸ்கா கோஷ்டியும் போல்ஸ்காவையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். போல்ஸ்கா எந்த உலகத்தில் அலைகிறானோ? எந்த வானில் திரிகிறானோ?அவன் தவத்தைக் கலைத்துவிடப் போகிறோமே என்றூ பயந்தாரோ என்னவோ பிள்ளை.

ராக ஆலாபனத்தைக்கூட ஓர் இடத்தில் நிறுத்தாமல் அப்படியே கீர்த்தனையைத் தொடங்கிவிட்டார்."சாந்தமுலேகா..." குழந்தையைக் கொஞ்சுகிறது போல அந்த அடி கொஞ்சிற்று. சத்யத்தைக் கண்டு இறைஞ்சுவது போல் கெஞ்சிற்று.போல்ஸ்காவின் மெய் சிலிர்த்தது. முதுகு ஒரு சொடுக்குடன் உலுக்கியதில் தெரிந்தது.கீர்த்தனம் முடிந்தது. வாத்தியம் நின்றது.மேடையில் கைவைத்து, முகத்தைப் புதைத்துக் கொண்டிருந்த போல்ஸ்கா ஓர் எட்டு எட்டிப் பிள்ளையின் கையைப் பிடித்தான். கெஞ்சுகிறாற்போல் ஒரு பார்வை.பிள்ளை திருதிருவென்று விழித்தார். தைரியத்தைத் தருவித்துக்கொண்டு குழந்தையைப் பார்த்துச் சிரிப்பது போல ஒரு சிரிப்புச் சிரித்தார்."மிஸ்டர் பிள்ளை, மிஸ்டர் பிள்ளை" என்று கையைப் பிடித்துக்கொண்டே கெஞ்சினான் போல்ஸ்கா. குரல் நடுங்கித் தழுதழுத்தது."மிஸ்டர் பிள்ளை! வேறு ஒன்றையும் வாசிக்காதீர்கள். என் உயிர் போய்விடும் போல் இருக்கிறது. வேறு வேண்டாம்"பிள்ளை பாஷை தெரியாமல் விழித்தார்; வக்கீலைப் பார்த்தார்."மிஸ்டர் பிள்ளை! இதையே வாசியுங்கள்– இல்லாவிட்டால், என்...என் உயிர் போய்விடும்.""பிள்ளைவாள், சாந்தமுலேகாவையே திரும்பி வாசிக்கச் சொல்றார்" என்று நிசப்தத்தைக் கலைக்கத் துணிவில்லாமல் மெதுவாகச் சொன்னார் வக்கீல்.மீண்டும், "சாந்தமுலேகா!""எஸ், எஸ்" என்றார் போல்ஸ்கா.தலை அசைந்துகொண்டிருந்தது. கீர்த்தனம் முடிந்தது.

"நிறுத்த வேண்டாம்" என்று கெஞ்சினான் போல்ஸ்கா."நிறுத்தாதிங்கோ பிள்ளைவாள். ஆவேசம் வந்தவன் மாதிரி இருக்கான். பேசாமே வாசியுங்கோ."மீண்டும் அதே நாதம் பொழிந்தது.ஐந்து ஆறு தடவை திருப்பித் திருப்பிக் கீர்த்தனத்தை வாசித்து முடித்தார் பிள்ளை. கடைசியில் நாதம் மௌனத்தில் போய் லயித்ததுபோல, இசை நின்றது.போல்ஸ்கா அப்படியே தலையை அசைத்துக்கொண்டே இருந்தான். கோயில் மணியின் கார்வையைப் போல அந்த நிசப்தத்தில் அவன் சிரமும் உள்ளமும் ஆத்மாவும் அசைந்தது ஊசலிட்டுக்கொண்டிருந்தன. மூன்று நிமிஷம் ஆயிற்று.வக்கீல் ஒரு பெருமூச்சு விட்டார். தொண்டையில் வந்த கரகரப்பைப் பயந்துபயந்து கனைத்தார்.திரும்பிப் பார்த்தான் போல்ஸ்கா."மிஸ்டர் ஐயர், மிஸ்டர் பிள்ளை. இதில் ஏதோ செய்தி இருக்கிறது. எதோ போதம் கேட்கிறது. எனக்கு ஒரு செய்தி; எந்த உலகத்திலிருந்தோ வந்த ஒரு செய்தி கேட்கிறது, அந்தப் போதத்தில்தான் திளைத்துக்கொண்டிருக்கிறேன். இன்னும் எனக்கு வேகம் அடங்கவில்லை. செய்திதான் அது. எனக்காக அனுப்பிய செய்தி. உலகத்துக்கே ஒரு செய்தி. உங்கள் சங்கீதத்தின் செய்தி அது!"குழந்தையப் போல் சிரித்துக்கொண்டே நினைத்ததைச் சொல்லத் தெரியாமல் தடுமாறினார்."புரிகிறதா?" என்று கேட்டான்."புரிகிறாற்போல் இருக்கிறது" என்றார் வக்கீல்."எனக்கு நன்றாகப் புரிகிறது. அது செய்தி.

உலகத்திலேயே எந்தச் சங்கீதமும் இந்தச் செய்தியை எனக்கு அளிக்கவில்லை. இரண்டு கைகளையும் நீட்டி அதை நான் ஏந்தி வாங்கிக் கொண்டுவிட்டேன். ஒருவரும், ஒரு கலையும், ஒரு சங்கீதமும் கொடுக்காத செய்தியை நான் இப்போது பெற்றுக்கொண்டுவிட்டேன். நீங்கள் இப்போது என்னை உடலை விட்டுவிடச் சொன்னால், நான் விட்டுவிடத் தயார்" என்றான்."என்னாங்க?" என்று கேட்டார் பிள்ளை.வக்கீல்

மொழிபெயர்த்துச் சொன்னார் கேள்வியை."என்ன தோன்றிற்று என்று கேட்கிறாரா? மிஸ்டர் ஐயர், மிஸ்டர் பிள்ளை! உலகம் முழுவதும் பிணக் காடாகக் கிடக்கிறது. ஒரே இரைச்சல், ஒரே கூட்டல், ஒரே அடிதடி. புயல் வீசி மரங்களை முறிக்கிறது. அலை உயர உயர எழுந்து குடிசைகளை முழுக அடிக்கிறது. இடி விழுந்து சாலையின் மரங்கள் பட்டுப்போகின்றன. கட்டிடம் இடிந்துவிழுகிறது. எங்கே பார்த்தாலும் ஒரே இரைச்சல்... இந்தப் போர்க்களத்தில், இந்த இரைச்சலில், நான் மட்டும் அமைதி காண்கிறேன். மெதுவாக இந்த இரைச்சல் தேய்ந்து, இந்தப் பிரளயக் கூச்சலும் இரைச்சலும் மெதுவாக அடங்கித் தேய்கிறது. ஓர் அமைதி என் உள்ளத்தில் எழுகிறது. இனிமேல் இந்த இரைச்சலும் சத்தமும் யுத்தமும் என்னைத் தொடாது. நான் எழுந்துவிட்டேன். அரவமே கேட்காத உயரத்திற்கு, மேகங்களுக்கும் புயலுக்கும் அப்பாலுள்ள உயர்விற்கு, எழுந்து, அங்கே அமைதியை, அழியாத அமைதியைக் கண்டுவிட்டேன். இந்த அமைதி எனக்குப் போதும். இப்போதே நான் மரணத்தை வரவேற்று, இந்த அமைதியில் கலந்துவிடத் தயாராயிருக்கிறேன்."அமைதியுடன்தான் பேசினான் போல்ஸ்கா.

வக்கீல் மொழிபெயர்த்துச் சொன்னார்.பிள்ளை திகைத்துப்போனார்."அமைதியா, அப்படியா தோணித்து இவருக்கு!""ஆமாம்.""நிஜமாவா?...அப்படீன்னா, நம்ம தியாகராஜ ஸ்வாமியும் அமைதி வேணும்தானே, சாந்தம் வேணும்னு தானே இந்தக் கீர்த்தனத்திலே பாடியிருக்கிறாரு. எவ்வளவு ஏக்கத்தோடு கேட்டிருக்காரு... அதேயா இவருக்கும் தோணிச்சாம்?""அப்படித்தானே சொல்கிறார் இவர்.""வார்த்தைகூடச் சொல்லையே நான். எப்படி இவருக்குத் தெரிஞ்சுது?"திகைத்துப்போய் உட்கார்ந்தார் பிள்ளை."மிஸ்டர் போல்ஸ்கா, இந்தப் பாட்டும் அமைதி வேண்டும் என்றுதான் அலறுகிறது. நீங்கள் சொன்ன புயல், இடி என்ற மாதிரியில் சொல்லாவிட்டாலும், அமைதி, அமைதி என்றுஅமைதியைத்தான் கடைசி லஷ்யமாக இந்தப் பாட்டு இறைஞ்சுகிறது.""அப்படியா!" என்று போல்ஸ்காவும் சமைந்துபோய் விட்டான்."செய்திதான் இது. நாதத்துக்குச் சொல்லவா வேண்டும்! எந்த வரம்பையும் கடந்து செய்தியை அது கொடுத்துவிடும்" என்றான் அவன்."இந்தக் கையை கொடுங்கள். வாசித்த இந்தக் கையைக் கொடுங்கள். கடவுள் நர்த்தனமாடுகிற இந்த விரலைக் கொடுங்கள். நான் கடவுளை முகர்ந்து முத்தமிடுகிறேன்" என்று பிள்ளையின் விரலைப் பிடித்து உதட்டில் வைத்துக் கொண்டான் போல்ஸ்கா.பிள்ளைக்கும் ஒரு செய்தி கிடைத்துவிட்டது!

## வீடும் வெளியும்

வெகு காலமாக ஓர் ஆசை; சின்னப் பையனாக இருந்த போதே முளைத்த ஆசை – யாரும் இல்லாத ஒரு காடு; பரந்த காடு; புலி, கரடி இல்லாத காடு. அங்கே, நாணலும் புல்லும் வேய்ந்த குடிசை. அதன் வாசலில் ஓர் ஆறு – ஆற்றின் இரு பக்கமும் ஆலும் அரசும் நாவலும் வாகையும் நெடியனவாக நிற்கின்றன. ஆற்று நீர் மந்தமாக நகர்கிறது. சூரியன் மரங்களின் இடுக்கு வழியே தங்க ஊசிகளைத் தோகையாய் விரித்துக் கொண்டிருக்கிறான். ஆற்று நீரில் கணுக்காலளவில் நின்று இரண்டு கைகளையும் சேர்த்து, நீரை அள்ளி அர்க்கியமாக விழவிடுகிறேன். ஐயோ! ஐயோ! என்ன சாந்தி! என்ன

சாந்தி என்னுள்ளே நிரம்பி வழிகிறது! பெரிய இன்பம் வேண்டும் என்று ஆசைப்படும் போதெல்லாம இந்தக் காட்சி தான் என்முன் நிற்கிற வழக்கம். ஆனந்தத்தின் எல்லையாக இது என் உள்ளே பொருள் கொண்டு நிற்கும். என்றோ ஒரு நாள் நான் இப்படி நிற்கப்போகிறேன். சாசுவதமாக நிற்கப் போகிறேன் என்ற ஒரு நம்பிக்கையும் உண்டு. பள்ளிக்கூடம் இராது, வீடு இராது, வேலை இராது, அப்போது.இப்போது அந்த ஆனந்தமே கைக்கு எட்டிவிட்டாற்போல் இருந்தது. அந்தக் காலத்திலிருந்து நிலைத்துவிட்ட கனவுதான் நனவாகிவிட்டதா? அதே காட்சியின் நடுவே நின்று கொண்டிருக்கிறேன்.

காவிரி அரை மைல் அகலத்துக்குப் பரந்து நகர்கிறது. முக்கால் ஆற்றின் வெள்ளம். நான் இந்த ஓரத்தில், மணலாக இருந்த பகுதியில் நிற்கிறேன். இக்கரையிலும் அக்கரையிலும் வாழைத் தோப்புகள். அப்பால் வானையளக்கும் சவுக்கைக் காடு. குடிசைக்குப் பதில் ஒரு சின்னக் கோயில். இக்கரையில் எனக்குப் பின்னால் நிற்கிறது. கண்ணுக்கு எட்டிய வரையில் ஜன நடமாட்டமே இருப்பதாகத் தெரியவில்லை. ஒரே மௌனம். நீர் தனக்குத்தானே மோதி ஓடுகிற சலசலப்பைத் தவிர, ஓர் ஓசை இல்லை. அக்கரை அரை மைல் தூரம். அங்கே தோப்பில் பாடும் பறவை ஒலிகூடக் காதில் விழாமல் அந்த மோனத்தில் அடங்கி விடுகிறது.நான் தன்னந் தனியாக நிற்கிறேன். குளிக்கக்கூட மனம் இல்லை. சட்டையைக் கழற்றிப் பக்கத்தில் வைத்து மணல்மீது உட்கார்ந்தேன். இரண்டு மூன்று நாளாகவே மழை பெய்து காற்று குளிர்ந்து விட்டிருந்தது. இன்று இரவுகூடப் பெய்யப் போகிறோம் என்று சொல்வதுபோல் வான் நீலத்தில் பொதி பொதியாக அங்கும் இங்கும் திரண்டு நின்ற மேகங்களுக்குள் சூரியன் மறைந்தான். வெயில் மேலே பட்டதும் படாததுமாக விழுகிறது. சூடு இல்லாத வெயில். காலேஜிலிருந்து வெளியே வந்தபிறகு இப்படி உட்காரும் அநுபவமே அற்றுப்போய்விட்டது. அதனால்தான் குளிக்ககூட மனம் இல்லாமல் ஓடும் நீரில் ஆவியைக் கொடுத்து உட்கார்ந்து கிடக்கிறேன். ஒரு நிறைந்த சூனியம்.

நடு நடுவே தனிமையின் நினைவும் வருகிறது.மணி ஒன்பதுக்குமேல் இருக்கும். ஊர்க்காரர்கள் விடிய விடிய வந்து குளித்துவிட்டுப் போயிருக்க வேண்டும். இல்லாவிட்டால் இப்படியா நிர்ஜனமாக இருக்கும்? பட்டணத்தில் வெறும் கடலைத்தான் பார்க்கலாம். நீரின் சீற்றத்தைத்தான் பார்க்கலாம். இங்கே பரந்த நீர், பசுமை, சோலை, நிசப்தம் எல்லாவற்றிலும் தோய்ந்து கிடக்கமுடிகிறது. இருபது வருஷம் கழித்து இப்படி ஒரு வாய்ப்பு எப்படிக் கிடைத்தது? என் நண்பனை இந்த மோனக் கடவுள்தான் தூண்டியிருக்க வேண்டும்.ஏதோ முனகல். யாரோ பேசுகிறார்கள். இல்லை, பாடுகிறார்கள். 'தன்மாதச்வா அஜாயந்த, ஏகேசோபயாதத;' திரும்பிப் பார்த்தேன் இவர்தாம் முனகிக்கொண்டு வருகிறார். கிழவர்-கையில் ஒரு குடம், ஒரு செம்பு, கழுத்தில் சின்ன ருத்திராட்ச மாலை. இடையில் தூக்கிச் சொருகிய பஞ்ச கச்சம். என்னைப் பார்க்கிறாரா? இல்லை. பார்வை சுமார் போலிருக்கிறது. கிட்ட வந்த பிறகுதான் என்னைப் பார்க்க முயலுகிறார். கண்ணை இடுக்கிக் கொண்டு. ஆனால் ஒன்றும் கேட்கவில்லை. வாய்சொல்லும் ஸூக்தம் முடியவில்லை. 'தேவா யத் யஜ்ஞம் தந்வாநா;, அபத்நந் புருஷம் பசும்...' புருவத்தைச் சுளித்து என்னைப் பார்த்துக் கொண்டே வாய்

முணுமுணுக்கிறது. செம்பைக் கீழே வைக்கிறார். குடத்தை வைக்கிறார். ரசவாதம் போலச் செம்பின்மீது தங்கமெருகு ஏறுகிறது.

'ஸ்ர்வம் ம நிஷாண.'"யாரு? வாசுவா?" என்று கண்ணை இடுக்கிக் கொண்டே கேட்டார் அவர். 'ஸூக்தம்' முடிந்ததும்."இல்லை.""பின்னே யாரு?""அசலூர்.""அசலூரா? எந்த ஊரு?""பட்ணம்.""இங்கே யாரையாவது பார்க்க வந்துதாக்கும்?""ஆமாம், ரத்னாசலத்தைப் பார்க்க வந்திருக்கேன்.""ரத்னாசலத்தையா? அவருக்குப் பந்துவோ??""இல்லை.""சிநேகமோ?""இன்னிக்குத்தான் சினேகமானார். என் சிகேகிதர் ஒருத்தர் கல்கத்தாவிலிருந்து எழுதியிருந்தார். ரத்னாசலத்தின் பிள்ளை ஜாதகத்தை வாங்கியனுப்புன்னு. அதுக்குத்தான் வந்தேன். ஊர் அழகைப் பார்க்கப் பார்க்கத் தாங்கவில்லை. அவரும் குளிச்சுச் சாப்பிட்டுவிட்டு ஜாதகத்தை வாங்கிண்டு போகலாமேன்னார், தங்கிவிட்டேன்.""நீங்க சொல்லணுமா? இதோ நான் இருக்கேனே, நான் இந்த ஊரே இல்லை. இந்த ஜில்லாவே இல்லை. தென்னார்காடு ஜில்லா. முப்பது வருஷத்துக்கு முன்னாலே ஒரு நாள் இங்கே உத்யோக காரியமாப் 'காம்ப்' போட்டேன். வந்து காலடி வச்ச க்ஷணமே தீர்மானம் பண்ணினேன். ரிடையரானப்புறம் இங்கேதான் நிரந்தரமாத் தங்கறதுன்னு. அதுக்கப்றம் அஞ்சு வருஷம் உத்யோகம் பார்த்துட்டு ரிடையரனேன். மறுமாசமே இங்கு வந்து பத்துக் காணி நிலத்தை வாங்கினேன். ஒரு வீட்டையும் வாங்கினேன். செட்டில் பண்ணிப்பட்டேன். இருபத்தஞ்சு வருஷம் ஆயாச்சு, இது ஊரா? கிராமமா? த்போவனம் இல்லையோ!" என்று பரவசமாகப் பேசிக்கொண்டிருந்த கிழவர், குடத்தை மணல் போட்டுத் தேய்க்கத் தொடங்கினார். "ஸ்நானத்தைப் பண்ணிட்டு இங்கே இப்படியே மணலில் கால் மணி உட்காருங்களேன். பிரம்ம சாட்சாத்காரம் வறதா இல்லையா, பாருங்கள்.

மோனநிலை, சமாதி எல்லாம் உட்கார்ந்து கண்ணை மூடின மாத்திரத்திலே லபித்து விடும். அப்பேர்ப்பட்ட இடம்" என்று குடத்தை அழுத்தித் தேய்த்தார்.அவர் மிகைப்படுத்தவில்லை. குளித்துவிட்டு உடனே உட்கார்ந்து கண்ணைமூடி அந்த மோனத்தை எட்ட வேண்டும் போல் இருந்தது. அப்படி உட்காரக்கூட அவசியம் இல்லை. கண்ணைத் திறந்த நிலையிலேயே பேசும் போதே அப்படித்தான் இருந்தது. ஆற்று வெளியில் அகண்ட மோனத்தில் எங்கள் பேச்சு, பெரு வெள்ளத்தில் பிடிமணலைத் தூவியது போல் அமுங்கிக் கிடந்தது."ஜாதகம் வாங்கியாச்சோ?" என்று கேட்டார் கிழவர்."இனிமேல்தான்.""பையன் நல்ல பையன். டாட்டா நகர். ஆயிரத்துக்கும் மேலே சம்பாதிக்கிறான். கண்ணுக்கும் நன்னா இருப்பன். பையன் நல்ல பையந்தான்" என்று அடுத்த கேள்வியைக் கேளேன் என்கிறாற்போல் சொன்னார். நான் எப்படிச் சும்மா இருப்பது? "பையன் நல்ல பையன் தான்னா?" என்று கேட்டு விட்டேன்."நமக்குப் பையன்தானே ஸ்வாமி முக்கியம்? அதுக்காகச் சொன்னேன். தறைமுறை தலைமுறையா விசாரிச்சுண்டு போனா, சாத்தியப்படுமோ?" என்றார் அவர்."விசாரிக்கத்தானே வேணும்? ஏன், ரத்னாசலத்தின் குடும்பம் குலம் கோத்ரம் நல்லதுதானே?""ஏ ஒன் குடும்பம், சந்தேகமே வேண்டாம். ரத்னாசலந்தான் சரியா இல்லை. நல்லவர்தான். ஆனா சகவாசம் பொல்லாதோல்லியோ? முப்பது வயசிலே யாரோ அவரை ரேஸு, ரங்காட்டம்னு ஆசை

காட்டி இழுத்து விட்டுட்டான். வேலையில் சூரன். அதனாலெதான் பல சீனியரை எல்லாம் பார்க்காம, சின்ன வயசாயிருந்தாலும் பாதகமில்லேன்னு டிப்டி கலெக்டராப் போட்டா அவரை. நன்னந்தான் நிர்வாகம் பண்ணினார்.

முக்காங்குடிப் பண்ணையோட ரொம்ப சிநேகமாயிருக்க ஆரம்பித்தார். அவனுக்கும் சின்ன வயது. பரம்பரைச் சொத்து. ஆத்திலே தண்ணி அமோகமாகப் போறது. காரியஸ்தன், ஆட்கள் எல்லாம் வெள்ளாமையைப் பண்ணி நெல்லும் பணமுமாகக் கொண்டு குடுத்துடறான். இந்தப் பிரபுகளுக்கு வேலை ஏது? வர்ற பணத்தை, பாங்கிலே போட வேண்டியது, சாப்பிட வேண்டியது, செலவழிக்க வேண்டியது. படிப்பு இருந்தா ஒரு பிஸ்னஸ் பண்ணுவோம், தொழில் பண்ணுவோம், பெருக்குவோம்னு மனசு பாயும். முக்காங்குடிப் பையனுக்கு மெட்ரிகுலேஷனே தேறலே. குதிரைப் பந்தயத்துக்குப் போவன். ஜமாவா ஹோட்டலுக்குப் போவான். அவனோட போய் டிப்டி கலெக்டர் சேரலாமோ? சேர்ந்தாலும் அவன் பழக்கத்தையெல்லாம் கத்துக்கலாமோ? என்னமோ கஷ்டக்காலம்! கத்துனுட்டார். கெட்டதுதானே சீக்கிரமாக் கத்துக்க முடிறது? ரத்னாசலத்துக்கு ஆயிரம் ஆயிரமாக் குதிரைப் பந்தயத்திலே போக ஆரம்பிச்சுட்டுது. சொத்தை அடகு வச்சு ஆடினார். ஆபீஸார்ஸ் கிளப்பிலே வேற ரங்காட்டம். கடனுக்குப் பூர்வீகம் எல்லாம் போச்சு. மாமனார் வந்தார். நாலுநாள் உட்கார்ந்து மிஞ்சியிருக்கிற நாலு காணியைப் பொண்ணு பேருக்கு எழுதி வைக்கச் சொல்லிட்டுப் போனார். அதை எடுக்க முடியலியா? வெளியிலே கடன் வாங்கினார் ரத்னாசலம்.

கடன்காரர்கள் சர்க்காருக்கு எழுதிப்டான்கள். சம்பளத்தை ஈடுகட்டிப்ட்டான் சர்க்காரிலே. கடைசியிலே இந்தச் சள்ளை தாங்காம, கட்டாயமா ரிடயர் பண்ணிவிட்டான். நாப்பத்தஞ்சு வயசிலே ரிடயராகிப் பத்து வருஷமா ஊரோட உட்கார்ந்திருக்கார். அவரோட தாத்தா நாள்ள நாப்பது காணி சொத்தாம். எப்படி இருந்தது குடும்பம். எப்படியாயிடுத்து! நினைச்சா வருத்தமாத்தானே இருக்கு? சொல்லிப்டேன். ஆனா வீணாச் சொல்லப்படாது, பையன்கள் தங்கமும் வெள்ளியுமாத்தான் பொறந்திருக்கு. இப்ப மூத்த பையனுக்குத்தானே ஜாதகம் வாங்க வந்திருக்கேள்?" "ஆமாம்." "தங்கமான பையன். ரெண்டாவது பையன் அதுக்கு மேலே. அவன் கணக்குப் படிச்சுட்டுப் பாரிஸுக்கு மேல் படிப்புக்கு போயிருக்கான். மூணாவது பையன் காலேஜிலே படிக்கிறான். வீணாச் சொல்லப்படாது, தங்கமான பையன்கள். அவருக்கு என்னமோ கஷ்டகாலம், புத்தி இப்படிப் போச்சு; தலையைக் குனிஞ்சுக்கும்படியா ஆயிடுத்து." "வேறே ஒண்ணும் பழுது இல்லையே?" "பழுதே கிடையாது ஸ்வாமி. இந்த இடம் கிடைச்சுதுன்னா அதிஷ்டம். உங்க சிநேகிதர் என்ன பண்ணிண்டிருக்கார்?" "அவரும் பெரிய உத்தியோகந்தான். ஒரு பெரிய கம்பெனியிலே விற்பனைப் பிரிவுக்குத் தலைவரா இருக்கார்." "பிசினெஸ் நெளு தெரிஞ்சவர். லோகம் தெரிஞ்சவர். இல்லாட்டா ஜாதகம் வாங்கறதுக்கே நேரே உங்களை வரச் சொல்லி எழுதுவாரா? முடிச்சு விடுங்கோ" என்றார்; "அது சரி நீங்க என்ன பண்றேள் பட்டணத்துலே?"வேலையைச் சொன்னேன்.

"சொந்த ஊர்?"அதையும் சொன்னேன்."அதுவும் செழிப்பான ஜில்லா தான். ஆனா அதுக்கும் இதுக்கும் ஒறை போடக் காணாது. உங்க ஊர்லெ நூறு ஏக்கரும் சரி; இந்த ஊர்லே பத்து

ஏக்கரும் சரி. வருஷம் முழுக்க ஆத்திலே பிரவாகம் போயிண்டே இருக்கும். கழனியும் காடும் விளைஞ்சிண்டே இருக்கும். இல்லாட்டா எங்கேயோ திருக்கோவிலூர் கிட்டப் பிறந்துவிட்டு இங்கே வந்து பணத்தைக் கொட்டி வாங்குவேனா? பத்துக்காணிதான், உங்க ஊர்லெ ஒண்ணரை வேலின்னு சொல்லுவா. ஆனா இந்தப் பத்துக் காணியும் உங்க ஊர்லெ ஏழெட்டு வேலி வாங்கறத்துக்கு சமம்னேன். என்னமோ பகவான் மனசிலே பூந்து வாங்குன்னு நல்ல புத்தியைக் கொடுத்தார். வாங்கினேன். சௌக்யமா இருக்கேன். சௌக்கியமா சாப்பிடறது இருக்கட்டும்; இந்த எடத்தைச் சொல்லுங்கோ, ஒரு நாளைக்கு இப்படிக் குளிக்கக் கெடைக்குமா உங்க ஊர்லியும் எங்க ஊர்லியும்? பாருங்கோ, அகண்ட சச்சிதானந்தமே முன்னாலெ நிக்கறாப்பலவே இருக்கா இல்லையா? இருபத்தஞ்சு வருஷமா ஒரு நாள் பெசகலெ. இங்கே வந்து குளிக்கிறேன். கோயில் திண்ணையிலே உட்கார்ந்து கண்ணை மூடிக்கிறேன். கால தேசம் எல்லாம் அழிஞ்சு போறது. எத்தனை நேரம் உட்கார்ந்திருக்கேன்னு எனக்கே தெரியலை.

ஒரு மணியோ, ரெண்டு மணியோ, இப்ப வயசு எண்பது முடிஞ்சு போயிடுத்து. தள்ளலை. இல்லாட்டா இப்படியா ஒன்பது மணிக்கு வருவேன் ஸ்நானத்துக்கு? பாஷண்டன் மாதிரி? நான் வந்து குளிச்சு, ஜபத்தை முடிச்சிண்டு எழுந்துக்கறபோதுதான் சூரியோதயம் ஆகும். ரெண்டு வருஷம் ஆச்சு. முடியலை.”கிழவர் ஒல்லி அல்ல; நடுத்தரப் பருமன். நல்ல சதைப்பற்று. ஆனால் எண்பது வயசு என்று சொல்லமுடியவில்லை.குளிக்கத் தொடங்கினார் அவர். நானும் குளிக்கத் தொடங்கினேன். மீண்டும் மீண்டும் அவர் ஊரின் வளத்தையே சொல்லிக் கொண்டிருந்தார். என் ஜில்லா டெல்டாவானாலும் இந்த ஊருக்குக் கால்தூசு பெறாது என்று என் மண்டையில் ஏற்றிக் கொண்டேயிருந்தார்.“ஒங்க ஊர்லே ஒரு ஏக்கர் என்ன விலையாறது இப்ப?”“சுமாரா இருந்தா மூவாயிரம் ஆகும். நல்லதாயிருந்துதுன்னா ஐயாயிரம்.”“ரொம்ப நல்லதாயிருந்தா?”“ஏழாயிரம் ஆகலாம்.”“இந்த ஊர்லெ படுமோசமான பூமியாயிருந்தா ஏக்கர் பன்னண்டாயிரம், ஒண்ணா நம்பர் நிலமாயிருந்தா இருபதாயிரம் முப்பதாயிரம் ஆகும். இருந்தாலும் குடுக்க மாட்டான். லட்ச ரூபா குடுத்தாலும் கெடைக்காதுன்னேன். நானே அந்தக் காலத்திலே, நெல்லு கலம் ஒண்ணே கால் ரூபா வித்த காலத்திலே, காணிக்கு எட்டாயிரம் குடுத்து வாங்கினேன்னா, இப்ப கேப்பானேன்? இப்ப ரூபா மதிப்புத்தான் ஆறிலே ஒண்ணுகூட இல்லையே. அப்ப படி மூணு அணா அரிசி. இப்ப ஒண்ணரை ரூபாய்க்குக் கெடைக்கலே. பாத்துக்குங்கோ!”“நீங்க ரொம்ப தீர்க்க தரிசனத்தோடதான் வாங்கியிருக்கேள்.

”“தீர்க்கமாவது தரிசனமாவது! ஏதோ வாச்சுது. எங்க தகப்பனார் இருந்து, அவருக்கும் நிலபுலன்னு இருந்தா இப்படி வாங்க விட்டிருப்பாரா? அவரும் இல்லை. ஒரு குழி நிலமும் அவருக்கு இல்லை. ஊரிலே அவருக்கு நிலம் இருந்திருந்தா, மேலே வாங்கிறதை அங்கன்னா வாங்கச் சொல்லியிருப்பார்? எனக்கும் சுயார்ஜிதம், நானாக் கஷ்டப்பட்டேன்? சம்பாதிச்சேன். அஞ்சு பொண்ணுக்குக் கல்யாணம் பண்ணினேன். மிச்சம் இருக்கிறதை, பகவானேன்னு இங்கே கொண்டு போட்டேன். போட்டேனோ பிழைச்சேனோ! ஒண்ணும் குறைச்சல் இல்லாம ஏதோ நடந்துண்டு வரது! காவேரி ஸ்நானம்.”“நிஷ்டை!”“நிஷ்டை, சமாதி, அகண்ட சச்சிதானந்தத்தை இந்த இடத்திலேன்னா பார்க்கணும்? வானாகி,

வெளியாகி, எங்கும் பிரகாசமாகி, நின்ற பரிபூரண நந்த பரமே என்பாளே, அதை இங்கேன்னா பார்க்கணும்! இந்த ஊர்லே இருக்கிறவாளுக்கு அது தெரியலே. நிலம்புலம், சாகுபடி, மாடுகன்னுன்னு காசே தியானமா, பரம வ்ராத்யன்கனா இருக்கான்கள். போகட்டும் போகட்டும். 'அத்வைதம் கோடிஜன்மஸு' ங்கறாப்பல கோடி ஜன்மம் எடுத்தால்தானே அத்வைத ஆசை வரும்?"இருபத்தைந்து வருஷமா ஒரு நாள்கூட விடாமல் இங்கே குளித்து, தினமும் அகண்ட மோன வெளியில் ஆழ்ந்துவிடும் கிழவரைக் கண்டு அசூசையாகத்தான் இருந்தது. அவர் மணலையடைந்து தலையைத் துவட்டிக் கொண்டார்.

"சர்க்கார் உத்யோகத்திலேருந்துதான் ரிடையரானாப்பலையாக்கும்?" என்று கேட்டேன்."ஆமாம் ஸ்வாமி, தாசில்தாரா இருந்தேன். கௌரமா இருந்தேன். நல்ல வேளையா அப்பவே ரிடயராயிட்டேன். இப்பத்தான் ஜாதி வாண்டாம், மதம் வாண்டாம், எல்லோரும் ஒண்ணாயிடுங்கோங்கறாளே. இதுக்கெல்லாம் முன்னாலேயே நான் ஒதுங்கிட்டேன்."என்னுடைய மோனங்கூடச் சற்றுக் கலைந்தது. தாசில்தாருக்கு அந்தக் காலத்தில் இருநூறு ரூபாய்தான் சம்பளம். அந்தச் சம்பளத்தை வைத்துக் கொண்டு ஐந்து பெண்களுக்குச் கல்யாணம் செய்து, எண்பதாயிரம் ரூபாய்க்குப் பத்துக்காணி நிலம் வாங்கி, ஒரு வீடும் வாங்கி... முப்பது வருஷம் இரு நூறு ரூபாய் சம்பளம் வாங்கினாலும் அதச் செலவழிக்ககாமல் சாப்பிடாமல் இருந்தால்தானே எண்பதாயிரம் சேர்த்திருக்க முடியும்?சிறிது நேரம் இந்தப் பிரமாண்ட சாதனையை நினைத்து மலைத்துப்போய் நின்றவன், "எப்படி இவ்வளவு வாங்க முடிஞ்சுது?" என்று என்னை அறியாமல் கேட்டுவிட்டேன்."முடியும். அது இந்தக் காலம் இல்லை. தாசில்தார்னா கலெக்டர், கவர்னருக்கு இருக்கிற மரியாதை இருந்தது அப்பல்லாம். 'காம்ப்'புன்னு போனா, ஒரு ஒரு இடத்திலேயும் உள்ளங்கையிலே வச்சுன்னா ரச்சிப்பா. என்ன மரியாதை! என்ன உபசாரம்! அந்த பயம் பக்தி எல்லாமே போயிடுத்தே இப்ப. இருந்த இடம் தெரியலையே!"கிழவரை இதே காவேரியில் தலையைப் பிடித்து நீரில் அமுக்கி, ஐந்து நிமிஷம் அப்படியே வைத்திருந்தால்...?சீ! என்ன பாபசிந்தை!ஒரு நாள் நிஷ்டையில் எல்லாப் பாவங்களும் சாம்பலாகி விடும்.

இருபத்தைந்து வருஷம் தினந்தோறும் காலதேசம் அறியாத நிஷ்டை என்றால் அவருக்கு முன்னும் பின்னுமான பத்துத் தலைமுறைகளின் பாவம் எரிந்து சாம்பலாகியிருக்கும்!என்ன பாபசிந்தை!கிழவர் பளபளவென்று தங்கமாகத் தேய்த்த குடத்திலும் செம்பிலும் காவிரி நீரை மொண்டு கையில் எடுத்துக் கொண்டே, "நீங்க வரதுக்கு நாழியாகும் போலிருக்கே?" என்று விடை பெறுகிற மாதிரி கேட்டார்."நீங்க போங்கோ, நான் வரதுக்கு இன்னும் ரொம்ப காலமாகும்" என்றேன்.நேரம் என்று சொல்ல நினைத்துக் காலம் என்று வாய் தவறி வந்து விட்டது.

## ஆயா

'ஈச்வரதாஸ் ' என்று வெளியே வந்த பியூன் கூப்பிட்டான். ஈச்வரதாஸ் எழுந்தான். இவ்வளவு சீக்கிரம் கூப்பிடுவார்கள் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. எட்டு பேர் போய் விட்டு வந்துவிட்டார்கள். என்ன கேள்வி கேட்டார்கள் என்று வெளியே வந்த ஒவ்வொரு

ஆளிடமும் அவன் கேட்டுக் கொண்டிருந்தான். அவசர அவசரமாக ஏதோ சொல்லிவிட்டு அவர்கள் போய் விட்டார்கள். கேள்விகளைச் சொல்லிவிட்டால் மற்றவர்கள் ஜாக்ரதையாகத் தயார் செய்து கொண்டு பதில் சொல்லிவிடுவார்களோ என்று அவர்கள் கவலைப்பட்டிருக்கவேண்டும். முன்னால் தெரிந்து கொள்வதும் 'காப்பி ' அடிக்கிற மாதிரி தானே 'உள்ளே போகும்போது, கால், கை நடுங்கிற்று. ஐந்து பேர் நீள மேசைக்குப் பின்னால் உட்கார்ந்திருந்தார்கள். மத்தியில் ஒரு கவுன் போட்ட ஆள்.மற்றவர்களுக்குச் சாதாரண சட்டை கால் சட்டை. ஓரத்தில் ஒரு பெண். இவள்தான் பள்ளிக்கூடத்துக்குத் தலைமை ஆசிரியை, தெரியும்.மத்தியில் இருந்தவர் கையில்லாத நாற்காலியைக் காட்டினார். ஈஸ்வரதாஸ் உட்கார்ந்தான்–அடக்க ஒடுக்கமாக.

'உன் பேர் என்ன ?''ஈச்வரதாஸ். ''நல்லா கெட்டியாச் சொல்லு. என்ன பயம் ? என்ன வயசு ?''பதினேழு. ''என்ன படிச்சிருக்கே ?''போன வாரம்தான் ஸ்கூல்லே கடைசிப் பரீட்சை எழுதியிருக்கேன். ''அப்படின்னா ?''ஆமா. ''போன வாரம் வரைக்கும் மாணவன். இப்ப வாத்தியாரா ? பரீட்சையிலே தேற வேண்டாமா ?''நிச்சயமா தேறிடுவேன். இது வரைக்கும் எல்லா க்ளாஸிலேயும் முதல் அஞ்சு ராங்க்குக்குள்ள வந்திட்டிருக்கிறேன். இந்தப் பரீட்சையிலும் நல்லாத் தேறிடுவேன். ''வாத்தியார் வேலைக்குப் பயிற்சி வேண்மே. ''...... ''தெரியாதா ?''தெரியும், ஆனா பயிற்சியில்லாம, என் சிநேகிதங்க ரெண்டு மூன்று பேர் வாத்தியார் வேலை பார்க்கறாங்க ' நானும் அந்த மாதிரிதான் வந்திருக்கிறேன். அப்புறம் இரண்டு மூன்று வருஷம் கழிச்சு நீங்களே பயிற்சிக்கு அனுப்புங்களேன் ''வேலையே கிடைத்து விட்டாற் போல பேசுகிறாயே. ''ஸாரி. ''பாதிரி சிரித்தார். ''இந்த மாதிரி சின்ன எலிமென்டரி பள்ளிக்கூடத்திலே வாத்தியாரா இருக்கிறதுன்னா என்ன என்ன தெரிந்திருக்க வேண்டும் ?''நல்லா விளையாடத் தெரியணும். சிரிக்கத் தெரியணும். புள்ளைங்களோட வேடிக்கையா பேசத்தெரியணும். சுத்தமாக இருக்கணும். ''ஏன் ?''அப்பதான் பிள்ளைங்களும் சுத்தமா இருக்கும். ''வேடிக்கையாய்ப் பேசத் தெரியணும்னா ?''கதை மாதிரி எல்லாம் புதுசு புதுசா சொல்லணும். ''அப்ப ஒரு கதை சொல்லு பார்ப்பம்.

நாங்க அஞ்சு பேரும், நாலாங் க்ளாஸ் பிள்ளைங்கன்னு நெனச்சுக்க. ஒரு கதை சொல்லு. 'ஈசுவரதாஸ் குழம்பி புன்னகை பூத்தான்.'ஆமாம், நாங்க இப்ப நாலாம் க்ளாஸ் குழந்தைகள், ஒரு கதை சொல்லு. ''பிராணி கதை சொல்லலாமா ?''எது வேணும்னாலும். ''பழைய கதையா–பைபிள்–ராமாயணம் மாதிரி ?''எது வேணும்னாலும். 'திருதிருவென்று விழித்தான் அவன். ஒரு கதை கூட நினைவுக்கு வரவில்லை. ஒரு நிமிஷம் ஓடிற்று. பிராணிகள், பறவைகள் எல்லாம் எங்கேயோ பறந்துபோய் விட்டாற் போலிருந்தது.விழித்தான்.'எந்தக் கதையாகவும் இருக்கலாமா ?''எந்தக் கதையாயிருந்தாலும் சரி.... நாங்க இப்ப நாலாம் க்ளாசுப் பிள்ளைகள். அது மாத்திரம் ஞாபகம் இருக்கணும்..... 'மீண்டும் புன்னகையுடன் சிறிது விழித்தான் அவன். பிறகு மெதுவாக ஆரம்பித்தான்.'ஒரே ஒரு ஊரிலே, ஒரு அப்பா அம்மா. அவங்களுக்கு ரண்டு குழந்தை. ஒரு ஆணு, ஒரு பொண்ணு. அப்பா வந்து ராணுவத்திலெ ட்ரக்கு டரைவர். ரொம்ப தொலைவுலெ ஏதோ ஊரிலே வேலை பார்த்துக்கிட்டிருந்தார். அம்மாவையும்

பிள்ளைங்களையும் ரண்டு வருஷத்துக்கொருக்கத்தான் வந்து பார்ப்பார்—லீவு எடுத்துக்கிட்டு வந்து. அப்படி வர்றப்ப, ரண்டு நாளைக்கு அப்புறம் கோச்சுக்கிட்டு கத்த ஆரம்பிச்சிடுவார்– நல்ல சாப்பாடு போடலேன்னு. ஒரு மீனு கிடையாது, ஒரு கறிக் குளம்பு கிடையாது— இது என்ன பன்னி துன்ற சாப்பாடுன்னு கத்துவார்.

காசில்லேயே மீனு வாங்க, கறிவாங்கல்லாம். அவரு காசு நிறைய கொண்டாரதில்லெ. அவர்கிட்டே காசு இருக்காது. அவரு நிறைய சாராயம் குடிப்பாரு சம்பாதிக்கிறதெல்லாம் அதுக்கே சரியாப் போயிடும். உனக்குக் கை காலு இல்லியா நாலு காசு சம்பாதிக்க முடியாதா உன்னாலேன்னு கத்துவாரு அவரு அம்மாவைப் பார்த்து. அப்படி நாலஞ்சு நாள் கத்துவாரு. சாராயத்துக்கு காசு கேப்பாரு. கொடுக்காட்டி அடிப்பாரு அம்மாவை. அம்மா, பாத்திரம், தோடுன்னு எதையாவது வித்துப் போட்டு நல்லா சமையல் பண்ணிப் போடுவாங்க. காசு தீந்தப்புறம் நல்லா சமைக்க முடியாது. மறுபடியும் சண்டைபோடுவாரு, அடிப்பாரு. கோவிச்சுக்கிட்டு திரும்பி ஊருக்குப் போயிடுவாரு. பிள்ளைங்க படிக்கணும், சாப்பிடனும். அதனாலே அம்மா வந்து ஆயா வேலைக்குப் போனாங்க. பணக்கார வீட்டிலே போய் சமைக்கிறது, துணி தோய்க்கிறது, வீடு கூட்றது, பாத்ரம் தேய்க்கிறது, குழந்தையைப் பார்த்துக்கிறது, இந்த மாதிரி வேலை செய்ய ஆரம்பிச்சாங்க. காலையிலே ரண்டு பிள்ளைங்களுக்குச் சமைச்சுப் போட்டு, வேலைக்குப் போனா, ராத்திரிதான் வருவாங்க— அசந்து போய் வருவாங்க கிறிஸ்மஸ்உ, தீபாவளின்னு எப்பவாவது அவங்களுக்கு ஒரு புடவை இனாம் கிடைக்கும்.'கட்சீலெ ஒரு நல்ல வீட்டிலே ஆயா வேலை கிடைச்சுது அந்த அம்மாவுக்கு. ஒரு புருஷன், பொண்டாட்டி–ரண்டு பேரும் வேலைக்குப் போறவங்க. அவங்களுக்கு ஒரு குழந்தை. அவங்க வேலைக்குப் போயிருக்கறப்ப,குழந்தையைப் பார்த்துக்கிட வேண்டியது. அவங்க ரொம்ப நல்லவங்க.

ஆயாவுக்கு நல்ல சாப்பாடு போட்டாங்க. சேலை கொடுப்பாங்க. அந்தக் குழந்தையும் ஆயா மேலே ரொம்பப் ப்ரியமா இருந்திச்சு. ஆயாவும் அந்தக் குழந்தை மேலே உசிரா இருந்தாங்க. அது அப்பா அம்மாகிட்ட சித்த நேரம் போகும். அப்புறம் ஆயா கிட்டவேதான் இருக்கும். சாயங்காலம் ஆயா வீட்டுக்குப் போனபுறம் அதுக்கு வெறிச்சுனு போயிடும். அதைப் பார்த்துட்டு அந்தப் புருஷன் பெண்டாட்டி ரண்டுபேரும் ஆயாகிட்ட இன்னும் ரொம்பப் பிரியமா இருக்கத் தொடங்கினாங்க. ஆனா அந்த ஆயாவுக்கு எத்தனை வந்தாலும் போறலெ மக பெரிசா ஆயிட்டுது. அதனாலெ தம் சேலையெல்லாம் மகளைக் கட்டிக்கச் சொல்லும் அந்த ஆயா. பையனும் பெரிய கிளாசு படிக்க ஆரம்பிச்சான். பள்ளிக்கூடத்திலெ புஸ்தகம், நோட்டு, அது இதுன்னு புடுங்குவாங்க. நல்ல உடுப்புப் போட்டுக்கணும்னு கண்டிப்பாங்க. புள்ளை நல்லா படிச்சு பெரிய மனுசனாக ஆகணும்னு ஆசை ஆயாவுக்கு. திடார் திடானு இருபது ரூபா முப்பது ரூபா வேணும்பான் பையன். ஆயா சம்பளத்தையெல்லாம் முன் பணமா வாங்கிப்பா. அப்புறம் மேலே, மகளுக்குக் கலியாணம் பண்ணிரணும்னாங்க உறவு சனக. அதுக்காக வேண்டி மோதிரம் சங்கிலி பண்ணாங்க ஆயா. பணம் பத்தலெ. ஆனா எப்படியோ ஆயா பணம் கொண்டாந்துடுவாங்க.

ஒரு நாளைக்கு பெரிய பரீட்சைக்குப் பணம் கட்டணும்னு பையன் பணம் கேட்டான். இல்லெ. ஒரு வாரத்திலே கட்டணும்னான். ஆனா மூணு மாசத்து சம்பளத்தை முன்

பணமா வாங்கிட்டாங்க ஆயா. ஆனா ஒரு வாரத்துக்குள்ளே பணம் கொண்டாந்துட்டாங்க. ஆனா மறுநாள் காலையிலே வேலைக்கு போனவங்க ஒரு மணி நேரத்திலே திரும்பிட்டாங்க. ஏன்னு கேட்டான் பையன். வேலையை உட்டு நிறுத்திட்டாங்களாம்.'பென்ஜீ நாலஞ்சு மாசமா ரூபாய் எல்லாம் இருபதும் முப்பதுமா காணாம போயிட்டே இருக்கு. இத்தோட நானூறு ரூபாய்க்கு மேலே கெட்டுப் போயிருக்கு, நீங்க எடுத்தீங்கன்னு நாங்க சொல்லலெ. நீங்க எடுக்க மாட்டாங்கன்னு ஓர் எண்ணம் இருக்கு. ஆனா, இங்க வேற ஒருத்தரும் வர்றதில்லே. அதனால உங்க மேலே சந்தேகப்படும்படியா இருக்கு. சந்தேகம் இருக்கறப்ப நீங்க இங்க வேலை செய்யறது நல்லாருக்கா, நாளைக்கு ஏதாவது பெரிசா கெட்டுப் போயிடுச்சுன்னா உங்க பேர்லதான் பழிவரும்னு சொல்லி மூணு மாசத்துச் சம்பளத்தை நீங்க திருப்பிக் கொடுக்கவாணாம்னு சொல்லி நிறுத்திட்டாங்க அந்த புருஷன் பெண்டாட்டி ரண்டுபேரும். அந்த ஆயா அழுதுகிட்டே வீட்டுக்கு வந்தது.'இது பெரிய அக்ரமமா இருக்கேன்னான் பையன். "இல்லே. அவங்க சந்தேகப்பட்டது சரிதான் 'ன்னாங்க ஆயா. 'அப்படின்னா நீ எடுத்தியா ?' ன்னு கேட்டான் பையன்.'ஆமா உனக்குத்தான் குடும்ப நிலைமை தெரிஞ்சிருக்கே. உன் படிப்பு, தங்கச்சி கலியாணம் அதுக்குக் காப்பு, சேலை, காதுக்குதோடு.... 'ன்னா ஆயா.'அதை அவங்ககிட்ட ஒத்துகிட்டா என்னவாம் ? அவங்கதான் ரொம்ப நல்லவங்கன்னு சொல்றியே ? "ஒத்துக்கிட்டா திருடின்னு பட்டம் நிலைச்சுப் போயிடும்.

'உன்மேல் சந்தேகம். ஆனா, நீ யோக்யமாவள்னு சொல்லி வேற யாருக்கிட்டவாவது வேலை வாங்கித் தாரேன், நீ அங்கியும் இந்த மாதிரி பண்ணாம இருந்தா ' ன்னு சொன்னாங்களாம்.'அந்த ஆயா அதைக் கேட்டுக்கிட்டுத் திரும்பி வந்திரிச்சு அழுதுகிட்டு.'அந்த பையன் ஒரே துடிப்பா துடிச்சுது எப்படியாவது அந்த ரூபாய்களைச் சம்பாரிச்சுத் திருப்பிக்கொண்டு கொடுத்திரணுன்னு, திருப்பித் திருப்பி அம்மாகிட்ட சொன்னான். அப்படின்னா திருடிப் பட்டம் கட்டலாம்னு பாக்கறியா எனக்குன்னு கேட்டது அந்த ஆயா. நமக்குப் பத்தலெ எடுத்துகிட்டு வந்தேன். அவங்ககிட்ட சொல்லாமெ எடுத்தது தப்புதான்னு சொல்லிச்சு அந்த ஆயா. 'அது திருடு இல்லியா ?' ன்னு கேட்டான் பையன்.'அம்மா முழிச்சு தரையை பாத்துக்கிட்டே இருந்தது. 'ஈச்வரதாஸ் நிறுத்திவிட்டான்.

'கதை முழுக்க முடிஞ்சி போச்சா ? "போச்சு சார். "இதுதான் நாலாங் க்ளாஸ் புள்ளீங்களுக்குச் சொல்ற கதையா ? "சொல்லலாம் சார். "அவங்களுக்கு புரியுமா இது ? "புரியும் சார். "கடசீயிலே ஒரே சிக்கலா இருக்கே. அவங்க சந்தேகப்பட்டுத்தான் நிறுத்தினாங்க. இந்த ஆயா திருடிப்பிட்டு, ஒப்புக்கமாட்டேன்னிட்டாங்க, திருடின்னு பேர் வரக்கூடாதுன்னு பையனையும் தடுக்கறாங்க. இதெல்லாம் நாலாம் க்ளாசுக் குழந்தைகளுக்குப் புரியுமா ? "புரியும் சார். அஞ்சு வயது முடிஞ்சவுடனே எது நல்லது, எது கெட்டதுன்னு தெரியும் சார். 'ஐந்து பேரும் சிரித்தார்கள்.'சரி, இப்ப உங்க அம்மா எங்க இருக்காங்க ? "வீட்டிலெதான். "அந்த புருஷன் பெண்டாட்டி வேலை வாங்கித் தரேன்னாங்களே. இன்னும் தரலியா ? "இன்னும் இல்லெ சார். "சரி, நீ வாத்தியார் வேலை

பார்க்கறது கிடக்கட்டும். முதல்லெ போயி, உங்கம்மாவைக் கூட்டிக்கிட்டு வா; இங்கே ஒரு ஆயா வேணும் இப்ப ' என்று ஓரத்திலிருந்த பெண் சொன்னாள்.

## குழந்தைக்கு ஜுரம்

மனைவி சொன்னதைக் கேட்டார். குழந்தையைப் பார்த்தார். மணிபர்ஸைப் பார்த்தார். புத்தகம் போடும் பஞ்சாபகேசனை நினைத்தார். வாத்தியார் நெஞ்சு புகைந்தது. வயிற்றைப் பற்றிக் கொண்டு வந்தது."ஏண்டாய்யா, குழந்தையைக் கொடுத்தியே போதாதா? வியாதியை வேற கொடுத்து அனுப்பிச்சுருக்கியே அதை?" என்று மனசிலே சொல்லிக் கொண்டே சுவரில் அசைந்த காலண்டரைப் பார்த்தார். அதில் பரமசிவன் மீசையும் மாடும் இரண்டு பிள்ளையுமாக உட்கார்ந்திருந்தார். வியாதி வெக்கை இல்லாத பிள்ளைகள்.கழுவாத சாயங்கால மூஞ்சி மாதிரி எண்ணெய்ப் பாடம் கறுத்து மின்னும் தலையணையில் தலை வைத்துக் குழந்தை மல்லாந்து படுத்திருந்தது. மூன்று நாளாக மூடிய கண் திறக்கவில்லை. நெற்றியில் நெருப்புப் பறக்கிறது. சளி ஜுரமா, பிடிவாத ஜுரமா இன்னும் டாக்டருக்குப் பிடிபடவில்லை. நெற்றியில் நெருப்புப் பறக்கிறது.

மாசம் பிறந்து இரண்டாவது வாரம் பாதி நடக்கிறது. இல்லின், மைஸின் என்று என்னவோ எழுதிக் கொண்டிருக்கிறார் டாக்டர். தம் கையிலே இருக்கிற பெட்டியைப் பிரிக்க யோசனை, 'ட்யூஷன்' சொல்லிக் கொடுத்து உளவடைக்க டாக்டருக்கு அவ்வளவு சின்னக் குழந்தைகளும் இல்லை. சந்நிதித் தெரு வன்னியர் வீட்டு 'ட்யூசன்' பணம் எட்டு ரூபாய் தீர்ந்துவிட்டது. என்ன செய்யலாம் என்று மனசை நோண்டும்போதுதான் மனைவி அதை ஞாபகமூட்டினாள்."இன்னும் ஒரு புஸ்தகம் அச்சுப்போட எழுதிக் கொடுத்தீங்களே, அதைத் திருப்பிக் கேக்கறாப் போலாவது அந்தப் பாவியைப் பார்த்துக்கிட்டு வாங்களேன்" என்றாள் அவள்."நீயே பாவிங்கறே. நீயே போகச் சொல்றியே?""வேற வழி இல்லேன்னா..." என்னவோ ரோசமாகச் சொல்லி வாக்கியத்தை முடிக்கத்தான் பார்த்தார். ஆனால் குழப்பத்தில் முடிவே மௌனமாகக் கரைந்துவிட்டது."இனிமேல் உங்க வீட்டுக் குத்துச் செங்கல் மிதிக்க மாட்டேன்யா" என்று புத்தகம் போடுகிற பஞ்சுவிடம் இரண்டு மாதம் முன்னால் சொல்லிவிட்டு வந்ததுதான்.சின்னராஜா எம்.ஏ., எல்.டி. எழுதியதாக பஞ்சு பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்குப் போடுகிற புத்தகங்களெல்லாம் இந்த சரவண வாத்தியார் எழுதிக் கொடுத்ததுதான். நாலு வருஷமாக இது நடந்துவருகிறது. இருபது புத்தகங்கள் ஆகிவிட்டன. பஞ்சு புத்தகத்துக்கு ஐம்பது ரூபாய் வீதம் ஏகபோகமாக உடைமையை எல்லாம் அவரிடம் எழுதி வாங்கி க்ஷேமமாக இருந்து வந்தார். நானூறு ரூபாய் மிச்சம் கொடுக்க வேண்டியிருந்தது.

ஆடி மாசம் பணத்துக்காகப் போய் நின்றார் சரவணவாத்தியார்."அடுத்த திங்கட்கிழமை ஒரு செக் வர வேண்டியிருக்கு. வந்தவுடனே, மாத்தி உம்ம வீட்டுக்கு வந்து உமக்குக் கொடுக்க வேண்டிய முந்நூறு ரூபாயையும் கொடுத்துவிட்டு மறுகாரியம் பார்க்கிறேன். சரிதானா?" என்றார் பஞ்சு.முந்நூறு என்கிறானே!"நானூறு ரூபாயில்லே?""நானூறா? நல்லா யோசிச்சுப் பாரும். போன வாரம் வந்ததிருந்தப்போ, நானூறு ரூபாய்னு சொன்னீர். இல்லை ஐயா, முந்நூறுன்னு திருத்தினேன். சரீன்னீரேய்யா.""இல்லே, நீங்க

முந்நூறுன்னீங்க. நானூறுன்னு நான்தான் திருத்தினேன். நீங்கதான் சரின்னிங்க.""இல்லே, நல்லா யோசிச்சுப் பாரும்."சரவண வாத்தியார் நன்றாக யோசித்துப் பார்த்தார், நானூறு ரூபாய் நிச்சயம்."இல்லைங்க, நானூறுதான்.""ஏன்யா, எத்தினி நாளாய்யா இநத் வேலையை ஆரம்பிச்சிருக்கீரு? வாத்தியாராச்சேன்னு கொஞ்சம் இரங்கினத்துக்கா இந்தத் தண்டனை எனக்கு? ரங்கசாமி வாத்தியார்தான் போக்கடாப் பயன்னு நெனச்சேன். நீரும் சேந்துப்பிட்டீரா?"வாத்தியாருக்கு உடம்பெல்லாம் பதறிற்று. அவர் வாத்தியார். யாரும் அவரை இப்படித் தூக்கி எறிந்து பேசுகிறதில்லை. என்ன இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவருக்கு மரியாதை உண்டு. அதாவது அவமரியாதை கிடைத்ததில்லை.முட்டி வந்த ஆத்திரத்தை அமுக்கிக்கொண்டு, பணிந்த குரலில், "நீங்க தெரியாம சொல்றீங்க, நல்லா யோசனை பண்ணிப்பாருங்க" என்றார்."தெரியாமச் சொல்றேனா? நானா? நோட்டிலே எழுதி வச்சிருக்கேன்யா?""எடுங்க.""கடையிலே இருக்கு.

இன்னிக்குச் சாயங்காலம் பார்த்தேன். அப்புறம் என்ன?""என்ன எழுதியிருக்கீங்க?""உமக்குக் கொடுக்க வேண்டியது ஆயிரம். எழுநூறு ரூபா உம்ம பத்துவழி ஆயிருக்கு.""அறுநூறில்லே?""ஏன்யா, செலவுக்கு வேணும்னு போன மாசம் இரண்டாம் நாள் ராத்திரி வந்து ஐம்பது ஐம்பதுன்னு வாங்கிண்டுப் போனீர்ய்யா.""நான் ரண்டு தடவை வந்தது வாஸ்தவம். ஆனா ஒண்ணும் வாங்கலியே!""வாங்கலியா? என்னமாய்யா இப்படித் துணிஞ்சி சொல்ல நாக்கு வரது உமக்கு? பையன்களுக்கெல்லாம் தர்மம் போதிக்கிறீரே. வாண்டாம்யா. இதெல்லாம் விட்டுடும். இப்படி இருந்தா லட்சுமி நீர் இருக்கிற தெருப்பக்கம் கூட வரமாட்டா.""பஞ்சு, நெசமாத்தான் சொல்றீங்களா?""நெசமாத்தானா? நான் என்ன உமக்குப் புடிச்ச சிஷ்யப் பையனா, உம்மோட உள்ளாக்காட்டி விளையாடறதுக்கு."ஒரு வார்த்தைக்குப் பத்து வார்த்தையாகப் பஞ்சுவின் வாயிலிருந்து தெறிக்கின்றன. குரலும் பெரிய குரல். வாத்தியார் கலங்கியேவிட்டார்."அப்ப முந்நூறுதான்னு சொல்றீங்க.""வேணும்னா நாளைக்கு காலமே வந்து நோட்டைப் பாருமே, எழுதியிருக்கேனா இல்லியான்னு.""நீங்க நோட்டிலே எழுதினதுக்கு நானா பொறுப்பு? எனக்கு நேர எழுதலியே."வாத்தியாருக்கே ஆச்சரியமாக இருந்தது, எப்படி இதைச் சொன்னோம் என்று."அப்படியா? நான்தான்யா அயோக்கியன். நீர் பரம யோக்கியர். அரிச்சந்திரன். ஐயா, இனிமே உம்ம சகவாசம் நமக்கு வாண்டாம்யா.

நீர் எழுதிக் கொடுத்த புஸ்தகம் இன்னும் ஒண்ணே ஒண்ணு இருக்கு. அதை எடுத்துக் குடுத்துடறேன். நல்ல யோக்யனா, நல்லவனா, புஸ்தகம் போடற ஆள் யாராவது இருப்பான். அவன்கிட்ட கொண்டு குடுத்துக்கும்."சரவண வாத்தியார் வாய் அடைத்து நின்றார். இந்த லட்சணத்தில் வேறு யாரோ இரண்டு பேர் அங்கு வந்திருந்தார்கள்.பஞ்சு சொன்னார் "ஓய் சரவணம், இப்ப ரொம்ப சங்கடமான நிலையில் மாட்டிவிட்டீரையா என்னை? இந்த உலகத்திலே வாத்தியார்னு சொன்னா அவா கட்சியைத்தான் யாரும் எடுத்துப்பன். இந்த இரண்டு பேரும் இப்ப உமக்குச் சாதகமாகப் பேசினால்கூட நான் ஆச்சரியப்படறதுக்கில்லே. என்னை இந்த மாதிரி இக்கட்டா கொண்டு நிறுத்திப்பிட்டீரே."""சாயங்காலம் நோட்டைப் பார்த்தவங்க தப்பாச் சொல்லுவாங்களா?" என்றார் வந்திருந்த இருவரில் ஒருவர்.ஒரு தடவை அந்த ஆசாமியை அர்த்தம்

இல்லாமல் பார்த்துவிட்டுப் பஞ்சுவின் பக்கம் திரும்பினார் வாத்தியார்.“பஞ்சு, ஒரு கால் கடுதாசி கொடுங்களேன்” என்றார்.“இதோ!”வாத்தியார் விறுவிறுவென்று எழுதினார். “இருபது புத்தகங்கள் எழுதிக் கொடுத்ததற்காகப் பஞ்சு பிரசுரம் உரிமையாளர் சோ.பஞ்சாபகேசனிடம் நான் வாங்கிக் கொண்ட ரூபாய் ஆயிரம். இத்தோடு என் கணக்குத் தீர்ந்துவிட்டது” என்று கையெழுத்திட்டு எழுதி நீட்டினார்.“என்னது?”“பாருங்க.”பஞ்சு பார்த்தார்.

“எல்லா ரூபாயும் வாங்கிக்கொண்டதாக எழுதிக் கொடுத்துவிட்டீரா? எனக்கு என்னத்துக்கையா பிச்சைக்காசு?” என்று அதைக் கிழித்து எறிந்தான் பஞ்சு. “இந்தக் கிண்டல்லாம் வாண்டாம். திங்கட்கிழமை உமக்கு மூந்நூறு ரூபாய் வரும்,”“உம்ம ரூபாயே எனக்கு வாண்டாம்.”“என் ரூபாய் என்ன? உம்ம ரூபாய் அது. கொண்டு வந்து கொடுத்துடறேன். வாண்டாம்னா நீர் கிழிச்சுப் போட்டுக்கும். எனக்கு என்னத்துக்கு? இந்த மாதிரி யார்கிட்டியும் எனக்கு ஏற்பட்டதில்லை ஐயா.”“அப்ப நான் வரட்டுமா?”“சரி.”வாத்தியார் திரும்பினார். அவர் மனதில் புயல் அடித்தது. அரிக்குஞ்சட்டியில் குழந்தை தண்ணீரைத் தட்டுகிற கலக்கமாகத்தான் பஞ்சுவுக்கு அது தோன்றிற்று.கூட வந்தார் பஞ்சு. “ஓய், சும்மா மனசை அலட்டிக்காதீர். நல்ல யோசிச்சுப் பாத்து வந்து சொல்லும். நான் அப்படி எல்லாம் வார்த்தை புரளமாட்டேன்யா. நாளைக்கு வரீரா?”“இனிமே இந்த வீட்டுக் குத்துச் செங்கல் ஏறுவனா!”“அப்படியா? அப்படின்னா உம்ம சௌகரியம். சரி, பணத்தை அனுப்பிச்சுடறேன். அதையும் உம்ம வீட்டுக் குத்துச் செங்கல் ஏறவிடாமல் அடிச்சுப்பிடாதீர்.”வாத்தியார் பதில் சொல்லவில்லை. பேசாமல் தெருவில் இறங்கி நடந்துவிட்டார். மனிதனுக்குப் பொய் சொல்ல எப்படி மனசு வரும்? திருடலாம், கொல்லலாம், கற்பை இழக்கலாம். அவர்களோடு பழகலாம். பொய் சொல்பவர்களோடு எப்படிப் பழகமுடியும்? பொய்! பொய்யா? பொய் எப்படிச் சொல்ல முடியும்? வாத்தியாருக்குப் புரியவில்லை. பதறிற்று.

திட்டம் போட்ட கயமையாக இருக்கிறதே இது!“இருபத்தோராவது புத்தகத்தை இவனிடமா கொடுக்கிறது? சை! எப்பேர்ப்பட்ட புத்தகம்!” ஆனால் புறப்பட்டு வந்த கோபத்தில் அதை வாங்கிக்கொள்ளவில்லை. வீட்டுக்கு வந்தார். பெண்டாட்டியிடம் ஒருமுறை எல்லாவற்றையும் சொல்லி அழுதார். புகைந்தார். மனசாரத் திட்டினார். அப்புறம் அந்தப் பக்கம் தலை காட்டவில்லை. பணமுடை நாலு தடவை கழுத்தைப் பிடித்தபோதும் தைரியமாக இருந்துவிட்டார்.நேற்றோடு பதினோராவது திங்கட்கிழமை போய்விட்டது. வலிய வருகிறேன் என்று பயமுறுத்திய பணம் வரவில்லை.மீண்டும் போகலாமா? பொய்யனை எப்படிப் பார்க்கிறது?”“குததுச் செங்கல் ஏறமாட்டேன்னு சொல்லிவிட்டேன் தெரியுமா?” என்றார்.“ஏறாம வாசல்லெ நின்ன வாக்கிலே கேளுங்க.”“நான் போய்ப் பணம்னு கேக்கமாட்டேன்.”“புதுப் புஸ்தகத்தைத் திருப்பி வாங்கி வராப்பல போங்களேன். அப்ப அவனாப் பேச்சு எடுககமாட்டானா?”அதுவும் சரிதான் என்று பணமுடை காதோடு சொல்லிற்று. சமாதானம் இல்லை.குழந்தை இன்னம் கண்ணைத் திறக்கவில்லை. ஹார்லிக்ஸ்தான் கொடுக்க வேண்டுமாம். இல்லாவிட்டால் திராட்சைப் பழத்தை ஜலத்தில் கொதிக்கவைத்துக் கொடுக்கலாமாம்.பெருங்காயத் தகரத்தைத் திறந்தார். ஒரு

ரூபாயும் பத்து நயா பைசாவில் ஆறும் மின்னின. இரண்டு பத்தை விட்டுவிட்டு மீதியை எடுத்துக்கொண்டார்.

பார்லி, திராட்சை வாங்கி வரலாம். வரும்போது, பஸ்ஸில் ஏறிப் பத்து நயா பைசாவுக்கு ஒரு டிக்கெட் வாங்கிக் கொண்டுபோய், இறங்கிப் பஞ்சுவின் வீட்டை நோக்கி நடந்தார்.“பஞ்சு இருக்காரா?”“வாங்க ஸார்” என்றான் ரத்தினமலை. ரத்தினமலை பஞ்சுவின் அந்தரங்க வேலைக்காரன். வாசலில் யார் வந்தாலும், “இருங்க, இருக்காங்களா பாத்திட்டு வரேன்” என்று ஒன்றுமே தெரியாதவன் போல உள்ளே ஓடிப்போய் வந்து, இருக்கிறார் அல்லது இல்லை என்று வந்த ஆளுக்கு ஏற்பத் தகவல் தருகிறவன்.“இருக்காரா?”“இருக்காங்க” என்று உள்ளே போகாமலே சொன்னான் அவன்.“பாக்கலாமா?”“பார்க்கலாம். அம்மாவுக்கு ரொம்ப உடம்பு ஜாஸ்தியா இருக்கு. ரத்த ரத்தமாச் சாயங்காலமே புடிச்சி வாந்தி எடுக்கறாங்க. அய்யா பக்கத்திலே உட்கார்ந்திருக்காங்க.”“ரத்த ரத்தமாவா? என்ன உடம்பு?”“என்னமோ தெரியலீங்க. திடுதிடுப்பினு வந்திடிச்சி.”“திடுதிடுப்புனா? சாயங்காலாமா?”“ஆமாங்க. சாயங்காலம் அஞ்சு மணி வரைக்கும் நடமாடிக்கிட்டுத்தான் இருந்தாங்க. அப்புறம் திடீர்னு தலை வலிக்கிதுன்னாங்க. ரத்தமா வாந்தி எடுத்திச்சு. டாக்டர் வந்து ஊசி போட்டுப் போனாரு. கண்ணைத் தொறக்கல. படுத்துக்கிடக்காங்க.”“போய்ப் பார்ப்பதா வேண்டாமா? வேற்று மனிதரைக் கண்டதும் பஞ்சுவின் மனைவி கூச்சப்பட்டால் என்ன செய்கிறது? உள்ளே போவதா, திரும்பிப் போவதா என்று தெரியாமல் குழம்பிக் குழம்பி நின்றார் அவர்.ஒரு பையன் தெருவில் ஓடிவந்து வாசல்படி ஏறினான். அவரைக் கண்டு நின்றான்,“என்ன ஸார்?”“என்னப்பா கையிலே?”“ஐஸ் ஸார். அத்தங்காளுக்கு ரொம்ப சீரிஸ்ஸா இருக்கு. உள்ள வறிங்களா?” என்று கேட்டுக்கொண்டே ஓடினான்.

இதற்கிடையில் வேலைக்காரப் பையன் உள்ளே போய் வந்துவிட்டான்.“நீங்க வந்திருக்கீங்கன்னு சொன்னேன். ஒண்ணும் சொல்லலை ஸார்” என்றான்.திரும்பிப் போகலாமா? வந்த சமாசாரம் பஞ்சுவுக்குத் தெரிந்துவிட்டது. உள்ளே போகாமல் திரும்பிவிட்டால் என்ன நினைத்துக் கொள்வார்? அவர் மனைவி கூச்சப்பட்டால்... கூச்சம் என்ன? அப்படி உடம்பாக இருந்தால், கூச்சமா தெரியப்போகிறது? உண்மையில் கவலைக்கிடமாக இருந்தால் கூச்சமும் சங்கோசமுமா வரும்?செருப்பைக் கழற்றிவிட்டு உள்ளே போனார். என்ன இது?அவர் எதிர்பார்த்தவாறு இல்லை. உள்ளே ஏக கூட்டம். பஞ்சுவின் மனைவி படுக்கையில் கிடந்தாள். சுற்றி ஏழெட்டுப் பெண்கள். பஞ்சு, மனைவியின் காலடியில் உட்கார்ந்திருந்தார். பஞ்சுவின் குழந்தை இரண்டு தூங்கிக் கொண்டிருந்தன. இன்னொரு குழந்தை விசித்து விசித்து அழுதுகொண்டிருந்தது. அதை ஒரு பாட்டி சமாதானம் செய்துகொண்டிருந்தாள். இரண்டாவது குழந்தை விவரம் தெரிந்த பெண். அது திகில் படர்ந்த முகத்துடன் சுவேரோரமாக அப்பாவைப் பார்த்த வண்ணம் சிலையாக உட்கார்ந்திருந்தது. தலைப்பக்கம் உட்கார்ந்திருந்த அம்மாளின் கண் அழுது கலங்கிக்கிடந்தது.“என்ன உடம்பு ஸார்?”“சாயங்காலம் வரையில் ஒண்ணும் இல்லே. திடீர்னு அஞ்சு மணிக்கு ரத்தமா வாந்தி எடுத்தாள். தலை வலிக்கிறதுன்னாள்ளாம்.

கடைக்குப் பையன் ஓடிவந்து சொன்னான். வந்தேன். இப்படி பிரக்ஞையில்லாமல் கிடக்கா.

டாக்டர் வந்து ஊசி போட்டார். பயப்பட வாண்டாம்னார். என்னன்னு கேட்டேன். ஏதே பலஹீனந்தான்னட்டுப் போனார்" என்று பஞ்சு மனைவியின் முகத்தைப் பார்த்தார்.வாத்தியாரும் பார்த்தார். கண் சொருகியிருந்தது. திடீரென்று பல்லை நறநறவென்று கடித்தாள் நோயாளி. கை விறைத்தது. உடம்பைப் போட்டு முறித்துக்கொண்டாள். பயங்கரமாக இருந்தது. எல்லோரும் அமுக்கி அவளைப் பிடித்துக்கொண்டார்கள். அமுக்க முடியாமல் அமுக்கினார்கள்."என்னடீம்மா இது? இப்படி முறிக்கிறதே! ஒண்ணும் புரியலியே. இந்தக் குடும்பத்தை இவ இல்லாட்டா யாருடீ காப்பாத்த முடியும்?" என்று தலைமாட்டு ஸ்திரீ புலம்பினாள். குபுகுபுவென்று அழுகை வந்தது அவளுக்கு."மறுபடியும் டாக்டரைக் கூப்பிட்டுப் பார்க்கணும், ஸார்" என்றார் வாத்தியார்."வீட்டு டாக்டர் சரியாப் போயிடும்னு சொல்லிட்டுப் போயிட்டார். ஆனா மறுபடியும் அழச்சிண்டு வரச்சொல்லிப் பையனை அனுப்பிச்சிருக்கேன். போயிருக்கான்."குழந்தை அழுதது. நினைத்து நினைத்து தலைமாட்டு அம்மாள் அழுதாள். ஐந்து நிமிஷத்துக்கு ஒருமுறை உடம்பை முறித்து வளைத்து விறைக்கிற போதெல்லாம் மற்றப் பெண்கள் அணைத்துப் பிடித்துக் கொண்டார்கள்."டாக்டர் பன்னிரண்டு மணிக்குத்தான் வருவாராம்" என்றான் பெரிய பையன் வந்து."எங்கே போயிருக்காராம்?""தெரியலே. எனக்கு சந்தேகமாயிருக்கு.""என்ன?""அவர் பிள்ளை படுத்துண்டால் ஏந்திருக்க மாட்டார்னு சொன்னான். ஆளே இல்லவே இல்லைங்கறான். எது நெஜம்னு தெரியலே.""ராஜு டாக்டர் சேதி தெரிஞ்சதுதானே? படுத்துனுட்டால் என்ன கூப்பிட்டாலும் வரமாட்டாங்களே!" என்றது கும்பலில் ஒரு குரல்.

வாத்தியார் வெளியே ஓடினார். இரண்டு மூன்று டாக்டர்களின் வீட்டுக் கதவுகளைத் தட்டினார். "இல்லவே இல்லை. வரமுடியாது" என்ற இரண்டு பதில்களை மூடிய கதவே கொடுத்துவிட்டது. மூன்றாவது டாக்டரிடம் ஓடினார். மாடிப்பால்கனியிலிருந்தே டாக்டர் வியாதியைப் பற்றி விசாரித்தார். வாத்தியார் சொன்னதைக் கேட்டதும், "டாக்டர்தான் ஊசி போட்டிருக்கார்னேளே. காலமே வந்து எப்படி இருக்குன்னு சொல்லுங்கோ" என்று உள்ளே போனார். தாழ்ப்பாள் ஓசை கேட்டது. சட்டென்று பராங்குசத்தின் ஞாபகம் வந்தது வாத்தியாருக்கு. கூடப் படித்தவனாயிற்றே. ஒரு சைக்கிள் ரிக்ஷாவில் ஏறிக்கொண்டார். ஒரு மைல் இருக்கிறது பராங்குசம் வீடு."ஸார், பராங்குசம் ஸார்!""யாரு?""நான்தான் ஸார்."நான்தானென்றால் அடையாளம் தெரியுமோ? அவனைப் பார்த்தே ஒரு வருஷமாயிற்று."நான்தான் சரவணன் ஸார். வாத்தியார்.""ஓகோ, இதோ வந்துட்டேன்."அவரைக் கெஞ்சிக் கூத்தாடிக் கையோடு அழைத்துக் கொண்டே வந்துவிட்டார் சரவணம். சைக்கிள் ரிக்ஷா லொலொடவென்று சத்தம் செய்தது.உள்ளே போய்ச் சேர்ந்தார் பராங்குசம். உடம்பு முறியாக முறித்தது. டாக்டர் எழுந்து "இப்படி வாங்க கொஞ்சம்" என்று பஞ்சுவையும் சரவணத்தையும் தனியாக வாசலுக்கு அழைத்துப் போனார்."ஸார், இது கிருமித் தொத்து, உடனே ஆஸ்பத்திரிக்குப் போனா ஆனதைச் செஞ்சிப்பிடுவாங்க. இப்படியே இன்னும் நாலு மணிநேரம் விட்டு வச்சா, 'க்ரிடிக்கலா'ப்

போயிடும். அப்புறம் ரொம்ப சிரமம். இப்பவே வாங்க. இப்ப ஆஸ்பத்திரியில் சேத்துட்டா நாளை மத்தியானம் திரும்ப வந்துடலாம். இங்கியே வச்சிருக்கிறது நல்லதில்லை.

ஆஸ்பத்திரியிலேதான் இதுக்கு வசதி உண்டு. நானும்கூட வந்து அட்மிட் பண்ணிடறேன். என்ன சொல்றீங்க? அப்புறம் வருத்தப்படப்படாது."பஞ்சு உள்ளே வந்தார். பெண்மணிகளைக் கலந்து பேசினார். ஆஸ்பத்திரி என்றதும் தலைமாட்டு அம்மாள் புதிதாக ஒரு பாட்டம் ஆரம்பித்துவிட்டாள். "செவ்வாய்க்கிழமையும் அதுவுமா... இங்கேயே பார்க்க முடியாதா?"பஞ்சுவும் கலங்கினதைப் பார்த்து, அவருக்கும் எல்லோருக்கும் தைரியம் சொல்லிவிட்டு, ஓடிப்போய் ஒரு டாக்ஸியைப் பிடித்து வந்தார் சரவணம். டாக்ஸி வந்த பிறகு மீண்டும் தகராறு. பிரக்ஞை வந்த மனைவி அடம்பிடித்தாள். சரவணன் அவளுக்கு வேறு நல்ல வார்த்தை சொல்லி சரி சொல்லச் செய்ய அரை மணியாயிற்று.மெதுவாகக் காரில் ஏற்றினார்கள். சரவணமும் டாக்டரும் முன்னால் உட்கார்ந்து கொண்டார்கள்.ஆஸ்பத்திரியில் பரபரவென்று ஒரு படுக்கையை ஒழித்துத் தயார் செய்தார்கள். டாக்டர் வந்தார். "நல்ல வேளை! இப்பம் கொண்டு வந்தீங்களே. இன்னும் ஒரு மணி ஆயிருந்ததோ சொல்றதுக்கில்லை. இனிமே பயம் இல்லை. கவலைப்படாதீங்க ஸார், காலமே பத்து மணிக்கு வீட்டுக்குப் போயிடலாம்" என்று தைரியம் சொன்னார். கவனித்தார்.வாத்தியாருக்கு உயிர் வந்தது. மருந்து கொடுத்தார்கள். ஊசி போட்டார்கள்."அவர் மாத்திரம் இருக்கட்டும். நீங்கள்ளாம் போகலாம்.

இனிமே கவலையில்லை" என்றார் டாக்டர்."அப்ப நீங்க போங்க. நான் இருக்கேன். ரொம்ப தாங்க்ஸ் உங்களுக்கு" என்று நன்றி சொன்னார் பஞ்சு.பாரங்குசத்தை வீட்டில் இறக்கிவிட்டது டாக்ஸி. வாத்தியாரும் இறங்கினார். பஞ்சு டாக்ஸிக்காகக் கொடுத்த மூன்று ரூபாய் போதவில்லை. காத்திருந்த கூலி ஒரு ரூபாய்க்கு மேல் ஏறியிருந்தது. மூன்று ரூபாய் ஆறணாவுக்குக் கையை விட்டு ஆறணாவை தந்தார் சரவணம். ஒரு ரூபாயைக் கொடுத்து மீதி பத்தணாவை வாங்கிக்கொண்டார்.டாக்ஸி போனதும் திடீரென்று குழந்தையின் ஞாபகம் வந்தது சரவணத்துக்கு. அவர் சொன்னதைக் கேட்டுவிட்டு "ஒண்ணும் இல்லை. இந்த மாத்திரையைக் கொடுங்க சரியாயிடும்" என்று பராங்குசம் ஒரு மருந்தைக் கொடுத்தார்."என்ன கொடுக்கணும்?""ஒண்ணே கால் ரூபாய்.""ம் அப்புறம்...""கொடுங்களேன் நான் அந்தப் பக்கம் வந்தா வந்து பாக்கறேன்.""ரொம்ப நன்றி, பராங்குசம்.""இங்கேயே படுத்திருங்களேன். மணி ஒண்ணாச்சே. காலமே போயிக்கிறது.""குழந்தைக்கு மருந்து கொடுக்கணுமே!""அப்ப சரி, டாக்ஸியை விட்டுவிட்டீங்களே. சரி, ரிக்ஷாவாவது வைச்சிக்கிட்டுப் போங்க.""சரி, அப்ப வரட்டுமா?""ரைட், குட்நைட். ஒண்ணும் கவலைப்படாதீங்க, காலமே அந்தப் பக்கம் வந்தா வர்றேன்.""சரி."ரிக்ஷா எதற்கு? ஒன்றரை மைல்தான். நடந்தே போய்விடலாம்.

பையை எடுத்துச் சில்லறையை எண்ணினார். நயா பைசா எல்லாம் போய், ரூபாய், உடைந்து பத்தணா பாக்கி. தாகம் தாங்கவில்லை. சாயங்காலம் ஏழு மணிக்குச் சாப்பிட்டது. வெற்றிலைபாக்குக் கடையில் நாலு மலைப்பழமும் கலரும் சாப்பிட்டார். வெற்றிலை போட்டுக் கொண்டார். நடந்தார்.ஹிஹிஹிஹி என்று யாரோ இருளில் சிரித்தார்கள்.பாதி பயத்திலும் பிரமையிலும் உற்றுப் பார்த்தார் அவர். யாரும் இல்லை.

ஜட்கா ஸ்டாண்ட்குதிரை! புல் தின்கிற சவடாலில் அது கனைத்தது. சரவணத்திற்கும் அடக்க முடியாமல் சிரிப்பு வந்தது. வீடு போகிற வரையில் சிரித்துக் கொண்டே போனார். நிலவு எழுந்ததைக் கண்டு பொழுது புலர்ந்த திகைப்பில் நாலைந்து நார்த்தங்குருவிகள் வாழைத் தோப்பில் சிரித்துக்கொண்டிருந்தன.

## ஆயிரம் பிறைகளுக்கப்பால்

ஒரு கிழ டைப்ரைட்டர் (தட்டச்சுப்பொறி) பிறந்தது இங்கிலாந்தில் ஒரு தொழிற்சாலையில். இப்போது 83 வயது முடிந்துவிட்டது. ஆயிரம் பிறை கண்டாதாச்சே. இந்தியாவில் குடியேறிய இத்தாலிய, அமெரிக்க, இங்கிலாந்தில் இன்னும் மற்ற விதேச டைப்ரைட்டர்களும், இந்தியாவிலேயே பிறந்த சுதேச இள –நடுவயது டைப்ரைட்டர்களும் கூடி விழா எடுத்தன.“”முதுபெரும் பொறியீர், மூத்த பொறியீர், ஆயிரம் பிறை கண்ட உமக்கு ஆயிரம் தண்டன்கள்...” என்று தொடங்கி தென்னிந்தியாவின் தோல் ஏற்றுமதிக்கும் பொதுவான பொருளாதார உயர்வுக்கும் முதுபெரும்பொறியர் ஆற்றிய சேவையைப் பல இளவயது –நடுவயது பொறிகள் பாராட்டிப் பேசின. பாராட்டுகளுக்கு நன்றி கூறுமுகத்தான் முதுபெரும் டைப்ரைட்டர் பேசியதாவது!“”அன்புள்ள இள –நடு வயது நண்பர்களே!நன்றி, நன்றி, நன்றி, நன்றி. இந்த 83 ஆவது வயதில் பழைய நினைவுகள் பொங்கி வருகின்றன. இந்தப் புனித இந்தியாவுக்கு நான் அனுப்பப்பட்டது முதற் பெரும்பாக்கியம். தோல் உற்பத்தியில் இந்த ஸ்தாபனம் நூறு மடங்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறது இந்த 80 ஆண்டுகளில் உண்மை.இதைவிட மகத்தான சாதனை ஒன்று நிகழ்ந்திருக்கிறது.

நான் இந்த ஸ்தாபனத்திற்கு வந்த முதல் பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு, லோகநாதய்யர் இந்தக் கம்பெனியை விலைக்கு வாங்கினார். அவர் பெரிய சங்கீத ரசிகர். கர்நாடக இசை மட்டுமின்றி, இந்துஸ்தானி இசையிலும் மோகம் கொண்டவர். மாலை ஏழு மணிக்குப் பிறகு இசை பெருக்கெடுத்து ஓடுகிற வீடு அது. வட நாட்டிலிருந்தும் தென் ஜில்லாக்களிலிருந்தும் இசைக் கலைஞர்கள் வந்த வண்ணம், பாடிய வண்ணம், வாசித்த வண்ணமாக இருப்பார்கள். கரீம்கான், ஜபர்கான், அல்லாவுதீன் கான், கோனேரி ராஜபுரம் வைத்தியநாதய்யர், உமையாள்புரம் ஸ்வாமிநாதய்யர், நாயனாப் பிள்ளை, மகராஜபுரம், திருக்கோடி காவல், மலைக்கோட்டை கோவிந்தசாமி பிள்ளை, திருமருகல் நடேச பிள்ளை, சின்ன பக்கிரி என்ற மகா வித்வான்கள் அமுத மழையாகப் பொழிந்து கொண்டிருப்பார்கள். லோகநாதய்யர் வட நாட்டு சங்கீதக்காரர்கள் பாடும்போது கண்ணை மூடிக்கொண்டுதான் இருப்பார். “ஆகா ஆகா’ என்று அவர் வாய் மட்டும் தாங்க முடியாமல் ஆர்ப்பரிக்கும். “”என்ன ச்ருதி! என்ன ச்ருதி! ஆகா! ஆகா!” என்பார். அவரே சங்கீதமாய்விட்டாரே என்று பயமாயிருக்கும்.சங்கீதக்காரர்கள் பாடும்போது கண்ணைத் திறந்து கொண்டுதான் கேட்பார் லோகநாதய்யர்.

யாராவது வடநாட்டுச் சங்கீதக்காரர்களைப் போல ஒரு ராகத்தை ஒரு மணி நேரம் பாடினால் கண்ணை மூடிக்கொள்வார். மற்ற சமயத்தில் படார் படாரென்று கையிலும் தொடையிலும் தாளம் போட்டு அவர்களோடு சேர்ந்து கும்மாளம் போடுவார். விரல்

விரலாக எண்ணுவார். சீட்டாட்டத்தில் சின்னத் துருப்பால் பெரிய சீட்டுகளை வெட்டுவதுபோல் ஓங்கிக் கையைத் தட்டுவார். சுரம் பாடுவது என்கிறார்களே அப்போது அய்யர் விரல் எண்ணுவதையும் சப்பாணி கொட்டுவதையும் தொடை நோக அடிப்பதையும் பார்க்க வேண்டும். எனக்கு அந்த நேரங்களில் தலை கொள்ளாத ஆனந்தம். படபடவென்று என்னையும் யாராவது தட்டக்கூடாதா என்றிருக்கும். ஆனால் அந்தக் காலத்தில் இது ரொம்ப அபூர்வம். ராகமாக மணிக் கணக்கில் இழுப்பார்கள். அய்யர் அழுவார். பிறகு அரியக்குடி ராமானுஜ அய்யங்கார் என்று ஒரு வித்வான் வந்தார். அவர் ரொம்ப சிக்கனம். ராகம் மூன்று நிமிஷம் பாடுவார். கீர்த்தனம் நாலு நிமிஷம் பாடுவார். சுரம் மூன்று ஐந்து நிமிஷம் அடிப்பார். எனக்கும் சந்தோஷம். நவருசி சாக்லேட் டப்பா மாதிரி எல்லோருக்கும் திருப்தியாக ராகம், பாட்டு, சுரம், நிரவல் எல்லாம் கொஞ்சம் கொஞ்சம் பாடுவார். “காதை ரொப்பரேடா ராமானுஜம்!’ என்று அவரைப் பார்த்துக் கூத்தாடுவார் லோகநாதய்யர். அவரைப்பார்த்து, பிறகு வந்த வித்வான்களும் விதூஷிகளும் காதை ரொப்ப ஆரம்பித்தார்கள். எனக்கு உயிர் வந்தது.

வடநாட்டு சங்கீத வித்வான்கள் பாடவா பாடுகிறார்கள். தம்புரா ஒலியோடு முழுகிப்போகிறார்கள். கீழ் “பா’ வாம் கீழ் “தா’வாம். அங்கு அரைமணி நேரம் தம்புரா ஒலி மேலேயே படுத்துக் கொள்கிறார்கள். இவர்கள் குரலா, தம்புரா குரலா என்று கூடத் தெரியவில்லை. அப்புறம் ஒருபுறம் சுரமாக ஏறுகிறார்கள். மறைகிறார்கள். இது ஒரு பாட்டா? தம்புராவோடு மறைவதானால் இவர்கள் ஏன் பாட வேண்டும்? இப்போதுள்ள கர்நாடக இசைதான் இசை. தம்புராவிற்கு இவர்கள் அடிமையாவதில்லை. சுதந்திரப் பிரியர்கள், சரப்பிரியர்கள்,இப்பொழுது அரியக்குடி ராமானுஜ அய்யங்கார் இல்லை. பெரிய நஷ்டம்தான். ஆனால் சின்ன வாரிசுகள் அவர் மறைவை நஷ்டம் என்று ஆக்கிவிடாமல் பார்த்துக்கொண்டுவிட்டார்கள். தொண்ணூறு நிமிஷத்தில் தொண்ணூறு பாட்டுப் பாடுவார்கள். ஜட்கா வண்டி சக்கரத்தைச் சாட்டைக் கழியால் சீந்துவது போலவும், ஜன்னல் கம்பிகள் மீது கம்பை ஓட்டுவது போலவும் சுரம் பாடி உண்மையான இசையை எழுப்பி வருகிறார்கள்.இப்போது மக்களுக்குத் தெரிந்த ஓசைகள் ஜட்கா சக்கர சாட்டை ஓசை, ஆட்டோ ரிக்ஷா ஒசை, மோட்டார் சைக்கிள் ஓசைகள்.

மோட்டார் சைக்கிள் சைலன்சரை நீக்கிவிட்டு இளங்காளைகள் அண்ணா சாலையில் சடசட சடசட வென்று இசை யெழுப்பிப் போவது கர்நாடக இசையும் பொறி நுணுக்க இயலும் ஒன்றே என்று நிரூபிக்கத்தான். வடநாட்டு இசைக்காரர்களும் இப்போது கர்நாடக சங்கீதக்காரர்களைப் பார்த்து இதையெல்லாம் செய்து பார்க்க முயலுகிறார்கள். இது வான்கோழித்தனம். நம்முடைய இளமயில்களை வெல்ல முடியாது.நான் இதுகாறும் பேசியதன் உண்மை புரிந்திருக்கும் என்று நம்புகிறேன். எண்பது ஆண்டுகளாக இசை கேட்டு நான் கண்டடுத்த உண்மை இது. அதாவது, டைப்ரைட்டர்களை ஏதோ தட்டச்சுப் பொறி என்று மட்டுமல்ல, இசைப்பொறி, தற்காலக் கர்நாடக இசையோடு உடன் பிறப்புரிமை கண்டு கொண்டிருக்கிற இசைக்கருவி. நாம் இப்போது பியானோ, புல்புல்தராஸ், ஜலதரங்கம் இவற்றையெல்லாம் விட கர்நாடக இசைக்கு மிகமிக நெருங்கிய இசைப்பொறிகள் ஆகிவிட்டோம்.

நாம் கலைஞர்கள், இசைஞர்கள். நம் உடல்கள் இசைப்பொறிகள். தம்புராவுக்கோ ஆதாரசுருதிக்கோ ஆட்பட்ட கொத்தடிமைகள் அல்ல. கர்நாடக சுரப்ரஸ்தார இசைப்பொறிகள்.”என்று சொல்லிவிட்டு முதுபெரும் கலைஞரும் மூத்த கலைஞருமான டைப்ரைட்டர் அமர்ந்து கொண்டது.கேட்டுக் கொண்டிருந்த எல்லா இளநடுவயது டைப்ரைட்டர்களும் தாங்களும் கலைஞர்கள், கலைஞர்களிலே உயர்ந்த இசைக் கலைஞர்கள் என்று இறும்பூது கொண்டன, சுரம்பாடுகிறோம் என்று அடித்துக்கொண்டன. ஜவ்வாது கடைக்கும் ஜவுளிக் கடைக்கும் ஜின் போன்ற அமுத ரகசியக் கடைக்கும் போகலாமா என்று கலந்துரையாடத் தொடங்கின.